

வில்லி பாரதம்

வில்லி பாரதம்

(மூன்றும் பாகம்)

பதிப்பாசிரியக் குழுவினரால்
பல பிரதிகளை ஒப்பு நோக்கிப் பரிசோதித்து
வெளியிடப்பெற்றது

வெளியிடுவோர்
எஸ். ராஜம்
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

முதற் பதிப்பு—1959

கிடைக்கும் இடம்
மர்ரே அண்டு கம்பெனி
5, தம்புச் செட்டித் தெரு
சென்னை-1

எஸ். விசுவநாதன் அவர்களால், சென்னையில்,
சென்ட்ரல் ஆர்ட் அச்சுக்கூடத்தில், பதிப்பிக்கப்பெற்றது

உள்ளுறை

27. கிருட்டிணன் தூதுச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

பேர் படைத்த விசயனுடன் மும்மை நெடும்
பிறவியினும் பிரியான் ஆகி,
சீர் படைத்த கேண்மையினால், தேர் ஊர்தற்கு
இசைந்து அருளும் செங் கண் மாலை,
பார் படைத்த சுயோதனற்கு, 'படை எடேன்
அமரில்!' எனப் பணித்த கோவை,
கார் படைத்த நிறத்தோனை, கை தொழுவார்
பிறவு ஆழிக் கரை கண்டாரே. 1

சஞ்சய முனி போனபின், கண்ணனைத் துரியோதனனிடம்
தூதுவிட எண்ணிய தருமனது உரை

ஞானம் அன்பொடு இனிது உரைத்து, ஞானமுனி
அகன்றதற்பின், சாம, பேத,
தான, தண்டம், என நிருபர் தருமம்
முறைமையில் புகலும் தகுதி நோக்கி,
தூ நறுந் தண் துளவோனைத் தூது
விடுவதற்கு எண்ணி, சுனைகள்தோறும்
ஏனல் அம் தண் கிரிப் பெருந் தேன் இறைக்கும் எழில்
குருநாடன் இயம்புவானே: 2

'செஞ்சொல் முனி சஞ்சயனுக்கு யாம் உரைத்த
கருமமும், முன் சென்ற காலை,
அம் சொல் முனி புரோகிதனுக்கு அவன் இசைத்த
கருமமும், நீ அறிதி அன்றே;
நஞ்சுதனை மிக அருந்தி, நன் மருந்தும்
மந்திரமும் விரைந்து நாடாது,
எஞ்சினர்தங்களைப் போல இருக்குமதோ?
யார் மனத்தும் இருக்கும் சோதி! 3

தருமன் உரை கேட்டு, அவன் தம்பியரையும் உடன் இருத்தி, 'உங்கள் நினைவு யாது?'
என, கண்ணன் வினவுதல்

'அருஞ் சமரம் புரியும்வகை அவர் துணிந்தார்
ஆனாலும், அறம் ஒன்று இன்றி,
பெருஞ் சமரம் விளைக்குமது கடன் அன்று' என்று,
அருள் வெள்ளம் பெருகக் கூறும்

பொரும் சமர நெடு முரசப் பூங்கொடியோன்-
தனை நோக்கி, புயப் போர் வாணன்
இருஞ் சமரம் தொலைத்த பிரான் இளைஞரையும்
உடன் இருத்தி, இயம்புவானே: 4

'செய் வரால்இனம் உகளும் திரு நாடு
பெற நினைவோ? சென்று மீளப்
பைவராய் அருங் கானில் பயின்று திரிதர
நினைவோ? பகைத்த போரில்,
''உய்வர் ஆர்?'' என, விரைவின் உருத்து, எழுந்து,
பொர நினைவோ? உண்மையாக
ஐவராம் அவனிபர்க்கும் நினைவு ஏது?' என்று
அருள்புரிந்தான் அமரர் கோமான். 5

'சந்து செய்தருள்!' எனத் தருமன் கண்ணனை வேண்டுதல்

'வயிரம் எனும் கடு நெருப்பை மிக மூட்டி
வளர்க்கின், உயர் வரைக்காடு என்ன,
செயிர் அமரில் வெகுளி பொர, சேர இரு
திறத்தேமும் சென்று மாள்வோம்;
கயிரவமும் தாமரையும் கமழ்பழனக்
குருநாட்டில் கலந்து, வாழ,
உயிர் அனையாய்! சந்துபட உரைத்தருள்!' என்றான்,
அறத்தின் உருவம் போல்வோன். 6

'குரவரையும், கிளைஞரையும், குலத்து உரிய
துணைவரையும், கொன்று, போர் வென்று,
அரவ நெடுங் கடல் ஆடை அவனி எலாம்
தனி ஆளும் அரசுதன்னில்,
கரவு உறையும் மனத் தாதை முனிக்கு உரைத்த
மொழிப்படியே, கானம்தோறும்,
இரவு பகல் பல மூல சாகம் நுகர்ந்து,
உயிர் வாழ்தல் இனிது, நன்றே! 7

'நீ தூது நடந்தருளி, எமது நினைவு
அவர்க்கு உரைத்தால், நினைவின் வண்ணம்
தாது ஊதி அளி முரலும் தண் பதியும்,
தாயமும், தான் தாரான்ஆகில்,
மீது ஊது வளைக் குலமும் வலம் புரியும்
மிக முழங்க, வெய்ய காலன்
மா தூதர் மனம் களிக்க, பொருது எனினும்,
பெறுவன்; இது வசையும் அன்றே. 8

'முந்து ஊர் வெம் பணிக் கொடியோன் மூதூரில்
நடந்து, உழவர் முன்றில்தோறும்
நந்து ஊரும் புனல் நாட்டின் திறம் வேண்டு;
நாடு ஒன்றும் நல்கான்ஆகில்,
ஐந்து ஊர் வேண்டு; அவை இல் எனில், ஐந்து இலம் வேண்டு;
அவை மறுத்தால், அடு போர் வேண்டு:—
சிந்தூரத் திலக நுதல் சிந்துரத்தின்
மருப்பு ஒசித்த செங்கண் மாலே!' 9

வீமன் தருமன் உரையை வெறுத்துக் கூறுதல்

மூத்தோன் மற்று இவை உரைப்ப, இளையோன்
வெஞ் சினம் மனத்தில் மூளமூள,
நாத் தோம் இல் உரை பதற, கதுமென உற்று
எழுந்து, இறைஞ்சி, 'ஞாலம் எல்லாம்
பூத்தோனே! பூந் தவிசில் பூவை புணர்
மணி மார்பா! புன்மை யாவும்
தீர்த்தோனே! ஊனம் இலான் மானம் இலாது
உரைப்பதற்கு என் செய்வது?' என்றான். 10

'விரி குழல் பைந்தொடி நாணி வேத்தவையில்
முறையிடுநாள், ''வெகுளேல்!'' என்று,
மரபினுக்கும் நமக்கும், உலகு உள்ள அளவும்,
தீராத வசையே கண்டாய்!
எரி தழல் கானகம் அகன்றும், இன்னமும் வெம்
பகை முடிக்க இளையாநின்றாய்!
அரவு உயர்த்தோன் கொடுமையினும், முரசு உயர்த்தோய்!
உனது அருளுக்கு அஞ்சினேனே! 11

'கான் ஆள உனை விடுத்த கண் இலா
அருளிலிதன் காதல் மைந்தன்-
தான் ஆளும் தரணி எல்லாம் ஒரு குடைக் கீழ்
நீ ஆளத் தருவன், இன்றே;
மேல்நாள், நம் உரிமை அறக் கவர்ந்த பெருந்
துணைவன், உனை வெருதவண்ணம்,
வான் ஆள, வானவர்கோன்தன் பதம் மற்று
அவன்தனக்கே வழங்குவேனே. 12

'போர் முடித்தான்; அமர் பொருது, புலம்புறு சொல்
பாஞ்சாலி பூந் தண் கூந்தல்
கார் முடித்தான்; இளையோர்முன் கழறிய
வஞ்சினம் முடித்தான்; கடவுள்-கங்கை
நீர் முடித்தான் இரவு ஒழித்த நீ அறிய,
வசை இன்றி, நிலை நின்று ஓங்கும்
பேர் முடித்தான்; இப்படியே யார் முடித்தார்?
இவனுடனே பிறப்பதே நான்! 13

'அணிந்து வரும் சமரில் எதிர்ந்து, அரவு உயர்த்தோ-
னுடன் அரசர் உடலம் எல்லாம்
துணிந்து, இரண்டு படப் பொருது, தொல்லை உலகு
அரசு ஆளத் துணிவது அல்லால்,
தணிந்து, அறமும் கிளை உறவும் கொண்டாடி,
தான் இன்னம் தனித் தூது ஏவி,
பணிந்து, இரந்து, புவி பெற்று, உண்டிருப்பதற்கே
துணிகின்றான்; பட்ட பாடே!' 14

தருமன் அவனைக் கையமர்த்தி, சமாதானம் செய்தல்

பரிவுடன் மற்று இவை கூறும் பவன குமாரனை
மலர்க்கை பணித்து, நோக்கி,
'குருகுலத்தோர் போர்ஏறே! குற்றமது
பார்க்குங்கால் சுற்றம் இல்லை;
ஒரு குலத்தில் பிறந்தார்கள் உடன் வாழும்
வாழ்வினைப்போல் உறுதி உண்டோ?
இருவருக்கும் வசை அன்றோ, இரு நிலம்
காரணமாக எதிர்ப்பது?' என்றான். 15

'உரிமையுடன் தம்பியர் அன்று, உணர்வு அறியாமையின்,
அவைக்கண் உரைத்த மாற்றம்
பரிபவமோ? கேட்டோர்க்குப் பரிபவம் என்பது
பிறரால் பட்டால் அன்றோ?
கருதில், இது மற்று எவர்க்கும் ஒவ்வாதோ?
கண் மலரில் கை படாதோ?
பொரு தொழிலும் கடை நிலத்தில் கிடந்ததே!'
என மொழிந்தான்—புகழே பூண்பான். 16

வீமன் மீண்டும் போரையே வற்புறுத்தி மொழிதல்

'சூடுகின்ற துழாய் முடியோன், சுரருடனே
முனிவர்களும் சுருதி நான்கும்
தேடுகின்ற பதம் சிவப்ப, திரு நாடு
பெறத் தூது செல்ல வேண்டா;
வாடுகின்ற மடப்பாவைதன் வரமும்,
என் வரமும், வழுவா வண்ணம்,
கோடுகின்ற மொழியவன்பால், எனைத் தூது
விடுக! இனி, கொற்ற வேந்தே! 17

'மலை கண்டதென என் கைம் மறத் தண்டின்
வலி கண்டும், மகவான் மைந்தன்
சிலை கண்டும், இருவர் பொரும் திறல் கண்டும்,
எமக்காகத் திருமால் நின்ற
நிலை கண்டும், இவள் விரித்த குழல் கண்டும்,
இமைப்பொழுதில் நேரார் தம்மைக்
கொலைகண்டு மகிழாமல், அவன் குடைக் கீழ்
உயிர் வாழக் குறிக்கின்றாயே!' 18

கண்ணன் வீமனது கடுங் கோபத்தைத் தணித்தல்

வெம் புய வீமனும் வெகுண்டு, மீண்டும், இவை
எடுத்து உரைப்ப, மேக மேனிப்
பைம் பொன் நெடுந் தனித் திகிரிப் பரந்தாமன்,
கருணையுடன், பரிந்து நோக்கி,
'அம் புவியில் முன் பிறந்தோர் அரசு நெறி
முறை உரைத்தால், அது கேளாமல்,
தம்பியரும் மறுப்பரோ? தலைவ! இனிக்
கடுங் கோபம் தணிக!' என்றான். 19

விசயனும் போரையே வற்புறுத்தி, 'தூது பயன் படாது' என மொழிதல்

மைக் கால முகில் ஊர்தி வானவர்கோன்
திரு மதலை வணங்கி நின்று,
முக்காலங்களும் உணரும் முகுந்தனுக்கும்
முதல்வனுக்கும் மொழிவான் மன்னோ:
'அக் காலம் பொறுத்த எலாம் அமையாமல்,
இன்னம் இருந்து அறமே சொன்னால்,
எக்காலம் பகை முடித்து, திரௌபதியும்
குழல் முடிக்க, இருக்கின்றாளே? 20

'தேவர் ஆயினும், பழைய தெயித்தியர்-
ஆயினும், மற்றும் செப்புகின்றோர்
யாவர் ஆயினும், எதிர்ந்தோர் உயிர் உண என்று
இருப்பதுவே, என் கை வாளி;
மூவர் ஆய், அவர்களுக்கும் முதல்வன் ஆகிய
மூர்த்தி! முகில் தோய் பூக-
மீ வரால் உகளும் வயல் குரு நாடு, என்,
இவன் அவன்பால் வேண்டுமாறே? 21

'தீண்டாத கற்புடைய செழுந் திருவைத்
துகில் உரிய, செயல் ஒன்று இன்றி,
''நீண்டானே! கரியானே! நிமலா!'' என்று
அரற்றினளாய் நின்று சோர,
மாண்டார்போல், அது கண்டும், மன் அவையில்
யாம் இருந்த மாசு தீர
வேண்டாவோ? வேண்டுவதும் மேம்படு நல்
அறமேயோ? வேந்தர் வேந்தே! 22

'பொன் ஆரும் திகிரியினுன் போனலும்,
பொறைவேந்தன் புகன்ற எல்லாம்
சொன்னலும், அவன் கேளான்; விதி வலியால்
கெடு மதி கண் தோன்ருது அன்றே!
எந் நாளும் உவர் நிலத்தின் என் முளை
வித்திடினும் விளைவு எய்திடாது;
பன்னகம்தனக்கு அமிர்தம் கொடுத்தாலும்
விடம் ஒழியப் பயன் கொடாதே.' 23

நகுலனும், 'தூது பயன் இன்று' என்று உரைத்தல்

பார்த்தன் இவை புகன்று, இறைவன் பணித்தருள
இருந்ததற்பின், பரிவினேடும்
தீர்த்தன் இரு பதம் இறைஞ்சி, தருமனையும்
கைதொழுது, சினம் கொள் வேலான்,
' ''நீத்த நெடுங் கடல் எழு பார் அடல் ஐவர்
பெறுவர்'' எனும் நிகழ்ச்சி பொய்யோ?
கோத் தருமந்தனில் ஆண்மை கூருதோ?
கூறுக நீ! கொற்ற வேந்தே! 24

'கேவலம் தீர் வலிய பகை கிடக்க, முதல்
கிளர் மழைக்குக் கிரி ஒன்று ஏந்து
கோவலன் போய் உரைத்தாலும், குருநாடும்
அரசும் அவன் கொடுக்கமாட்டான்;
நாவலம் பூதலத்து அரசர், ''நாடு இரந்தோம்''
என நம்மை நகையாவண்ணம்,
காவலன்தன் படை வலியும், எமது தடம்
புய வலியும் காணலாமே! 25

'அன்ன நடை அரம்பைதனை அவுணர் கவர்ந்திட,
இமையோர் அரசுக்காக,
முன்னம் அவருடன் பொருது, சிறை மீட்டான்,
நம் குலத்து முதல்வன் அன்றோ?
மன் அவையில் யாம் காண, மடவரலைத்
துகில் உரிந்த வலியோன்தன்பால்
இன்னம் இரந்து, அவன் குடைக்கீழ் இருந்தக்கால்,
நம்மை உலகு என் சொலாதே! 26

' ''கானகம் போய்க் கரந்து உறைந்து, கடவ நாள்
கழித்ததற்பின், கானம் நீங்கி,
ஈனம் இலாவகை வந்தார், நம் துணைவர்''
என, சிறிதும் இரங்கான்ஆகில்,
மா நகரும் வள நாடும் உரிமையும் தன்
மொழிப்படியே வழங்கான்ஆகில்,
தான் அறியாதவன் பிறர் போய்க் கற்பித்தால்,
அறிவனோ?—தரணி வேந்தே!' 27

கண்ணன் வேண்ட, சகாதேவன் தன் கருத்தை உரைத்தல்

நகுலன் இவை உரைத்ததற்பின், 'நன்று!' எனக் கை
அமைத்தருளி, 'நகுலன் சொல்லும்,
இகல் விசயன்தன் மொழியும், திறல் வீமன்
இயம்பியதும், யாவும் கேட்டோம்;
புகல் அரிய உணர்வு உடையோய்! புகழ் உடையோய்!
திறல் உடையோய்! புகல், நீ' என்ன,
முகில் அனைய திரு மேனி முகுந்தனுக்கு
மனம் உருக, மொழிகின்றானே: 28

'சிந்தித்தபடி நீயும் சென்றால் என்?
ஒழிந்தால் என்? செறிந்த நூறு
மைந்தர்க்குள் முதல்வன் நிலம் வழங்காமல்
இருந்தால் என்? வழங்கினுல் என்?
கொந்துற்ற குழல் இவளும் முடித்தால் என்?
விரித்தால் என்? குறித்த செய்கை
அந்தத்தில் முடியும்வகை அடியேற்குத்
தெரியுமோ?—ஆதி மூர்த்தி! 29

'முருகு அவிழ்க்கும் பசுந் துளப முடியோனே!
அன்று அலகை முலைப்பால் உண்டு,
மருது இடைச் சென்று, உயர் சகடம் விழ உதைத்து,
பொதுவர் மனை வளர்ந்த மாலே!
ஒருவருக்கும் தெரியாது இங்கு உன் மாயை;
யான் அறிவேன், உண்மையாக;
திருவுளத்துக் கருத்து எதுவோ, அது எனக்கும்
கருத்து!' என்றான், தெய்வம் அன்னான்.' 30

'அந்தத்தில் முடியும் வகை யார்க்குத் தெரியும்?' என்ற சகாதேவனைக் கண்ணன் தனியிடம் கொண்டு சென்று, 'பாரதப் போர் நிகழாதிருக்க உபாயம் என்?' எனல்

இவ் வண்ணம் சாதேவன் இயம்புதலும்,
நகைத்தருளி, 'இகலோர் சொன்ன
அவ் வண்ணம் புகலாமல், விரகு உரைத்தான்,
இவன்!' என்ன, அவனோடு ஆங்கு ஓர்
பை வண்ண மணிக் கூடம்தனில் எய்தி,
'பாரதப் போர் பயிலாவண்ணம்
உய்வண்ணம் சொல்லுக, நீ உபாயம்' என,
தொழுது உரைப்பான், உரம் கொள் வேலான்: 31

சகாதேவன் உரைத்த உபாயம்

'நீ பாரத அமரில் யாவரையும் நீறாக்கி,
பூ பாரம் தீர்க்கப் புரிந்தாய்! புயல்வண்ணா!
கோபாலா! போர் ஏறே! கோவிந்தா! நீ அன்றி,
மா பாரதம் அகற்ற, மற்று ஆர்கொல் வல்லாரே? 32

'பார் ஆளக் கன்னன், இகல் பார்த்தனை முன் கொன்று, அணங்கின்
கார் ஆர் குழல் களைந்து, காலில் தளை பூட்டி
நேராகக் கைப் பிடித்து, நின்னையும் யான் கட்டுவனேல்,
வாராமல் காக்கலாம் மா பாரதம்' என்றான். 33

'நீ உரைத்தபடி யாவும் முடிப்பினும், என்னைக் கட்ட இயலுமோ?' என்ற கண்ணனுக்கு, 'உன் வடிவு காட்டின் இயலும்!' என்றான் சகாதேவன்

'முன்னம் நீ கூறியவை எல்லாம் முடித்தாலும்,
என்னை நீ கட்டுமாறு எவ்வாறு?' என மாயன்,
'உன்னை நீதானும் உணராதாய்! உன் வடிவம்-
தன்னை நீ காட்ட, தளைந்திடுவன் யான்!' என்றான். 34

கண்ணன் பல வடிவு கொள்ள, சகாதேவன் கருத்தினால் மூலவடிவைப் பிணித்தல்

மாயவனும் அன்பன் மனம் அறிவான், 'கட்டுக!' என்று,
ஆய வடிவு பதினாறாயிரம் கொண்டான்;
தூயவனும், மூலம் ஆம் தோற்றம் உணர்ந்து, எவ் உலகும்
தாய அடி இணைகள் தன் கருத்தினால் பிணித்தான். 35

'பாதப் பிணிப்பை விடுக' என்று கண்ணன் கூற, சகாதேவன் போரில் ஐவரையும் காக்க வரம் வேண்டுதல்

'நீ தேவன்!' என்று அறிந்து, நெஞ்சால் தனைக் கட்டும்
சாதேவன் கண் களிக்க, தானே ஆய், முன் நின்றான்—
பூதேவரும், கனகப் பூங்கா நிழல் வைகும்
மா தேவரும், தேடிக் காணா மலர்அடியோன். 36

'அன்பால் இன்று என்னை அறிந்தே பிணித்தமை நன்று;
என் பாதம்தன்னை இனி விடுக!' என்று உரைப்ப,
'வன் பாரதப் போரில் வந்து அடைந்தேம் ஐவரையும்,
நின் பார்வையால் காக்க வேண்டும், நெடுமாலே!' 37

என்று என்று இறைஞ்சி, இரு தாமரைத் தாளில்
ஒன்றும் கதிர் முடியாற்கு, 'ஓம்!' என்று உரைத்தருளி,
'இன்று இங்கு இருவேமும் இப்போது உரைத்த மொழி
ஒன்றும் பிறர் அறிய ஓதாது ஒழிக!' என்றான். 38

மீண்டு பாண்டவரை அடைந்த சகாதேவனும் கண்ணனும், 'சந்து செய்தல் இனிது!' என்ன, பாஞ்சாலி அழுது, கண்ணனிடம் முறையிடுதல்

ஆண்டு இருந்த அவை நீங்கி, அறிவுடையோர் இருவோரும்,
பாண்டவர்கள் முன் எய்தி, பழுது இல் புகழ்ப் பாஞ்சாலி
நீண்ட கருங் குழல் சோர நின்றாளை முகம் நோக்கி,
ஈண்டு அவரில் இளையோனும், 'சந்து மிக இனிது!' என்றான். 39

'தருமனுக்கும் கருத்து இதுவே; தமருடன் போர் புரியாமல்
இரு நிலத்தில் உடன் வாழ்தல் எனக்கும் நினைவு' என்று உரைத்தான்;
வரி மலர்க் கண் புனல் சோர, மலர் மறந்த குழல் சோர,
விரை மலர்ச் செஞ் சேவடிக் கீழ் வீழ்ந்து, அழுதாள், மின் அனையாள்.

'சாலக் கனகன் தனி மைந்தனை முனிந்த
காலத்து, அவன் அறைந்த கல்-தூணிடை வந்தாய்!
மூலப் பேர் இட்டு அழைத்த மும் மத மால் யானைக்கு
நீலக் கிரிபோல் முன் நின்ற நெடுமாலே! 41

'கற்றைக் குழல் பிடித்து, கண் இலான் பெற்று எடுத்தோன்
பற்றித் துகில் உரிய, பாண்டவரும் பார்த்திருந்தார்;
கொற்றத் தனித் திகிரிக் கோவிந்தா! நீ அன்றி,
அற்றைக்கும் என் மானம் ஆர் வேறு காத்தாரே? 42

'மன்றில் அழைத்து, எனக்கு மாசு அளித்த மன்னவன்பால்
சென்று, தமக்கு ஐந்து ஊர் திறல் வீரர் பெற்றிருந்தால்,
அன்று விரித்த அருங் கூந்தல், வல் வினையேன்,
என்று முடிப்பது, இனி? எம் பெருமான்!' என்று அழுதாள். 43

சாத்தகியும் சமாதானத்தை வெறுத்து மொழிதல்

' ''தண்டு இருந்தது, இவன் கரத்தில்; தனு இருந்தது, அவன் கரத்தில்;
வண்டு இருந்த பூங் குழல்மேல் மாசு இருந்தது'' என இருந்தாள்;
கண்டு இருந்தீர், எல்லீரும்; கருதலர்பால் ஊர் வேண்டி
உண்டு இருந்து வாழ்வதற்கே உரைக்கின்றீர்; உரையீரே! 44

'சண்ட முகில் உரும் அனைய சராசந்தன்தனக்கு அஞ்சி,
வண் துவரை அரணாக வடமதுரை கைவிட்ட,
திண் திறல் மாதவன் மதியோ?—திகழ் தருமன்தன் மதியோ?—
பண்டும் அவர் கருத்து அறிந்தும், பார் போய் வேண்டுவது?' என்றான்.

'நானே உன் குழல் முடித்து வைப்பேன்' என, கண்ணன் திரௌபதியைத் தேற்றுதல்

சாத்தகி நின்று இவை உரைப்ப, சடைக் குழலாள் அழுது அரற்ற,
கோத் தருமன் முதலாய குல வேந்தர் ஐவரையும்
பார்த்தருளி, அருள் பொழியும் பங்கயக் கண் நெடுமாலும்,
ஏத்த அரிய பெருங் கற்பின் இளையாளுக்கு இவை உரைப்பான்: 46

'தொல் ஆண்மைப் பாண்டவர்க்குத் தூது போய் மீண்டதற்பின்,
நல்லாய்! உன் பைங் கூந்தல் நானே முடிக்கின்றேன்;
எல்லாரும் காண, இனி விரிப்பது, எண்ண அரிய
புல்லார்தம் அந்தப்புர மாதர் பூங் குழலே. 47

'மைக் குழலாய்! கேளாய்: மருவார் உடற்புலத்துப்
புக்கு உழல் ஆகும் கொழுவாம் போர் வாள் அபிமன்னு,
தொக்கு உழலும் வெங் கோன்மைத் தொல் வேந்தர்தம் குலமும்,
இக் குழலும், சேர முடியாது இரான்' என்றான். 48

பெண் நீர்மை குன்றாப் பெருந் திருவின் செங்கமலக்
கண் நீர் துடைத்து, இரு தன் கண்ணில் கருணை எனும்
தெள் நீரினால் பொருந்தத் தேற்றினான்—சாற்றுகின்ற
மண், நீர், அனல், அனிலம், வான், வடிவு ஆம் மா மாயன். 49

கண்ணனைத் 'தூது ஏகு' எனத் தருமன் வேண்ட, அவனும் தேர்மேல் ஏறி அத்தினாபுரியை அடைதல்

'துன்று பிணியோர், துறந்தோர், அடங்காதோர்,
கன்று சின மனத்தோர், கல்லாதவர், இளையோர்,
ஒன்றும் முறைமை உணராதவர், மகளிர்,
என்றும் இவர் மந்திரத்தின் எய்தப் பெறாதாரே.' 50

என்னக் கழறி, இருந்தோர் உரை தவிர்த்து,
'நின் ஒப்பவர் இல்லாய்! நீ ஏகு' என உரைப்ப,
மன்னர்க்கு மன்னவன்பால் மாயோனும் தூது ஆகி,
பொன் உற்ற நேமிப் பொரு பரித் தேர்மேல் கொண்டான். 51

சங்கும், மணி முரசும், சல்லரியும், தாரைகளும்,
எங்கும் முழங்க, எழில் வெண்குடை நிழற்ற,
பொங்கு கவரி புடை இரட்ட, எண் இல்லா
அங்கம் ஒரு நான்கும், அவனிபரும், தற் சூழ, 52

கல் வரையும், பாலைக் கடுஞ் சுரமும், கான் யாறும்,
நல் வரையும், நீர் நாடும், நாள் இரண்டில் சென்றருளி,
தொல் வரைய கோபுரமும், நீள் மதிலும், சூழ்ந்து இலங்கும்
மல் வரைய தோளான் வள மா நகர் கண்டான். 53

அத்தினாபுரியின் இயற்கை வளங்கள்

மேவு செந் துகிர்த் திரளும், மா மரகத விதமும்,
கோவை வெண் கதிர்த் தரளமும், நிரை நிரை குயிற்றி,
தாவும் வெம் பரித் தேரினான் தனக்கு எதிர் சமைத்த
காவணங்களின் தோன்றின, பச்சிளங் கமுகம். 54

வம்பு உலாம் அகில், சந்தனம், வருக்கை. மாகந்தம்,
சம்பகம், தமாலம், பல திசைதொறும் தயங்க;
உம்பர் நாயகன் வரவு கண்டு, உளம் களி கூர்ந்து,
தும்பி பாடின; தோகை நின்று ஆடின—சோலை. 55

அணி கொள் அத்தினாபுரி எனும் அணங்கு, செந்திருவின்
கணவனுக்கு எதிர் காட்டும் நீராசனம் கடுப்ப,
மணம் மிகுத்த செந்தாமரை மலருடன் சிறந்த
புணரியின் பெரும் புனலையும் கொள்வன—பொய்கை. 56

அகழி, மதில், முதலியவற்றின் தோற்றம்

நடந்த நாயகன், கோலம் ஆய், வேலை சூழ் ஞாலம்
இடந்த நாளிடை, அது வழியாக வந்து, எழுந்து,
படர்ந்த பாதல கங்கை அப் படர் மதில் சூழ்ந்து,
கிடந்தது ஆம் என, சிறந்தது—தாழ் புனல் கிடங்கு. 57

அடி நிலத்திலே படிவன, இடி முகில் அனைத்தும்;
முடி நிலத்தினுக்கு உடு பதத்தினும் முடிவு இல்லை;
நெடிய சக்கரப் பொருப்பையும் நிகர் இலா இதற்கு ஓர்
படி வகுத்தது ஆம் எனும்படி பரந்தது—புரிசை. 58

பகலினும் கடும் பரிதி தன் கதிர் பரப்பாமல்
இகலி, எங்கணும் எறிந்து, கால் பொருதலின், எற்றி,
புகலுகின்ற மந்தாகினித் தரங்கமே போல,
அகல் விசும்பிடை மிடைவன—நெடுங் கொடி ஆடை. 59

'புயங்க பூமியோ, புரந்தரற்கு அமைத்த பொன்னுலகோ,
தயங்கு செல்வம் நீடு அளகையோ, நிகர்?' எனும் தரத்த;
இயங்கு கார் முகில் வரையின்நின்று எழுவன போல,
வயங்கு கார் அகில் நறும் புகை உயிர்ப்பன—மாடம். 60

பல வகை வீதிகளும் சேனைகளின் பெருக்கமும்

மன்னர் வேழமும், சேனையும், எதிர் எதிர் மயங்க,
பின்னும், முன்னும், எம் மருங்கினும், பெயர் இடம் பெறுமல்,
துன்னி நின்றவர், 'ஏகுமின், ஏகுமின், தொடர!'
என்னும் ஓசையே உள்ளன—வீதிகள் எல்லாம். 61

வரை எலாம், பல வனம் எலாம், கடல் எலாம், வளைந்த
தரை எலாம், படு பொருள் எலாம் தனித்தனி குவித்த
நிரை எலாம் கவர் ஆவண நீர்மையை, புலவோர்
உரை எலாம் தொடுத்து உரைப்பினும், உவமை வேறு உளதோ! 62

விரவு கான் மலரினும் பல, வீரரின் விதங்கள்;
பரவை வெண் மணலினும் பல, புரவியின் பந்தி;
இரவில் வான மீனினும் பல, யானையின் ஈட்டம்;
நிரை கொள் கார்த் துளியினும் பல, தேர் அணி நிலையே; 63

அந்தணர் முதலியோர் இருப்பிடங்களும், பல வகை ஓசைகளும்

ஆசு இலா மறை அந்தணர் ஆலயம் ஒருபால்;
மாசு இலா முடி மன்னவர் மாளிகை ஒருபால்;
காசு இலா மதி அமைச்சர்தம் கடி மனை ஒருபால்;
பேசு இலா வள வணிகர்தம் பேரிடம் ஒருபால். 64

மங்கலம் திகழ் மனை எலாம் வலம்புரி ஓசை;
திங்கள் தோய் நெடுந் தலம் எலாம் செழுஞ் சிலம்பு ஓசை;
அம் கண் மா நகர் அனைத்தும் மும் முரசு அதிர் ஓசை;
எங்கணும், கடவுளர் இடம்தொறும், முழவு ஓசை. 65

முன்றிலின்கண் நின்று, இடம் பெறு அரசர் மா முடிகள்
ஒன்றொடு ஒன்று அறைந்து, எற்றி, மேல் ஒளிர் பொறி சிதறி,
சென்ற சென்ற எத் திசைதொறும் திகழ்ந்தது, செம்பொன்
குன்று எனும்படி—குருகுல நாயகன் கோயில். 66

நகரின் தென்பாலுள்ள சோலையில் கண்ணன் அமர்ந்திருக்க, அவன் ஐவர்க்குத் தூதாக வந்துள்ளமையைத் துரியோதனனுக்குத் தூதுவர் உரைத்தல்

என்று இசைக்கும் நல் ஒளி நிமிர் எழில் மணி மகுடக்
குன்று இசைக்கும் வண் கோபுர நீள் நகர் குறுகி,
தென் திசைக் குளிர் செண்பக மலருடன் சிறந்து,
நின்று இசைக்கும் வண் சோலைவாய் அமர்ந்தனன், நெடுமால். 67

'அன்று தூது கொண்டு, இலங்கை தீ விளைத்தவன் ஐவர்க்கு
இன்று தூது வந்து, எயிற் புறத்து இறுத்தனன்' என்று,
துன்று தூது வண்டுஇனம் முரல் தொடையலான்தனக்கு,
சென்று, தூதுவர் இயம்பினர், சேவடி வணங்கி. 68

துரியோதனன் நகரை அலங்கரிக்கப் பணித்து, கண்ணனை எதிர்கொள்ளச் செல்ல, சகுனி தடுத்து நிறுத்துதல்

'தொல்லை நாயகன் வந்தனன்!' என்றலும், சுரும்பு ஆர்
மல்லல் மாலையான் ஏவலால், மா நகர் மாக்கள்
எல்லை நீள் மதில் வட்டம் யோசனை எழு நூறும்
செல்வ மா நகர்த் தெருவினை ஒப்பனை செய்தார். 69

மின்னும் மா முகில் பல் இய விதங்கள் முன் முழங்க,
மன்னர் மன்னவன் எழுந்தனன், மால் எதிர்கொள்வான்;
'என்னை, நீ அவற்கு எதிர் செல்வது?' என்று தன் மருகன்-
தன்னை வன்பொடு தகைந்தனன், கொடுமை கூர் சகுனி. 70

கண்ணனுக்கு இடம் முதலியன அமைத்து, துரியோதனன் சபையில் வீற்றிருத்தல்

சீர் வலம்புரி திகிரி சேர் செங் கையான்தனக்குக்
கார் வலம் புரி கோயிலும் காட்சியும் அமைத்து,
போர் வலம் புரி நிருபரும் இளைஞரும் போற்ற,
தார் வலம்புரியவன் இருந்தனன், பொலந் தவிசின். 71

விடுமன் முதலியோர் கண்ணனை எதிர்கொள்ள, அவன் நகருள் வந்து, விதுரன் மனையில் புகுதல்

தொல் பகீரதி மைந்தனும், துரோணனும், சுதனும்,
வில் விதூரனும், கிருபனும், முதலிய வேந்தர்,
மல்கு மூ-இரு பத்து நூறாயிரர் மகிழ்ந்து,
செல்வ நாயகற்கு யோசனை இரண்டு எதிர் சென்றார். 72

வந்து வந்து, இரு மருங்கினும் மன்னவர் வணங்க,
பைந் துழாய் முடிப் பரமனும் கண்மலர் பரப்பி,
அந்த மா நகர் புகுந்தபின், அரசன் இல் புகாமல்,
புந்தி கூர் அருள் விதுரன் வாழ் வள மனை புகுந்தான். 73

வேந்தர்களுக்கு விடைகொடுத்து அனுப்பியபின், விதுரன் மாளிகையின் நடுவில் உள்ள ஒரு மண்டபத்தில், கண்ணன் அரியாசனத்தில் வீற்றிருத்தல்

வேந்தர் யாரையும் விடை கொடுத்து, அகன்ற பின், விமலன்
வாய்ந்த மாளிகை நடுவண் ஓர் மண்டபம் குறுகி,
ஆய்ந்து வல்லவர் நவமணி அழுத்திய அரிஏறு
ஏந்தும் ஆசனம் இட, பொலிந்து அதன்மிசை இருந்தான். 74

விதுரன் கண்ணனைக் கண்டு களித்து, மனம் உருகி, அவனுக்கு முகமன் கூறுதல்

இருந்து உவந்தருள் இறைவனை இறைஞ்சினன்; இறைஞ்சி,
பெருந் துவந்தனைப் பிறப்பையும் இறப்பையும் பிரித்தான்—
'மருந்து வந்தனை அமரருக்கு அருளிய மாயோன்
விருந்து வந்தனன்!' என்று, உளம் உருகிய விதுரன். 75

கோடு கொண்ட கைக் குரிசிலை, அலர்ந்த கோகனதக்
காடு கண்டெனக் கண்டு, தன் கண் இணை களியா,
தோடு கொண்ட தார் விதுரன், இப் பிறப்பையும் தொலைத்தான்;
வீடு கண்டவர்க்கு இயம்பவும் வேண்டுமோ? வேண்டா. 76

உள்ளினான்; உணர்ந்து, உள்ளமும் உருகினான்; எழுந்து
துள்ளினான்; விழுந்து, இணை அடி சூடினான்; துயரைத்
தள்ளினான்; மலர்த் தடக் கையால் தத்துவ அமுதை
அள்ளினான் எனக் கண்களால் அருந்தினான்—அளியோன். 77

'முன்னமே துயின்றருளிய முது பயோததியோ!
பன்னகாதிபப் பாயலோ! பச்சை ஆல் இலையோ!
சொன்ன நால் வகைச் சுருதியோ! கருதி நீ எய்தற்கு
என்ன மா தவம் செய்தது, இச் சிறு குடில்!' என்றான். 78

கண்ணனும் ஏனையோரும் விதுரன் மனையில் விருந்து உண்டு மகிழ்ந்திருத்தல்

'மும்மை ஆகிய புவனங்கள் முழுதையும் அருந்தும்
எம்மை ஆளுடை நாயகன் விருந்தினுக்கு இசைந்தான்;
அம்ம!' என்றனன்; ஆறு-நூறாயிரம் மடையர்-
தம்மை நோக்கினன்; அவர்களும் விரைவுடன் சமைத்தார். 79

வந்த கொற்ற வேல் வரி சிலை வாள் வரூதினிக்கும்,
கந்து அடர்ப்பன கரிக்கும், வெங் கவன வாம் பரிக்கும்,
ஐந்து-பத்து நூறாயிரம் அரசர்க்கும், எவர்க்கும்,
இந்திரற்கும் எய்தா அமுது எனும்படி இயற்ற, 80

அமைத்த வாச நல் நீர் கொடு மஞ்சனம் ஆடி,
சமைத்த பல் கறி, அடிசில், தம் விருப்பினால் அருந்தி,
உமைக்கு நாயகன் இரவு ஒழித்தருளினான் உதவ
இமைப்பிலார் அமுது அருந்திய இயல்பு என, இருந்தார். 81

வாச நீரும், வண் சுண்ணமும், முறை முறை வழங்க,
பூசுறும் தொழில் பூசினார்; சூடினார்; புனைந்தார்;
வீசு சாமரம் இரட்ட, வெண் மதிக்குடை நிழற்ற,
கேசவன் மணிக் கேசரித் தவிசிடைக் கிளர்ந்தான். 82

சூரியன் மறைவும், அந்தி மாலையின் தோற்றமும்

ஞான கஞ்சுக விதுரன் வாழ் மனையில், நாயகனும்,
போனகம் பரிவுடன் நுகர்ந்து, இருந்த அப் பொழுதில்,
தானும் மேருவுக்கு அப்புறத்து அவ் அமுது அருந்த,
பானுவும், பெருங் குட திசைப் பரவையில் படிந்தான். 83

கருதி அந்தணர் யாவரும் தம் கடன் கழிப்ப,
சுருதி என்னும் வெஞ் சாபமேல் அம்பு கை தொடுத்து,
பருதிதன் பெரும் பகைவர்மேல் விடுத்தலின், பரந்த
குருதி ஆம் என நிவந்து எழ, சிவந்தது, குடபால். 84

தரங்க வாரிதிப் புறத்து, எதிர் மலைந்த வெஞ் சமரில்,
உரம் கொள் கூர் நெடும் படைகளால் உடன்ற மந்தேகர்
துரங்கம் ஏழுடைக் கடவுளை நிரை நிரை துணித்த
கரங்கள் போன்றன—கரைதொறும் வளர் துகிர்க் காடு. 85

நீதியின் புகல் பகல் எலாம் நீர்அரமகளிர்
மீது உறைத்து எழும் வெவ் வெயில் படாவகை விரித்து,
‘போது புக்கது’ என்று, இதம்படச் சுருக்கிய பூம் பட்டு-
ஆதபத்திரம் போன்றன—தாமரை அடவி. 86

கலந்து மங்கல முழவு வெண் சங்கொடு கறங்க,
மிலைந்த பூங் குழல் வனிதையர் மெய் விளக்கு எடுப்ப,
கலந்த தாமரைத் தடம் எலாம் குவிந்தது கண்டு,
மலர்ந்த தாமரை வாவி போன்றது—நகர் வட்டம். 87

விதுரன் கண்ணனைப் போற்றி, அவன் தனி வந்த காரணம் வினவ, கண்ணன் தான் ஐவர்க்குத் தூதாக வந்தமையைத் தெரிவித்தல்

உரக புங்கவன் மணி முடி ஒப்பன தீபம்
இரு மருங்கினும் ஆயிரம் ஆயிரம் ஏந்த,
அரி சுமந்த பேர் ஆசனத்து அழகுடன் இருந்த
புரவலன்தனைப் புண்ணிய விதுரனும் போற்றி, 88

'பொங்கு அரா-அணை பொலிவு அறப் போந்தபின், பொதுவர்-
தங்கள் பாடியில் வளர்ந்து, மா மருதிடைத் தவழ்ந்து,
கங்கை மா நதி கால் வழி கருணை அம் கடலே!
இங்கு நீ தனி நடந்தவாறு உரைத்தருள்!' என்றான். 89

'தோட்டு வந்து செந் தேன் நுகர் சுரும்பு சூழ் தொடையாய்!
காட்டு உவந்து முன் திரிந்து, தம் கடவ நாள் கழித்து,
நாட்டு வந்த பேர் ஐவர்க்கும் நல் குருநாடு
கேட்டு வந்தனம்' என்றனன்; விதுரனும் கேட்டான். 90

'துரியோதனன் முறைமையால் அரசு கொடான்' என்ற விதுரனுக்கு, 'கொடாவிடின் பாண்டவர் பொருது பெறுவர்' எனக் கண்ணன் உரைத்தல்

'முழக்கினால் உயர் முரசு உயர்த்தவன்தனக்கு உரிமை
வழக்கினால் அறிந்து, அடல் அரவு உயர்த்த கோன் வழங்கான்;
தழக்கின் நால்-இரு திசையினும் முரசு எழ, சமரில்
உழக்கினால் அலது, உணர்வனோ?' என்று, அவன் உரைத்தான். 91

'வானை வாவியில் உகண்டு எழ, வளர் இளங் கமுகின்
பாளைவாய் அளி முரன்று எழும் பழன நாடு உடையான்,
நாளை, வாழ்வு அவர்க்கு அளித்திலன்எனில், எதிர் நடந்து,
மூளை வாய் உக முடிப்பர், வெம் போர்' என மொழிந்தான். 92

உலக இயல்பை விதுரனுக்கு உரைத்து, அவனுக்கு விடை கொடுத்து, கண்ணன் கண்வளர்தல்

'விரைந்து பாய் பரி மன்னவர், இதம்பட மெலிவுற்று,
இரந்து வேண்டினும், கிளைஞருக்கு ஒரு பொருள் ஈயார்;
பரந்த போரினில் எதிர்த்து, அவர் படப்படப் பகழி
துரந்தபோது அவர்க்கு உதவுவர், சொன்னவை எல்லாம்.' 93

என்று பாரினில் இயற்கையும் விதுரனுக்கு இயம்பி,
வென்று, போர் கெழு நேமியான் விடை கொடுத்தருளி,
குன்றுபோல் புயக் காவலர் கொடுந் துடி கறங்க,
மன்றல் நாள் மலர்ப் பாயலின்மீது, கண்வளர்ந்தான். 94

இரவின் இயற்கையும், இரவியின் தோற்றமும்

குளிரும் மா மதி முகத்து ஒளிர் குமுத வாய் மலர்த்தி,
தளவ வாள் நகை பரப்பி, வண் சத தள மலர்க்கை
அளவிலே குவித்து, அளியொடும் அகன்றிலாமையினால்,
களி கொள் தோள் விலைக் கணிகையைப் போன்றது—அக் கங்குல்.

அலைந்த ஆர் இருள்-கடல் பொருது, ஒரு புடை அண்டம்
பிளந்தது ஆம் என, கரும் படாம் பீறியதென்ன,
வலைந்த ஏழ் கடல் வற்ற, மேல் வடவையின் முகத் தீக்
கிளர்ந்தது ஆம் எனக் கிளர்ந்தன, இரவியின் கிரணம். 96

இகலும் வாள் அரவு உயர்த்தவன் இருந்த தொல் பதியில்
அகில நாயகன் ஒரு தனி நடந்தவாறு அறிந்து,
மகர வாரிதி அகன்று, மா மருங்குற அணைந்த
திகிரி போல வந்து எழுந்தனன், இரவி, கீழ்த்திசையில். 97

துரியோதனன் அரசு வீற்றிருத்தல்

சோதி வான நதி மைந்தனும், பழைய சுருதியால் உயர் துரோணனும்,
ஆதி ஆக உயிரினும் வியப்புற அடுத்த மன்னவர் அநேகரும்,
நீதி ஆறுவகை ஐந்து பத்தொடு அறுபத்தொர் ஆயிரவர் நிருபரும்,
தீது இலாத திறல் அக்குரோணி பதினொன்று பெற்ற மிகு சேனையும்,

தொக்க வெண் கவரி, ஆல வட்ட நிரை, சொட்டை, வாள், பரிசை, துகிலுடன்,
கைக் களாசி, இவை கொண்டு உலாவி வரு கன்னி மங்கையர்கள் அனைவரும்,
மிக்க வேதியர்கள், வல்ல பல் கலை விதத்தில் உள்ளவர்கள், யாவரும்,
தக்க தம்பியரும், வந்து சூழ, உயர் தரணிமேல் நிருபர் தம்பிரான்,

நிரை கதிர்க் கனக நீள் சுவர்ப் பவள உத்தரத்து இடை நிரைத்த ஒண்
பரு மணிக் கிரண பற்பராக வயிரத் துலாம் மிசை பரப்பி, வெண்
தரள வர்க்க வயிடூரியப் புதிய கோமளப் பலகை தைத்து, மா
மரகதத்தின் ஒரு கோடி தூண் நிரை வகுத்த மண்டப மருங்குஅரோ,

முட்ட நித்திலம் நிரைத்த பந்தரின், நகைத்த சீர் அரி முகத்த கால்
வட்ட மெத்தை கொடு அமைத்த பீடமிசை, வாசவன்கொல் என, வைகினான்—
பட்டவர்த்தனரும், மகுட வர்த்தனரும், வந்து சேவடி பணிந்தபின்,
'இட்ட பொன்-தவிசின் முறைமையால் இனிது இருக்க!' என்று, அவரை ஏவியே, 101

'கண்ணன் அவைக்கு வரும்போது யாரும் எதிர் கொள்ளக் கூடாது' எனத் துரியோதனன் கட்டளையிடுதல்

காவல் மன்னவர் முகங்கள்தோறும் இரு கண் பரப்பி, 'அமர் கருதுவோர்
ஏவலின்கண் வரு தூதன் ஆம் இடையன் இன்று நம் அவையில் எய்தினால்,
ஓவல் இன்றி, எதிர் சென்று, கண்டு தொழுது, உறவு கூறில், இனி உங்கள் ஊர்
தீ வலம் செய அடர்ப்பன்!' என்று, நனி சீறினான், முறைமை மாறினான்.

விடுமன் முதலியோர் எதிர் கொள்ள, கண்ணன் அவை புகுந்து, ஆசனத்து அமர்தல்

இந்த வண்ணம் உரைசெய்து, மன் அவையில் ராசராசனும் இருக்கவே,
தந்த வண்ணனுடன் வந்த அண்ணல்—ஒளி தங்கு கண் துயில் உணர்ந்தபின்,
கந்த வண்ண மலர் கொண்டு கைதொழுது, காலையில் பல கடன் கழித்து,
இந்த வண்ணம் முன் இருந்த பேர் அவையில் ஏயினன்—இசை கொள் வேயினன்.

துன்னு கங்கை மகனும், துரோணனொடு சுதனும், நீதி புனை விதுரனும்,
மன்னர் மன்னனை ஒழிந்த மன்னவரும், வந்து சேவடி வணங்கினர்;
கன்னனும் தலை கவிழ்ந்து இருந்தனன்; அழன்று, உளம் சகுனி கருகினன்;
முன்னம் நின்றவர்கள் இட்ட பீடமிசை மொய் துழாய் முகிலும் எய்தினன்.

'நேற்றே இந் நகர் வந்தும், என் இல்லிற்கு வாராது, விதுரன் இல்லில்
தங்கியது ஏன்?' எனத் துரியோதனன் வினவுதல்

முன் நகம் குடை கவித்த காள முகில் முன் இருந்தபின், முகம் கொடாது,
'என் அகம்தனை ஒழித்து, நென்னலிடை இந்த மா நகரில் எய்தியும்,
பொன் அகம் கொள் புய விதுரன் இல்லிடை புகுந்தது என்கொல்? இது புகல்!' என,
பன்னகந்தனை உயர்த்த கோவும் உரை பகர, மாலும் எதிர் பகருவான்:

கண்ணன் மறுமொழி கூறுதல்

'என் இல் நின் இல் ஒரு பேதம் இல்லை; இது என் இல்; நின் இல் அது; என்னினும்,
மின்னின் முன் இலகு விறல் நெடும் படை விதுரன் வந்து எதிர் விளம்பினன்;
உன்னில், இன்னம் உளது ஒன்று: பஞ்சவர் உரைக்க வந்த ஒரு தூதன் யான்;
நின் இல் இன் அடிசில் உண்டு, நின்னுடன் வெறுக்க எண்ணுவது நீதியோ? 106

'அரவம் மல்கிய பதாகையாய்! மதி அமைச்சர் ஆய் அரசு அழிப்பினும்,
குரவர் நல் உரை மறுக்கினும், பிறர் புரிந்த நன்றியது கொல்லினும்,
ஒருவர் வாழ் மனையில் உண்டு, பின்னும், அவருடன் அழன்று பொர உன்னினும்,
இரவி உள்ளளவும், மதியம் உள்ளளவும், இவர்களே நரகில் எய்துவார்.'

'தூதாக வந்த காரியத்தை விளம்புக!' என்ற துரியோதனனிடம்,
கண்ணன், 'ஐவர்க்கும் உரிய நாட்டைக் கொடுப்பாய்' எனல்

சீத நாள்மலர் மடந்தை கேள்வன் இவை செப்பவும் தெரிய, ஒப்பு இலா
நாத நாயகன் முகத்தில் வைத்த இரு நயனன் ஆகி, மிக நகைசெயா,
'தூதன் ஆகி வரு தன்மை சொல்லுக!' என, மன்னர் மன்னன் இது சொன்னபின்,
வேதம் நாறும் மலர் உந்தி வண் துளப விரை செய் தாரவனும் உரைசெய்வான்:

'சூதினால் அரசு இழந்து, நின் துணைவர் சொன்ன சொல்லும் வழுவாது போய்,
ஏதிலார்கள் என நொந்து, தண் நிழல் இலாத கானினிடை எய்தியே,
தீது இலாவகை குறித்த நாள் பல கழித்து, வந்தனர்; செகத்தினில்
கோது இலாத குருகுல மகீப! அவர் உரிமை நண்பொடு கொடுத்தியே. 109

'சொல் அவாவு உரக துவச! நின் உரிய துணைவர் தங்களை அழைத்து, நீ
வல்லவாறு சில நாடு அளித்து அவர்கள்தம்முடன் கெழுமி வாழ்தியேல்,
''நல்ல வாய்மை நிலை உடையை'' என்று, அரசர் நாள்தொறும் புகழ்வர், நண்பு
[கொண்டு;
''அல்ல ஆம்'' என மறுத்தியேல், அறமும், ஆண்மையும், புகழும், அல்லவே.' 110

'ஈ இருக்கும் இடமும் கொடேன்!' எனத் துரியோதனன் மறுத்தல்

என்று கேசவன் இயம்ப, அங்கு எதிர் இராசராசனும் இயம்புவான்:
'அன்று சூது பொருது, உரிமை யாவையும் இழந்து போயினர்கள், ஐவரும்;
இன்று நீ விரகில் மீளவும் கவர எண்ணின், நான் அவரில் எளியனோ?
சென்று, கானில் அவர் இன்னமும் திரிவது உறுதி!' என்று நனி சீறியே,

'நீ வெறுக்கில் என்? இருந்த மன்னவர் திகைக்கில் என்? பல நினைக்கில் என்?
போய் நகைக்கில் என்? ''உரைத்த உண்மை மொழி பொய்த்தது'' என்று அமரர்
[புகலில் என்?
வேய் மலர்த் தொடையல் ஐவர் என்னுடன் மிகைத்து வெஞ் சமர் விளைக்கில் என்?
ஈ இருக்கும் இடம் எனினும் இப் புவியில் யான் அவர்க்கு அரசு இனிக் கொடேன்!' 112

'ஐந்து ஊரேனும் வழங்குக!' என்று கண்ணன் மீண்டும் வேண்ட, துரியோதனன் அதனை மறுக்கவே, அவனுக்கு அறிவுரை கூறுதல்

கார் வழங்கு உரும் எனச் சினத்தினெடு கண் இலான் மதலை கழறவும்
'பார் வழங்க நினைவு இல்லையேல், அவனி பாதி ஆயினும் வழங்குவாய்!
தார் வழங்கு தட மார்ப!' என்ன, அதுதானும் மன்னவன் மறுக்க, 'ஐந்து
ஊர் வழங்குக!' என உற்று இரந்தனன், இவ் உலகு எலாம் உதவும் உந்தியான். 113

'மாடு அளிக் குலம் நெருங்கு பைந் துளப மாலையாய்! மகர வேலை சூழ்
நாடு அளித்திடவும், ஐந்து பேருடைய நகர் அளித்திடவும், வேண்டுமோ?
காடு அளிக்க, அதனிடை திரிந்து, உறை கரந்து போயினர்கள் காண, ஓர்
வீடு அளிக்கினும் வெறுப்பரோ? இதனை விடுக!' என்று எதிர் விளம்பினன்.

'தந்தை காதலுறு தன்மை கண்டு, இளைய தாய் பயந்த இரு தம்பியர்க்கு
இந்த வாழ்வும் அரசும் கொடுத்தவனும் நின் குலத்து ஒருவன் இங்கு உளான்;
முந்த மா நிலம் அனைத்தினுக்கும் உயர் முறைமையால் உரிய அரசருக்கு
ஐந்து மா நகரும் நீ கொடாது ஒழியின், என்னதாகும் உனது அரசியல்? 115

'ஒரு குலத்தினில் இரண்டு மன்னவர் உடன் பிறந்து, உரிமை எய்தினல்,
இரு குலத்தவரும் ஒக்க வாழ்வுறுதல் எக் குலத்தினும் இயற்கையே;
பொரு குலக் களிறு வளர் திசைக்கண் மிகு புகழ் பரப்பி, எழு புவி பெறும்
குருகுலத்தவர் இயற்கை நன்று!' என மொழிந்தனன், கரிய கோவலன். 116

துரியோதனன் சினத்துடன் மறுத்து மொழிய, கண்ணன் போர் வேண்டுதல்

பேர் அரா-அணை துறந்த மாயன் இவை பேச, வன்பினொடு பின்னையும்,
சீர் அராவினை உயர்த்த கோவும் விழி தீ எனும்படி செயிர்த்து உளே,
போர் அரா நிருபன், 'மணி நெடுஞ் சுடிகை ஆயிரம்கொடு பொறுத்த பார்
வீரர் ஆனவரது அல்லவோ? உரிமை வேண்டுமோ?' என விளம்பினான்.

பொய் வளர்ந்த மொழி மன்னன் மற்று இவை புகன்ற பின்பு, 'புய வலியினால்
ஐவர் தங்கள் அரசும் கொடாமல், அடல் ஆண்மை கொண்டு எதிர் அடர்த்தியேல்,
மெய் விளங்க வரு குரு நிலத்தினிடை வந்து, வெஞ் சமர் விளைக்கவே
கை வழங்குக!' என, நின்ற தூணிடை அறைந்து, உரைக்கும் இவை காவலன்: 118

'போருக்குக் கை அறை' என்பது கேட்டு, துரியோதனன் சினந்து, கண்ணனை இகழ்தல்

'புன் பிறப்புடைய பொதுவர் தங்களொடு புறவில் ஆன் நிரை புரந்திடும்
உன் பிறப்பும், உரலோடு கோவியர் உனைப் பிணித்ததும், மறந்து நீ,
மன் பிறப்பில் உயர் குரு குலத்தவர்தம் வாய்மைதானும், ஒரு மாசு இலா
என் பிறப்பும், உணராமலோ, சபையில் இந்த வாசகம் இயம்பினாய்?

'ஏ இலங்கு சிலை ஐவர் வந்து அணுகில், யான் அயர்ந்து எளிது இருப்பனோ?
கோ விலங்கு பொர அஞ்சுமோ, கரட குஞ்சரங்கள் பகை கொண்டகால்?
மேவில், அங்கு முன் மலைத்தல் கை அறைய வேண்டும் என்றது நின் மேன்மையோ?
நா விலங்கும் என எண்ணியோ? மிகவும் நன்று, நன்று, அரசர் ஞாயமே! 120

'அளி வரும் குழல் பிடித்து, மன் அவையில் ஐவருக்கும் உரியாளை நான்
எளிவரும் துகில் உரிந்தபோது, அருகு இருந்து, கண்டவர்கள் அல்லவோ!
துளி வரும் புனல் பரிந்து அருந்தி, இடு சோறு தின்று, உயிர் சுமந்து, தோள்
எளி வரும்படி இருந்த பாவியரும் இன்று மான நிலை உணர்வரோ!

'அன்னை ஆனவரும் இருவர் ஆம்! முதல் அளித்த தந்தையர்கள் ஐவர் ஆம்!
பின்னை, ஆசைகொடு குருகுலத்து உரிமை பெறுவர் ஆம்! ஒரு பிறப்பில் ஓர்
மின்னை ஆம், அவர்கள் ஐவரும் பரிவினொடு தனித்தனி விரும்புவார்!
என்னை, யாம் அவரொடு ஒரு குலத்து அரசன் என்பது? அம்ம! இவை என் கொலாம்!'

கண்ணன் அவையை நீங்கி, விதுரன் மனைக்கு மீளுதல்

ஞாலம் முற்றும் உடையவன் மொழிந்திட, நகைத்து, வண் துவரை நாதனும்,
'சால முற்றும் இனி அவர் கருத்து!' என நினைந்து, பேர் அவை தணந்து போய்,
கோலம் உற்ற சிலை விதுரன் வாழ்வு பெறு கோயில் சென்று நனி குறுகினான்—
சீலம் அற்றவர் சினந்த போதும், ஒரு தீது இலாதவர் செயிர்ப்பரோ?

கண்ணனுக்கு விருந்து செய்தது பற்றி, விதுரனைத் துரியோதனன் பழித்து உரைத்தல்

கரிந்து மாலை சருகு ஆகவும், புதிய கமல வாள்முகம் வெயர்க்கவும்,
திருந்து கண் இணை சிவக்கவும், கொடிய செய்ய வாய் இதழ் துடிக்கவும்,
இருந்த பேர் அவையின் நெடிது உயிர்த்திடும் இராசராசன், 'அவனுக்கு இவன்
விருந்து செய்த உறவு என்கொல்?' என்று அரசர் எதிர் விதுரனை விளம்புவான்:

'வன்பினால் அவனி வெளவ என்றுகொல், என் மனையில் உண்டியை மறுத்தவன்
தன் பதாகினியொடு இனிது அருந்தும்வகை தன் இல் இன் அமுது இயற்றினான்?
என் பிதாவொடு பிறந்தும், இன்று அளவும் என் கை ஓதனம் அருந்தியும்,
அன்புதான் உடையன்அல்லன்; என் பகைதனக்கும் உற்ற பகை அல்லனோ?

'முதல் விழைந்து, ஒருவன் உடன் இயைந்த பொருள் பற்றி, இன்புற முயங்கினும்,
அதிகம் என்ற பொருள் ஒருவன் வேறு தரின், அவனையே ஒழிய அறிவரோ?
பொது மடந்தையர் தமக்குமண்ணில் இது புதுமை அல்ல; அவர் புதல்வனும்
விதுரன் இன்று அவனொடு உறவு கொண்டது ஓர் வியப்பை என் சொலி வெறுப்பதே!'

விதுரன் சினந்து மறுமொழி கூறி, தன் வில்லை முறித்து, சபையை விட்டு நீங்குதல்

இன்னவாறு இவன் உரைத்தபோது, அவன் எழுந்திருந்து, 'வசை என்னை நீ
சொன்ன வாய் குருதி சோர, வாள்கொடு துளைத்து, நின் முடி துணிப்பன் யான்;
மன்னவா! ''குருகுலத்திலே ஒருவன் மைந்தன் ஆர் உயிரை வெளவினான்''
என்ன, வானவர் நகைப்பரே! எனை உரைத்த நாவுடன் இருத்தியோ?

'ஈண்டு அவர்க்கு உதவி ஆய தூது என இசைப்பவற்கு, உலகம் எங்கணும்
நீண்டவற்கு, உதவி ஆயினேன் என நினைத்து, நீ எனை அடர்த்தியோ?
மாண்டவர்க்கு உதவி ஆய பேர் அறமும், இசையும், ஆண்மையும், வளர்த்திடும்
பாண்டவர்க்கு உதவி ஆகில், என்னை முடி மன்னர்ஆனவர் பழிப்பரோ?

'சொல் இரண்டு புகலேன்; இனி, சமரில் நின்று வெங் கணை தொடேன்' என,
வில் இரண்டினும் உயர்ந்த வில்லதனை வேறு இரண்டுபட வெட்டினான்—
மல் இரண்டினையும் இருவர் ஆகி முன் மலைந்த காள முகில் வந்து, தன்
இல் இரண்டு தினம் வைகுதற்கு உலகில் எண் இலாத தவம் எய்தினான்.

விதுரன் வில் முறித்தது குறித்து வேந்தர்கள் வருந்த, வீடுமன்
துரியோதனனைக் கடிந்து உரைத்தல்

அந்த வில்லினை முறித்த வில்லி தனது ஆலயம் புகுத, 'அச்சுதன்
சந்த வில்லும், அரன் வில்லும், ஒப்பது ஒரு தாம வில்லினை முறிப்பதே!
முந்த வில்லியரில் எண்ணும் வில்லுடைய விசயன் வந்து அமரில் முடுகினால்,
எந்த வில்லி எதிர் நிற்கும் வில்லி, இனி!' என்று காவலர் இரங்கினர்.

'கார் அனைத்தும் விடு தாரை அன்ன பல கணைகள் ஏவி, அமர் கருதும் வில்
வீரனைப் பழுது உரைத்த நீ, பகையை எங்ஙனே, தனிகொல், வெல்லுவாய்?
பார் அனைத்தும் இனி ஐவர் ஆளும்வகை பண்ணுவித்தனை; அழிந்தது, உன்
பேர் அனைத்தும்' என உள் அழிந்து, சில பேசினான், உயர் பிதாமகன்.

'விதுரன் அன்றி வில் வீரர் பிறர் இல்லையோ?' எனத் துரியோதனன் மொழிதல்

பிதாமகன் பரிவுடன் முனிந்து, சில பேச, நாசம் உறு பேரன்ஆம்
விதார மொய்ம்பனும், விதுரன் அல்லது வில் வல்ல வீரர் பிறர் இல்லையோ?
உதார சீலன், உயர் அங்கர் கோன், வரி வில் ஒன்றுமே அமையும், உற்று எழும்
பதாதியோடு அமரில் ஐவரும் பட மலைந்திட, பரணி பாடவே. 132

'நீ இருக்க, நெடு விற் கை ஆசிரியன் அவன் இருக்க, நிகர் அற்றவன்
சேய் இருக்க, விறல் மன்னர் இப்படி திரண்டு இருக்க, எதிர் சென்று, நீள்
வேய் இருக்கும் இதழ் இடையனுக்கு நல் விருந்து செய்தவன் வெறுக்கில் என்?
போய் இருக்கில் என்? முறிக்கில் என், சிலை? மலைந்து, நம்மொடு எவர் போர் செய்வார்?

கன்னன் தனது ஆண்மை எடுத்துரைத்தல்

என்று கூற, விறல் அங்கர் பூபதியும், 'யான் இருக்க, ''இகல் விசயனைச்
சென்று சீறி, உயிர் கொள்ள வல்லவர்கள் யாவர்?'' என்று, நனி செப்புவீர்!
கன்றினால் விளவு எறிந்த கள்வன் இவன் நின்று, தேர் நனி கடாவினும்
அன்று போரினிடை காணல் ஆகும், எனது ஆடல் வெஞ் சிலையின் ஆண்மையே!

'அம்பரத்தவர் உடன்று சீறினும், ஓர் அம்பிலே அழிவர் திண்ணம்; யான்
வெம் பணிப் பகழி ஏவில், ஆவியுடன் மீளுவான் அமரில் விசயனோ?
இம்பரில் புகல, இரு தளத்தினும் எனக்கு நேர் ஒருவர் இல்லை' என்று,
உம்பர் கற்பகமும் நாண, வண்மையில் உயர்ந்த வீரன் இவை உரைசெய்தான்.

'விசயனுக்கு நிகர் நீயோ?' என்று வீடுமன் கன்னனை இகழ,
அவனும் வீடுமனைப் பழித்தல்

'திசை அனைத்தினும் வளைந்த தானவரை இரவி வந்தது ஒரு திசையின்வாய்,
நிசை எனப் பொருது, வானவர்க்கு அரசு அளித்து, வந்த விறல் நீர்மையான்
விசையனுக்கு நிகர் நீகொலோ? கடவுள் வெண் மதிக்கு நிகர் வெள்ளியோ?
அசைவு இல் வில்-தொழிலும் வல்லையோ?' என ஓர் அசைவு இலாதவன் அறைந்தனன்.

அவன் மொழிந்த மொழி தன் செவிப் படலும், 'அருகு இருந்து அமுது அருந்தும் நீ,
இவனுடன் சிலர் பகைக்கின், மற்று அவர்தம் இசையும், ஆண்மையும், இயம்புவாய்;
புவனம் ஒன்றுபட வரினும், என்தனொடு பொருவர்ஆயின், எதிர் பொர விடாய்!
சிவனும் என் கணையை அஞ்சும்!' என்று, நனி சீறினான், இரவி சிறுவனே.

துரியோதனன் யாவர்க்கும் விடை கொடுத்தனுப்புதல்

இரவி மைந்தனொடு கங்கை மைந்தன் எதிர் வாய்மை ஒன்றையும் இசைத்திலன்;
'பொர, அறிந்திடுதும், அன்று வெஞ் சமரில்' என்று எழுந்து தனி போயினான்;
அரவ வெங் கொடி உயர்த்த கோவும் இகல் அரசருக்கு விடை நல்கினான்.
விரவு பைந் துளப மாலையான் விதுரன் மனையில் உற்றது விளம்புவாம்: 138

வில் முறித்தமை குறித்து விதுரனைக் கன்னன் வினவ, அவன் மறுமொழி கூறுதல்

பொரு சிலை முறித்த வீரன் கோயிலில் புகுந்து, நேமிக்
குரிசிலை வணங்கி, ஆங்கண் இருப்ப, அக் குரிசில் நோக்கி,
'இரு சிலை உண்டு என்று இந்த இரு நிலத்து இயம்பும் வில்லின்
ஒரு சிலை முறித்த சீற்றம் என்கொலோ? உரைசெய்!' என்றான். 139

' ''ஆவது கருதான் ஆகில், அமைச்சர் சொல் கேளான் ஆகில்,
வீவது குறியான் ஆகில், வினைவதும் உணரான் ஆகில்,
நாவது காவான் ஆகில், அவனுக்கா நடந்து போரில்
சாவது, பழுது!'' என்று அன்றோ சகத்துளோர் சாற்றுகின்றார்? 140

'செல்வம் வந்து உற்ற காலைத் தெய்வமும் சிறிது பேணார்;
சொல்வன அறிந்து, சொல்லார்; சுற்றமும் துணையும் நோக்கார்;
வெல்வதே நினைவது அல்லால், ''வெம் பகை வலிது'' என்று எண்ணார்;
வல் வினை விளைவும் ஓரார்;—மண்ணின்மேல் வாழும் மாந்தர். 141

'நினைக்கவும் தொழவும் எட்டா நீ எழுந்தருளப் பெற்றும்,
''தனக்கு இது தகுதி'' என்று தமருடன் வாழ எண்ணான்,
மனக் கடுங் கனலினான் தன் மனத்தினால் உரைத்த வெஞ் சொல்
எனக்கு இசையாமல், யானும் இருஞ் சிலை இறுத்தது' என்றான். 142

விதுரன் ஆண்மையைக் கண்ணன் புகழ்ந்து, 'துரியோதனன் மொழிந்தனவற்றைப் பொறுத்தி' என்று கூறி, பின் குந்தியின் மாளிகை செல்லுதல்

மாயனும் மகிழ்ந்து நோக்கி, 'மாசுணம் உயர்த்த மன்னன்
போய், அருஞ் சேனையோடு, போர்க் களம் குறுகும்போது,
நீ அவன் அருகு நில்லாது ஒழியின், உன் நேய மைந்தர்,
தாயமும், செல்வம் முற்றும், தரணியும், பெறுவர் அன்றே! 143

'ஏற்றிய நறு நெய் வீசி இந்தனம் அடுக்கினாலும்,
காற்று வந்து உறாதபோது, கடுங் கனல் கதுவ வற்றோ?
நீற்று அணி நிமலன் அன்ன நின் கை வில் இற்றதுஆகில்,
சீற்ற வேல் அரசன் சேனை தென்புலம் படர்கை திண்ணம். 144

'பன்னிய புரை இல் கேள்விப் பயன் நுகர் மனத்தாய்! நின்னை
மன்னவன் மொழிந்த எல்லாம் பொறுத்தி!' என்று அருளி, மாயோன்
அந் நகர்தன்னில், வண்மை, அருள், அழகு, ஆண்மை, பேசும்
கன்னனைப் பயந்த காதல் கன்னிதன் கோயில் புக்கான். 145

குந்தி கண்ணனை எதிர்கொண்டு, அவன் அத்தினபுரி வந்த காரியம் வினவுதல்

மண்டல மதியம் அன்ன மாசு அறு முகத்தினாளும்,
திண் திறல் மருகன்தன்னைச் சென்று, எதிர்கொண்டு, கண்டு,
வெண் திரை மகர வேலை விரி புனல் முகந்து தோன்றும்
கொண்டலை மகிழ்ந்து காணும் குளிர் பசுந் தோகை போன்றாள். 146

'யான் உறை இல்லின் வந்தது, என்ன மா தவம்!' என்று எண்ணி,
கான் உறை மைந்தர்தம்மைக் கண்டனள் போன்றாள் ஆகி,
தேன் உறை துளவினான்தன் செய்ய மா முகத்தை நோக்கி,
'வான் உறை புரிசை மூதூர் வந்தது என் கருதி?' என்றாள். 147

கண்ணன் தான் தூது வந்ததும், போர் நேர்ந்துள்ளமையும் குந்திக்குக்கூறி, கன்னன் பிறப்பு வரலாற்றையும் அவளுக்கு உரைத்தல்

'நின் பெரும் புதல்வர் சொல்ல, நெடும் புனல் நாடு வேண்டி,
வன் பணி உயர்த்த கோமான் மனக் கருத்து அறிய வந்தேன்;
''தென் புல வேந்தன் வெஃகச் செருத் தொழில் புரிவன்'' என்றான்;
என், பல சொல்லி? நாளை எதிர்க்கவே இசைந்தது' என்றான். 148

'தன்மை நான் உரைப்பக் கேள்: நின் தந்தைதன் மனையில் நீயும்
கன்னியாய் இருந்து வாழும் காலை, ஓர் முனிவன் வந்து
சொன்ன மந்திரம் ஓர் ஐந்தின் ஒன்றினால், சூரன்தன்னை
முன்னினை; அவனும் அன்று வந்து நின் முன்பு நின்றான். 149

'கதிரவன் அருளினால் ஓர் கணத்திடைக் காதல் கூர,
மதலை அங்கு ஒருவன்தன்னைப் பயந்தபின், ''வடு'' என்று அஞ்சி,
மிதவை அம் பேழைதன்னில் பொதிந்து நீ விட, அப்போது, அந்
நதியும் அம் மகவைக் கங்கை நதியிடைப் படுத்தது அன்றே. 150

'காதல் நின் புதல்வன்தன்னைக் கண் இலா அரசன் பொன்-தேர்ச்
சூதன் வந்து எடுத்துக்கொண்டு, சுதன் என வளர்த்த காலை,
ஆதபன், ''இவனை யாரும் கன்னன் என்று அழைக்க'' என்றான்;
தாதையும், ''விசும்பில் சொன்ன நாமமே தக்கது'' என்றான். 151

'பண்புடைக் குமரன் கற்ற படைத் தொழில் பலவும் கண்டு,
நண்புடை உரிமை எல்லாம் நல்கி, மா முடியும் சூட்டி,
வண் பணி உயர்த்த கோமான் வாழ்வு அவற்குஅளித்தான்; மற்றைத்
திண் பரித் தேர் வல்லோரில் அவனை யார் செயிக்க வல்லார்? 152

கன்னனை ஐவருடன் கூட்டுமாறும், வர மறுத்தால் வரம் வேண்டுமாறும்
குந்திக்குக் கண்ணன் மொழிதல்

'அந்த நின் மைந்தன்தானே அருஞ் சிலை விசயனோடு
வந்து, எதிர் மலைய நின்றான்; உறவு மற்று அறியமாட்டான்;
சிந்தையின் ஐயம் தீர, இதனை நீ தெளியச் சொல்லி,
கொந்து அவிழ் அலங்கலானைக் கூட்டுக, விரைவின் அம்மா! 153

' ''தம்பியர் ஐந்து பேரும் தனித்தனி ஏவல் செய்ய,
வம்பு அவிழ் அலங்கலோடும் மா மணி மகுடம் சூடி,
அம் புவி முழுதும் நீயே ஆளலாம்; வருக!'' என்றால்,
உம்பர் கா அனைய கையான் உன் உரை மறுத்தான்ஆகில், 154

'எரி அமுது அருந்த, கானம் எரித்த நாள், அகன்று போன
அரவினை அங்கர் கோமான் ஆசுகமாகக் கொண்டான்;
வரி சிலை விசயன்தன்மேல் மறு கணை தொடுக்காவண்ணம்
ஒரு வரம் வேண்டுக!' என்றான்—உற்றவர்க்கு உறுதி சூழ்வான்.

அது கேட்டு, குந்தி வருந்த, கண்ணன் தேற்றுதல்

'மன்றல் அம் தெரியல் வெய்யோன் மதலை என் மைந்தன் என்பது
அன்று எனக்கு உரைத்தாய்ஆகில், அவனுடன் அணுக ஒட்டேன்;
சென்று உயிர் ஒழிக்குமாறு செருவினை விளைத்து, பின்னை
இன்று எனக்கு உரைத்தாய்; ஐயா! என் நினைந்து, என் செய்தாயே?

'கான் பட்ட கனலில் பாயும் கடுங் கணை விலக்கினேனேல்,
வான் பட்ட புரவித் தேரோன் மகன் படும்; மகவான் மைந்தன்-
தான் பட்டு மடியும், சென்று தடாது இனி இருந்தேன்ஆகில்;
யான் பட்ட கொடுமை நன்று!' என்று என் பட்டாள்? இரங்கி வீழ்ந்தாள்! 157

தேக்கு உந்தி, அகிலும் சாந்தும் சிந்தும் நீர் நதி சூழ் செல்வக்
கோக் குந்தி அரசன் பாவை குலைந்து அழும் கொடுமை கண்டு,
மீக் குந்தி உறிகள்தோறும் வெண்ணெயும் தயிரும் உண்ட
வாக்கு, உந்தி மலரோன், பின்னும், மனத் தளர்வு அகற்றினனே:

'பை வரும் தலைகள் ஐந்து படைத்த பன்னகமே போல
ஐவரும் படுதல் நன்றோ? அங்கர்கோன் படுதல் நன்றோ?
உய்வு அருஞ் சமரில் ஆவி ஒருவர் போய், ஒருவர் உய்யார்;
நை வரும் துயரம் மாறி நடப்பதே நன்மை' என்றான். 159

கண்ணன் விதுரன் மாளிகைக்கு மீள, சூரியன் மறைய, அந்திமாலை தோன்றுதல்

காளமா முகிலின் மேனிக் கரிய நாயகனும் தேற்றி,
மீள மா தவத்தின் மிக்க விதுரன் வாழ் மனையில் எய்த,
வாள மால் வரையில் வெய்யோன் குறுகினன்—வருணன் திக்கில்,
நீள மால் யானை நெற்றி நிறத்த செந் திலகம் போன்றே. 160

நால்-திசை உலகுதன்னில், நான் மறை உணர்ந்தோர்தாமும்
போற்று இசை மாலை என்னும் பொற்புடை அணங்கு வைக,
மாற்று இசைவு இலாத செம் பொன் மண்டபம்தன்னில் ஆதி
மேல்-திசைக் கடவுள் இட்ட வெயில் மணிப் பீடம் போன்றான். 161

கொண்ட மென் சிறை வண்டு என்னும் கொழுநருக்கு இடம் கொடாமல்
முண்டகக் குலத்து மாதர் முகம் குவிந்து ஊடி நிற்ப,
கண்டு எதிர் நின்ற காதல் கயிரவக் கணிகை மாதர்
வண் துறை நின்று, தங்கள் வாய் மலர்ந்து, அழைக்கலுற்றார். 162

கான் எலாம் மலர்ந்த முல்லை ககனமீது எழுந்ததென்ன
வான் எலாம் வயங்கு தாரை நிரை நிரை மலர்ந்து தோன்ற,
வேனிலான் விழவின் வைத்த வெள்ளி வெண் கும்பம் என்ன,
தூ நிலா மதியம் வந்து, குண திசைத் தோன்றிற்று அம்மா! 163

தூ இயல் நிலவு தோன்ற, துணைவரைப் பிரிந்தோர் கண்கள்
காவியும், ஆம்பலும், பைங் கருவிள மலரும், போன்ற;
மேவிய மகளிர் கண்கள் மீன் எறி பரவை ஏழும்,
தாவு இயல் உழையும், காதல் சகோரமும், போன்ற மாதோ! 164

இரவில் துரியோதனன் செய்த சூழ்ச்சி

அரவு இயல் அல்குலாரும் மகிழ்நரும் அன்பு கூர
விரவிய அமளி எய்தி, வீதி மா நகரி எங்கும்
பரவையின் நிமிர்ந்த ஓதை அமர்ந்தபின், பரித் தேர் வேந்தன்
இரவிடைச் சூழ்ந்த வண்ணம் இன்னது என்று இயம்புகின்றாம்: 165

'தனி வந்த கண்ணன் திறத்துச் செய்வது என்?' எனத் துரியோதனன் வினவுதல்

தந்தையும், தம்பிமாரும், கன்னனும், சகுனிதானும்,
சிந்தையில் தெளிந்த கல்விச் செழு மதி அமைச்சர் தாமும்,
முந்து அரவு உயர்த்த கோமான் ஏவலால், முழுதும் எண்ணி,
மந்திரம் இருப்பான் வந்து, ஓர் மண்டபம் குறுகினரே. 166

தீது அறு மதி வல்லோரைச் செழு மதிக்குடையான் நோக்கி,
'பாதப வனத்தில் போன பாண்டவர் தம்மை மீண்டும்
மேதக அழைத்து, ''நாடு வேண்டுமின்'' என்று மூட்டும்
யாதவன் தனித்து வந்தான்; என் செய்வது? இயம்பும்!' என்றான்.

திருதராட்டிரன், 'கண்ணனைக் கொல்ல வேண்டும்' என, விகருணன் தடுத்து மொழிதல்

பொரும் படை மைந்தன் கூற, தந்தையும் பொருந்தச் சொல்வான்:
'இரும் புலி வலையில் பட்டால், விடுவரோ, எயினர் ஆனோர்?
வரம்பு இல் வெஞ் சேனையோடும் வளைந்து, இனி மாயன்தன்னைக்
கரும்பொழுது அகலும்முன்னே கொல்வதே கருமம்' என்றான். 168

கண் இலான் உரைத்த மாற்றம் கேட்டலும், 'காவலோரில்
மண்ணில் ஆர் இதற்கு முன்பு தூதரை வளைந்து கொன்றார்?
எண் இலா இந்த எண்ணம் எவ்வழிக் கற்றது?' என்று,
வெண் நிலா முறுவல் செய்து, விகன்னனும் விளம்பலுற்றான்: 169

'மூத்தவர், இளையோர், வேத முனிவரர், பிணியின் மிக்கோர்,
தோத்திரம் மொழிவோர், மாதர், தூதர், என்று இவரைக் கொல்லின்,
பார்த்திவர்தமக்கு வேறு பாவம் மற்று இதனின் இல்லை;
பூத் தெரி தொடையாய்! பின்னும் நரகினும் புகுவர்!' என்றான்.

' ''பழியுடைப் பகைஞரேனும், தன் பெரும் பதியில் வந்தால்,
அழிவுறக் கோறல் பாவம்; ஆண்மையும் அல்ல'' என்பார்;
கழி கடற் சேனை சூழக் கங்குலின் வளைந்திட்டாலும்,
எழிலுடைக் கொண்டல் வண்ணன் அகப்படான், எவர்க்கும்' என்றான்.

துச்சாதனன் விகருணனை முனிந்து, 'போர் செய எழுவோம்' என்றல்

'வெம் புய வலியால் மாதை விரி துகில் உரிந்த வீரன்,
தம்பியை முனிந்து சீறி, தமையனை நோக்கிச் சொல்வான்:
'வம்பு அவிழ் அலங்கல் மார்ப! மந்தணம் உரைக்கலுற்றால்,
இம்பர் மற்று யாது சொல்ல, இளைஞரை அழைத்தது?' என்றான்.

'அதிரதர் முதலா உள்ள அவனிபர் வளைந்து நிற்ப,
எதிர் முகில் தவழும் கோயில் எரியினை எங்கும் மூட்டி,
விதுரனும் அவனும் சேர வெந்திட, மலைவது அல்லால்,
மதி பிறிது இல்லை; இன்னே, வல் விரைந்து எழுமின்!' என்றான்.

கன்னன், 'அம்பு ஒன்றினாலே அவனை வெல்வேன்!' எனல்

'செங் கதிர் எழுந்து சீறின் செறி இருள் நிற்பது உண்டோ?
இங்கு இவன் இருந்த இல்லில் எரி இட வேண்டுமோதான்?
வெங் கணை ஒன்றினாலே விளிந்திட வென்றி கொள்வேன்;
கங்குலின் எழுமின்!' என்று கன்னனும் கனன்று சொன்னான். 174

சூழ்ச்சியால் கண்ணனைச் சிறைப்படுத்தலே தக்கது எனச் சகுனி உரைத்தல்

'பதிப் பெயர்ந்து ஏகி, நாளைப் பகைவரைக் கூடும்ஆயின்,
விதிப் பயன் என்ன, நம்மை வெஞ் சமர் வெல்ல ஒட்டான்;
மதிப்பது என் வேறு? கள்ள மாயனை மனையில் கோலி,
சதிப்பதே கருமம்!' என்று, சௌபலன் பின்னும் சொல்வான்: 175

'கொல்லுவது இயற்கை அன்று; குழி பறித்து, அரக்கரோடு
மல்லரை இருத்தி, மேல் ஓர் ஆசனம் வகுத்து, நாளை
எல்லிடை அழைத்து, வீழ்த்தி, இகலுடன் விலங்கு பூட்டி,
சொல்ல அருஞ் சிறையில் வைத்தல் தூதருக்கு உரிமை' என்றான்.

துரியோதனன் நிலவறை அமைத்து, அதனுள் அரக்கர்
முதலியோரை மறைத்து வைத்தல்

மாதுலன் உரைத்த மாற்றம் மருகனும் இசைந்து, கங்குல்
போதிடை, 'அநேக மல்லர் வருக!' எனப் புகன்று, தானும்
நீதியின் இருந்து, தாழ நிலவறை சமைத்த பின்னர்,
ஆதி நூறாயிரம் போர் அரக்கரை அதனுள் வைத்தான். 177

மல்லர் பப்பரவர்தம்மை மற்று அதின் இரட்டி வைத்தான்;
வில்லுடை வீரர்தம்மை வேறு அதின் இரட்டி வைத்தான்;
பல் படை வல்லோர்தம்மைப் பதின் மடங்கு அதனில் வைத்தான்;—
அல்லில் ஓர் கடிகைதன்னில், அறிவனை அழைக்க என்றே. 178

பெரும் பில அறையை வேயின் பிளப்பினால் நிரைத்து மூடி,
அரும் பெறல் மணிகளால் ஓர் ஆசனம் அதன்மேல் ஆக்கி,
சுரும்பு இமிர் மாலை தூக்கி, தொழிலுடை விதானம் ஏற்றி,
வரம்பு இலா வென்றி வேலான் மாறு இலா வண்ணம் செய்தான்.

சூரியன் உதித்தல்

அடியவர் மனத்தில் உள்ள ஆர் இருள்-கங்குல் தீர்க்கும்
நெடியவன் இருக்க என்று, நிலவறை விரகின் செய்த
கடியவன் இயற்கை அஞ்சி, கங்குலும் கடிதின் போக,
படியவர் துயிலும் போக, பரிதியும் உதயஞ்செய்தான். 180

சிரம் தரு சுடிகை நாகத் திரள் மணி பலவும் சிந்தி,
நிரந்தரம் அருவி வீழும் நிறம் திகழ் உதயக் குன்றில்,
பரந்து எழும் அருக்கன், சூழ்ந்த படர் இருள்-கங்குல் கண்டு,
புரந்தரன் கோயில் இட்ட, பொங்கு ஒளித் தீபம் போன்றான். 181

தொடர்ந்து ஒளிர் உதய ராகத்தோடு உற, நெருங்கி, மேன்மேல்
அடர்ந்து, அரி பரந்து, காமன் ஆகம வேதம் பாட,
தடங் கயல் மலைந்து உலாவ, தாமரை முகமும், காதல்
மடந்தையர் முகமும், சேர மணம் பெற, மலர்ந்த மாதோ! 182

அரசர்கள் துரியோதனன் அவைக்கு வருதலும், கண்ணன் எழுந்து
காலைக்கடன் முடித்தலும்

இருந் துயில் உணர்ந்து, வேந்தர் யாவரும், இரவில் சற்றும்
வரும் துயில் இலாத கண்ணன் வாழ் பெருங் கோயில் புக்கார்;
பெருந் துயில் அநந்த போகப் பேர் அணை துறந்த மாலும்
அருந் துயில் எழுந்து, காலை அருங் கடன் முறையின் செய்தான்.

தூதுவர் அழைக்க, கண்ணன் அரசவைக்குச் செல்லுதல்

மாதவன் இருந்த கோயில் வந்து, அடி வணங்கி, மன்னன்
தூதுவர், 'ஆழி அம் கைத் தோன்றலே! துளப மாலே!
யாதவ குலத்தோர் ஏறே! ''எழுந்தருள்க!'' என்றான், இன்று எம்
மேதகும் அரசன்' என்றார்; முகுந்தனும் விரைந்து சென்றான். 184

துரியோதனன் கண்ணனை மட்டும் அவையில் விடுமாறு காவலர்க்குப் பணித்தல்

கந்து அடு களிற்று வேந்தன், கண் இலா அரசும், கங்கை
மைந்தனும், முதலா உள்ள மன்னரும், மதி வல்லோரும்,
தந்திர வகையும், ஏனை இளைஞரும், தன்னைச் சூழ,
இந்திரன் இருக்கை அன்ன கோயிலூடு இனிது இருந்தான். 185

'நாம வேல் அரசரோடும், நால் வகைச் சேனையோடும்,
மா முகில் வண்ணன் வந்தான்!' என்றனர், வரவு கண்டோர்;
வீ மலர்த் தொடையினானும் வேத்திரத்தவரை நோக்கி,
'தாமரைத் தடங் கண் மாயன்தன்னையே விடுமின்!' என்றான். 186

துரியோதனன் பொய் ஆசனத்துக் கண்ணனை இருக்கச் செய்ய, அது முறிந்து நிலவறை
யில் புக, கண்ணன் பெரு வடிவு கொண்டு, அங்குள்ள வீரரை அழித்தல்

தன் பெருஞ் சேனை நிற்க, தண் துழாய் அலங்கலானும்,
இன்புற நகைத்து, வேந்தர் இருந்த பேர் அவையின் எய்த,
மின் புணர் துவச நாக விடம் நிகர் மனத்தினானும்
அன்பொடு திகிரியானை, 'அதன்மிசை இருக்க!' என்றான். 187

இறைவன் எழில் கதிர் மணிகள் அழுத்திய தவிசின் இருத்தலுமே,
நெறுநெறெனக் கொடு நிலவறையில் புக, நெடியவன் அப்பொழுதே,
மறலி எனத் தகு நிருபன் இயற்றிய விரகை மனத்து உணரா,
முறுகு சினத்துடன், அடி அதலத்து உற, முடி ககனத்து உறவே,

'அஞ்சினம், அஞ்சினம்!' என்று விரைந்து, உயர் அண்டர் பணிந்திடவும்,
'துஞ்சினம், இன்று!' என வன் பணியின் கிளை துன்பம் உழந்திடவும்,
'வஞ்ச மனம் கொடு வஞ்சகன் இன்று இடு வஞ்சனை நன்று இது!' என,
நெஞ்சில் வெகுண்டு, உலகு ஒன்றுபடும்படி நின்று, நிமிர்ந்தனனே.

மல்லர், அரக்கர் குலத்தொடு பப்பரர், வாளினர், வேலினர், போர்
வில்லினர், இப்படி துற்ற நிலத்து அறை மேவிய வீரர் எலாம்,
தொல்லை இடிக்கு அயர்வுற்று உயிர் இற்றுறு சுடிகை அரா எனவே,
கல்லென உட்கினர், தத்தம் உடல், பல கால்கொடு உதைத்திடவே.

அற்புத பங்கய நற் பதம் உந்தலின், அக் குழியின் புடையே,
சற்ப தலந்தொறும் அற்று விழுந்தன, தத்தம் நெடுந் தலை போய்;
முன் பவனன் பொர, முக் குவடும் துணிபட்டு, முடங்கிய பொன்
வெற்பு என நின்றனர், வெற்று உடலம்கொடு,—விற் படை கொண்டவரே.

மேல் வலி உற்று, எதிர் வீசி, எழில் கரு மேக நிறத் திருமால்
கால் விசையில் பட மோதுதலின், பொரு காமர் புயத் துணைபோய்,
நீல நிறக் கவின் வாசவன் வச்சிர நீள் படையின் சிறகு ஈர்
மால் வரை ஒத்தனர்—வாகை பெறக் கதிர் வாள்கள் எடுத்தவரே.

வெயில் விடு பைத் தலை அமளிமிசைத் துயில் விபுதர்களுக்கு-அரியோன்
பயில உதைத்தலின், அவர்கள் உரத்திடை பதமலர் பட்டு உருவா,
மயில் கடவிக் கடவுளர் பகையைக் கதிர் மகுடம் முருக்கிய வேள்
அயில் கொடு குத்திய நெடு வரை ஒத்தனர்—அயில்கள் எடுத்தவரே.

மின் சுடிகைப் புயகங்கள் வெருக்கொளும் வெங் கருடக் கொடியோன்
வன் பத பற்ப நகம் கொடு எடுத்து, உயர் வண் ககனத்து இடலால்,
முன்பு வனத்திடை வந்து, கவிக்கு இறை மொய்ம்பு உணரப் புகல்போது
என்பு மலைக்கு உறு பண்பை அடுத்தனர்—எஞ்சிய பப்பரரே. 194

மைந்து படைத்து உயர் பஞ்சவர் சொற்படி வந்த மலர்க் கழலால்
உந்தி, உதைத்து, உடலம் புதையப் பிலம் ஒன்றி ஒளித்திடலால்,
அந்தணன் முற்பகல் வந்து புடைத்திட, அஞ்சி, நிலத்திடை வீழ்
விந்தமொடு ஒத்தனர்—வன் குழியில் திகழ் வெங் கண் அரக்கருமே.

அந்த இடத்து, எறி பம்பரம் ஒத்து, உடலம் சுழலச் சுழல,
குந்தி உறித் தயிர் உண்டவர், பொற் கழல் கொண்டு சுழற்றுதலால்,
முந்து அமரர்க்கு அமுதம் தர மைக் கடல் முன் சுழலச் சுழலும்
மந்தரம் ஒத்தனர்—குந்தம் எடுத்து, எதிர் வந்து மலைந்தவரே.

முட்டிய தொல் குருதிக் கடல் மல்கலின், முட்டி கொள் பல் விரலால்
நெட்டுடல் பல் வகிர்பட்டு, அதனுள் விழ, நித்தர் செய் கொல் வினையால்,
மட்டு அற வல் விறல் உற்று எதிர் செல் கவி, மைக் கடல் எல்லையிலே,
இட்டன கல் வரை ஒத்தனர்—வெல் கழல் எக் குல மல்லருமே.

'எப் புவி நிற்பன? எக் கிரி நிற்பன? எக் கடல் நிற்பன?' என்று,
இப் புவனத்து உயிர் முற்றும் மயக்குற உட்கினர், எய்த்து இமையோர்!—
மைப் புயல் ஒத்து ஒளிர் பச்சை நிறத்தினன் வர்க்க மலர்க் கழலால்,
ஒப்பு அற மட்குழி உற்றவரைப் பட, ஒத்தி மிதித்தலுமே. 198

கொண்டல் முழக்கு என, அம் புவியைக் கடல் கொண்டு எழுதற்கு எதிரும்
சண்ட முழக்கு என, வன் பவனக் கிளை தந்த முழக்கு எனவே,
வண்டுஇனம் மொய்த்து எழு வண் துளபத் தொடை வண் துவரைத் திருமால்
அண்ட முகட்டுற நின்று, சிரித்தனன், அம் கண் நெருப்பு எழவே.

ஒன்றுபடக் கடல் அம்பு முகப்பன, உம்பர் குலத் தருவும்
சென்று முறிப்பன, எண் திசையில் குல சிந்துரம் எற்றுவ, எண்
குன்றம் உடைப்பன, பைம் பொன் உரக் கிரி கொண்டு திரிப்பனவால்—
அன்று தனித்தனி நின்று, மலைத்தருள், அம் கைகள் பற்பலவே.

துகிர் இதழ் வைத்து நல் வளைகள் முழக்கின, தொடர் சில கைத்தலமே;
அகிலம் வெருக்கொள, அரி மழு எற்றின, அடு சில கைத்தலமே;
புகலும் வடிக் கணை உதணம் எடுத்தன, பொரு சில கைத்தலமே;
திகழ் விசயத்தொடு சிலைகள் குனித்தன, சில சில கைத்தலமே. 201

வெங் கணையத் திரள், குந்த நிறப் படை, வெம்பும் உலக்கைகள், போர்
பொங்கிய வச்சிரம், உந்து கலப்பைகள், புன் கழுவர்க்கம், அயில்,
எங்கும் மலைத்து எழு செஞ் சுரிகைத் திரள், தண்டம், இவற்றினொடும்
தங்கிய சக்கர பந்தி தரித்தன—தண் பல கைத்தலமே. 202

மேல் எழு பூங் கதிர் வாள் உறை போம்படி வீசின; வான் புடையே,
தோல்இனம் ஏந்தின; நீள் கவண் ஏந்தின; சோரிகள் சோர்ந்திடவே,
ஞாலம் எலாம் பொரு தோமரம் வாங்கின; நா ஒரு மூன்றனவாம்
சூலமொடு ஓங்கின; பாசமொடு ஓங்கின;—சூழ் சில பூங் கரமே.

சில சில கைத்தலம் அடு கழலில் பல செறி கழல் கட்டினவே;
சில சில கைத்தலம் இறுகு புயத்திடை செறி தொடை இட்டனவே;
சில சில கைத்தலம் அணிகொள் உரத்திடை பணிகள் திருத்தினவே;
சில சில கைத்தலம் விரல்கொடு சுட்டின, செறுநர் திகைத்திடவே.

மா இரு ஞாலம் எலாம் வெயில் போய், ஒரு மரகத சோபை உற,
போய் இரு பாலும் வளைந்து, வளைந்து, எதிர் பொரு முனை வெம் படையோடு,
ஆயிரம் ஆயிரம் அம் கை புறப்பட, அண்டரும் மா தவரும்,
பாயிர நான்மறை பாடி, வியந்து, பணிந்து, புகழ்ந்தனரே. 205

தேவர் முதலிய யாவரும் கண்ணனைத் துதித்து வேண்ட, அவன்
தன் பெரு வடிவைச் சுருக்கிக்கொள்ளுதல்

'ஆரணனே, அரனே, புவனங்கள் அனைத்தையும் அன்று உதவும்
காரணனே, கருணாகரனே, கமலாசனி காதலனே,
வாரணமே பொதுவே ஒரு பேர் இட வந்தருளும் புயலே,
நாரணனே! முனியேல், முனியேல்!' என, நாகர் பணிந்தனரே. 206

'மா தவனே, முனியேல்! எமை ஆளுடை வானவனே, முனியேல்!
யாதவனே, முனியேல்! இதயத்தில் இருப்பவனே, முனியேல்!
ஆதவனே, முனியேல்! மதி வெங் கனல் ஆனவனே, முனியேல்!
நீதவனே, முனியேல்! முனியேல்!' என நின்று பணிந்தனரே. 207

கங்கை மகன், கதிரோன் மகன், அம்பிகை காதல் மகன், தனயர்,
அங்கு அவையின்கண் இருந்த நராதிபர், அடைய எழுந்து, அடைவே
செங் கை குவித்த சிரத்தினர் ஆய், உணர்வு ஒன்றிய சிந்தையர் ஆய்,
'எங்கள் பிழைப்பினை இன்று பொறுத்தருள்!' என்று பணிந்தனரே.

'கண்ண, பொறுத்தருள்! வெண்ணெய் அருந்திய கள்வ, பொறுத்தருள்! கார்
வண்ண, பொறுத்தருள்! வாமா, பொறுத்தருள்! வரத, பொறுத்தருள், நீ!—
திண்ணம் மனத்து உணர்வு ஒன்றும் இலாதவர் செய்த பெரும் பிழை' என்று,
அண்ணல் மலர்க்கழல் சென்னியில் வைத்து, எதிர் அன்று துதித்தனரே.

தேவரும், வாசவனும், தவரும், திசைமுகனும், நராதிபரும்,
யாவரும் அன்பினொடு ஆயிர நாமமும் எண்ணி, இறைஞ்சுதலால்,
மூவரும் ஒன்று என நின்றருள் நாதனும், முனிவு தவிர்ந்தருளா,
மீ வரும் அண்டம் உறும் திருமேனி ஒடுங்கினன், மீளவுமே. 210

சிறிதும் சலித்தல் இன்றி இருந்த துரியோதனனை நோக்கி, அவனை
அழியாமைக்குக் காரணம் கூறி, கண்ணன் வெளியேறுதல்

தன்னில் உயர்ந்தவர் யாரும் இலா முகில் சதுர் மறையின்படியே
எந் நிலமும் திருவடியில் மறைந்திட, இப்படி நின்றிடவும்,
பின்னையும் அஞ்சி அயர்ந்திலன், நெஞ்சு; பெயர்ந்திலன், ஆசனமும்;
சென்னியிலும் கரம் வைத்திலன்; வண் புகழ் சிறிதும் மொழிந்திலனே.

'தொல் அவையின்கண் இருந்த நராதிப! துன் மதியால், எனை நீ
கொல்ல நினைந்தது, நன்று!' என வன் திறல் கூறினன், எம்பெருமான்;
'ஒல்லையில் நின் குலம் முற்றும் மடிந்திட, உற்று மலைந்து, ஓர் கணத்து
எல்லையின் வெஞ் சமர் நூறுவன்; யாவரும் ஏறுவர், வான் உலகே.

'அஞ்சினம், நின்னை அழித்திட—நின்னுடன் அன்று, ''பெருஞ் சமர்வாய்
வெஞ் சுடர் ஆயுதம் ஒன்றும் எடுக்கிலம்'' என்று விளம்பியதும்,
''எஞ்ச மலைந்து எதிர் வந்து உயிர் கொள்ளுதும்'' என்று, தனித்தனியே
பஞ்சவர் கூறிய வஞ்சின வாசகமும், பழுது ஆம் எனவே.' 213

உடன் வந்த மன்னர்களைக் கண்ணன் நிறுத்தி, கன்னனுக்கு அவன் பிறப்பு
வரலாற்றை உணர்த்தி, ஐவருடன் கூடுமாறு கூறுதல்

என்று உரையாடி, நெடுங் கடல்வண்ணன் எழுந்தருள, பிறகே
சென்றனர், எம் முடி மன்னவரும், பணி சேர் கொடியோனை அலார்;
நின்று, உபசாரம் உரைத்து, அவர் தம்மை நிறுத்தி, அனந்தரமே
வன் திறல் அங்கர் பிரானொடு கூறினன், மற்று ஒரு வாசகமே: 214

'வண்மையினால் உயர் அங்கர் குலாதிப! மதி குலம் வாழ்வுற வந்து,
உண்மையினால் உயர் மன்னவர் ஐவரும், உன்னில், உனக்கு இளையோர்;
பெண்மையினால் உயர் குந்தி வயிற்றிடை, பெருமையினால், இதயத்
திண்மையினால், உயர் நின்னையும், அன்பொடு தினகரன் நல்கினனே.

'ஏயும் நெடுங் கொடி முரசுடையோனை எழில் தருமன் தரவே,
வாயு வழங்கினன், வீமனை; நல்கினன் விசயனை, வாசவனும்;
ஆயு நிகழ்ந்திடு வேத மருத்துவர் அன்பொடு அளித்தனர், செந்
தேயு எனும் திறல் நகுலனையும், சகதேவனையும் பெரிதே. 216

'அந்தணன் முன் தரும் மந்திரம் ஐந்தினில் அறுவரையும் கடவுள்-
குந்தி பயந்தனள்; யான் இனி என் பல கூறுவது? உங்களில் நீர்
இந்த நிலம் பெறுவீர்; தவிர்கின், பெற யார் இனி வேறு உரியார்?
வந்து, இனி நும்பியர் தம்மொடு சேர்க!' என மாயன் மொழிந்தனனே.

'ஐவரை இன்று அடுப்பின், அது செய்ந்நன்றி கொன்றதாகும்' எனக்
கன்னன் மறுத்தல்

'கன்றால் விளவின் கனி உகுத்தும், குழையால் நிரையின் கணம் அழைத்தும்,
குன்றால் மழையின் குலம் தடுத்தும், குலவும் செல்வக் கோபாலா!
''இன்றால், எனது பிறப்பு உணர்ந்தேன்'' என்று அன்பு உருகி, எம்பியர்பால்
சென்றால், என்னை நீ அறியச் செகத்தார் என்றும் சிரியாரோ? 218

'ஆர் என்று அறியத் தகாத எனை அரசும் ஆக்கி, முடி சூட்டி,
சீரும், திறமும், தனது பெருந் திருவும், எனக்கே தெரிந்து அளித்தான்;
பார் இன்று அறிய நூற்றுவர்க்கும், பழி தீர் வென்றிப் பாண்டவர்க்கும்,
போர் என்று அறிந்தும், செய்ந்நன்றி போற்றாதவரின் போவேனோ?'

கன்னனை அனுப்பிவிட்டு, கண்ணன் அசுவத்தாமனை அருகில் அழைத்து,
'துரியோதனன் வேண்டினும் நீ சேனாபதி ஆதல் கூடாது' எனல்

இரவிக்கு உரிய திரு மதலை இவ்வாறு உரைக்க, இசை வண்டு
விரவிப் பயிலும் துழாய் முடியோன் வேறு ஓர் மொழியும் விளம்பாமல்,
உர வில் தடந் தோள் உரவோனை, 'ஏகு!' என்று அருளி, ஒரு சார் வெம்
புரவித்தாமா நின்றானை 'வருக!' என்று அழைத்து, புகல்கின்றான்:

'போயே கானம் பல திரிந்து, புகன்ற விரதம் பொய்யாதோர்-
ஆயே வந்த பாண்டவர்கள் ஐந்து ஊர் வேண்ட, மறுத்ததற்கு,
சேயே அனைய சிலை முனிவன் சேயே! நாளைச் செருக் களத்தில்
நீயே கரி' என்று எடுத்துரைத்தான், நெடியோன் துளப முடியோனே.

'ஆனா உனது ஆண்மைக்கு நிகர் அவனிதலத்தில் வேறு உண்டோ?
ஞானாதிபனே! போர்க்களத்தில் நாகக்கொடியோன் பணிந்து உன்னை,
''சேனாபதி ஆகு'' என்றாலும், ''செலுத்தேன்'' என்று, நீ மறுத்தி-
ஆனால் உய்வர், ஐவரும்; மற்று அவர்பால் உனக்கும் அன்பு உண்டே!'

கன்னன் தன் மோதிரத்தை வீழ்த்த, அதனை அசுவத்தாமா எடுக்கும்போது,
'வானில் ஊர்கோள் உற்றது' என, அவனும் வான் நோக்க,
அவையோர், 'அசுவத்தாமன் சூனாற்றான்' எனல்

ஆயோதனத்தில் அடல் அரிஏறு அனையான்தன்னை இவ்வாறு
மாயோன் உரைத்து, தன் விரலின் மணி ஆழியை மண்ணிடை வீழ்த்தான்;
சேயோன் அதனை எடுத்து, அவன்தன் செங் கை கொடுக்க, வாங்காமல்,
'தூயோய்! ஊர் கோள் பரிதிதனைச் சூழ்ந்தது அகல் வான்மீது' என்றே,

வரித் தாமரைக் கண் திரு நெடுமால் வான்வாய் நோக்க, வரி விற்கைப்
பரித்தாமாவும் ஆழியுடன் பரிதி வடிவம்தனைப் பார்த்தான்;
'கிரித் தாழ் கவிகைக் கருங் கள்வன் கிளர் நூல் முனிவன் மைந்தனையும்
பிரித்தான்; அவனும் சூனாற்றான்' என்றார், இருந்த பேர் அவையோர்.

'அசுவத்தாமனை இனித் தெளியலாகாது' என்று துரியோதனன் அவையில் கூற,
அது அறிந்து அசுவத்தாமன் வருந்துதல்

'தனி வந்து அகலும் தூதனைப் போய், தானே அணுகி, தடஞ் சாப
முனிவன் புதல்வன் மோதிரம் தொட்டு, அருஞ் சூள் முன்னர் மொழிகின்றான்;
இனி வந்து உறவாய் நின்றாலும், எங்ஙன் தெளிவது, இவனை?' எனத்
துனி வந்து, அரசர் முகம் நோக்கிச் சொன்னான், இடிஏறு அன்னானே.

துளி ஆர் மதுவின் வலம்புரித் தார்த் துரியோதனன்தான் சொல்லியதும்
ஒளி ஆர் அவையில் வாள் வேந்தர் ஒருவர்க்கு ஒருவர் உரைத்தனவும்,
களி யானை அனான் செவிப்படலும், கலங்கி, 'சித்தம் இவர் என்னைத்
தெளியாவண்ணம் பேதித்தான், திருமால்!' என்றே சிந்தித்தான்.

விதுரன் மாளிகை சென்றபின், கண்ணன் இந்திரனை அழைத்து,
கன்னனிடமுள்ள கவச குண்டலங்களை வாங்குமாறு கூறுதல்

தண் அம் துளப முடியோனும், தனித்து அங்கு இருந்து, தன் மனத்தில்
எண்ணம் பலித்தது, என மகிழ்ந்தே, இளையோன்தனக்கு விடை நல்கி,
விண் நின்று, அமரர் மிகத் துதிக்க, விதுரன் மனையில் மேவிய பின்,
திண்ணம் கடவுட் குல அரசன் வருமாறு அறிந்து, சிந்தித்தான்.

அந்தக் கணத்தில் வந்து இறைஞ்சும், ஆகண்டலனைத் தழீஇக்கொண்டு,
கந்தத் துளப முடியோனும், கண்ணும் கருத்தும் களி கூர,
தந்தத் தொழிலின் அரி சுமந்த தவிசினிடையே உடன் இருத்தி,
முந்தக் கருதுகின்ற வினை முடிப்பான், உபாயம் மொழிகின்றான்:

'கிரியின் சிறகை அரி படையாய்! கேண்மோ: ஆண்மைக் களமீதில்
வரி வெஞ் சிலைக் கை விசயனுக்கு மாறாய் முனிந்து வருகின்ற,
எரியும் கனல்வாய் விட அரவு ஒன்று இவனுக்கு உற்ற பகையான
அரியின் புதல்வன்தனக்கு ஒரு பேர் அம்பு ஆகியது ஆர் அறியாதார்?

'கன்னன் விசயன்தனைக் கொல்லின் கடற் பார் முழுதும் கண் இல்லா
மன்னன் புதல்வன்தனக்கே ஆம்; ஒழிந்தோர் தாமும் மடிந்திடுவார்;
முன்னம் சூதில் மொழிந்த பகை முடியாது இருக்கின், அவர்க்கு அன்று;
நின் நெஞ்சு அறிய, யான் அறிய, நினக்கே வசையும் நிலையாமே.

'கவசம் கனக குண்டலம் என்று இரண்டு புனையின், கற்பாந்த
திவசம் பொரினும், கன்னன் உயிர் செகுப்பார், மண்ணில் சிலர் உண்டோ?
அவசம் கிளைஞர் உற, துணைவர் அரற்ற, களத்தில் அடு குரக்குத்
துவசம் படைத்தோன் படும்; பயந்த துணைவா! இன்னே சொன்னேனே.

'வல்லார் வல்ல கலைஞருக்கும், மறை நூலவர்க்கும், கடவுளர்க்கும்,
இல்லாதவர்க்கும், உள்ளவர்க்கும், இரந்தோர்தமக்கும், துறந்தவர்க்கும்,
சொல்லாதவர்க்கும், சொல்பவர்க்கும், சூழும் சமயாதிபர்களுக்கும்,
அல்லாதவர்க்கும், இரவி மகன் அரிய தானம் அளிக்கின்றான். 232

'மைந்தற்கு உறுதி நீ வேண்டின், வல்லே முனிவர் வடிவு ஆகி,
சந்தப் பனுவல் இசைமாலைத் தானாகரனை விரைந்து எய்தி,
''அந்தக் கவச குண்டலங்கள் அளிப்பாய்'' என்றால், அவன் ஒன்றும்
இந்தப் புவியில் மறுத்து அறியான்; உயிரே எனினும், ஈந்திடுவான்!

'இரண்டும் அவன்பால் நீ கவரின், இருந் தேர் ஊர்ந்து, இப் படி அரசர்
திரண்டு வரினும், வெஞ் சமரில் திண் தேர் விசயன் எதிர் நில்லார்.
முரண்டு பொரு வில் கன்னனும், தன் முன்னே எய்தி, முடி சிதறி,
புரண்டு மறியும்' என, வணங்கி, புத்தேள்-அரசன் போகின்றான்.

இந்திரன் கன்னனிடம் கிழ முனி வடிவம் கொண்டு வந்து, அவனது
கவச குண்டலங்களைப் பெறுதல்

தண்டு தாள் எனக் குனிந்து உடல் அலமர,
தாள் இணை தளர்ந்து தள்ளாட,
கண்டு யாவரும் கைதொழ, கவித்த
கைக் குடையுடன், கங்கை நீர் நுரையை
மொண்டு மேல்உறச் சொரிந்ததாம் என நரை
திரையுடன், மூப்பு ஒரு வடிவம்
கொண்டதாம் என, ஒரு முனி ஆகி, அக்
கொற்றவன் வாயில் சென்று அடைந்தான். 235

'அடுத்த தானமும் பரிசிலும் இரவலர்க்கு
அருளுடன் முற்பகல் அளவும்
கொடுத்து, நாயகன் புகுந்தனன்; நாளை நீர்
குறுகுமின்' என்று, அவன் கோயில்
தடுத்த வாயிலோர் மீளவும் உணர்த்தலின்,
தலைவனும், 'தருக!' என, விரைவின்
விடுத்த நான்மறை முனியை முன் காண்டலும்,
வேந்தனும், தொழுது, அடி வீழ்ந்தான். 236

'என்ன மா தவம் புரிந்தனன், பரிந்து நீ
ஈண்டு எழுந்தருளுதற்கு!' என்று,
பொன்னின் ஆசனத்து இருத்தி, மெய் அன்புடன்
பூசையும் முறைமையில் புரிய,
அன்ன வேதியன், 'தளர்ந்த என் நடையினால்
ஆனதே பிற்பகல்' என்று,
சொன்ன வேலையில் நகைத்து, 'உனக்கு அளிப்பன், நீ
சொன்னவை யாவையும்' என்றான். 237

'அருத்தி ஈதல் பொற் சுர தருவினுக்கும் மற்று
அரிது! நீ அளித்தியோ?' என்று,
விருத்த வேதியன் மொழிந்திட, நகைத்து, 'நீ
மெய் உயிர் விழைந்து இரந்தாலும்,
கருத்தினோடு உனக்கு அளித்திலேன்எனின், எதிர்
கறுத்தவர் கண் இணை சிவப்ப,
உருத்த போரினில், புறந்தரு நிருபர்போய்
உறு பதம் உறுவன்!' என்று உரைத்தான். 238

வந்த அந்தணன், 'கவச குண்டலங்களை
வாங்கி நீ வழங்கு, எனக்கு!' என்ன,
'தந்தனன் பெறுக!' என அவன் வழங்க, விண்-
தலத்தில் ஓர் தனி அசரீரி,
'இந்திரன்தனை விரகினால் மாயவன்
ஏவினான்; வழங்கல் நீ!' எனவும்,
சிந்தையின்கண் ஓர் கலக்கம் அற்று, அளித்தனன்,
செஞ் சுடர்த் தினகரன் சிறுவன். 239

இந்திரன் தன் உண்மை வடிவு காட்டி, கன்னனுக்கு வேல் ஒன்று கொடுத்தல்

அண்டர் யாவரும் மலர் மழை பொழிந்தனர்;
அந்தர துந்துபி ஆர்ப்ப,
கொண்டல் வாகனன் கொண்ட மெய் ஒழித்து, தன்
கோல மெய்யுடன் வெளிநின்றான்;
கண்டு, மா மனம் உருகியே, களித்திடும்
கன்னனுக்கு, அந் நெடுங் கடவுள்,
'மண்டு போரினில் வயம் தரும் இது' என,
மற்று ஒரு கொற்ற வேல் எடுத்தே, 240

'வெலற்கு அருந் திறல் விசயன்மேல் ஒழித்து, நீ
வெஞ் சின மடங்கல்போல், நெஞ்சில்
கலக்கம் ஒன்று அறப் பொரு திறல் புனைந்திடு
கடோற்கசக் காளைதன் உயிரே
இலக்கு, வந்து எதிர் மலைந்தபோது இதற்கு, என
ஏவு!' என மறையையும் இயம்பி,
சொலற்கு அரும் புகழ்ச் சுரபதி கொடுப்ப, அத்
தோன்றலும், தொழுது கைக் கொண்டான். 241

இந்திரன் கன்னனிடம் மீண்டு வந்து நிகழ்ந்தன கூற, அவன்
இந்திரனுக்கு விடை கொடுத்தல்

நிரந்தரம் புகழ் நிலைபெறும் கன்னனை
நெஞ்சுற மகிழ்ந்து, அவண் நிறுத்தி,
புரந்தரன் பசுந் தண் துழாய் அணிந்திடும்
புயல்வணன் இருந்துழிப் போந்தே,
இரந்து சென்று தான் மொழிந்ததும், அவ்வளவு
ஈந்ததும், ஆங்கு அவற்கு இசைத்தான்;
வரம் தரும் திருமால் அதை வினவி, அவ்
வாசவன்தனக்கு உரைவழங்கும்: 242

'உண்மை ஆக வெஞ் சமர்முகத்து எறி படை
ஒன்றும் வந்து உடல் உற ஒட்டா,
திண்மையால் உயர், கவச குண்டலங்களைச்
சென்று இரந்தவற்கு இவன் கொடுத்தான்!
எண்மை ஆயினும், கிளைஞரே ஏற்பினும்,
ஈவு இலாப் புன் செல்வர் ஈயார்;
வண்மையாளர் தம் ஆர் உயிர், மாற்றலார்
கேட்பினும், மறுக்கிலார் அன்றே!' 243

குந்தியைக் கன்னன் தூண்ட, அவள் கன்னனிடம் செல்லுதல்

வாசவன்தனக்கு விடை கொடுத்ததன்பின்,
வந்த காரியம்தனை முடிப்பான்,
கேசவன் தனது தாதையோடு உதித்த
கேண்மை கூர் தெரிவையைக் கிட்டி,
'தேசவன் தந்த குரிசில்பால் விரைவில்
செல்க!' என, பயந்த சேயிழையும்
பாசம் முன்னுற, மால் ஏவலால், தனது
பாத பங்கயம் சிவப்பித்தாள். 244

கன்னன் குந்தியை எதிர்கொண்டு உபசரிக்க, அவள் அவனுக்குத் தான் தாய் என்பதை மெய்ப்பித்தல்

'வந்து குந்தி நின் கோயில் எய்தினள்' என
வாயிலோர் உரைத்திட, மைந்தன்
முந்தும் அன்புடன் தொழுது, எதிர்கொண்டு, நல்
முறைமையால் ஆசனத்து இருத்தி,
இந்துவின் கதிர் கண்டு மேன்மேலும் உற்று
இரங்கி, வான் கரை கடந்து, ஏறும்
சிந்து வெண் திரைச் சிந்து ஒத்து உருகும்
தெரிவையோடு உரை சில செப்பும்: 245

'அன்னை வந்தது என் அருந் தவப் பயன்!' என,
அன்பினுல் இன்புற வணங்கி,
'என்னை வந்தவாறு?' என்ன, மற்று அவளுமே,
'ஈன்ற தாய் யான் உனக்கு' என்று,
முன்னை வந்து ஒரு மந்திரம் தவ முனி
மொழிந்ததும், கதிரவன் அருளால்,
பின்னை வந்ததும், பேழையில் விடுத்ததும்,
பிழை இலாது உரைத்திட, கேட்டே, 246

'மாயனுர் விரகு இது' என மனத்தினில்
மதித்து, உவந்து அளித்திடும் வள்ளல்,
'நீ அ(ந்) நாள் எனைப் பயந்தவள் என்னினும்,
நின் மொழி நெஞ்சுறத் தேறேன்;
பேய் அனுர் சிலர் பேர் அறிவு இன்மையால்,
பெற்ற தாய் எனக்கு என வந்து,
தூய நாகரின் அமைந்தது ஓர் துகிலால்,
துன்பம் உற்று, என்பு உரு ஆனுர். 247

'அடாது செய்தவர் படாது பட்டனர்' எனும்
அங்கர்கோன் அருள் மொழி கேட்டு,
தடாத அன்புடைக் கெடாத தூ மொழி பகர்
தையலும் மையலின் தவிர்ந்து,
'படாமது என் கையில் தருக!' என, வருதலும்,
'பயந்திலேன்எனில் எனே முனி' என்று,
எடா, விரித்து, அலேத்து, உடல் படப் போர்த்து,
எதிர் ஈன்ற தாய் ஆம் என இருந்தாள். 248

இருந்த தாய், ஈன்ற அன்றுபோல் உருகி,
இரு தடங் கொங்கை பால் சொரிந்தாள்;
அருந்துவான் போல இரவி சேய் விரும்பி,
ஆதரத்துடன் புளகு ஆனன்;
புரிந்த தாய் அன்போடு இறுகுறத் தழுவி,
பொன் முடி மோயினள், உயிரா,
பரிந்து, 'நான் அன்றே உனே வளர்த்து எடுக்கப்
பாக்கியம் செய்திலேன்' என்றாள். 249

'இளேஞர் ஐவருடனும் வந்து நீயே அரசாள வேண்டும்' என்று குந்தி வேண்ட, கன்னன் அதற்கு ஏதுக் காட்டி, மறுத்து மொழிதல்

'வருக என் மதலாய்! இளேஞர் ஐவரும் நின்
மலர்அடி அன்பினல் வணங்கி,
உரிமையால் மனம் ஒத்து, ஏவலே புரிய,
ஒரு தனிச் செய்ய கோல் ஓச்சி,
அரசு எலாம் வந்து, உன் கடைத்தலே வணங்க,
ஆண்மையும் செல்வமும் விளங்க,
குருகுலாதிபர்க்கும் குரிசிலாய் வாழ்வு
கூர்வதே கடன்' எனக் குறித்தாள். 250

'பெற்ற நீர் மகவு அன்பு இலாமையோ? அன்றி,
பெரும் பழி நாணியோ? விடுத்தீர்;
அற்றை நாள் தொடங்கி, என்னே இன்று அளவும்,
ஆர் உயிர்த் துணே எனக் கருதி,
கொற்ற மா மகுடம் புனேந்து, அரசு அளித்து,
கூட உண்டு, உரிய தம்பியரும்,
சுற்றம் ஆனவரும், என் அடி வணங்க,
தோற்றமும் ஏற்றமும் அளித்தான். 251

'மடந்தை பொன்-திரு மேகலை மணி உகவே
மாசு அறத் திகழும் ஏகாந்த
இடம்தனில் புரிந்தே நான் அயர்ந்து இருப்ப,
''எடுக்கவோ? கோக்கவோ?'' என்றான்;
திடம் படுத்திடு வேல் இராசராசனுக்குச்
செருமுனைச் சென்று, செஞ்சோற்றுக்
கடன் கழிப்பதுவே, எனக்கு இனிப் புகழும்,
கருமமும், தருமமும்!' என்றான். 252

குந்தி மிகவும் வருந்த, கன்னன் அவளைத் தேற்றி, வந்த காரியத்தை வினவுதல்

பின்னையும் பற்பல் மொழிந்த பின், 'பலவும்
பேசி என்? பூசலோ விளைந்தது;
உன்னி நீர் இங்கு வந்தது என்? கரவாது,
உண்மையால், உள்ளவாறு உரைமின்!'
என்ன மைந்தனும், இப் பரிசினால் உரைப்ப,
ஈன்று அறத் துறந்த அன்றையினும்
அன்னை நெஞ்சு அழிந்தே, இரு கண் நீர் சொரிய,
அலறி, வாய் குழறி, நொந்து அழுதாள். 253

ஆண்டு மா மகனும் இரு கண் நீர் துடைத்து, அவ்
அன்னையைப் பன் முறை தேற்றி,
'மூண்ட வல் வினையின் பயன் அலாது, யார்க்கும்
முயற்சியால் வருவது ஒன்று உண்டோ?
வேண்டும் யாவையுமே தருகுவேன்; நீரும்
வேண்டிய வேண்டுக!' என்ன,
பாண்டுவின் திரு மா மனைவியும் அதற்குப்
பண்பினால் இன்னன பகர்வாள்: 254

குந்தி இரு வரம் வேண்ட, கன்னனும் மறுது கொடுத்தல்

'பார்த்தன் வெஞ் சமரில் நின்னுடன் மலைந்தால்,
பகைப் பெரும் பாந்தள் அம் பகழி
கோத்தலும், பிழைத்தால், மறித்தும், நீ விடுத்துக்
கோறல்!' என்று ஒரு வரம் குறித்தாள்;
'வாய்த்த மற்றவர்கள் இளைஞர் என்று, அவரை
மலையல்!' என்று ஒரு வரம் குறித்தாள்;
மூத்தவன், காதல் இளைஞர்தம் பொருட்டால்
மொழிந்தமை கேட்டு இவை மொழிவான்: 255

'தெறு கணை ஒன்று தொடுக்கவும், முனைந்து
செருச் செய்வோன் சென்னியோடு இருந்தால்,
மறு கணை தொடுப்பது ஆண்மையயோ? வலியோ?
மானமோ? மன்னவர்க்கு அறமோ?
உறு கணை ஒன்றே பார்த்தன்மேல் தொடுப்பன்;
ஒழிந்துளோர் உய்வர்' என்று உரைத்தான்—
தறுகணர் அலர்க்கும், தறுகண் ஆனவர்க்கும்,
தண்ணளி நிறைந்த செங் கண்ணன். 256

கன்னன் குந்தியிடம் இரண்டு வரம் வேண்டிப் பெறுதல்

பெரு வரம் இரண்டும் பெற்றபின், தன்னைப்
பெற்ற தாயினைக் கரம் குவித்து,
'தரு வரம் எனக்கும் இரண்டு உள: உலகில்
சராசரங்களுக்கு எலாம் தாயீர்!
வெருவரும் அமரில் பார்த்தனால் அடியேன்
வீழ்ந்தபோது, அவனிபர் அறிய,
மரு வரும் முலைப்பால் எனக்கு அளித்து, உம்தம்
மகன் எனும் வாய்மையும் உரைப்பீர். 257

'உய்வு அருந் திறல் வெம் போர் முடிப்பு அளவும்,
உமக்கு நான் மகன் எனும் தன்மை
ஐவரும் அறியாவண்ணம் நீர் காப்பீர்;
அல்லது, அங்கு அவர் சிறிது அறியின்,
மை வரும் கடற் பார் அனைத்தையும் எனக்கே
வழங்குவர்; வழங்கினால், யான் என்
கைவரும் துணைவன்தனக்கு அலால், வழங்கேன்;
கடைப்பிடி, கருமம் ஈது' என்றான். 258

என்றலும், அது கேட்டு, ஈன்ற தாய், 'ஒக்கும்!'
என்று கொண்டு, இவ் வரம் நேர்ந்து,
'வன் துயர் மேன்மேல் வளர, யான் தளரா
வகை, உயிர் உனக்கு முன் பெயர்வது
என்று இனி!' எனத் தன் கண்கள் நீர் சொரிய,
இனைந்து, நைந்து, அழுது அழுது, இரங்கி,
என்று அருள் மதலைதனைத் தழீஇ, நிறுத்தி,
யாதவன் இருந்துழிச் சென்றாள். 259

குந்தி கன்னனிடம் மீண்டு வந்து செய்தி உரைக்க, கண்ணன் மகிழ்ந்து,
பாண்டவரிடம் மீண்டு வந்து, நிகழ்ந்தன கூறல்

கண்ணனும் குந்தி கன்னனோடு உரைத்த
கருத்து எலாம் திருத்தமாக் கேட்டு, ஆங்கு,
'எண்ணமும் முடிந்தது' என மகிழ்ந்து, அந்த
அணங்கையும் இல்லிடை இருத்தி,
தண்ணளியுடன் தன் பின் வரு நிருபர்-
தம்மையும் முறை முறை நிறுத்தி,
பண் அமை தடந் தேர்மீது கொண்டு, அன்றே,
பாண்டவர் உறை நகர் அடைந்தான். 260

தூது போய் அரவத் துவசனோடு உறுதி
சொன்னதும், மறுத்து, அவன் சினந்து
மோது போர் புரியத் துணிந்ததும், விதுரன்
மூரி வில் இறுத்ததும், கங்குல்
போது போய் வஞ்சம் விளைத்ததும், கன்னன்
புரந்தரற்கு ஈந்ததும், பயந்த
மாது போய் வரங்கள் பெற்றவை ஒழிய,
மற்று எலாம் மைத்துனர்க்கு உரைத்தான். 261

28. படை எழுச்சிச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

படர்ந்து கானகம் திரிந்து, மீண்டு, அன்புடன் பணிந்த பஞ்சவர்க்காக,
கடந்த ஞானியர், கடவுளர், காண்கலாக் கழல் இணை சிவப்பு ஏற,
தொடர்ந்து நான்மறை பின் செல, பன்னக துவசன் மா நகர்த் தூது
நடந்த நாயகன் கரு முகில்வண்ணம் என் நயனம் விட்டு அகலாதே. 1

தருமன் தனக்குத் துணைவராம் அரசர்க்குத் தூதரால் செய்தி அனுப்ப,
அரசர் பலரும் வந்து திரளுதல்

முகுந்தன் வாசகம் கேட்பதன் முன்னமே, முரசு உயர்த்தவன் முன்னி,
மிகுந்த கோபமோடு, 'இக் கணம் முடிப்பன் யான், வெம் பகை, இனி!' என்னு,
தகும் தராதிபர், தன்னுடன் இயைந்தவர் தமக்கு வெஞ் சமர் மூளப்
புகுந்தவாறு எலாம் தூதரின் போக்கினன், ஓலையின் புறத்து அம்மா! 2

எட்டுத் திக்கினும் உள்ள மன்னவருடன் யாகசேனனும் வந்தான்;
திட்டத்துய்மனும், திட்டகேதுவும், விறல் சிகண்டியும், முறை வந்தார்;
ஒட்டிப் போர் பொரும் உத்தமோசாவும், வேல் உதாமனும், உடன் வந்தார்;—
பட்டப் போதகம், தேர், பரி, ஆள், எனும் படையுடைப் பாஞ்சாலர். 3

விராட பூபனும், சதானிக நிருபனும், விறல் சிவேதனும், ஆதி
வராக கேதுவும், உத்தரகுமாரனும், மச்சநாட்டவர் வந்தார்;
பராவு பேருடைச் சேர செம்பியருடன் பாண்டியன் முதலோரும்,
குரா நறும் பொழில் கேகயத் தலைவரும், குந்தி போசரும் வந்தார். 4

அரக்கி தந்தருள் கடோற்கசக் காளையும், அபிமனோடு இராவானும்,
விரிக்கும் வெண்குடை விந்தனும், சோமனும், வீர கீர்த்தியும், போரில்
செருக்கு நெஞ்சுடைப் புண்டலன், செயசெனன், செருவிடைத் தெவ் ஓடத்
துரக்கும் வெம் பரித் துரௌபதர் ஐவரும், சூழ் படையுடன் வந்தார். 5

சீனர், சாவகர், மத்திரர், மாளவர், தெலுங்கர், வெங் கலிங்கேசர்,
சோனகாதிபர், கன்னடர், மாகதர், துலுக்கர், குச்சரர், ஒட்டர்,
ஆன வெம் படை ஆதியாய் நடப்பன ஐ-இரண்டு எண் பூமித்
தானை மன்னரும் வந்தனர்; இந்த மண்தலத்தில் ஆர் வாராதார்? 6

பாங்கினால் வரு மகுட வர்த்தனருடன் பட்டவர்த்தனர் உள்ளார்,
வாங்கும் வெஞ் சிலை மன்னவ குமரரின் மண்டலீகரின் உள்ளார்,
தாங்கும் மா மொழி மந்திரிகளின் இகல் தந்திரிகளின் உள்ளார்,
ஓங்கு நீள் கொடிப் பதாகினி திரண்டவாறு உன்னி, யார் உரைக்கிற்பார்? 7

யானை, தேர், பரி, ஆள், எனும் திறத்தினால், இலக்கணத்து எண்பட்ட
சேனை ஏழும் அக்குரோணிகள் திரண்டன, திரைக் கடல் ஏழ் என்ன;
சோனை மா முகில் ஏழும் ஒத்து அதிர்ந்தன, துந்துபிக் குலம்; வந்த
தானை மன்னரைத் தனித்தனி முறைமையால் தருமனும் எதிர்கொண்டான். 8

வந்த மன்னவரைத் தருமன் எதிர்கொண்டு, துரியோதனன் நாடு தர மறுத்துப் போர் புரிய முன் வந்ததைக் கூறுதல்

தான் வணங்குநர், தன் கழல் வணங்குநர், தங்களைத் தழீஇக் கொண்டு,
தேன் வணங்கு தார் மன்னவர் இருந்தபின், சென்று, அவர் முகம் நோக்கி,
'யான் வணங்கி, மா மாயனைத் தூதுவிட்டு, ''எனது பார் எனக்கு'' என்ன,
வான் வணங்கினும் வணங்கலா முடியினான், மறுத்து, ''அமர் புரிக!'' என்றான். 9

'கேண்மையால், ''எனது அரசு நீ தருக!'' எனக் கேட்கவும், மதியாமல்,
ஆண்மையால் அவன் மறுத்தமை எனக்கு உயிர் அனைய நீர் அறிமின்கள்;
வாண்மையால், வரி வின்மையால், மேன்மையால், வலி உரைக்கலன்; உங்கள்
தோண்மையால் அமர் தொலைத்து, அடல் வாகையும் சூடுவன், இனி' என்றான். 10

அரசர்கள் தருமனுக்கு உறுதிமொழி கூறுதல்

வெங் கண் மா முரசு உயர்த்தவன் இம் மொழி விளம்பலும், விளக்கம் செய்
திங்கள் சூழ்தரு தாரையின் கணம் எனச் சேர்ந்த மன்னவர் எல்லாம்,—
'எங்கள் ஆவியும், எம் பெருஞ் சேனையும், யாவையும், நின' என்றார்—
தங்கள் வீரமும், மானமும், மரபும், நல் வாய்மையும், தவறு இல்லார். 11

தருமன் சிவேதனைச் சேனாபதி யாக்குதலும், இராவான் தன்
ஆண்மை எடுத்துரைத்தலும்

சுற்றும் மன்னவர் சொற்ற சொற்களின் பகை தொலைத்தனன்போல் ஆகி,
செற்று வார் கழல் சிவேதனைத் தன் பெருஞ் சேனையின் பதி ஆக்கி,
அற்றை நாள் முரசு அறைந்து, அமர் குறித்தலும், அரவமின் மகன், 'தெவ்வர்
கொற்ற வெம் படை அனைத்தும் ஓர் அம்பினால் கொல்வன் ஓர் தினத்து' என்றான். 12

பாண்டுவின் திரு மைந்தர்கள் ஐவரும் பார்த்திவருடன் கூடி,
ஈண்டு இருந்தனர், இவ்வுழி, செருக் குறித்து, எழிலி மேனியனோடும்;
தூண்டும் வெம் பரித் தேர்த் துரியோதனன், தூது போய்ப் பரந்தாமன்
மீண்டு வந்தபின், அவ்வுழிப் புரிந்தன விளம்புகின்றனம் மன்னே: 13

துரியோதனன் படைத்துணை வேண்டி அரசர்களுக்கு ஓலை அனுப்ப,
பல நாட்டு அரசர்களும் வந்து திரளுதல்

'முந்து அரவு உயர்த்தோன் ஓலை முடியுடை அரசர் காண்க!
வெந் திறல் ஐவரோடும் வெஞ் சமர் விளைந்ததாலே,
தந்தம கிளைஞரோடும், சாதுரங்கத்தினோடும்,
வந்தவர் தமக்கே வாழ்வு முழுதும்!' என்று எழுதிவிட்டான். 14

மித்திரர் ஆன மன்னர் விறலுடைத் துணைவரோடும்,
புத்திரரோடும், தத்தம் போர் புரி சேனையோடும்,
சத்திர நிழல் விடாத தன்மையர் ஆகிச் சூழ,
மத்திரபதியும் வென்றி மருகருக்காக வந்தான். 15

இடைப்படு நெறியில், வைகும் இவனது வரவு கேட்டு,
தொடைப்படு தும்பை மாலைச் சுயோதனன் சூழ்ச்சி ஆக,
மடைப்படு விதியின் செய்த விருந்தினால் மருண்டு, அவற்கே
படைப்படு சேனையோடும் படைத் துணை ஆயினானே. 16

சல்லியன்தானும், மாயச் சகுனியும், தறுகண் வெம் போர்
வல்லியம் அனைய வென்றி மாகத பதியும், கொற்ற
வில் இயல் கடகத் திண் தோள் விந்தரன், விந்தன், என்று
சொல்லிய நிருபர் தானை ஆறொடும், கடலின் சூழ்ந்தார். 17

கலிங்கர்கோன், சோமதத்தன், கௌசிகன், காம்பிலீசன்,
தெலுங்கர்கோன், போசன், ஆதிகேகயன், திகத்த பூபன்,
வலம் கொள் வேல் கவுடராசன், மாளவன், வளவன், சேரன்,
துலங்கு நீர் ஒகனீகன், எனும் பல வேந்தர் தொக்கார். 18

பங்களம், குருரம், சீனம், பப்பரம், கொப்பம், வங்கம்,
சிங்களம், துளுவம், அங்கம், ஆரியம், திகத்தம், சேதி,
கொங்கணம், கடாரம், கொங்கம், கூபகம், இரட்டம், ஒட்டம்,
எங்கணும் உள்ள வேந்தர் யாவரும் ஈண்டி, மொய்த்தார். 19

அண்ணல் அம் துரகத்தாமா ஆதியாம் குமரராலும்,
எண்-இரு பத்து நூறும் யாதவ குமரராலும்,
வண்ண வேல் பூரி, கௌரிமா, முதல் குமரராலும்,
எண்ண அருஞ் சேனை வெள்ளம், எங்கணும் பரந்த மாதோ. 20

தம்பியர் அனைவரும், துச்சாதனன் முதலா உள்ளோர்,
வெம் பரி, தடந் தேர், வேழம், வேல், சிலை, வடி வாள், வல்லோர்,
அம்பரத்து அளவும், முந் நீர் அம்பரம் எழுந்தது என்ன,
உம்பரும் இம்பராரும் உரகரும் வெருவ, வந்தார். 21

வீடுமன், கிருபன், கன்னன், விற் கை ஆசிரியன், வையம்
பாடு சீர் விகத்தசேனன், பகதத்தன், முதலா உள்ளோர்,
ஆடல் வெம் பரி, தேர், யானை, அனீகினித் தலைவர், செம் பொன்
கோடு உயர் குன்றம் சூழ்ந்த குலகிரி ஏழும் ஒத்தார். 22

நதி எனைப் பலவும் வந்து, சிந்துவில் நண்ணுமாபோல்,
எதிர் அறப் பொருது, வெல்லும் இராச மண்டலங்கள் எல்லாம்,
சதமகற்கு உவமை சாலும் தரணிபன்தன்னைச் சூழ்ந்து,
பதினொர் அக்குரோணி சேனை பார்மிசைப் பரந்த அன்றே! 23

துரியோதனன் வீடுமனைச் சேனபதி யாக்குதல்

பரசுடை இராமன் பாத பங்கயம் சென்னி ஏந்தி,
வரி சிலை வேதம் கற்று, மற்று அவன்தனையும் வென்ற
குரிசிலை, கங்கை தந்த குருகுலக் கோமான்தன்னை,
அரசன், வெஞ் சேனைக்கு எல்லாம் அதிபதி ஆக்கினனே. 24

வீடுமனிடம் களப்பலிக்கு உரியாரையும், அதற்கு உரிய நாளையும்
துரியோதனன் கேட்க, அவன் மறுமொழி பகர்தல்

அளப்பு இலாச் சேனை நாதன் அடி பணிந்து, அவனி வேந்தன்,
'களப்பலிக்கு உரியார் யாவர்? கடவ நாள் யாவது?' என்ன,
'தளப்பு இலா முகூர்த்தம் வல்லோன் சாதேவன் அல்லது இல்லை;
உளப் பொலிவு உடையாய் இன்றே உற்று, அவற் கேண்மின்' என்றான்.

'ஒன்ற நம் படைகள் எல்லாம் ஒரு பகல் பொழுதில் கொல்வான்
நின்றனன், இராவான் என்பான்; நீ அவன்தன்னை வேண்டில்,
''கொன்று, எனைப் பலி கொடு'' என்று கூறும்; அக் குமரற் கொன்றால்,
வென்று, உனக்கு அரசும் வாழ்வும் எய்தலாம் விரைவின்' என்றான்.

வீடுமன் உரைத்தபடி துரியோதனன் சகாதேவனிடம் சென்று நாள் கேட்டல்

என்றலும், அவனும் ஆங்கு, ஓர் இயந்திர எகினம் ஊர்ந்து,
சென்றனன்; அவனும் கேட்டு, 'சிலையில் வெங் கதிரைத் திங்கள்
ஒன்றிய பகல் இராவில் களப்பலி ஊட்டின்அல்லால்,
வென்றிடல் அரிது' என்றிட்டான்—கிளைஞரை வேறு இடாதான்.

துரியோதனன் கேட்க, இராவான் தன்னைப் பலியிட ஒப்புக்கொள்ளுதல்

ஐவரில் இளையோன்தன்பால் முகூர்த்தம் கேட்டு, அவர் சேய்ஆன
பை வரு முடியோன்தன்பால் சேறலும், பணிந்து, தாதை
உய்வரு வரம் கேட்டு, 'என்னை ஊட்டுக, பலி நீ!' என்றான்;
எய் வரி சிலையினானும், 'பெற்றனன்!' என்று மீண்டான். 28

கண்ணன் துரியோதனன் முகூர்த்த நாள் குறித்த செய்தியைக் கேட்டு,
தருமனுக்கு நிகழ்ந்தன கூறி, தன்னைக் களப்பலி ஊட்டுமாறு கூறுதல்

'கொடுத்தனன் பலிக்குத் தன்னைக் குமரன்' என்று அறிந்து, குன்றம்
எடுத்தவன், 'திதி பன்னான்கினிடை உவா இன்று ஆக!' என்று
தொடுத்த நூல் முனிவரோடும் சொல்லினன்; சுடர்கள் தம்மில்
அடுத்து, 'இது என்னை?' என்ன, அன்று அது ஆயது அன்றே. 29

ஆய பின் தருமற்கு உற்றவாறெலாம் விளம்பி, 'இன்று
நீ அவன்தனக்கு முன்னே களம் கொள நேரின்அல்லால்,
போய் அவன்தன்னை வேறல் அரிது' எனப் புகன்று, செங் கண்
மாயவன், 'என்னை வல்லே வன் பலி ஊட்டுக!' என்றான். 30

பாண்டவர் வருந்தி உரைக்க, இராவான் தன்னைப் பலி கொடுக்கக் கூறி, போரைச்
சில நாள் கண்டபின் மடியுமாறு அருள் எனக் கண்ணனை வேண்டுதல்

தருமனும், தம்பிமாரும், சாற்றிய மாற்றம் கேட்டே,
உரும் எறி புயங்கம் போல உள் அழிந்து, உள்ளாய் நின்ற
கருமுகில் வண்ணன் பாத கமலத்தில் வீழ்ந்து, 'வாழ்வும்
பொருமுனை வயமும் வேண்டேம்; பொன்றுதல் அமையும்' என்றார்.

அப்பொழுது அரவ மைந்தன், 'அரவு உயர்த்தவற்கு நேர்ந்தேன்;
இப்பொழுது உமக்கு நேர்ந்தேன்; எனைப் பலி இடுமின்' என்ன,
மைப் புயல் வண்ணன், 'நின்னை அல்லது மண்ணில் என்னை
ஒப்பவர் இல்லை; நம்மில் ஒருவரே வேண்டும்' என்றான். 32

'அடியனேன் இருக்க, நீயே அரும் பலிக்கு இசைவாய்? போரில்
மடிய நேரலரைக் கொன்று, வாழ்வு இவர்க்கு அளிக்க நின்றாய்;
கடிய, நேர் பலி தந்தாலும், காய் அமர் சில நாள் கண்டு,
முடிய நேரலர், வெம்போரில் முடிவு எனக்கு அருளுக!' என்றான். 33

காளி கோயில் முன்னர் இராவான் தன்னைப் பலி கொடுத்தல்

அவ் வரம் அவற்கு நல்கி, அத் தினத்து, அவ் இராவில்,
தெவ்வரை ஒளித்து, தங்கள் சென்ம தேயத்தில் சென்றார்;
மெய் வரு காளி முன்னர் மெய் உறுப்பு அனைத்தும் வீரன்
கொய்வரு நிலையில் கொய்து கொடுத்தனன் என்ப மன்னோ! 34

பாண்டவர் பகடு முதலிய பிற பலிகளையும் கொடுத்து, வரம் வேண்டி மீளுதல்

ஆண்தகை கன்னி முன்னர் அவயவம் அனைத்தும் ஈந்து,
காண்தக மலர்ந்த திபம் என முகம் கவின நின்றான்;
பாண்டவர் யாமளத்தின்படி பகடு ஆதி ஆக
வேண்டிய பலிகள் ஈந்து, வென்றியும் வேண்டி, மீண்டார். 35

கண்ணன் சிவேதனை நோக்கி, வஞ்சி சூடிப் படையெடுத்துச் செல்லுமாறு கூறுதல்

மற்றை நாள் வசுதேவன் மா மகன், மண்டலீகரும் மன்னரும்,
செற்று, நீடு அவை புக்கு இருந்த சிவேதனோடு இவை செப்பினான்:
'இற்றை நாள் அதிரதர், மகாரதர், சமரதாதியர், எவரொடும்
கொற்ற வஞ்சி மிலைச்சி ஏகுக, குருநிலத்திடை!' என்னவே. 36

சிவேதன் பாண்டவர் சேனையை அணிவகுத்தல்

அதிரதாதிபர் தானும், வீமனும், விசயனும், திறல் அபிமனும்;
சிதைவு இலாத சிகண்டி, சாத்தகி, திட்டத்துய்மன், விராடர்கோன்,
மதுரமா மொழித் தருமனோடு இவர், மாரதாதிபர்; சமரதப்
பதிகள் ஆனவர், யாகசேனன், உதாமன், உத்தமபானுவே; 37

நண்ணும் அர்த்தரதர்க்கு நாயகர் நகுலனும், சகதேவனும்,
எண்ணும் வெற்றி பெறும் கடோற்கசன் என்னும் வீரனும், ஆகவே;
மண்ணகத்து அணி அணிகள் ஆக, மகீபர் தம்மை வகுத்துளான்—
விண்ணகத்து அணி விபுதர் சேனையில் வேளொடு ஒத்தனன் வீரனே.

ஐவரும் கண்ணனும் போருக்கு முனைய, பலராமன் தீர்த்த யாத்திரை போதல்

நெருங்கு வெம் படை கண்டு வந்த பின், ஐம் புலன்களும் நெஞ்சமும்
ஒருங்கு சென்றென, மன்னர் ஐவரும் மாலும் வெஞ்சமம் உன்னவே,
மருங்கு நின்ற இராமனும், 'பின் மதித்த போர் முடிவளவும் யான்
பொரும் கடும் புனல் நதிகள் ஆடுவன்' என்று, நண்பொடு போயினான்.

பலராமனும் விதுரனும் எங்கெங்குமுள்ள தீர்த்தங்கள் சென்று ஆடுதல்

போன வெம் பலபத்திரன், 'பொரு பூசலில் புகுதேன்' என,
மான வெஞ் சிலை முன் இறுத்த விதூரனோடு, மகிழ்ந்து, போய்,
கானகங்களில், வரையில், வாழ் முனி கணம் விரைந்து எதிர்கொள்ளவே,
நானம் எங்கணும் ஆடுவான், இரு-நாலு திக்கினும் நண்ணினான். 40

நாற்படைகள் நின்ற நிலை

இடி படப்பட வரு முகில்குலம் என, நிரைக்கடல் என, நெடுங்
கூடி படப்பட அதிர் பணைக் குலம் என, அதிர்ப்பன; கறைகள்போல்
அடி படப்பட, உரகர் பைத்தலை அணி மணிக்கணம் அடையவும்,
பொடி படப்பட, உடன் நடப்பன—புகர் முகக் கரி நிகரமே. 41

உருள் மணித் திகிரியின் முனைப்படில் உயர் பொருப்பையும், உரகர் வாழ்
இரு நிலத்திடை புதைபடப்பட எதிர் நடப்பன; இவுளியின்
குர துகள் கொடு கலகம் இட்டு, அணி கொடி நிரைத் துகில்கொடு பொலம்
தரு நிலத்தவர் விழி துடைப்பன, சரதம் இப்படி—இரதமே. 42

பல வகைப்படு கவன மெய்க் கதி பவனம் ஒப்பன; பரவை சூழ்
உலகு அனைத்தையும் வெளியில் உய்த்தலின் உரகருக்கும் ஓர் உதவியாய்,
இலகு சக்கர சிகரி சுற்றுஅடி, என வளைப்பன; எழு பெயர்க்
குல முகில் தலை கிழிய வைப்பன; குர விதத்தன;—புரவியே. 43

புருவ வில் குனிவு எழ, உயிர்ப்பொடு புகை எழ, துகிர் புரையும்வாய்
மருவும் முத்து இள நிலவு எழ, தனி மனம் நெருப்பு எழ, வளர் தடக்
கரதலத்து அயில் வெயில் எழ, புனை கலன் வனப்பு எழ, மிளிரும் நீள்
நிரை இமைப்பு அறு விழி சிவப்பு எழ, நிருதர் ஒத்தனர்—விருதரே.

கொடி நெருக்கவும், மதி எனத் திகழ் குடை நெருக்கவும், நடை கொள் ஆள்
அடி நெருக்கவும், இபம் நெருக்கவும், அயம் நெருக்கவும், எழு துகள்
பொடி நெருக்கவும், வளர் புயத்தொடு புயம் நெருக்கவும், ஒளிஅரு
முடி நெருக்கவும், முறை நெருக்கினர்—முரசம் ஒத்த சொல் அரசரே.

பகல் மறைத்து, இருள் வர விடுத்து, எறி பவன மெய்க் கதியுடன் உலாய்
அகல் நிலத்திடை வரு நதிப் புனல் அருவருத்து, உயர் நதியின்வாய்
உகள் வரிக் கயல்இனமும் ஒத்தன; உடு குலத்துடன் ஒளிர் பெருங்
ககனவட்டமும் மறைய இட்டன கவசம் ஒத்தன—துவசமே. 46

அறுவகைப் படைகளும் அணி வகுத்து நிற்க, முரசு, குடை,
கொடி, முதலியன நெருங்குதல்

உறவின் மிக்கவர், பகையின் எய்த்தவர், உதவும் அப் படை, குடை நிழல்
செறி தலத்தினில் வளர் நகர்ப்படை, திரள் வனப் படை, பொருள் விலைத்
தறுகண் மெய்ப்படை, உறுதியில் பொரு தமது அகப்படை,—என விராய்,
அறுவகைப் படைகளும் வகுத்தன, அணிகள்; உட்கின, பணிகளே.

சதி எனைப் பல என முழக்கின சத விதப் பணை; தவள மா
மதி எனைப் பல என நிழற்றின, மகிபர் பொற் குடை; மழை கொள் வான்
நதி எனைப் பல என நிரைத்தன, நவ மணிக் கொடி; நளின வெம்
பதி எனைப் பல என எறித்தன, பல வகைப் படை குலவவே. 48

பிடர் வலிக் கடகரிகளின், செறி பிடிகளின், புனை முடிகளின்,
படர் நிழல் கவிகையின், மிசைத் துகள் பரவி மொய்த்து எழு புரவியின்,
சுடர் விதப் படைகளின், நிரைப் படு துகிலுடைக் கொடிகளின், விராய்,
அடர் பொருப்புஇனம் இடை இடைப் பயில் அடவி ஒத்தது, புடவியே.

வளை முழக்கின; கிடுகு கொட்டின; வயிர் ஒலித்தன; மகுடியின்
கிளை இமிழ்த்தன; முழவு அதிர்த்தன; கிணை உரற்றின; பல விதத்
துளை இசைத்தன; முரசு இரைத்தன; துடி அரற்றின; செவிடுபட்டு
உளைய, இப்படி படை புறப்பட, உலகம் உற்றது, கலகமே. 50

பாண்டவர் சேனை உயிருள்ள உடம்பு போன்று விளங்குதல்

செங்கண் மால் உயிர்; தருமன் மார்பு; சிவேதன் ஆனனம்; இரு புயம்
வெங் கண் வீமனும் விசயனும்; திறல் விண் மருத்துவர் மைந்தர் தாள்;
அம் கண் மா முடி அரசர் மற்று உள அவயவாதிகள்;—ஆகவே
தங்கள் பூமியில் ஆனபோது, ஒரு வடிவம் ஒத்தது, தானையே. 51

துரியோதனன் வீடுமனுக்கு அணி வகுக்கக் கூறுதல்

இங்கு இவர் வயப் படை குறித்த குரு பூமியிடை
இவ் வகை எழுந்தது; இனிமேல்,
அங்கு அவர் செயப் படை எழுச்சி, உரை செய்குவம்:
அருந் திதி மயக்கி, விரையக்
கங்குலின் அழைத்து, உரக கன்னி மகனைப் புகல்
களப்பலி கொடுத்தனர் என,
செங் கண் அரவத் துவச மீளியும் உணர்ந்து, தன
சேனை முதல்வற்கு உரை செய்வான்: 52

'கொதி கொள் சின நெஞ்சின் வலி இன்றி, அவர் அஞ்சுபு,
கொடுத்தனர் களப்பலி; நமக்கு
எதிர் ஒருவர் நிற்குமவர் இல்லை எனும் வீர
நிலை யான் அறிவன்; நீ அறிவையே;
அதிரதர்கள், மா இரதர், சமரதர்கள், அர்த்தரதர்
ஆக நம் அனீகினியின் மா
மதுகை முடி மன்னரை வகுத்து, எழுக!' என்றனன்—
மனத்து அசைவு இலாத வலியோன். 53

வீடுமன் அணிவகுத்தலும், கன்னன் வீடுமனொடு முனிந்து, 'நீ இறக்குமளவும் படை எடேன்!' எனச் சூளுரைத்தலும்

'ஆனது' என வீடுமனும், 'அதிரதரில் மிக்க தனு
ஆசிரியனும், புதல்வனும்,
தானும், உயர் பூரிசரவாவும், இவர்; சோம வர
தத்த, பகதத்தர்கள், வழா
மானம் மிகு துன்மருடணன், தலைவர் மாரதரில்;
வன் கிருதபன்ம அரசன்,
ஞான கிருபன், சகுனி, சல்லிய, சயத்திரதர்,
நன் சமரதத் தலைவரே. 54

'அங்கர் பெருமான், விருட சேனன், அரசற்கு உரிய
அநுசர், இவர் அர்த்தரதரில்
துங்க வயவீரர்' என இம் முறை வகுத்து, உரக
துவசனுடனே உரைசெய்தான்;
கங்கை மகனோடு பல கூறி நனி சீறி, 'உயிர்
காய்வன்!' என, வாள் உருவி, 'நீ
பொங்கு அமரில் மாளும் அளவும் படை தொடேன்!' என
மொழிந்தனன், நிசாரி புதல்வன். 55

துரியோதனன் படைகள் அணியணியாகப் போருக்கு எழுதல்

யானைமிசை, தேரின்மிசை, இவுளிமிசை, போம் வயவர்,
ஏதி, சிலை, வேல், வயவரில்,
தானைகள் ஓர் ஆறும், முகில் ஏழும் என வன் பணை
தயங்கு திசை சூழ வரவும்,
ஏனை நரபாலர், அணிதோறும், வெயில் வாள் இரவி
என்ன இருபாலும் வரவும்,
சேனைமுதல் நாதனொடு மெய்த் துணைவர் தங்களொடு
சென்றனன், இராச திலகன். 56

பொழியும் முகில் பற்றி, எழும் இள வெயில் எறித்தனைய
புகரன, பனைக்கைகொடு கார்
கிழியும்வகை எற்றி, மிசை ஒளிறு நவரத்ன கண
கிரண உடுவைக் கவர்வ, போர்
விழி வழி நெருப்பு உருகி வழிய, நுதலில் திலகம்
வெயில் வழிய, முற்றும் நிலவே
வழியும் மதியத்தின் வகிர் நிகர் பணை மருப்பினிடை
மகரிகை தரித்த—மதமா. 57

நடு நிலம் உரைக்கில், உயர் அவனிதலம் ஒக்கும்; மிசை
நவ மணி அழுத்தியன, வான்
உடு நிகரம் ஒக்கும்; உருள் உருளைகள் அருக்கனுடன்
உடுபதியை ஒக்கும்; மகுடம்
கொடுமுடிகள் ஒக்கும்; இவுளிகள் திசை அனைத்தும் எறி
குரை பவனம் ஒக்கும்; அடைவே,
இடு துகில் நிரைத்த கொடி, சொரி அருவி ஒக்கும்;
எழு குல கிரிகள் ஒக்கும், இரதம். 58

யவனச வனத்தினிடை வளர்வன; கதத்தினெடும்
இரவி புரவிக்கு நிகர்வ;
புவனதலம் முற்றும் உடன் வளைய ஓர் இமைப்பொழுதில்
வருவன; புறப் புணரியைக்
கவனமொடு எழுப்பி, விடு துகள்கொடு நிறைப்ப; விரை
கதிகளின் விதத்தை மொழியின்,
பவன கதியைத் தொடர்வ; பரிமள உயிர்ப்புடைய;—
பல வகை நிறத்த பரிமா. 59

அரவின் விடம் ஒத்த எரி சினமும், நிலைபெற்றுடைய
அசலம் நிகர் ஒத்த மனமும்,
புரவியுடன் ஒத்த கதி விரைவும், உரும் ஒத்த அதிர்
குரலும், எழு ஒத்த புயமும்,
உர அனிலம் ஒத்த வலி உரமும், மதன் ஒத்த ஒளி
உருவமும், அனைத்தும் மருவி,
பரவை மணல் ஒத்த பல அணிபட வகுத்த பல
படையுடன் நடக்கும் நடையார். 60

குடை நிலவு எறிக்க, இரு புறமும் அசை பொற் கவரி
குளிர் நிலவு எறிக்க; எறி கைப்
படை வெயில் எறிக்க, அணி முடியுடன் மணிப் பணிகள்
பல வெயில் எறிக்க; உடனே
இடை இடை எடுத்த கொடி நிரை இருள் எறிக்க, எழு
துகள் இருள் எறிக்க; எழு பார்
அடைய ஓர் தினத்தின் வலம் வரு திகிரி ஒத்தனர்கள்—
அவனிபர் எனைப் பலருமே. 61

முழவு முதல் எற்றுவன கடிபடு பணைக் கருவி,
முழு மணி முதல் கருவி, பைங்
குழல் முதல் அமைத்த பல வகைபடு துளைக் கருவி,
குல வளை, நரப்பு நிரையால்
உழைமுதல் எழுப்புவன இசைபடும் இசைக் கருவி,
உழை உழை அதிர்த்த உடனே—
எழு கடல் கொதித்தது என, எழு புவி மறித்தது என,
எழு முகில் இடித்தது எனவே. 62

முறைமை தவறு அற்ற கடி முரசு எழுது பொன்-துவச
முதல்வன் உயிர் மைத்துனமையால்
விறல் உதவுதற்கு வரு கரியவன் மணித் துவச
மிசை கருடன் நிற்கும் எனவோ,—
எறியும் உருமுத் துவசன் மதலை விதலைச் சமரின்
இறுதியை விளக்கும் எனவோ,—
அறை வளி எதிர்த்து வர, வெருவொடு புறக்கிடுவது,
அரசன் உரகத் துவசமே? 63

தூளி எழ, இரு திறத்துச் சேனைகளும் வந்து நெருங்குதல்

'உயர் முறைமை தப்புமவர் குடை நிழலில் இற்றை அளவு
உள குறை அகற்றி, இனி நான்
இயல்புடை நெறித் தருமன் ஒரு குடை நிழற்ற, அவ-
னிடைஇனிது இருக்குவன்' என,
வியல் நதி முழுப் புனலில் முழுகி வருதற்கு, அவனி,
மிசையுற நடப்பது எனவே,
பயில் படை நடக்க, அகல் முகடுற நிரைத்து, அரிய
பகலையும் மறைத்த துகளே. 64

பொரு படை, கொடிப் படை, புறப் படு பெரும் படை,
புகுந்து குரு பூமி உறவே,
இரு படையும் ஒத்துடன் நெருங்கின, சுராசுரர்
எதிர்ந்து பொரு பூசல் எனவே;
ஒரு படை எனப் படம் ஓர் ஆயிரமும் நொந்து, உரகன்
உரம் நெரிய, ஏழ் உலகமும்
வரு படை நிலத்தினிடை வந்த அளவிலே, உததி
வையம் எனதாய் முடியுமே! 65

'போர் முடிய எத்தனை நாள் செல்லும்?' என்று வினவிய துரியோதனனுக்கு வீடுமன் விடைபகர்தல்

எண் அறு பரப்பினிடை, யோசனை களத்தினிடை,
இரு படையும் நிற்ப, எவரும்
துண்ணென வெருக்கொள, முன் நின்றருள் பகீரதி
சுதன்தனை வியாள துவசன்,
'கண் எதிர் நிரைத்த படை யாவையும் முருக்கி, உயிர்
கவர, எது நாள் செலும்?' என,
பண் அளி நெருக்கு ஒழிய, மாதர் இரு கண் அளி
படாத தொடை மீளி பகர்வான்: 66

'ஒரு பகலில் யான் மலைவன்; முப் பகலிலே மலைவன்,
உபநிடத விற்கை முனியும்;
வரு பகல் ஓர் ஐந்தில் மலைவன், பரிதி மைந்தன்;
முனி மைந்தன் ஒரு நாழிகையினில்,
பொரு படை அடங்க மலையும்; புவியும், வானொடு
புரந்தரன் இருந்த உலகும்,
வெருவர முனைந்து, ஒரு கணத்தினிடையே மலைவன்,
வில் விசயன்' என்றனன்அரோ. 67

விசயன் எதிர்ப்பக்கத்தேயுள்ள குரவரையும் துணைவரையும் கண்டு, மனம் அழிந்து பின்னடைய, கண்ணன் உரைசெய்தல்

யானையொடு, தேர், புரவி, ஆள் இவை அநேகவிதம்
எண்ண அரிய தானையுடனே,
சேனை முதலாய், முனையில் நின்றருள் பிதாமகனும்,
மற்று உள செழுங் குரவரும்,
தானை நெடு வாரியிடை தேரிடை அருக்கன் என
நின்ற துரியோதனனும், வான்
மீனை நிகர் கேளிரும், அணிந்த நிலை கண்டு, உருகி,
விபுதர்பதி மைந்தன் மொழிவான்: 68

'நின்று அமர் தொடங்க நினைகிற்பவர் பிதாமகனும்,
நீள் கிளைஞரும், துணைவரும்;
கொன்று, இவரை வாகு வலியின் கவர்வது இத் தரணி;
கொள்பவனும், என் துணைவனே!'
என்று பல பேசி, அதி பாதகம் எனக் கருதி,
'யான் மலைவுறேன், இனி' என,
அன்று வசுதேவன் மகனோடு உரைசெய்தான்; அமரில்
அவனும் இவனோடு உரைசெய்வான்: 69

29. முதற் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

மே வரு ஞானனந்த வெள்ளம் ஆய், விதித்தோன் ஆதி
மூவரும் ஆகி, அந்த மூவர்க்கும் முதல்வன் ஆகி,
யாவரும் யாவும் ஆகி, இறைஞ்சுவார் இறைஞ்ச, பற்பல்
தேவரும் ஆகி, நின்ற செங்கண் மால் எங்கள் கோவே. 1

கண்ணன் தத்துவம் உணர்த்தி விசயனது மயக்கத்தைத் தெளிவித்தல்

'மாயை என்று ஒருத்திதன்பால் மனம்எனும் மைந்தன் தோன்றி,
தூய நல் அறிவன் தன்னைத் தோற்றம் இன்றாக்கி வைத்தான்;
தாயொடு, தந்தை, மக்கள், தாரம், என்று இவர்பால் வைத்த
நேயமும் அவன்தனாலே நிகழ்ந்தது ஓர் நினைவு கண்டாய். 2

'குயின்ற ஐம் பொறிவாய் நின்று, குறித்த ஐம் பொருளும் தானே
அயின்று, முக் குணங்களோடும், அறு வகைப் படைகளோடும்,
பயின்று, அரசாளும் அந்த மனம் எனும் பகைவன், ஆங்குத்
துயின்றபோது, ஒளித்து நின்ற தோன்றலும் தோன்றும் கண்டாய்!

'அந்த நல் அறிவன்தன்னை அறிந்தவர் அறிஞர் ஆவார்;
தந்தையால் வகுக்கப்பட்ட சராசரப் பொருள்கள்தோறும்
வந்து, அவன், தீம்பால் நெய்போல் உயிர்க்கு உயிர் ஆகி, வாழும்
பந்தமது உணர்ந்து, நேரே பார்க்குங்கால், பகை யார்? நண்பு ஆர்?

'உம்பரும், முனிவர்தாமும், யாவரும், உணரா ஒன்றை
இம்பர், இன்று, உனக்கு நானே இசைவுற உணர்த்தாநின்றேன்;
ஐம் பெரும் பூதத்தானும் அமைந்தன உடலம், யார்க்கும்;
நம்பனும் ஒருவன்; உள்ளே ஞானியாய், நடத்துகின்றான். 5

'என்னை நீ புகலக் கேண்மோ! எங்கும் ஆய், யாவும் ஆகி,
மன்னிய பொருளும் யானே; மறைக்கு எலாம் முடிவும் யானே;
உன்னை யான் பிறிவது இல்லை; ஒரு முறை பிறந்து, மேல் நாள்—
நல் நிலா எறிக்கும் பூணாய்!—நரனும், நாரணனும் ஆனோம். 6

'பின் ஒரு பிறப்பின் யாமே இராம லக்குமப் பேர் பெற்றோம்;
இந் நெடும் பிறப்பில், நீயும் யானுமாய் ஈண்டு நின்றோம்;
நின்னிடை மயக்கும், இந்த நேயமும், ஒழிக!' என்று,
தன் நிலை அவற்குக் காட்டி, தத்துவம் தெளிவித்தானே. 7

விசயன் கண்ணனைப் போற்றி, செருச் செய அமைதல்

ஆங்கு, அவன் தெளிந்து தேறி, அறம், பொருள், இன்பம், முற்றி,
'பாங்கினால் நின்னை எய்தும் பயன் எனக்கு உரைத்தாய்' என்று,
பூங் கடிக் கமலம் நாறும் பொன் அடி போற்றி, 'யான் செய்
தீங்கு எலாம் பொறுத்தி' என்று, செருச் செயுமாறு பூண்டான். 8

கண்ணன் பாண்டவருடன் வீடுமனை அடுத்து, 'நீயே போர் செயின் வெல்லுதல் கூடுமோ?' என்ன, அவன் தன்னை வெல்லும் உபாயம் உரைத்தல்

பூண்ட வெம் பரித் தேர்மீது, அப் பொய் இலா மெய்யினானும்,
பாண்டவர்தாமும் ஆகப் பகீரதி மைந்தன்தன்பால்
ஈண்டினான், எய்தி, 'நீயே இவருடன் மலையின், மற்று உன்
காண்தகு போரின் வென்று களம் கொளத் தகுமோ?' என்றான். 9

மற்று அவன், 'தருமராசன் மைந்தனே அவனிக்கு எல்லாம்
கொற்றவன் ஆகும்; என்னைக் கொல்ல, நீ உபாயம் கேண்மோ:
அற்றை வெஞ் சமரில் சீறும் அம்பை என்று ஒருத்திதானே
செற்றிட, தவமும் செய்து, சிகண்டியாய்ப் பிறந்து நின்றாள். 10

'பன்னு சீர் யாகசேனன் குமரனைப் பத்தாம் நாளில்
என் எதிர் அமரில் காட்டில், யான் படை யாவும் தீண்டேன்;
பின் அவன் வெகுண்டு செய்யும் பெருமிதம் கண்டு, மீண்டு,
கன்னனை வெல்ல நின்ற காளை கைக் கணையால் வீழ்வேன். 11

'நின்றனை, அருளோடு ஆங்கே, நீல மா மேனியாய், நீ!
வென்றி மற்று இவரே அல்லால், வேறு யார் எய்துகிற்பார்?'
என்றனன்; என்ற போது, அப் பிதாமகன் இரு தாள் போற்றி,
நின்றவர் தம்மைக் கொண்டு, சிலைமுனி நிலையில் போனான். 12

பின் துரோணனிடம் சென்று, 'நீ அருள் செயின் இவர்க்கு வாழ்வு உண்டு' என்ன, அவன் தான் மாளும் வகை உரைத்தல்

போய், அவர் குருவின் பாதம் போற்றி, முன் நிற்ப, செங் கண்
மாயவன் அவனை நோக்கி, 'வாகை அம் தாமம் சூட,
நீ இவர்க்கு அளித்தி ஆகில், உண்டு; அலால், நின்னை வையம்
தாயவர்தமக்கும் வேறல் அரிது' எனச் சாற்றினானே. 13

'மன் மகன் தருமன் வென்று, வையகம் எய்தி நிற்பான்;
என் மகன் எனக்கு முன்னே இறந்தனன் என்று, வானில்
வில் மகபதியை ஒக்கும் வேந்தன் முன் சொல்லின், சூரன்-
தன் மகன் மகனே! பின்னைச் சாபம் ஒன்று எடுக்கிலேனே. 14

'என் பெருஞ் சாபம் கைவிட்டு யான் எதிர் நிற்றலானும்,
தன் பெருஞ் சாபத்தாலும், சமரிடைத் திட்டத்துய்மன்
வன்புடன் எனக்குக் கூற்றாய் மலைகுவன்; மலைந்த அன்றே,
நின் பெருங் கருத்து முற்றும்; ஏகுவீர், நீவிர்!' என்றான். 15

பின், பாண்டவர் சேனையை அசல வியூகம் வகுத்து, விந்தையை வணங்கி, மாயோன் சொன்னதும் போர் தொடங்குதல்

முனிவனை விடை கொண்டு ஏகி, முகுந்தனும் தாமும், முன்னம்
தனி வனம் திரிந்து மீண்டோர், தானை அம் கானில் புக்கார்—
பனி வனம் நிறைந்த பொய்கைக் கரை, நிழல் பரப்பும் தேமாங்
கனி வனம் என்ன, யார்க்கும் உதவி கூர் கருணைக் கண்ணூர். 16

கொற்றவர் தம்மை ஏழ் அக்குரோணி வெஞ் சேனையோடும்,
பற்றுடை அசலம் ஆகும் பான்மையால் வியூகம் ஆக்கி,
'வெற்றி தந்து அருள்க!' என்று, ஏத்தி, விந்தையை வணங்கி, மாயோன்
சொற்றபின், தூசியோடு தூசி சென்று உற்றதுஅன்றே. 17

முரசும் சங்கும் முழங்க, சேனைகள் ஒன்றோடொன்று பொருதல்

புரசை யானைப் பொரு பரித் தேருடை
அரசன் மாத் துவசத்தனஆதலால்,
குரைசெய் வான் பணைக் குப்பைகள் யாவினும்,
முரச சாலம் முழங்கின, சாலவே. 18

மலர்ந்த பற்ப வனம் நிகர் பைந்துழாய்
அலங்கல் வித்தகன் ஏந்தினஆதலால்,
வலம்புரிக் குலம், 'வாழ்வு பெற்றேம்' என,
சலஞ்சலத்தொடும், சங்கொடும், ஆர்த்தவே. 19

சென்று தேர்களும் தேர்களும் சேர்ந்தன;
வென்றி வேழமும் வேழமும் ஊர்ந்தன;
நின்ற வாசியும் வாசியும் நேர்ந்தன;
வென்றி வீரரும் வீரரும் மேவினர். 20

பார வாளமும் வாளமும் பாய்ந்தன;
கூர வேல்களும் வேல்களும் குத்தின;
வீர சாபமும் சாபமும் வீக்கின;
தூர வாளியும் வாளியும் தோய்ந்தவே. 21

இட்ட தார்முடி மன்னவரோடு, எதிர்
இட்ட தார்முடி மன்னவர் எய்தினர்;
பட்டவர்த்தனப் பார்த்திவர்தம்முடன்,
பட்டவர்த்தனப் பார்த்திவர் எய்தினர். 22

மந்திரத்தவர்தம்முடன், மா மதி
மந்திரத்தவர் வந்து எதிர் மோதினர்;
தந்திரத்தவர் தம்மிசையே செல,
தந்திரத்தவர் சாயகம் ஏவினர். 23

மண்டலீகர் தம் மார்பு உறை ஆகவே,
மண்டலீகர் தம் வாட் படை ஓச்சினார்;
சண்ட வார் சிலை சாமந்தர் வாங்கவே,
சண்ட வார் சிலை சாமந்தர் வாங்கினார். 24

அம்பினால் அவயவம் இழந்து நிற்போரின் நிலை

முடி இழந்த நிருபர், முகுந்தனால்
இடி படும் தலை ராகுவொடு, ஏயினார்;
அடி இழந்தவர், ஆதபன் தேர் விடும்
தொடி நெடுங் கை வலவனின், தோன்றினார். 25

பூபர் தங்கள் புயங்களும், மார்பமும்,
சாப வெங் கணை தைத்து உகு சோரியால்,
தீபம் என்னவும், செம் மலர்க் கோடுடை
நீபம் என்னவும், நின்றனர், ஆண்மையால். 26

அம்பு முதலிய இழந்து நின்ற போது வீரர்கள் காட்டிய தீரச் செயல்கள்

கையில் வாளி தொலைந்த பின், காய்ந்து, தம்
மெய்யில் வாளிகள் வாங்கி, வில் வாங்கினார்;
பொய் இலா மொழிப் பூபதி சேனையின்
மை இல் ஆண்மையினார் சில மன்னரே. 27

வலக் கை அற்று விழவும், மனத்து ஒரு
கலக்கம் அற்ற வெங் கார்முகத்தார் சிலர்,
துலக்கு எயிற்றுக் கணை தொடுத்தார், தொடை
இலக்கம் அற்ற படை இலக்கு ஆகவே. 28

தாள் இரண்டுடைச் சிங்கம் அன்னார் சிலர்
வாள் இரண்டு ஓர் தொடையினில் வாங்கினார்—
கோள் இரண்டும் என, குறுகார் தடந்
தோள் இரண்டும் துணிந்து எதிர் வீழவே. 29

ஓடி முட்டலின், தேர்கள் உடைந்தன;
நாடி முட்டலின், நாகங்கள் வீழ்ந்தன;
கூடி முட்டலின், கொய்யுளை மாய்ந்தன;
சாடி முட்டலின், ஆள்களும் சாய்ந்தனர். 30

பற்றி நின்று ஒருவன் படை வாள், எதிர்
உற்றவன் தலை சிந்திட, ஓச்சினான்;
அற்ற தன் தலை கொண்டு, அவனும் தனைச்
செற்றவன் தலை சிந்திட, வீசினான். 31

புங்கம் மெய் புதையப் புதைய, சிலர்,
சிங்கம் என்ன, செருக்களத்து ஆடினார்—
கங்கம் இட்ட பைங் காவண நீழலில்,
அங்கை கொட்டி, அலகை நின்று ஆடவே. 32

வாளி ஆயிரம் தைத்த வழி எலாம்
ஒளியாக ஒழுகும் குருதியால்,
தாள் இலான் நடத்தும் தடந் தேருடை
மீளி ஆம் என நின்றனர், வீரரே. 33

வெட்டினார், படை; மெய்யில் படாமை நின்று,
ஒட்டினார், இமைப் போதினில் ஓடியே,
தட்டினார், உடலைத் தழுவிக்கொடு
கட்டினார், விழுந்தார்—சில காளையர். 34

பல தேச மன்னர்களும் நெருங்கிப் பொருதல்

கொங்கர், போசலர், போசர், சிங்களர், குகுதர், ஆரியர், துளுவரும்,
கங்கர், சோனகர், யவனர், சீனர், கலிங்கர், தத்தர், தெலுங்கரும்,
வங்கர், கோசலர், தமிழர், குண்டலர், ஒட்டர், மாளவர், மகதரும்,
இங்கும் அங்கும் அணிந்து நின்றவர், எதிர் முனைந்தனர் இகலியே.

விசயன் வீடுமனுக்கு எதிரே போர் தொடங்குதல்

விசையன் வெஞ் சிலை வீடுமற்கு எதிர் அமர் தொடங்கலும், வெருவ, எண்
திசையும் ஒன்றவளைந்து கொண்டன, இருவர்தம் பொரு சேனையும்;
மிசை எழும் துகளால் இமைத்தனர், மேலை நாகரும்; வெங் கழுத்து
அசைய நின்று சுமந்து இளைத்தனர், கீழை நாகரும் அடையவே. 36

உகவை தன்னொடு, வீடுமற்கு உறும் உதவியாக மகீபனும்,
சகுனி சல்லியன் இவரையும், பல தம்பிமாரையும், ஏவினான்;
மிகு கொடுஞ் சின வீமன், விந்தரன், அபிமன், ஆதியர், விசயனுக்கு,
இகல் நெடும் படை அரசன் ஏவலின், உதவி ஆம் வகை எய்தினார்.

வீடுமனும், அவனுக்கு உதவியாக வந்தவரும் சலிக்கும் வண்ணம் வீமன், அபிமன் முதலியோர் பொருதல்

வன் பனைக் கொடிமீது பன்னிரு வாளி, மெய்க் கவசத்தின்மேல்
ஒன்பது, இப்படி ஏவி, வீடுமன் மெய்ந் நடுங்க உடற்றினான்;
மன் பரப்பொடு, சகுனி, சல்லியன், வந்த தம்பியர் அனைவரும்,
பின்படப் பல கணை தொடுத்தனன்;—வரு சதாகதி பிள்ளையே.

ஏசு இலாது உயர் தன் பிதாவின் எழில் பிதாமகன் ஏறு தேர்
வாசி நாலும் விழத் தொடுத்தனன், வாளி நால், அபிமன்னுவும்;
மாசு இலா விறல் உத்தரன், திறல் மத்திராதிபனுடன் உடன்று
ஆசு இலா அடல் அப்பு மா மழை சிந்தினான், முகில் அஞ்சவே. 39

சல்லியன் வேலால் உத்தரன் மடிய, வீமன் வெகுண்டு வருதல்

வாவி மேல்வரு புரவி வீழவும், வலவன் வீழவும், மற்றுளார்
ஆவி வீழவும், அவன் எடுத்த வில் அற்று வீழவும், அமர் செய்தான்;
'பாவியோடு இனி வில் எடுப்பது பாவம்' என்று, ஒரு பார வேல்
ஏவினான், எதிர் சென்று சல்லியன்; இவனும் வானகம் ஏறினான். 40

'இன்று பட்டனன் மச்சர் கோமகன்' என்று, தங்களில் நேரலார்
ஒன்று பட்டு, மிகைத்து எழுந்தனர் ஊழிவாய் எழும் உததிபோல்
அன்று பட்ட கலக்கம் அப்படி, ஐவர் தம் படை; அமரின்மேல்
வென்று பட்டம் அணிந்த வாரணம் என்ன வந்தனன், வீமனே. 41

தாமன் மேல் வர வர உடைந்திடு தமம் எனும்படி, தண்டுடன்
வீமன் மேல் வர வர உடைந்தனர், மேவலார்கள்; வலம்புரித்
தாமன் மேல்வர வரவு கண்டு, தரிக்கிலாது எதிர் சென்றனன்—
காமன்மேல் அரன் என்ன, நெஞ்சு கனன்று, கண்கள் சிவக்கவே. 42

வீமன் துரியோதனனுடன் பொருது, அவனது வில்லை ஒடித்து, தேரையும் எடுத்து எறிய, மன்னர் பலர் துரியோதனனுக்கு உதவ வருதல்

செண்டினால் வசுகிரி திரித்திடு செழியன் என்ன, எடுத்த கைத்
தண்டினால், எதிர் சென்று, தேர் அணி திரிய வன்பொடு சாடினான்;
மண்டினார் மணி முடியும், வேழமும், வாசியும், பல துணிபடக்
கெண்டினான்; முனை நின்ற பன்னககேதுவோடு அமர் மோதினான்.

மோதி ஆயிர பேதமாக முனைந்து, தங்களில் இருவரும்
சாதியாதன இல்லை, மீளி மடங்கல் ஏறு அன தன்மையார்;
காதி ஆடு அமர் புரியும் மேதினி காவலன் குனி கார்முகம்
சேதியா, ஒரு கைகொடு ஏறிய தேர் எடுத்து, எதிர் சிந்தினான். 44

'ஆர் அழிந்தன; உருள் அழிந்தன; அச்சு அழிந்தன; வச்சிரத்
தேர் அழிந்து, கொடிஞ்சியும் பல சின்னமானது; மன்னனும்,
போர் அழிந்தனன்' என்று, சேனை புறக்கிடாவரு பொழுதினில்,
கூர் அழிந்தது எனக் குறித்து, அணி நின்ற காவலர் கூடினர். 45

பரித்த தேரொடு பரிதியைச் செறி பரிதிபோல், இரு பக்கமும்
தரித்த வேலினர், தாரை வாளினர், தாம வில்லினர், ஆகவே,
விரித்த வெண்குடை மன்னர் சூழ்தர, வீமன் நிற்பது ஓர் மேன்மை கண்டு,
எரித்த நெஞ்சொடு, விரைவில், மைத்துனர் ஆன கொற்றவர், எய்தினர். 46

வீமன் கதை கொண்டு பொர, சிவேதனும் ஈசன் அளித்த வில்லோடு தோன்றுதல்

எய்து மைத்துனர் எய்து, தெவ்வரொடு என் இல் போர் செய, விண்ணிடைச்
செய்து பெற்றன தேரினின்றும் இழிந்துளான், நனி சீறினன்—
மொய் திறல் பவமானனன் அன்று முருக்கும் முக்குவடு என்னவே,
கைதவப் படை மன்னர் மா முடி சிதைய, அங்கு ஒரு கதையினல்.

அம்பரத்தவர் கண்டு நின்றவர் அதிசயித்திட வானின்மேல்,
இம்பர் இப்படி தெவ்வர் வெம் படை இரிய, வன்பொடு திரியவே,
'தம்பி பட்டனன்' என்று கொண்டு, எழு சாகரத்து எழு தழல் என,
தும்பையுற்று மிலேச்சி, ஈசன் அளித்த வில்லொடு தோன்றினன். 48

சிவேதன் சல்லியனிருக்குமிடம் நாடிச் சென்று, பொருதல்

சங்குஇனங்கள் முழங்கவும், பணை முரசுஇனங்கள் தழங்கவும்,
துங்க வெங் களிறு, இவுளி, தேரொடு தானை மன்னவர் சூழவும்,
'எங்கு நின்றனன், எங்கு நின்றனன், மத்திரத்து அரசு?' என்று போய்,
அங்கு நின்ற மகீபர் வென்னிட, அவனை முந்துற அணுகினன். 49

சல்லியன் எனப் பெயர் தரித்து வரு கோமுன்,
வல்லியம் எனத் தகு சிவேதன், அமர் வல்லான்,
பல்லியம் முழக்கியது என, பலவும் வீரம்
சொல்லி, ஒருவர்க்கு ஒருவர் தொடு சிலை குனித்தார். 50

துரியோதனன் சல்லியனுக்கு உதவியாகத் தன் தம்பியர் அறுவரை விடுத்தல்

'ஒருவரும் இவர்க்கு நிகர் இல்லை' என உற்றே,
இருவரும் மலைந்திட, இராச குலராசன்,
'பருவரல் கொள் மத்திரபதிக்கு உதவி ஆக!' என்று
அரு வரையொடு ஒத்த புயர் அறுவரை விடுத்தான். 51

தரணிபதி தம்பியர்கள் தானையொடு வந்தே,
இரணமுகம் ஒன்றும் மயிலோன் என எதிர்த்தார்;
திரள் நறைகொள் தார் புனை சிவேதன், அவர் அந்தக்-
கரணம் வறிதாகும்வகை கணை பல தொடுத்தான். 52

முரண்டு எதிரும் மன்னவர் முரண்கொள் சிலை, ஓர் ஒன்று
இரண்டு சிலை ஆக, ஒரு வீரன் இவன் எய்தான்;
திரண்டு வரு மன்னர் முடி சிந்தி, உடல் மண்மேல்
புரண்டு விழ, வாளி மழை தூவு புயல் போல்வான். 53

தேரும், விசை கூர் இவுளியும், செறி பணைக்கைக்
காரும், அயில் வாள் சிலை தரித்து வரு காலாள்
யாரும், வெடி பூளை வனம் என்ன, ஒருதானே,
ஊரும் ஒரு தேர் அனிலம் ஒக்கும் என, நின்றான். 54

துரியோதனன் தூண்டுதலால் வீடுமன் சிவேதனை எதிர்த்தல்

பட்டன ஒழிந்த பல படையும் இவன் அம்பில்
கெட்ட நிலை கண்டு, உரககேதனன் உரைப்ப,
தொட்ட வரி வில்லினொடு சூறை அனிலம்போல்
விட்ட பரிமா இரத வீடுமன் எதிர்ந்தான். 55

மத்திரனை விட்டு, மிசை வந்த மகிபதிமேல்
அத்திரமும் விட்டு, அவன் அடல் சிலை அறுத்தான்;
சித்திரம் எனும்படி திகைத்தனன், விராடன்
புத்திரன் விடும் கணை பொருது, புலிபோல்வான். 56

வீடுமனும் மீள ஒரு விற்கொடு, சிவேதன்
சூடு முடி வீழ, ஒரு சுடு கணை தொடுத்தான்;
கோடு சிலை வாளி பல கொண்டு, இவன், அவன் தேர்
நீடு கொடி ஆடையை நிலத்துற அழித்தான். 57

பின்னையும் அவன் தனி பிடித்த வரி சாபம்-
தன்னையும் இவன் பல சரங்கொடு துணித்தான்;
மின்னையும் நகும் பகழி வீடுமன் வெகுண்டு, ஆங்கு,
'என்ன அமர் செய்வது இனி!' என்று தளர்வுற்றான். 58

வீடுமன் தளர்வுற, துரியோதனன் மன்னர் பலரை ஏவுதலும்,
அவர் சிவேதன் எதிர் நிற்கலாற்றாது தோற்றோடுதலும்

தளர்ந்த நிலை கண்டு, துரியோதனன், 'அரும் போர்
விளைந்தது சிவேதனுடன்; வீடுமன் இளைத்தான்;
இளந்தலை உறாதபடி ஏகுமின்' என, போய்க்
கிளர்ந்த முடி மன்னர் பலர் கிட்டினர், விரைந்தே. 59

அந்த முடி மன்னவர் அநேகரையும், முன்னம்
வந்த வழி மீளவும் வரும்படி துரந்தான்—
தம் தம் வரி வில்லும், அணி தாரும், விடு தேரும்,
சிந்த, எரி கால்வன சிலீமுகம் விடுத்தே. 60

வெவ் அனலம் நேர் குகுர ராசனையும், வேறு ஓர்
ஐவரையும், ஏவினன்; முனைந்தனர்கள், அவரும்;
செவ் வரைகள் போல்பவர் சிரங்களும், வளைக்கும்
கை வரி விலும், துணிபட, கணை தொடுத்தான். 61

வீடுமன் சிவேதன் எதிர் மீண்டும் சென்று, வில் இழந்து நிற்றல்

கங்கை மகன் மற்றும் ஒரு கார்முகம் வளைத்து,
சிங்கம் என, அப்பொழுது உறுக்கி, எதிர் சென்றான்;
அங்கு அவன் நகைத்து, ஒரு தன் அம்புகொடு, மீளப்
பங்கம் உற, வில் துணி படுத்தி, எதிர் நின்றான். 62

ஆன பொழுது, அந்தரம் நெருங்கி அமர் காணும்
வானவர், விராடபதி மைந்தனை மதித்தார்;
'வேனிலவன்மேல் நுதல் விழித்தவன் அளிக்கும்
கூனல் வரி சாபம் இது கொண்டனன், வரத்தால்; 63

'ஏறு அனைய வீடுமன் இளைத்தபடி கண்டால்,
வேறு அவனை வில்லவரில் வெல்ல உரியார் யார்?
மாறுபடு வெஞ் சமரில் வஞ்சனையில் அன்றிக்
கோறல் அரிது' என்றனர், குலப் பகை முடிப்பார். 64

'வில் ஒழிய வேறு படை கற்றிலையோ?' என்று வீடுமன் வினவ,
சிவேதன் வாள் கொண்டு பொருதல்

ஓகை நிகழ் எண் வகை வசுக்களில் ஒருத்தன்
ஆகிய நராதிபதி அம் முறை அறிந்தான்;
'வாகை வரி வில் ஒழிய, வாள், அயில்கள் என்னும்
வேகம் உறு வெம் படைகள் கற்றிலைகொல், வெய்யோய்?' 65

என்று எதிர் சிவேதனொடு இயம்புதலும், வெள்கி,
குன்று சிலை கொண்டவன் அளித்த சிலை கொள்ளான்,
வென்றி வடி வாள் உருவி, மேலுற நடந்தான்;
நின்றவனும் வேறு ஒரு நெடுஞ் சிலை குனித்தான். 66

வீடுமன் தன் வில்லால் சிவேதன் கை ஒன்றைத் துணித்து, உயிரையும் கவர்தல்

வாளின் எதிர் வெஞ் சிலை வளைத்து, வய வீரன்
தோள் இணையில் ஒன்று துணியக் கணை தொடுத்தான்;
காளை ஒரு கை விழவும், மற்றை ஒரு கையால்,
மீளவும் வெகுண்டு, சுடர் வாளினை எடுத்தான். 67

எடுத்த வடி வாளினொடும் எண் இல் பல பாணம்
தொடுத்து வரு வீடுமனை, மா முடி துணிப்பான்
அடுத்து வருபோது, அவன் அழன்று, ஒரு சரத்தால்
நடுத் தகை உருமல், அவன் நல் உயிர் கவர்ந்தான். 68

வானோர் மகிழ, துரியோதனன் பக்கத்து அரசர்கள் மகிழ்வடைதல்

பூழி பட நிலமிசை அப் பொற் சுண்ணம்
கமழ் மேனிப் புதல்வன் வீழ,
வாழி மொழிந்து, உளம் மகிழ்ந்தார், அந்தர
துந்துபி முழங்க, வானோர் உள்ளார்;
ஊழி பெயர்ந்து, உலகு ஏழும் உள் அடக்கி,
திசை நான்கும் உகளித்து ஏறி,
ஆழி பரந்து ஆர்ப்பது என ஆர்த்தனர்,
அப் பெருஞ் சேனை அரசர் எல்லாம். 69

படுகளக் காட்சிகள்

உடைந்த தடந் தேர் உருள்கள், உகு குருதிப்
புனல்தோறும், உம்பர் வானில்
அடைந்த வயவருக்கு வழி ஆய சுடர்
மண்டலத்தின் சாயை போலும்;
மிடைந்த குடை காம்பு அற்று மிதப்பனவும்,
கரிய புகர் வேற்கண் மாதர்
குடைந்த நறும் பரிமளச் செங் குங்கும நீர்-
இடை எழுந்த குமிழி போலும். 70

வெங் கலங்கல் கடுங் குருதி வெள்ளத்துக்
கொடி ஆடை மிதக்கும் தோற்றம்,
செங் கலங்கல் புதுப் புனலில் விளையாடித்
திரிகின்ற சேல்கள் போலும்;
பொங்கு அலங்கல் நிருபர் தலை புனை மகுடத்
துடன் கிடப்ப, பொறி ஆர் வண்டு
தங்கு அலங்கல் வண் கனக சததள பங்கய
முகுள சாலம் போலும். 71

எண் இழந்த குருதி நதி, இரு மருங்கும்,
கரி, பரி, ஆள், கரைகள் ஆக,
கண் இழந்த பறை இடையே செருகிய
கால்வாய்த் தலையின் கண்கள் போலும்;
மண் இழந்து படும் அரசர் மணிக்கலங்கள்
பல சிந்தி, வயங்கு தோற்றம்,
விண் இழந்து, பரந்த செழுங் கடலிடையே
மீன்இனங்கள் வீழ்ந்த போலும். 72

சூரியன் மறைய யாவரும் தத்தம் பாடிவீடு அடைதல்

பட்ட நுதல் களி யானைப் பாண்டவர்தம்
படைத் தலைவன் பட்டானாக,
தொட்ட கழல் தட மகுடச் சுடர் வடி வாள்
மகிபர் எலாம் துணுக்கம் எய்தி,
விட்ட படங்கு இயல் பாடிவீடு அணைந்தார்;
வெயிலோனும், மேல்பால் குன்றில்
கிட்ட, அவன் வடிவமும் இக் குருதியினால்
சிவந்தது என, கிளர்ந்தது அம்மா! 73

புதல்வரை இழந்த விராடனுக்கு, கண்ணனும் தருமனும் தேறுதல் உரைத்தல்

திரு நெடுமால் முதலான தேர் வேந்தர்
விராடனுழைச் சென்று, 'உன் மைந்தர்
இருவரும் இன்று ஒருபடியே வெஞ் சமரில்
எஞ்சினர் என்று இரங்கல், ஐயா!
பொரு முனையில் வீடுமனைப் புறங்கண்டு,
நிருபர் எலாம் பொன்ற வென்று,
விரகுடன் வாள் எடுப்பித்த பிறகு அன்றோ,
தொடு சரத்தால் வீழ்ந்தது!' என்றார். 74

'பேய் செய்த அரங்கு அனைய பெருங் கானில்
திரிவோர்க்கு, பெற்ற காதல்
தாய் செய்த உதவியினும், தகும் உதவி
பல செய்தாய்; சமரூடு இன்று உன்
சேய் செய்த உயிர் உதவி தேவர் எலாம்
துதிக்கின்றார்; செறிந்தோர் தம்மில்
நீ செய்த பேர் உதவி யார் செய்தார்!'
என உரைத்தான்—நெறி செய் கோலான். 75

தன் உயிரும் தருமனுக்கு உரியதே என விராடன் மறுமொழி பகர்தல்

'உன் உயிர்போல் நீ வளர்த்த உத்தரன்தன்
உயிரும், உருத்து எழும் சிவேதன்-
தன் உயிரும் போர் அரசர் தாம் இருந்து
கொண்டாடச் சமரில் ஈந்தார்;
என் உயிரும் நினது அன்றி, யாரது, இனி?
சதுர் முகத்தோன் ஈன்ற பாரின்
மன்னுயிருக்கு உயிர் அனையாய்!' என உரைத்தான்—
வள மலி சீர் மச்சர் கோமான். 76

இரவி எழ, இருள் மறைதல்

முப்பொழுதும் உணர் கேள்வி முகுந்தனுடன்
பாண்டவரும் முடி சாய்த்து, ஆங்கண்
'எப்பொழுது விடிவது?' என நினைதரும் எல்லையில்,
வல்லே இரண்டு போரும்,
அப்பொழுது காண்டற்கு வருகின்றான் என,
தடந் தேர் அருக்கன் வந்தான்;
மைப் பொழுதும் சிவேதன் எதிர் மத்திரத்தான்
வரூதினிபோல் மாய்ந்தது அம்மா! 77

30. இரண்டாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

எந்த எந்த யோனி பேதம் எங்கும் எங்கும் உள்ளன,
அந்த அந்த யோனிதோறும் ஆவி ஆன தன்மையைச்
சிந்தையின்கண் ஒரு கணத்தில் நிகழுமாறு, தேவர்கோன்
மைந்தன் உய்ந்திட, புகன்ற வள்ளல் தாள் வணங்குவாம். 1

திட்டத்துய்மனைச் சேனாபதியாகக் கண்ணன் நியமித்தல்

சோனை மேகம் என்ன வாளி தூவு திட்டத்துய்மனை,
'சேனை நாதன் ஆகி, நீ செருச் செய்க!' என்று செப்பினன்—
வானை ஆதி ஆன பூத பேதம் ஆகி, மாயை ஆய்,
ஏனை ஞான ரூபி ஆகி, யாவும் ஆய எம்பிரான். 2

இருபக்கத்துச் சேனைகளும் களத்தில் வந்து கலத்தல்

ஐவர் சேனை இங்கு எழுந்தது; அங்கு எழுந்தது, அடலுடைத்
தெவ்வர் சேனை; வெகுளியோடு எழுந்து, இரண்டு சேனையும்,
பவ்வம் ஓர் இரண்டு எழுந்து படர்வது என்ன, வெருவரும்
கவ்வையோடு வந்து, வெங் களத்திடைக் கலந்தவே. 3

வெம் பராகம் வெளியில் உற்று எழுந்த போது, வேழ வில்
சம்பராரி தகன நாளில் அன்று எழுந்த தன்மை என்று
உம்பரார் நடுங்கினர்; உருத்து வீழும் உரும் என,
இம்பரார் நடுங்கினர், இரங்கு பல் இயங்களால். 4

தருமன் தம்பியர் முதலியோர் சூழ, திட்டத்துய்மனோடு
களத்தில் அணி வகுத்து நிற்றல்

அளவு இல் மன்னர் ஏறு தேர்கள் ஆறு-இரண்டு பத்து நூறு,
இளவலோடு கச துரங்கமங்களோடும், இடம் வர;
பளகம் அன்ன எழுபது உற்ற பத்து நூறு தேரொடும்,
வளவர் ஆதி மன்னரோடும், நகுலராசன் வலம் வர; 5

மிடல்கொள் வாள் அமைச்சரோடு விரைவின் வீரர் பின் வர;
முடுகு சேனை அபிமன், வீமன், விசயன், மாயன், முன் செல;
நடுவு நால்வகைப் படும் பதாதியோடு, நாயகன்,
கடக நாதனுடன் அணிந்து நின்றனன், களத்திலே. 6

வீடுமன் அணிவகுத்து, துரியோதனனோடு நடுவண் நிற்றல்

மாடு இரண்டும் எண் இல் கோடி மன்னர் சேனை நிற்கவும்,
பீடு கொண்டு அநேக மன்னர் பேர் அணிக்கண் நிற்கவும்,
சூடு தும்பை மண்டலீகர் தூசியாக நிற்கவும்,
வீடுமன் மகிபனோடு நடுவண் வந்து, மேவினான். 7

திட்டத்துய்மன் துரோணனோடு பொருது தோற்று ஓடுதல்

வீசு கொண்டலுடன் எதிர்ந்து கோடை உந்தி வீசவே,
மூசு கொண்டல் ஓர் இரண்டு முடுகி நின்று பொழிவபோல்,
தூசி நின்ற வீரரோடு தூசி வீரர் வில் வளைத்து,
ஆசுகங்கள் வீச வீச, அந்தரம் புதைந்தவே. 8

சொல் கையாத வாய்மை வல்ல துருபதன் குமாரனும்,
விற்கை ஆசிரியனும் உற்று எதிர்ந்து தம்மில் வெகுளவே,
பொற் கை வெஞ் சராசனம் பொழிந்த கோல், இழிந்த வான்
உற்கை என்ன, ஒருகைமா முகங்களூடு ஒளித்தவே. 9

வீர சாபமுடன் உரைக்கும் வெய்ய சாபம் வல்ல அத்
தீரன் வாளியால் அழிந்து, சிலையும் ஏறு தேரும் விட்டு,
ஈர மா மதிக்கு உடைந்த இருள்கொல் என்ன ஏகினான்—
ஆரவாரமுடன் மலைந்த ஐவர் சேனை அதிபனே. 10

சேனைத் தலைவன் நிலை கண்டு, வீமன் தேரில் நெருங்கி வந்து பொர,
சக்கரதேவன் எதிர்த்தல்

உடைந்து உடைந்து சேனை மன்னன் வருதல் கண்டு, உருத்து, வான்
மிடைந்த கொண்டல் என அதிர்ந்து, வீமசேனன் வேலையைக்
கடைந்த குன்றொடு ஒத்த தேர் கடாவி வந்து, முனிவனோடு
அடைந்த மன்னர் உட்கி ஓட, ஒரு கணத்தில் அமர் செய்தான். 11

உக்ரமாக வீமன் வந்த உறுதி கண்டு, அநேக போர்
விக்ர மா மதத் தடக் கை வேழ வீரர்தம்முடன்,
வக்ர சாப மழை பொழிந்து—வட கலிங்க மன்னவன்,
சக்ரதேவன்,—முகில் எறிந்த உரும் எனத் தலைப்பெய்தான். 12

தூசியிலுள்ள யானைப்படை வீமனால் அழிந்தமை கண்டு, சக்கரதேவன்
வில் ஏந்தி வருதல்

கதிக் கடுந் தேரினின்று இழிந்து, காலிங்கன்
மதிக்கும் மும் மத கரி வந்த யாவையும்
துதிக்கை வன் கரங்களால் சுற்றி, எற்றினான்—
விதிக்கு ஒரு விதி அனான் வீமசேனனே. 13

மின் பொழி படையுடை மேவலார் உடல்
என்பு உக, இபங்களை எடுத்து எறிந்தனன்—
தன் பெருந் துணைவனும் தாம மாருதி
வன்புடன் பறித்து எறி வரைகள் என்னவே. 14

வெம்பி மேல் வரு திறல் வீமன், மும் மதத்
தும்பிமேல் விழ விழ, தும்பி வீசுவ—
பம்பி மேல் எறிதரு பவனனால், கடல்
அம்பிமேல் விழ விழும் அம்பி போன்றவே. 15

வரு களிறு ஒரு கையால் வாங்கி, வீசலின்,
பொரு பணை மண்ணுறப் புதைய வீழ்ந்தன—
விரி திரை நெடுங் கடல் விசும்பு தூர்த்த நாள்,
இரு நிலம் இடந்திடும் ஏனம் போன்றவே. 16

கழல் அணி பொலங் கழல் காலை கைகளால்,
எழ எழ, மத கரி எடுத்து வீசலின்,
விழுவன அன்றி, மேல் விசையின் போவன—
பழைய கல் சிறகுடன் பறப்ப போன்றவே. 17

புகலுறு கலிங்கர்கோன் போரில் வென்னிட,
இகலுடன் எடுத்து எடுத்து இவன் எறிந்த போது,
அகல் வெளி முகடு உற அதிர்ந்து, மேல் எழும்
முகபட முகில்கள் வான் முகில்கள் போன்றவே. 18

வென்னிடு கட கரி வீரன், வீமன் முன்
முன் அணி கலங்குற முறிந்தவாறு கண்டு,
'என் இது?' என மொழிந்து, ஏறு தேரொடும்
தன் ஒரு சிலையொடும், தானும் தோன்றினான். 19

'களத்திடை மடிந்தன, கலிங்கன் வேழம்' என்று,
உளத்து அழல் கண் இணை சிவப்ப, உந்திட,—
தளத் தரணிபர் எனும் தானை யானைகள்—
வளைத்தன, மருத்தின் மா மடங்கல்தன்னையே. 20

கலிங்கமன்னன் சக்கரதேவனும் அவன் மைந்தர்களும் மாண்டமை கண்டு,
வீடுமன் வீமனோடு நெருங்கி வந்து பொருதல்

கந்து அடர் களிற்றுடன் கலிங்க பூபதி,
மைந்தரும், சேனையும் பொருது மாய்ந்தபின்,
இந்திரனால் சிறகு இழந்த குன்றுபோல்,
சிந்தை நொந்து, உடன்றனன், சேனை மன்னனே. 21

வீமனும் தனது தேர்மேல்கொண்டு, ஆங்கு ஒரு
தாம வேல் அவன் புயத்தடத்தில் ஓச்சினான்.
மா மரு மாலையான்தானும் மற்று அ(வ்) வேல்
தோமரம் ஒன்றினால் துணித்து, வீழ்த்தினான். 22

ஓடும் இரதத்து இவுளி நாலும் உடல் அற்று விழ,
ஓர் ஓர் கணை தொட்டு, இரதமும்
ஈடு குலைய, துவசம் வீழ, அனிகத்தவரும்
ஏக, எதிர் முட்டுதலுமே—
நீடு வரை ஒப்பது ஓர் கதாயுதம் எடுத்து, அணுகி,
நேர்பட, அடித்தனன்அரோ,
வீடுமன் மனத்து அனைய தேர் வலவனை, கடிதின்,
வீமன் எனும் வெற்றி உரவோன். 23

வேகமுடன் இப்படி அவ் வீமனும் உடற்றி, அடல்
வீடுமனொடு ஒத்த முது போர்,
மோகர விதத்து அரசர் மா மகுட ரத்நமுடன்
மூளைகள் தெறிக்க அடியா,
நாகமொடு எடுத்து இவுளி தேர் சிதறி முற்ற, ஒரு
நாழிகையில் எற்றி வரவே,
ஆகவம் முழுக்க உரும்ஏறு எறிவது ஒக்கும் என,
ஆரவம் மிகுத்தது அறவே! 24

வீடுமனும் வீமனும் ஒத்துப் பொருகின்ற நிலையில், அபிமன் உதவிக்கு வருதல்

மீளவும் வளைத்த சிலை வீடுமன், அதிர்த்த குரல்
வீமனொடு உருத்து, இருவரும்
காள முகிலுக்கு முகில் நேர் மலைவது ஒக்க, எரி
காலும் நயனக் கடையினர்,
மூள எதிர் முட்டி, இரு சேனையும் நிலத்து உதிர,
மோது பொழுதத்து, வெகுளா,
வாள் அபிமன் வெற்றி வரி வார் சிலை குனித்து, வய
வாளிகள் தொடுத்து வரவே, 25

வார் சிலையை வட்ட வடிவு ஆம்வகை வணக்கி, எதிர்
மாறுபட உற்று வருவோர்
ஓர் ஒருவர் நெற்றிதொறும் ஓர்ஒரு வடிக் கணைகள்
ஊடு உருவ விட்டு நகுவோன்—
மேருவை வளைத்து, நெடு வாசுகி, பிணித்து, மழை
மேகம் நிகர் மெய்க் கணை தொடா,
ஆர் அழலின் முப்புரமும் நீறு எழ, நகைத்த அரவு-
ஆபரணன் ஒத்தனன்அரோ. 26

வீமனும் அபிமனும் வீடுமனை வளைத்துப் பொர, துரியோதனன் உதவிக்குப் பல மன்னர்களை அனுப்புதல்

மேவலர் விதப் படையும் வீடுமனும் உட்கும்வகை,
வீமனும், விறல் புதல்வனும்,
பூவலயம் முற்றும் எழு கால இறுதிப் பரவை-
போல் இகல் விளைத்த பொழுதில்,
கூவலின் நிலைப் புனலும் மீது எழுவது ஒத்தது ஒரு
கோபமொடு, சர்ப்ப துவசக்
காவலன் உரைப்ப, இருவோரையும் வளைத்தனர்கள்,
காவலர் எனைப் பலருமே. 27

அது கண்டு, அருச்சுனன் வீம அபிமருக்குத் துணையாக வருதல்

தானவர் சமத்தும் இரு தோள்வலியும், அற்று, முனை
தானை புறகிட்டு அழியவே,
வானவர் துதிக்க, வய வாகை புனைய, கடவுள்
வாழ்வு இனிது அளித்து வருவோன்,
'மீனவன் எனத்தகைய காளையொடு எடுத்த கதை
வீமனை வளைத்தனர்' என,
கூனல் வரி விற் பகழி தூவி, இரதத்தின்மிசை
கூவி, அவரைக் குறுகினன். 28

வீடுமன் படை பின்னிட்டுப் பாசறையை நோக்கி ஓடுதல்

வீசு பகழித் துளியின் மேகம் என, விற்கொடு இவன்
மேலுற நடக்கும் அளவில்,
தேசுடை அருக்கன் எதிர் மூடு பனி ஒத்து, அரசர்
தேர் அணி கெடச் சிதறினர்;
மாசுண மணிக் கொடி மகிபதி படைத்தலைவன்
வார் சிலை வளைத்திலன்; நெடும்
பாசறை புகக் கடவினர், கட களிற்றின் அணி
பாய் பரி அணிப் படைஞரே. 29

சூரியன் மறைவும், வீரர்கள் பாடிவீடு புகுதலும்

வேலை அமுதுக்கு வரு வானவர்கள் ஒத்தனர்கள்,
வீடுமன் முதல் படைஞரார்;
ஆலம் நிகர் ஒத்தனன், அனிகினி தொலைத்து ஒரு தன்
ஆண்மை நிலையிட்டு வருவோன்;
'மேல் இனி இமைப்பொழுது நாம் வெளியில் நிற்கில் இவன்
மேலிடும்' எனக் கருதினன்-
போல், எழு வயப் புரவி ஊரும் இரதத்து இரவி
போய், உததியில் சொருகினன். 30

ஆதபன் ஒளித்த திசையோ ஒளி சிவந்தது? அற
ஆழ் குருதி மெத்துகையினல்,
மாதிரமும் மைக் கடலும் மாநிலமும் முட்ட, ஒரு
மாசு அறு சிவப்பு வடிவாய்,
ஏதில் இருள் புக்கு உலவலாம் இடம் அற, கடையின்
ஏறு அனலி ஒத்தது; இகலி,
பாதகம் மிகுத்த கொலை வாள் நிருபர் தத்தமது
பாடி நகர் புக்கனர்களே. 31

பின்னிட்டு வந்த அரசர்களைத் துரியோதனன் அச்சுறுத்துதல்

கூளிகள் செருக்கி நடமாடு களம் விட்டு, அரசர்
கோமகனை உற்ற அளவிலே,
'வாள் அபிமனுக்கும், ஒரு தேர் விசயனுக்கும், நம்
வரூதினி புறக்கிடுவதே!
நாளை முதுகிட்டவரை ஆர் உயிர் செகுத்திடுவன்,
நான்' என உரைத்தனன்அரோ.
மீளவும் உதித்தனன், விரோசனன், முதற் பகலில்
வீரர் விறலைக் கருதியே. 32

31. மூன்றும் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

தம்தம் உறியில், அவர் வைத்த தயிர் பால் வெண்ணெய் எட்டாமல்,
குந்தி, உரலின்மிசை ஏறி, இளங் கோவியர்முன் கூத்தாடி,
நந்தன் மனையில் அசோதை இரு நயனம் களிக்க விளையாடும்
மைந்தன் இரு தாள் ஒரு நாளும் மறவாதாரே பிறவாதார். 1

வீடுமன் கருட வியூகமும், கண்ணன் அர்த்த சந்திர வியூகமும் வகுத்தல்

ஏலா அமரில் மூன்றும் நாள், இரண்டு படையும் திரண்டு ஏற,
கால் ஆர் திண் தேர் வீடுமனும் வகுத்தான், கடுங் காருட யூகம்;
மேலாம் வென்றிப் பாண்டவர்தம் வெஞ் சேனையைக் கொண்டு, எஞ்சாமல்
தோலா அர்த்த சந்த்ரப் பேர் வியூகம் வகுத்தான், துளவோனே. 2

போரே தொடங்கி இரு படையும் புகுந்த பொழுதில், உகம் தொலைத்த
காரே தொடங்கி, கார்கோள் வெங் கடுங் கால் கலிகொண்டு, ஆர்ப்பனபோல்,
வாரே தொடங்கும் பணைக் குலமும், மணிக் காகளமும், உடன் முழங்க,
பாரே தொடங்கி, எவ் உலகும் அடைவே செவிடு பட்டனவே. 3

விசயனையும் அபிமனையும் வீடுமன் முதலியோர் வளைத்தல்

சொல் ஆர் கேள்விக் கங்கை மகன், துரோணன், முதலாம் அதிரதரும்,
எல் ஆர் இரத, கய, துரங்கம், ஏல் ஆளுடனே, காலாளும்,
வில்லால் முன்நாள் தமைத் துரந்த வீரன்தனையும் சிறுவனையும்,
மல்லால் வஞ்ச மல் அடர்த்த மாயன்தனையும், வளைத்தாரே. 4

துரியோதனன் முதலியோர் வீமனை வளைத்துப் போர் புரிதல்

சூரர்க்கு எல்லாம் முதல் எண்ணும் துரியோதனனும் தம்பியரும்,
ஆரக் கவிகைக் காந்தாரன் முதலா உள்ள அவனிபரும்,
சேரத் திரண்டு, கரிகள் ஒரு சிங்கம் வளைத்தது என, சிங்க
வீரத் துவசன் நின்றுழிப் போய், வளைத்தார், சமரம் விளைத்தாரே.

வரத்தால், மறையால், தாம் பெற்ற வரி சாபங்கள் பிடித்த தனிக்
கரத்தால், மறைந்தது, அவரவர்தம் கடைக்கண்; படைக்கண் விரைந்து விடும்
சரத்தால் மறைந்தது, அகல் வானம்; தரணிதலம் அச் சரம் துணித்த
சிரத்தால் மறைந்தது; உகு குருதிச் சேற்றால் மறைந்த, திசை நான்கும்.

கடோற்கசன் அம்பால் துரியோதனன் உணர்வு அற்று விழ, அபிமன் வேல் எறிந்து அவனது தேர்ச் சாரதியை மாய்த்தல்

துவசம் பிளந்து, தேர் ஊரும் துரகம் பிளந்து, சுடர் மணிப்பொன்
கவசம் பிளந்து, மார்பகமும் பிளந்து, ஊடு உருவ, கடோற்கசன்தான்
நவ சந்திர மா முனை வாளி தொடுத்தான்; தொடுத்த நாழிகையில்,
அவசம் பிறந்து, தம்பியர்முன் விழுந்தான் ஒருவர்க்கு அழியாதோன்.

நாகம் துவசம் என உயர்த்தோன் நடுங்காமுன்னம், நண்ணலரை
மாகம்தனில் சென்று அமர் கடந்து, வரும் மைந்து உடையோன் திருமைந்தன்,
வேகம் பட்நின்று, ஒரு சமர வேலால், மீண்டும் அவ் வேந்தன்
பாகன்தனது மருமத்தில் பாய்ந்தான், அவனும் மாய்ந்தானே. 8

செய்தி கேட்ட வீடுமன் விசயனையும் கண்ணனையும் விடுத்து, துரியோதனன் கிடந்த இடம் வந்து, அவனை எடுத்துத் தேர்மேல் கொண்டு மூர்ச்சை தெளிவித்தல்

'விழுந்தான், வேலால் தேர்ப் பாகன்; வெஞ் சாயகத்தால், விறல் வேந்தர்
தொழும் தாள் அரசன்தானும் உயிர் சோர்ந்தான்' என்னும் தொனி கேட்டு,
செழுந் தார் வாகை விசயனையும் திருமாலையும் விட்டு, ஒரு முனையாய்
எழுந்தான்—மந்தாகினி மைந்தன், இளைத்தோர்தமக்கு ஓர் எயில் போல்வான்.

வண்டு ஆர் அலங்கல் வலம்புரியோன் மார்பம் துளைத்த வாளி வழி
கண்டான்; எடுத்து, தாழ்ந்த திருக்கையால் அணைத்து, கால்தேரில்
கொண்டான்; ஆவி தரு மருந்து கொடுத்தான்; அவனும் கொடுத்த மருந்து
உண்டான்; உண்ட கணத்தில் மீண்டு உணர்ந்தான், உலகு ஏழ் உடையானே. 10

துரியோதனனைப் படை வகுப்பில் நிறுத்தி, கடோற்கசன், அபிமன், முதலிய வீரர்கள் பின்னிடுமாறு வீடுமன் வெம்போர் புரிதல்

மன்னன்தனை அச் சந்தனுவின் மைந்தன் பெரும் பேர் அணி நிறுவி,
'பொன் அம் குன்றே, இவன் சிலையும்; இவனே காணும் புராரி' என
மின்னும் கழற் கால் வீமனுடன் வெம் போர் விளைத்து, விடலையர் ஆய்
முன் நின்றவரும் பின்னிட, தன் முனை வாளியினால் வினை செய்தான்.

மருமங்களினும், புயங்களினும், வதனங்களினும், கண்களினும்,
செருமும்படி வெங் கணை மாரி சிந்திச் சிந்தி, சிரம் துணித்து,
தருமன் சேனைப் பரவை எலாம் தானே ஆகி, தலைநாளில்
பொரு மந்தர மால் வரை போல, திரிந்தான், வெம் போர் புரிந்தானே. 12

வீடுமனது போர் கண்டும் விசயன் வாளா இருக்கவே, கண்ணன் ஆழியுடன் தேரிலிருந்து இறங்குதலும், விசயன் ஓடி அவன் பாதத்தைத் தொழுது துதித்தலும்

மலை ஒத்து அதிரும் கட களிறும், வய மா அணியும், மான் தேரும்,
தொலையத் தொலைய, யாவரையும் சுடு வெங் கணையால் துரந்து துரந்து,
அலையத் தரங்கம் எறி கடல்வாய் வடவானலம்போல் அவன் நின்ற
நிலையைக் கண்டும், காணான்போல் நின்றான், விசயன், நிகர் இல்லான். 13

'கான் எரி துற்றென வீடுமன் இப்படி காதி மலைந்திடவும்,
மானம் நினைத்திலை, சாபம் எடுத்திலை, வாளி தொடுத்திலை, நீ!
ஏன் இது, உனக்கு?' என மாயன் உரைத்து, அவன் ஏறு இரதத்து இழியா,
'ஆனது எனக்கு இனி ஆக!' எனத் தனி ஆழி எடுத்தனனே. 14

ஆழி எடுத்தனன், வீடுமனைப் பொருது ஆவி அழித்திடுவான்,
ஊழிமுகக் கனல்போல் எழும் அப் பொழுது, ஓடி அருச்சுனனும்,
தாழிதனக்கு முன் வீடு கொடுத்தருள் தாள் இணையைப் பிடியா,
'வாழி! உனக்கு இவனோ எதிர்? வித்தக! மாய!' எனத் தொழுதான்.

அது கண்டு, வீடுமனும் தன் தேரினின்று இறங்கி, கண்ணனைத் துதித்தல்

வாசவன் முன் பெறு காளை தொழத் தொழ, மாறுபடச் சினவும்
கேசவன் இப்படி மேல் வருகிற்பது கேவலம் உற்று உணரா,
'நாசம் நமக்கு உறு காலம் நணித்து!' என நாடி, நடுக்கமுடன்,
தேசு அணி பொன்-தட மேரு எனத் திரி தேரினை விட்டு இழியா, 16

'ஆரண கற்பித! மாதவ! அச்சுத! ஆழியிடைத் துயிலும்
காரண! சிற்குண ரூப! மலர்க் கொடி காதல் மனத்து உறையும்
நாரண! அற்புத! வானவருக்கு ஒரு நாயக! நிற் பணியும்
வாரணம் முத்தி விசாலதலத்திடை வாழ்வுற வைத்தவனே! 17

'ஆவி அழித்தனை, தூணில் உதித்து, அடல் ஆடகனைத் தலை நாள்;
மாவலியை, சிறு மாண் உருவத்துடன், வார் சிறை வைத்தனையால்;
ஏவில் அரக்கனை வீழ அடர்த்தனை; யான் ஓர் இலக்கு எனவோ,
நீ வலியின் சினம் மூளும் மனத்தொடு நேமி எடுத்ததுவே? 18

'வான் நரகில் புகுதாமல் எனக்கு உயர் வான் உலகைத் தருவான்,
நீ நினைவு உற்றது போன பிறப்பில் என் நீடு தவப் பயனே;
யானும் இனிப் பிறவாமல் அளித்தருள்; ஈச!' எனப் பரவா,
ஞான மனத்தொடு, நா குழற, பல நாடி, உரைத்தனனே. 19

கண்ணன் சினம் ஆறி நிற்க, தான் பொருவதாகச் சொல்லி, கண்ணனுடன்
தேரில் சென்று, விசயன் கடும் போர் விளைத்தல்

ஆரியன் அப்பொழுது ஆறினன் நிற்கவும், ஆடல் அருச்சுனனும்
தாரை வடிக் கணை ஆயிரம் உய்ப்பது ஓர் சாபம் வளைத்து, அதிரா,
'யார் எதிர் நிற்பினும், யாவர் தடுப்பினும், யான் இனி இப் பகலே
சேர முருக்குவன்; ஏறுக!' எனத் தன தேர்மிசை புக்கனனே. 20

நீறு படுத்தினன் மா மகுடத் திரள்; நீள் நில வைப்பு அடையச்
சேறு படுத்தினன், மூளைகளின் தசை; சேர் குருதிப் புனலால்
ஆறு படுத்தினன்; ஓர் ஒருவர்க்கு எதிர் ஆயிரம் வைக் கணையால்
ஈறு படுத்தினன்; வீடுமன் விட்டவர் யாவர் பிழைத்தவரே? 21

வாயு வடிக் கணை, வாசவன் வைக் கணை, வாருண மெய்க் கணை, செந்
தீயின் வடிக் கணை, தேவர் சுடர்க் கணை, சேர விடுத்தமையால்,
ஆயம் முனைப் படு தேர் அணி பட்டன; ஆள் அணி பட்டன; வெங்
காய் கரி பட்டன; பாய் பரி பட்டன; காவலர் பட்டனரே. 22

நாடி ஒளித்தனர், சூழ் புனல் மத்திர நாடன் முதல் பலரும்;
கூடி ஒளித்தனர், மா ரதரில் திறல் கூரும் வயப் படையோர்;
ஓடி ஒளித்தனர் ஆடு அமரில் துரியோதனனுக்கு இளையோர்;
வாடி ஒளித்தனர், மாகதர், ஒட்டியர், மாளவர், குச்சரரே. 23

விசயன் அம்பினால் பகைவர் சாயக் கண்ணன் மகிழ்வுறுதலும், வீடுமன் முதலியோர்
மன்னனைக் காத்துப் பாசறை கொண்டு செல்லுதலும்

பார்த்தன் அம்பினால் மேவலார் படைப்
பரவை சாயவே, விரவு கோவியர்
தூர்த்தன் அன்புடன் கண்டு, உவந்து, தன்
தொக்க சேனையின் பக்கம் எய்தினான்.
சேர்த்த வெம் பனைக் கொடி மகீபனும்,
வில் வினோதனும், செல்வ மைந்தனும்,
காத்து நின்று, தம் காவலன்தனைக்
கொண்டு பாசறை கடிதின் எய்தினார். 24

படுகளக் காட்சிகள்

வெஞ் சரத்தினுல் விசயன் வென்ற போர்
மிகு களத்தின்வாய் விசையொடு அற்றன
குஞ்சரத்தின் வீழ் கைகள் நாகமே;
குருதி வட்டமும் பரிதி வட்டமே;
பஞ்சரத்தொடும் திரியும் யானையின்
பக்கம் எங்கணும் பட்டு மூழ்கிய
செஞ் சரத்தின்மேல் சிறகர், பண்டு வச்-
சிரம் அரிந்திடும் சிறகர் மானுமே. 25

கொற்ற மன்னர் சென்னியின் அணிந்த பொற்
கோளம் யாவையும் தாளமாகவே,
அற்றை வெஞ் சமத்து அடல் அருச்சுனன்
ஆண்மை பாடி நின்று, அலகை ஆடுமால்;
முற்ற வெம் பிணக் குவையும், வேழமும்,
முடுகு வாசியும், தேரும், மொய்ம்பு உறத்
துற்ற குன்று என, ஒன்றுபட்டு எழச்
சொரியும் மூளை ஆறு அருவி ஒக்குமே. 26

பமர மும் மதக் கரி, விலாவின் வேல்
பட்ட வாய் நிணம் பறிய நிற்பன,
குமரன் வேலின்வாய் அனலம் ஊர்தரும்
கோடுடைத் தடங் குன்றம் ஒக்குமால்;
அமரர்கோன் மகன் செங் கை அம்பினுல்
அற்ற வீரர்தம் தலைகள் கவ்வி, அச்
சமர பூமி சேர் ஞாளி, மானுடத்
தலை விலங்கின் இன் தன்மை சாலுமே. 27

சூரியன் மறைதலும், அன்றைய நிகழ்ச்சிகள் குறித்துப்
பாசறையில் வீடுமன் பேசியிருத்தலும்

அன்று வெஞ் சரத்தொடு தறிந்த வாள்
அரசர் சோரி மெய்ப் பட்டதுஆதலின்,
சென்று செங் கதிர்ச் செல்வன் வாருணத்
திசை அடைந்து, வெண் திரையில் மூழ்கினுன்;
நின்று அருச்சுனன் பொர மறந்ததும்,
நெடிய செங் கண் மால் நேமி தொட்டதும்,
பின்றை வில் எடுத்து அவன் மலைந்ததும்,
பேசினுன், மகீபதி பிதாமகன். 28

தருமன் சேனை மகிழ்வாலும், துரியோதனன் சேனை வருத்தத்தாலும், கண்ணுறங்காது இரவைக் கழித்தல்

தருமன் மா பெருஞ் சேனை தன்னுளார்
தங்கள் ஆதரத்தொடு தனஞ்சயன்
பொரு வில் ஆண்மையும், வீமன் மா மகன்
பொருத வீரமும் புகழ்ந்து பாடினர்;
அரவ கேதனன் சேனை தன்னுளார்
அழிந்த மன்னருக்கு அழுது அரற்றினர்;
இருவர் சேனையும் கண்படாமல், அன்று,
இரவு பட்டது என் என்று இயம்புவாம்! 29

சூரியன் கதிர் பரப்பி எழுதல்

'நென்னல் அம் கையில் கொண்டது என்னையே,
நேமியாக, அந் நீல மேனியான்;
இன்னமும் பொரத் தேடும், ஆகவத்து
இன்றும்' என்றுகொண்டு, எண்ணியே கொலோ?
தன் நெடுந் தனிச் சயிலமும் பொலந்
தமனியத் தடஞ் சயிலம் ஆகவே,
மின் நெடுஞ் செழுங் கதிர் பரப்பினன்—
வெய்ய ஏழ் பரித் தேர் விபாகரன். 30

32. நான்காம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

தேடிய அகலிகை சாபம் தீர்த்த தாள்,
நீடிய உலகு எலாம் அளந்து நீண்ட தாள்,
ஓடிய சகடு இற உதைத்து, பாம்பின்மேல்
ஆடியும் சிவந்த தாள்,—என்னை ஆண்ட தாள். 1

இருவர் சேனையும் பொங்கிப் போருக்கு எழுதல்

நற் பகலிடை வரு நளின நாயகன்
பொற்பு அகலுற ஒளி புரியும் நேமியான்
பிற் பகல் அணியையும், பிறங்கு சேனையால்,
முற் பகல் வியூகமே ஆக மூட்டினன். 2

கார் முகில் வண்ணனைக் கண்டு, காணலார்-
தாமும் அவ் வியூகமே சமைத்து முந்தினார்;
ஏமமோடு எதிர் முனைந்து இருவர் சேனையும்,
போர் முரசு எழ எழ, பொங்கி ஆர்த்தவே. 3

ஏழ்-இரு புவனமும் ஏந்து மேருவைச்
சூழ்வன கிரிக் குழாம் சுற்றுமாறுபோல்,
பாழி அம் புய கிரிப் பவனன் மைந்தனை
வேழ வெம் படையுடை வேந்தர் சூழவே, 4

யானைப் படைகளை வீமன் அழித்த வகை

ஆலாலம் எனக் கதுவா, அதிரா,
மேல் ஆள் விழ, வீமன் வெறுங் கைகளால்,
ஏலா உடல் என்பு உக, மோத, வெறுந்
தோல் ஆயின—சிற்சில தோல்இனமே. 5

மேல் வாய் தம கையொடு மேல் எழவும்,
தோல் வாய் அவை கீழ் விழவும், துணியா,
மால் வாரணம் வாய்கள் கழன்றன, முன்
நால்வாய் எனும் நாமம் நலம் பெறவே. 6

மதி வெண்குடை மாருதி வன்புடனே
குதிகொண்டு ஒரு கைகொடு குத்துதலால்,
அதிர் சிந்துர வல் உரம் அத்தனையும்
எதிர் சிந்துரம் ஆகி, இளைத்தனவே. 7

உடலில் தசை யாவும் உடைந்து, நெடுங்
குடல் அற்று விழும்படி குத்துதலான்,
மிடல் பற்றிய வீமன் வெறுங் கைகளால்
அடல் அத்திகள் அத்திகள் ஆயினவே. 8

கந்தாவகன் மொய்ம்பு உறு காளை, புயக்
கந்தால், அமர் செய்து கலக்குதலின்,
தந்தாவள சேனை தரிப்பு அறவே
தம் தாவளம் உற்றன, சாயுறவே. 9

வெவ் வாயுவின் மைந்தன் வெகுண்டு, ஒரு தோல்
மொய் வாகுவில் வைத்து, எதிர் மோதுதலால்,
கை, வாலதி, மெய், தலை, கால்கள், கரந்து,
அவ் வாரணம் வாரணம் ஆகியதே. 10

கம்பித்தன கார் உடல், பேர் உயிரும்
கும்பித்தன,—வாயு குமாரன் இவன்
அம் பொற் கர பங்கயம் அள்ளுதலின்,—
தும்பிக் குலம் ஆயின, தும்பிகளே. 11

மின் நாக மணிப் புயன் வெங் கதையால்
முன்னுகை மலைந்து முருக்குதலால்,
எந் நாகமும் நாகம் எனும்படியே
மன் ஆகவம் எங்கும் மடிந்தனவே. 12

கோடும் கரமும் பறிய, குதிகொண்டு
ஓடும் குருதிப் புனலூடு, உடலம்
மூடும்படி யாவரும் மூழ்குதலால்,
ஆடும் கயம் ஆயின, அக் கயமே. 13

வீசும் தம கைம் முதல் மெய்ம் முழுதும்
கூசும்படி சிற்சில் குழம்புகளாய்,
மூசும் களபக் குலம், மொய்ம்பன் உடல்
பூசும் களபக் களி போன்றனவே. 14

கிரியே என வந்து எதிர் கிட்டின, புன்
பொரியே என, வானிடை புக்கன; போர்
அரிஏறு அனையான் வலிமைக்கு அவர்தம்
கரியே கரி அல்லது, கண்டவர் யார்? 15

இவ்வாறு வெகுண்டு, இவன் எற்றுதலும்,
கை வாரண வேலை கலக்கம் உற,
தெவ் ஆகிய மன்னவர் தேர்களொடும்
வெவ் வாசிகள்தம்மொடும் வென்னிடவே, 16

அது கண்டு துரியோதனன் தம்பியர் முதலியோருடன் சென்று எதிர்த்தல்

உடைகின்றமை கண்டு, உரகத் துவசன்,
குடையும், கொடியும், குளிர் மா முரசும்,
படையும், சில தம்பியரும், பலரும்,
புடைகொண்டு வர, போனான் அவன்மேல். 17

வீமற்கு எதிர் நின்று, அவன் வில் அறவும்,
சேமக் கவசம் சிதைவுற்றிடவும்,
நாமக் கணை ஏவினன்—நாயகனும்
மா முத்த மதிக் குடை மன்னவனே. 18

ஆறு அம்பினில் அற்று அரவத் துவசம்,
நூறு அம்பு அகல் மார்பில் நுழைந்தன; பின்,
வேறு அம்பு தொடுத்திலன், வீமன்; அவன்
மாறு அம்பு தொடுத்தனன், மற்று இவன்மேல். 19

சிங்கக் கொடி அற்று, அணி தேர் சிதைவுற்று,
அங்கத்தில் நுழைந்தன அம்புகளும்;
துங்கக் கடகத் திரள் தோள் புடையா,
வெங் கண் கனல் வீமன் வெகுண்டனனே. 20

வீமன் வெகுண்டு பொர, அவனுக்குத் துணையாகத் தம்பியர் முதலியோர் வருதல்

'நொந்தான் இவன்!' என்று, நுதிக் கதிர் வேல்
அம் தார் முடி மன்னர் அநேகருடன்
வந்தார், பலர் தம்பியர், மைத்துனரும்,
கொந்து ஆர் தொடை வீர குமாரருமே. 21

மலரும் குடை மன்னவர் வந்தமை கண்டு,
அலரும் கொடி வாள் அரவோன் அருகே,
பலரும் கரி தேர் பரி ஆளுடனே
சிலரும் புவிபாலர் திரண்டனரே. 22

வீமன் கணையால் துரியோதனன் தளர, சகுனி சல்லியன் முதலியோர் வந்து, அவனை எடுத்து அணைத்தல்

எதிர்ந்தார், மன்னர் இரு திறத்தும், ஒருவர்க்கு ஒருவர்; இடை இடை நின்று
அதிர்ந்தார், சிறு நாண்; பேர் ஒலியால் உடையா அல்ல, அகிலாண்டம்;
முதிர்ந்தார் போரில் தொடு கணையால், முரண் தோள் துணிந்தும், முடி துணிந்தும்;
உதிர்ந்தார், தம்தம் உடல் நிலத்தில்; உயர்ந்தார், ஆவி உயர் வானில்.

தாமத் தெரியல் வலம்புரியோன் தடந் தாமரைக் கைத் தனுத் தறிய,
சேமக் கவனப் பவன கதிப் பரிமா நான்கும் சிரம் துணிய,
மா மொட்டு ஒடிந்து கொடிஞ்சியுடன் மான் தேர் சிதைய, மார்பு உருவ,
நாமக் கணைகள் பல பட வில் உகைத்தான், நின்று நகைத்தானே.

'முன் நாள் அமரில் கடோற்கசன்தான் முனை வெஞ் சரத்தால் மூழ்குவித்தான்;
பின் நாள், மீளப் பிறைக்கணையால் பிளந்தான், அவனைப் பெற்று எடுத்தோன்'
என்னு, இரங்கா, மெய்ந் நடுங்கா, எடுத்தார் அணைத்தார், சகுனியும், அப்
பொன் ஆர் தடந் தேர்ச் சல்லியனும், முதலா உள்ள பூபாலர். 25

தமையன் நிலை கண்டு தம்பியர் முனைந்து பொருதல்

தம்முன் தளர்ந்த நிலை கண்டு, தரியார் ஆகி, தம்பியர்கள்,
'எம் முன் பொருதற்கு இசைவார்கள் இசைவீர்!' என்று என்று, இகல் கூறி,
தெவ் முன், செவிகள் செவிடுபடச் சிறு நாண் எறிந்து, தேர் கடவி,
முன் முன் கடிதின் கணை பொழிந்தார், முகுந்தன் தடுத்த முகில் போல்வார். 26

துரியோதனன் தம்பியரில் ஐவர் வீமன் கணையால் மாளுதல்

வில்மேல் விசையின் கடும் பாணம் மேன்மேல் நிறுத்தி, வேந்தரைப்பார்த்து,
'என் மேல் நினைவு?' என்று, அவர் அவர் பேர் இரதம் துணித்து, சிலை துணித்து,
தன்மேல் வந்த தம்பியரில் தரியாது உடன்ற ஐவர்க்கு
மன்மேல் எய்த வாளி எனத் தொடுத்தான், ஐந்து வய வாளி. 27

சேனுவிந்து, சுதக்கணன், பொன்-தேர்ப் பிங்கலசன், சலாசந்தன்,
ஆனு வீமவாகு, எனும் அடல் வாள் நிருபர் ஐவரையும்,
வான் நாடு ஆளும்படி விடுத்தான்—வன்பால் தம்மை ஐவரையும்
'கான் ஆள்க!' என்ற காவலனைப் போல்வான், வீரக் கழல் வீமன்.

துரியோதனன் சேனைகள் சிதற, பகதத்தன், 'அஞ்சல்!' என்று
அவர் எதிர் சென்று பொருதல்

ஒருபால் வீமன், சிலை விசயன் ஒருபால், ஒருபால் அபிமன்னு,
ஒருபால் நகுலன், சாதேவன் ஒருபால், ஒருபால் உரகேசன்,
ஒருபால் அரக்கன், பாஞ்சாலன் ஒருபால், அடல் உத்தமபானு
ஒருபால், உடன்று பொரப் பொரவே, உடைந்தது, அரசன் பெருஞ் சேனை,

விண் நாடருக்கா வெஞ் சமத்தில் அசுராதிபரை வென் கண்டோன்,
மண் ஆள் அரசர் மகுட சிகாமணியே போல்வான், மா மரபால்
பண் ஆர் பஞ்ச கதி மான் தேர்ப் பகலோன் அன்ன பகதத்தன்,
எண்ணார் துரக்க வரும் படையை, 'அஞ்சல்!' என்று என்று, எதிர் சென்றான். 30

அலை கால் வெள்ளக் கருங் கடல்போல் அதிராநின்ற ஆகவத்தில்,
மலை கால் பெற்று வருவதுபோல், வரு திண் பனைக் கை மா மிசையான்
சிலை கால் வளைத்து, தீ வாய் வெஞ் சரம் கொண்டு, அடையார் சிரம் கொண்டான்,
கொலை கால் செங் கண் கரிய நிறக் கூற்றம்தனக்கும் கூற்று அன்னான்.

தார் ஆர் ஓடைத் திலக நுதல் சயிலம் பதினாயிரம் சூழ
வாராநின்ற மத கயத்தின் வன் போர் வலியும், மன வலியும்,
சேரார் வணங்கும் பகதத்தன் திண் தோள் வலியும், சிலை வலியும்,
பாராநின்ற கடோற்கசன் தன் படையின் தளர்வும் பார்த்தானே.

பகதத்தன் வரவால் சேனை தளர்தல் கண்டு, கடோற்கசன் பல வேறு
மாய வடிவம் கொண்டு மலைதல்

ஆய போதில், ஆயிர நூறு மத மாவும்,
மேய தீய காலனை ஒக்கும் மேலாளும்,
சாயகம்மும், சாபமும், யாவும், தானே ஆம்
மாய வேடம் கொண்டு, அவனோடு மலைவுற்றான். 33

சங்கம் ஊத, தார் முரசு ஆர்ப்ப, முழவு ஆர்ப்ப,
பொங்கும் பூழி ஆழி வறக்கும்படி போத,
சிங்கம் குன்றில் செல்வது போல, சிலையோடும்,
எங்கும் தானும் வேழமும் ஆகி, எதிர் சென்றான். 34

மைபோல் ஆர்த்து, மும் முறை தான மழை சிந்தி,
கை போய் முட்டி, கையொடு தம்தம் கால் வீசி,
மெய்போல் வெம் போர் செய்தன, வீரன் விறல் வேழம்;
பொய்போல் நின்ற, வரு பகதத்தன் போர் வேழம். 35

கடோற்கசன் வெற்றிபெற, பகதத்தன் தப்பி ஓடுதலும் சூரியன் மறைதலும்

நின்றார்; நின்றபடி கடிதாக நெடிது ஓடிச்
சென்றார்; கண்ட சிந்துரம் யாவும் தீ அம்பின்
கொன்றார்; மற்று அக் கொற்றவர் யாரும் கொலையுண்டார்;
வென்றார் அன்றோ, வீமன் மகன் சேனையில் வீரர்? 36

'ஆனது ஆனது ஆகவம் எங்கும் ஆனைப் போர்;
போன போன மைந்தர் பிழைப்பீர், போம்!' என்று என்று,
ஊனம் எய்தாது, அவ் இறை போனான், உயிரோடும்;
போன கண்ட காய் கதிரோனும் புறமிட்டான். 37

இரு திறத்தாரும் தத்தம் பாசறை புகுதல்

பூந் தண் மாலைப் பஞ்சவர் ஆனைப் போர் வென்று,
சேர்ந்த சேர்ந்த மன்னவரோடும் திறலோடும்,
தாம் தம் பாடி வீடு புகுந்தார்; தரை ஆளும்
வேந்தனோடும் பாசறை புக்கான், வீடும்மன். 38

மைந்தர் ஐவரின் மறைவு தெரிந்து காந்தாரி அழுது சோர்தல்

'பூண் பாய் மார்பின் புத்திரர் தம்மைப் பொலிவோடும்
காண்பாள் ஐவர்க் கண்டிலள், பெற்ற காந்தாரி;
'சேண்பால் எய்தச் சென்றனரோ?' என்று, இரு கண் நீர்
தூண்பால் ஆகிச் சோர்தர, உள்ளம் சோர்வுற்றாள். 39

'கொன்னே குந்தி மைந்தர் இருக்கக் கொலையுண்டீர்;
முன்னே முன்னும் முன்னம் முடிந்தது' என முன்னா,
மின்னே என்ன மெய் குலையா, மண்மிசை வீழ்ந்தாள்;
'என்னே! என்னே!' என்று இனையாநின்று, என் செய்தாள்! 40

வீறு ஆர் கற்பின் மின் அனையாளை விறல் மைந்தர்
ஏறா மன்றில் ஏற்றவும், 'ஆம், அன்று' என்னாதாள்,
ஊறா அன்பின் கண்ணறை மன்னன் ஒரு தேவி,
ஆறா வெள்ளத் துன்புற அன்றே அடியிட்டாள். 41

இருள் அகல, இரவி தோன்றுதல்

ஆளாய் மாய்ந்த வேந்தர் இடம்தோறு அழும் ஓசை
கேளா, 'எப்போது ஏகுவம்?' என்று, அக் கிளர் கங்குல்
மீளா, ஓடிற்று; அத் திசை வானோன் மிளிர் சென்னிச்
சூளாமணிபோல் வந்தது காலைச் சுடர் அம்மா! 42

33. ஐந்தாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

கரு மா முகில் கோலம் நெஞ்சத்து இருத்தும் கருத்து எய்துமேல்,
அரு மாதவன்தானும் அவன்; முத்தி தருகைக்கும் அவனே குரு;
தரு மாலை மணம் நாறு தாளானை, வண்டு ஏறு தண் அம் துழாய்
மரு மாலை புனைகின்ற திருமாலை, அல்லாது, வல்லார்கள் யார்? 1

இரு மன்னர் தானைகளும் திரண்டு போருக்கு எழுதல்

வர சங்கமும், தாரையும், சின்னமும், பொன் மணிக் காளமும்,
முரசங்களும், துந்துபியும், எங்கும் எழ விம்ம, முழ விம்மவே,
கரை சிந்து, திரை சிந்து, நுரை சிந்து, விரை சிந்து, கணம் என்னவே,
அரசன் பெருஞ் சேனை வெள்ளம் புறப்பட்டது, அணியாகவே. 2

விருது ஆயிரம் கோடி, முரசு ஆயிரம் கோடி, மேன்மேல் எழ,
பொரு தானையுடன் வந்து அணைந்தார், புறந்தந்த பூபாலரும்;
கருதா அரக்கன் கொடுந் தானை, இறைவன் கடுந் தானை, என்று
இரு தானையும் போல, எதிருற்ற, இரு மன்னர் இரு தானையும். 3

கண்ணனுடன் தேரில் விசயன் புறப்படுதல்

'அரக்கர்க்கு முதல் வான் அளித்தோரும் எமர்; இன்றும் அவர்போல் உமைத்
துரக்கைக்கு நின்றேன்' எனத் தெவ்வர் தம்மோடு சொல்லிற்று என,
குரக்குக் கொடித் தேரின்மிசை ஏறி விசையோடு கூத்தாடவே,
புரக்கைக்கு நின்றோனுடன், செங் கண் விசயன் புறப்பட்டனன். 4

விசயன் வீடுமனை அடுக்கும் எல்லையில், எதிர்த்த கலிங்கர் அவன் அம்பினால் புண்ணுறுதல்

அரன் நின்றனன் போல, அவன் நின்ற தேர் ஒத்த அணி தேர்மிசை,
பொர நின்ற நதிமைந்தனோடு சென்று, முனை நின்று பொர எண்ணியே,
சரம் நின்ற குனி சாப விசயன்தனைக் கொண்டு, சங்கம் குறித்து,
உரம் நின்ற அவன் நெஞ்சுடைப் பாகன் மான் தேர் உகைத்து ஊரவே,

ஊர்கின்ற தேர் ஓடி, உயர் கங்கை மகன் நின்ற ஒரு தேருடன்
சேர்கின்ற எல்லை, கலிங்கேசர் முதலான தெம்மன்னர் போய்,
நேர்கின்ற விசயன்தனுடன் மோதி, அவன் ஏவு நெடு வாளி பட்டு,
ஈர்கின்ற புண் வாயில் வார்கின்ற செந்நீரினிடை மூழ்கினார். 6

அது கண்டு வீடுமன் அம்பு தொடுக்க, விசயன் அவனது
வில் முதலியவற்றைத் துணித்தல்

செல்லும் கலிங்கேசர் அலையுண்ட நிலை கண்டு, சிவன் என்று பார்
சொல்லும் பெருஞ் செம்மல் பல்லங்கள் அவன்மேல் தொடுத்து ஏவினான்;
கொல்லும் கொடும் பாணம்அவை ஐந்து விசயன் கொதித்து ஏவினான்,
வில்லும், தன் வில் நாணும், விறல் அம்பும், உடன் அற்று விடை கொள்ளவே.

இவர்கள் இங்ஙனம் பொர, வீமனைத் துச்சாதனன் முதலியோர்
வளைந்து பொருது தோற்று ஓடுதல்

இவர் கொண்ட செற்றத்தொடு இவ்வாறு போர் செய்ய, இகல் வீமனைப்
பவர் கொண்ட நெடு வேலைபோல் வந்து மொய்த்தார்கள், பல மன்னரும்;
கவர் கொண்ட முனை வாளி அவர் மார்பு தோறும் கழன்று ஓடவே,
தவர் கொண்டு செற்றான், முன் அளகேசன் அமர் வென்ற தனி ஆண்மையான். 8

துச்சாதனன், தம்பிமார், மைந்தர், மற்றும் சகுனி, சல்லியன்,
எச் சாப முடி மன்னரும், பின்னரும், துன்னி எதிர் சீறினார்;
அச் சாபம் ஒன்றாலும், அன்று, அவ் அவர்க்கு அம்பு அநேகம் தொடுத்து,
உச்சாசனம் சொல்லி நின்றான், அவ் அடல் மன்னர் உடன் ஓடவே.

தம்பியர் நிலைகண்டு, துரியோதனன் சினத்துடன் தேரில் வந்து வீமனுடன் பொருதல்

செருத் துப்பு உடைந்து ஓடிவரு தம்பியர்க் கண்டு, செற்றத்துடன்
கருத்துப் புகைந்து, உள் கலங்கி, கடைக் கண்கள் கனல் காலவே,
'மருத்துத் தரும் காளை நின்றானை இன்று ஆவி மலைவேன்!' என,
உருத்துத் தடந் தேரின்மிசை வந்து அடுத்தான், உரககேதனன். 10

பேராத நிலை நின்று, வன்போடு சாபம் பிடித்து, எங்கணும்
சோராத வய வாளி ஈர்-ஐந்து சேரத் தொடுத்து ஏவினான்;
ஆர் ஆவமுடன் இட்ட கவசம் பிளந்து ஓடி, ஆண்மைக்கு எலாம்
வீராபிடேகம் செய் வய வீமன் அகல் மார்பில் மிக மூழ்கவே, 11

ஈமந்தொறும் சென்று நடம் ஆடு கழல் ஐயன், எதிராய் வரும்
காமன்தன் உடல்மேல் விழித்திட்ட நுதலில் கனல் கண் என,
தாமம் புனைந்து ஆர மணம் நாறும் மார்பத் தடம் தோயவே,
வீமன் தொடுத்தான், ஓர் எதிர் அம்பு பார் மன்னன் மிடல் சாயவே.

துரியோதனன் ஓர் அம்பு பட்டு அலமர, பூரிசவா வந்து வீமன்மேல்
இரண்டு அம்பு தொடுத்தல்

ஓர் அம்பின் உளைந்து, ஏழ் உலகு உடையான் அலமரவே,
வீரம் புனை வீமன் குனி வில்லோடு எதிர் நிற்க,
போர் அம்பர உலகு ஆள்பவர் புகழ் பூரிசவா வந்து,
ஈர்-அம்பு தொடுத்தான், ஒரு தேர்மேலினன் இவன்மேல். 13

அது கண்டு, சாத்தகி பூரிசவாவை எதிர்த்து நின்று, வில்,
வாள், முதலியவற்றால் பொருதல்

'இவன் ஆண்மையை மதியாது எதிர் எய்தான்' என, வெய்தின்,
பவனகதி பெறு தேரினன், நளினபதி இளவல்,
'அவன் ஆர் உயிர் கவர்வேன்!' என, அம்பு ஒன்று தொடுத்தான்;
தவனல் மறை தெரி பூரிசவாவும், சரம் விட்டான். 14

ஏண் அற்று உயர் வரை மார்பினர் இருவோர்களும், ஒருவோர்
காணல் தொழில் அரிது ஆம் முறை, கடிதின் கணை தொடவே,
நாண் அற்றன; வெஞ் சாபமும் நடு அற்றன; எனினும்,
கோண் அற்றன புகல்வான், ஒரு குறை அற்றது, அவர்க்கே. 15

ஒரு கேள் தக உரை தேறினர் உளமே என, அமரில்,
பொரு கேடக நடவும் கன பொன்-தேர் மிசை இழியா,
முருகு ஏடு அவிழ் தார் மார்பினர் முனை வாளம் இரண்டோடு,
இரு கேடகம், இரு கையினும், இருவோரும் எடுத்தார். 16

படிவாய், உடுபதியும் தினபதியும் பொருதெனவே,
தொடி வார் கரதலம் ஒன்றிய துறு தோலிடை மறையா,
வடி வாள் முனை அசையா, விசை வரு சாரிகள் பயிலா,
இடிவாய் முகில் அதிரா, எதிர் எதிர் சீறினர். இப்பால், 17

தோலாது அடலொடு சீறின, துரகத்தொடு துரகம்;
மேலாளொடு மேலாள்; வரி வில்லாளொடு வில்லாள்;
ஏலா முடி அரசோடு அரசு; இரதத்துடன் இரதம்;
காலாளொடு காலாள்; மத கரிமாவொடு கரிமா. 18

போர்க்களக் காட்சிகள்

நீடும் கட கரியின் கர நிரை அற்றன, நதியாய்
ஓடும் குருதியின் வாளைகள் என, ஓடின, ஒரு சார்;
கோடும் சிலை அம்பின் தலை அரியுண்டன குறை நின்று
ஆடும்தொறும், உடன் ஆடுவ அலகைக் குலம், ஒரு சார். 19

கோல் கொண்டவை, சிலை கொண்டவை, வாள் கொண்டவை கூர் வாய்
வேல் கொண்டவை, அவைதம்முடன் விழு கைக் குலம், ஒரு சார்;
கால் கொண்டு உகு செந்நீர் விரி களமே ககனமதா,
மால் கொண்ட கரிக் கோடு இள மதி ஆவன, ஒரு சார். 20

முந்நீர் தரு பவளம் கொடு முன்னம் சமைவனபோல்,
செந்நீரின் மிதந்து ஓடுவ தேர் ஆழிகள் ஒரு சார்;
நல் நீர் மழை பொழி செம் புனல் நதிவாய் வரு நுரைபோல்,
அந் நீரிடை புகும் மூளைகள் அலை பாய்வன, ஒரு சார். 21

வை ஆர் அயில், கணை, தோமரம், வாள், கப்பணம், முதலாம்
கை ஆயுதம் முழுகும் துளைவழி செம்புனல் கால,
மெய் ஆயிரம் விதமாய் விழ, வெம் போரிடை இருபத்து-
ஐஆயிரம் முடி மன்னவர் அகல் வானம் அடைந்தார். 22

சூரியன் குடபால் மறைய, யாவரும் பாசறை சேர்தல்

இவ்வாறு முனைந்து, ஆர் உயிர் இரு சேனையும் மடிய,
மை வான் உலகு இடம் அற்றது, வய வீரர் நெருக்கால்;
அவ் வானவர்தமது ஆலயம் வலம் வந்த அருக்கன்
செவ் வான் உறு குடபால் வரை இடம் என்று, அது சேர்ந்தான். 23

எப்போதும் அரும் போரினில் இதயம் களி கூர்வார்,
கைப் போது உறு படை செம்புனல் வழியே உயிர் காய்வார்,
ஒப்பு ஓதுதல் அரியார், இரு திற மன்னரும் ஒருவா,
அப்போது, அனிகத்தோடும், அகன் பாசறை புக்கார். 24

சூரியன் கீழ்த்திசையில் கிளர்ந்து எழுதல்

இரவு என்று இருள் கெழு நஞ்சின் இளந்திங்கள் எயிற்று ஓர்
அரவு உண்டு, அதுதான் மீள உமிழ்ந்தென்ன, அருக்கன்
உரவும் குட திசை நீல் நிற உததிக்குள் ஒளித்தோன்,
விரவும் குண திசை வேலையின்மிசை வந்து, கிளர்ந்தான். 25

34. ஆறும் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

கோயில் ஆளுடைய பைங் கொண்டலார் கண் துயில்
பாயலாய் வாழ, நீ பாக்கியம் செய்தது என்—
'தீ அலாது உவமை வேறு இல்' என, தீய நின்
வாய் எலாம் நஞ்சு கால் வாள் எயிற்று உரகமே! 1

திட்டத்துய்மன் மகரவியூகம் வகுத்துக் களத்து நிற்க, வீடுமன்
கிரவுஞ்ச வியூகம் வகுத்து நிற்றல்

பயிலும் வெம் பாசறை, பாண்டவர் ஐவரும்
துயில் உணர்ந்து, அணி பசுந் துளப மால் அடி பணிந்து,
அயிலும் நஞ்சு அனைய போர் அடு களம் குறுகினர்,
சயில வெங் கட கரித் தானையும் தாமுமே. 2

பருத்த பல் அணிகளின் பான்மை அக்குரோணியாய்
மிருத்த வெஞ் சேனையாம் வெள்ள நீர் வேலையைத்
தொகுத்து, வண்டு இமிர் தொடைத் துருபதன் திருமகன்,
வகுத்தனன், புறம் இடா மகர மா வியூகமே. 3

போகமும் தருமமே ஆன மெய்ப் புனிதனும்,
நாக வெங் கொடியுடை நாயகக் குரிசிலும்,
வேக வெம் படையுடை வேந்தரும், சேனையும்,
ஆகவம் குறுகினர், ஆரவம் பெருகவே. 4

பொரும் சமம் கருதி, ஆள், புரவி, தேர், போதகம்,
தெரிஞ்சு கொண்டு ஈர்-இரு திசையினும் செல்லவே,
பெருஞ் சனம்தன்னை, அப் பீடுடை வீடுமன்,
கரிஞ்சம் என்று உள்ள பேர் வியூகமும் கட்டினன். 5

இருபக்கத்தாரும் மாறுபட்டுப் பொருதல்

இந்திரன் முதலிய இமையவர் தங்களால்
அந்தரம் இடன் அற, அரவு உளைந்து அலமர,
வந்து வந்து, இரு பெரும் படைஞரும் மாறுபட்டு,
உந்தினர்; முந்தினர்; ஒட்டினர்; முட்டினர். 6

துரோணன் தேர் ஊர்ந்து வீமனோடு பொர, ஆசிரியனது
தேர்க்குதிரைகளையும் பாகனையும் அழித்தல்

பரவி நால் வித வயப் படைஞரும் சூழ, 'வாள்
இரவி நான், வெம் பகை இருளினுக்கு' என்று, தன்
புரவி நான்மறை எனப் பூண்ட தேர் தூண்டினன்,
விரவினன் வீமன்மேல், விற் கை ஆசிரியனே. 7

சிலை வரம் பெறு திறல் தேசிகன் சீறவும்,
நிலைபெறும் புகழினன் நெஞ்சின் அஞ்சலி செயா,
மலையினும் பெரிய தேர் வலவனும், புரவியும்,
தலை அறும்படி சரம் தனு வளைத்து, உதையினன். 8

அப்பொழுது சல்லியன் வீரம் பேசி வர, அவன் வீமனால் தேரோடும் எற்றுண்ணல்

சூழி வெங் கச, ரத, துரகத, நிருபரை
வீழ வெங் கணைகளால், மெய் துளைத்த அளவிலே,
தாழ நின்றிலன், எழில் சல்லியன்; 'தன்னொடே
தோழ! இன்று அமர் செய்க!' என்று, ஒரு திசைத் தோன்றினன். 9

'வல்லை, வெஞ் சமர் செய வல்லை! நீ வருக!' என,
வில்லையும் துணி செய்து, வெல்ல வந்தவனையும்
தொல்லை வெங் கரி எனத் தேரொடும் தோள் மடுத்து,
எல்லை அம் புவியின்மேல் எற்றினன், வீமனே. 10

சல்லியன் தளர்வு கண்டு, துரியோதனன் சகுனி முதலியோருடன் வந்து பொருதல்

சல்லியன்தன் பெருஞ் சலிவு கண்டு, 'அங்கையின்
நெல்லி அம் கனி இனி நேரலார் உயிர்' என,
பல்லியங்களும் எழ, பாந்தள் அம் பொற் கொடி
அல்லி அம் தெரியலான் அங்கு வந்து, அணுகினான். 11

வெம் புய வீமன்மேல் வில் வளைத்து, ஆயிரம்
அம்புகள் மாரிபோல் ஆர்த்து எழ வீசினார்—
தும்பை அம் தார் முடிச் சூழ் படை மன்னரும்,
தம்பியர் யாவரும், மாமனும், தானுமே. 12

தோன்று அரித் துவசனும், சோகம் இல் பாகன் ஊர்
வான் தடந் தேரொடும், 'வருக!' எனச் சென்று, எதிர்
ஊன்றினான்—மைந்தரும், இளைஞரும், உயிரையே
போன்ற மைத்துனரும், வாள் நிருபரும், புடைவர. 13

நின்று இரு சேனையும் நேர்பட, வேலினும்,
வன் திறல் வில்லினும், வாளினும், மலைவுற,
குன்றம் நேர் தோளினார் இருவரும் கொக்கரித்து,
ஒன்றினார், வில் வளைத்து ஒருவருக்கு ஒருவரே. 14

அவனும், அம்பு இவன் உரத்து அழகு உற எழுதினான்;
இவனும், அம்பு அவன் மணித் தோளின்மேல் எழுதினான்;
புவனம் எங்கணும் மிகப் பொறி எழப் போர் செய்தார்,
பவனனும் கனலியும் நிகர் எனும் பரிசினார். 15

வீமன் கணைகளால் பலர் மடிய, துரியோதனன் முதலியோர் வலி இழந்து பின்னிடுதல்

வரத்தின் முன் பெறு கதை வன்மையும் வின்மையும்
சிரத்தின் நின்று எண்ண ஓர் பேர் பெறும் சேவகன்,
சரத்தினும் கடுகு தேர்ச் சர்ப்பகேதனனை, அன்று,
உரத்தின் வெங் கணைகள் பட்டு உருவ, வில் உதையினான். 16

தான் விடும் கணைகளின் தம்பியர்தம்மையும்
தேன் விடும் தெரியலான் எய்து புண்செய்து, பின்,
ஊன் விடும்படி துளைத்து, உருவு பல் பகழியால்,
வான் விடும் பேரையும் வானில் உய்த்தனன்அரோ. 17

வா வரும் கவன மாக் கடுகு தேர் வலவர் போய்,
ஏ வரும் சிலைகள் போய், இரு புய வலிமை போய்,
யாவரும் பண்டு தாம் இடு புறம் இட்டனர்;
தேவரும் கண்டு உவந்து, அலர் மழை சிந்தினார். 18

விகன்னன் வீரர் பலருடன் வந்து, அபிமனொடு பொருது தேர் இழந்து, சித்திரசேனன் தேரில் தத்தி ஏறுதல்

ஏய வரி சிலை வீமனொடு பொரு போரில் எனைவரும் வென்னிட,
மேய விழி இலையாய பதி தரு வீரர் பலரும், விகன்னனும்,
ஆய முதிர் சினம் மூள, விரைவுடன் மீள வர, அபிமன்னுவும்
தூய வரி சிலை வாளிகொடு தன தேர்கொடு அவர் எதிர் துன்னினான்.

மான அபிமனும், ஞான விகனனை, வாளி பல பல ஏவ, மேல்
ஆன இரதமும், மாவும், வலவனும் ஆழிகளும், உடன் அற்ற பின்,
தான் அ(வ்) இரதம் உறாமல், விசையொடு தத்தி, அருகு உறு சித்திர-
சேனன் எனும் இளையோனது அணி பெறு தேரின்மிசை கடிது ஏறினான். 20

ஏனையோரை அபிமன் அம்பினால் மொத்தி, விகன்னனது உடல் சிதையுமாறு கணை தொடுத்தல்

மற்றை இளைஞரும், மைத்துனனும், மத மத்த கய பகதத்தனும்,
செற்ற விகனனும், முற்றும் இவனொடு செற்றி அமர் பொருகிற்றினார்;
வெற்றி அபிமனும் விற் கையுடன் அவர் விட்ட கணைகள் விலக்கி, மார்பு
எற்று கணை அனைவர்க்கும் அவர் அவர் எய்த்து விழ விழ, மொத்தினான்.

நெடிய வரி சிலை நிமிர, முறை முறை நெடிய விசையுடன் விசியும் நாண்,
இடியும் முகில் என, அகில வெளி முகடு இடிய, அதிர் பெரு நகையுடன்,
கொடிய விகனனை மடிய, அவன் உடல் கொடிய குடர் உகு குருதி நீர்
வடிய, இரு புயம் ஒடிய, உதையினன், வடிய கணை ஒரு நொடியிலே.

‘மன்னர் மணி முடி மன்னு கனை கழல் மன்னன் இளவல் விகன்னனை
முன்னர் உறு கணை பின்னர் விழ விழ, முன்னர் அமர் பொர முன்னினான்,
பொன் அசலம் நிகர் அன்ன புய அபிமன்னு ஒருவனும்; இன்னும் நாம்
என்ன அமர் பொர இன்னர் அணுகுவது?’ என்ன வெருவினர், துன்னலார்.

யாவரும் தம்தம் இருப்பிடம் புக, அபிமனைத் தந்தைமார் தழுவிப் பாராட்டுதல்

அன்றை அமரினில் ஒன்றுபட அவர், அங்கம் அயர்வுறு பங்கம் ஏது
என்று மொழிவது? தம் தம் மனை உற எந்த நிருபரும் முந்தினார்;
வென்று பொரு முனை நின்ற அபிமனை விஞ்சும் உவகை கொள் நெஞ்சுடன்
சென்று தழுவினர், இந்து வர எழு சிந்து என மகிழ் தந்தைமார்.

படுகளக் காட்சிகள்

கோடு முதலொடு வாளிகளின் இற வீழ்வ பல கட குஞ்சரம்
காடு படு துளவோன் முன் வர விடு கஞ்சன் மழ களிறு ஒக்குமால்;
ஓடு குருதியினூடு வடிவு ஒரு பாதி புதைதரும் ஓடை மா
நீடு முதலையின் வாயின் வலி படு நீலகிரியை நிகர்க்குமால். 25

மாலும் மத கட சாலும், நுதலும், மருப்பும், ஒரு கையும், வதனமும்,
தோலும், ஒழிய உள் ஆன தசை பல பேய்கள் நுகர்தரு தும்பிமா,
நாலு மறைகளும் ஓலம் என, அகல் வானம் என, முழு ஞானமே
போலும் என, ஒளிர் மேனி உடையவர் போர்வை உரி அதள் போலுமே. 26

சேனை இப முகம் அற்று விழுவன சென்று திசை வழி கவ்வி, விண்
போன வயவர்கள் படைகொடு எதிர் எதிர் பூசல் புரி இரு பூதமும்,
சோனை மழை முகில் வாகன் முதல சுரேசர் தொழுது துதிக்கவே,
யானை முக அசுரேசனுடன் அமர் ஆடு முதல்வனை ஒக்குமே. 27

சூரியன் மறைதலும் உதித்தலும்

இமையம் அணுகினன், விசயன் மதலையை, 'இன்றை அமர் இனி உங்களுக்கு
அமையும்' என, முதல்; அனிகம் அடையவும், அணியும் அவனிபர் நால்வரும்,
தமையனொடு தம பதியின் அணுகினர், தங்க; விரைவொடு கங்குல் போய்,
சிமையம் அணுகினன், மீள, நனி இருள் சிதைய, உதய திவாகரன்.

35. ஏழாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

உரலும் வேதமும் தொடர, நந்தகோ-
னுடன் அசோதை கண்டு உருக, வாழ்வு கூர்
தரணிமீது செங் கையும் மா முழந்
தாளும் வைத்து வைத்து, ஆடும் மாயனார்,
விரவி நின்ற மா மருதினூடு தாம்
மெத்தெனத் தவழ்ந்தருளி, மீளவும்
புரியும் நீள் கடைக்கண்ணும் வண்ணமும்
போற்றுவார்கள் மெய் புளகம் ஏறுமே. 1

இரு திறத்தார் சேனைகளும் களம் எய்த, கண்ணன் பாம்பு வியூகமும்
வீடுமன் சகட வியூகமும் வகுத்தல்

இருவர் சேனையும், சேனை மன்னரும்,
இகலியே, பல திசைகள் எங்கணும்,
முரசம் ஆதி வெம் பணை முழங்கவே,
முன்னை வெங் களம் பின்னும் எய்தினர்—
மரகதாசலம் போலும் மேனி மா
மாயன் நச்சு மாசுண் வியூகமும்,
தரணி காவலன்தன் பிதாமகன்
சகட வியூகமும் தான் வகுக்கவே. 2

பாண்டியன் துரோணனுக்குத் தோற்றோட, கடோத்கசன் மீண்டும் வருதல்

மன்றல் நிம்ப நாள் மாலை மௌலியான்,
மாறன், மீனவன், வழுதி, பஞ்சவன்,
அன்று பஞ்சவர்க்காகவே உடன்று,
அந்தணற்கு உடைந்து, அஞ்சி ஓடினான்;
துன்று மாய மால் யானை கொண்டு போர்
யானை மன்னரைத் தொல் அமர்க்கணே
வென்று, கண்டு அவர் புறம், அவர்க்கு இடான்,
மீள வந்தனன், வீமன் மைந்தனே. 3

சாத்தகிக்குச் சுதாயு தோற்க, சகுனி, சல்லியன், முதலானோரை வென்று
வீமன் வாகை சூடுதல்

முகில் நிறம் கொள் மா மேனி மாயனார்
முன் பிறக்கவே பின் பிறந்தவன்
புகு நிலந்தனில், சற்றும் நின்றிலன்,
பொரு சுதாயு; தன் போர் பொறாமையின்,
சகுனியும், பெருஞ் சேனை முன் வரத்
தக்க சல்லியன்தானும், ஓடவே,
மிகு நிறம் கொள் பைந் தாம வாகை போர்
வென்று சூடினான், வீமசேனனே. 4

விசயனும் வீடுமனும் விற்போர் விளைத்தல்

உயர்ந்த மேருவோடு ஒத்து இலங்கு தேர்
உலகு அளந்த தாள் வலவன் ஊரவே,
செயந்தன் மா பெருந் துணைவன், வன் பெருஞ்
சேனைதன்னொடும் சென்று பற்றினான்;
வியந்த தேரின்மேல் முப்புரங்களும்
வென்ற மீளிபோல் நின்ற வீடுமன்
இயைந்து, போரினுக்கு எதிர, வில் வலோர்
இருவர் விற்களும் எதிர் வளைந்தவே. 5

ஒருவர் எய்த அம்பு ஒருவர்மேல் உறாது,
ஓர்ஓர் அம்பினுக்கு ஓர்ஓர் அம்பு தொட்டு,
இருவரும் புகுந்து எய்த வல்லபம்
இன்னது ஆகும் என்று உன்னல் ஆகுமோ—
வரி வில் வெங் கட கரியின் வந்த
தாரகனும் மா மயில் குகனும் அன்றியே,
மருவு வெங் குரல் கொண்டல் வாகனும்
வலனும், ராம ராவணரும் என்னவே? 6

கரி அணிக்குள் எக் கரிகள் புண் படா!
கடவு தேரில் எத் தேர் கலக்குறு!
பரி நிரைக்குள் எப் பரி துணிப்புறு!
பாகர் தம்மில் எப் பாகர் வீழ்கலார்!
நரனும் வெற்றி கூர் வசுவும் உற்ற போர்
நவிலுகிற்கினும், நா நடுங்குமால்;
இரு தளத்தினும், இருவர் அம்பினும்,
ஏவுறாத பேர் எந்த மன்னரே! 7

விசய வீடுமர்களால் முந்திய போரினும் மிகப் பல வீரர் மாளுதல்

வேறு போர் இனிப் பொருதல் வேண்டுமோ?
விசயன் வீடுமன் என்னும் வீரர் தம்
சிறு போரிடை, திசை அடங்கலும்
சிவந்த கோல மெய்க் கவந்தம் ஆடுமால்;
கூறு போர் பொரக் கருதி, வெங் களம்
கொண்டு, தங்களில் கொல்லலுற்ற நாள்
ஆறு போரினும் பட்ட பேரினும்
அறு மடங்கு பேர் அன்று பட்டதே. 8

சூரியன் மேல் கடலில் மறைந்து, உதய கிரியில் தோன்றுதல்

பார வாளினும் கூர வேலினும்
பகழி வாயினும் பட்ட பட்ட போர்-
வீரர் வானின்மேல் வழி நடத்தலான்,
மெய் தளர்ந்து, வேதனை மிகுத்த பின்,
'சேர நீரும் நும் பாடி எய்துவீர்;
செருவில் நொந்தது, இச் சேனை' என்று, போய்,
ஆரவாரம் நீடு ஆழி எய்தினன்,
ஆழி ஒன்றுடைத் தேர் அருக்கனே. 9

வெங் களம்தனில் பகல் மலைந்த போர்
மெய் விடாய் கெட, கைவிடாது போய்,
திங்களின் குலத்து இருவர்தம் பெருஞ்
சேனை மன்னரும் பாடி எய்தினர்;
இங்கு அளந்தவாறு, அப் புறத்து வான்
எல்லை தான் அளந்து, இந்த மன்னவர்-
தங்கள் வெஞ் சமம் காண, மா மணிச்
சயிலம் எய்தினன், தபனன் மீளவே. 10

36. எட்டாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

பூத்த நாபி அம் தாமரைப் பூவில் வந்து பல் பூதமும்
சேர்த்த நான்முகப் புனிதனும், முனிவர் யாவரும், தேவரும்,
ஏத்த, நாலு வேதங்களும் தேட, நின்ற தாள் எம்பிரான்
பார்த்தன் மா மணித் தேர் விடும் பாகன் ஆனது எப் பான்மையே!

வீடுமன் சூசி வியூகமும், கண்ணன் சகட வியூகமும் வகுக்க,
தருமனும் துரியோதனனும் போர்க்களத்தை அணுகுதல்

'நெருநல் இப் பெருஞ் சேனையோ நிலை தளர்ந்தது; அச் சேனையைப்
பொரு நிலத்தினில் புறமிடப் பொருதும்!' என்று உறக் கருதியே,
வரு நிலத்து எழும் தூளியால் வான யாறு நீர் வற்றவும்,
தரு நிலத்துளோர் காணவும், தருமன் வந்தனன் சமரிலே. 2

வென்று போன போர் மேன்மையால் விலோதனப் பணிக் காவலன்,
'இன்றும் வேறும்' என்று, அக் களத்து எண் இல் சேனையோடு எய்தினன்—
துன்று கங்கையின் திருமகன் சூசி யூகமும், துளப மால்
வென்றி கூர் பெருஞ் சகடமாம் வெய்ய யூகமும், செய்யவே. 3

துரியோதனன் துணைவர்களுடன் கூடி வீமனை வளைத்தல்

தொலைவு இல் அம் கழல் துணைவரே துணைவர் ஆக, வெஞ் சூறைபோல்
கொலை வில் அம் கையன், பிறை முகக் கூர வாளியன், தேரினன்,
மலை விலங்கு தோள் வீமனை வளைத்து வந்து, எதிர் திளைத்தனன்—
தலை விலங்கலுக்கு அரசு எனத் தகும் வலம்புரித் தாரினன். 4

துரியோதனன் தம்பிமாரில் எண்மரை வீமன் வானுலகிற்கு ஏற்றுதல்

தும்பிமேல் மதத்திடை விழும் தும்பிபோல் விறல் தோன்றலும்,
தம்பிமாரும், உற்று எய்த வெஞ் சாயகங்கள் மெய் தைக்கவே,
வெம்பி வீமனும், தன் சரம், 'விண்தலத்தில் இவ் வேந்தனுக்கு
எம்பிமாரில் இன்று எண்மர் போய் இடம் பிடிக்க!' என்று ஏவினன்.

முந்த அன்று சென்று ஆசுகன் மைந்தன் ஆசுகம் மூழ்கவே,
சுந்தரன், விசாலக்கணன், வீர வாசி, பௌதுண்டனும்,
அந்த மா மகோதரனுடன், மாகவிந்துவும், அபயனும்,
சிந்தினர் களம்தன்னில், ஆதித்தகேதுவும், சேரவே. 6

துரியோதனன் வீடுமனை அடுத்து, தம்பிமார் இறந்தமைக்கு இரங்கி, நெஞ்சழிய,
வீடுமன் அவனைப் பல வகையால் தேற்றுதல்

அற்ற கந்தரம் உயிரினோடு அந்தரம் புகத் துள்ளவும்,
இற்ற பேர் உடம்பு அவனிமேல் எடுத்த வில்லுடன் வீழவும்,
உற்ற தம்பியர் மாய்தல் கண்டு, உள் உடைந்துபோய், உரனுடைக்
கொற்றவன் பெருங் குருகுலக் குரிசில் நின்றுழிக் குறுகினன். 7

தன் பிதாமகன் செய்ய தாள் தனது மௌலிமேல் வைத்து நின்று,
'' உன் பிதாவின்மேல் அன்பினுல் உலகம் உம்பியர்க்கு உதவுவாய்;
என் பிதாவும் நீ, யாயும் நீ'' என்று இருந்தனன்; எம்பிமார்
முன் பிதா மருத்து என்னும் அம் முதல்வனுல் முடிவு எய்தினுர். 8

' ''நீ வினைத்தலைச் சேனையின் தலைவன் ஆகி முன் நிற்கவே,
வீவு எனக்கு வேறு இல்லை'' என்று எண்ணினேன்' என வேந்தர் வேந்து,
ஓவியத்தின் மெய் உணர்வு அழிந்து, உள் அழிந்துகொண்டு, உரை செய்தான்—
வாவி நித்திலம் என்னவே, மலர்ந்த கண்கள் நீர் மல்கவே. 9

'இரங்கல் நீ சிறிதும், ஐய! எறி படை எடுப்பது, யாரும்
உரங்கள் போய் அமரில் சாகாது, உய்ந்தனர் ஓட அன்றே;
சரங்களால், அயிலால், வாளால், தம் பகை செகுத்து, தாமும்
சிரங்கள் வேறு உடல்கள் வேருக் கிடப்பதே, செல்வம் அம்மா! 10

'இருந் தனம் படைத்த மாக்கள் இன்பமும் அறனும் அஞ்சார்;
விருந்து எதிர் சிறிதும் அஞ்சார், மேம்பட வாழும் இல்லோர்;
பொருந்திய இறப்பை அஞ்சார், போத மெய் உணர்ந்த மாந்தர்;
அருந் தவம் முனிவர் அஞ்சார்; அரசரும் அடு போர் அஞ்சார். 11

'இன்னம் ஒன்று உரைப்பக் கேண்மோ, இரு செவிக்கு ஏருதேனும்:
முன் அரசு ஆண்ட வேந்தர் முறைமையின் சிதைந்தது உண்டோ?
மன் அவைதன்னில் நின்ற மாசு இலா வடமீன் போல்வாள்-
தன் இரு கண்ணீர் இன்னம் இவைகொலோ தருவது அம்மா! 12

'கால் வரு கவன மான் தேர்க் கன்னனும், கன்னபாகு
மால் வரு கலுழி வேக மா வலான் சகுனிதானும்,
நூல் வரு பழுது இல் கேள்வி நும்பியும், நீயும், இந்த
நால்வரும் குறித்த எண்ணம் நாளையே தெரியும், ஐயா! 13

'விதுரனும் வெஞ் சொல் ஆற்ருன், வில்லினை ஒடித்து நின்ருன்;
அதிரதன் ஆனுல் அன்றி, அங்கர்கோன் அமரில் வாரான்;
முதிர் படை விசயன், வீமன், மூண்டு அமர் புரியுங்காலை,
எதிர் இனி நானும் நீயும் அல்லது, இங்கு இலக்கு வேறு ஆர்? 14

'புரிந்து அறம் வளர்க்கும் நீதிப் பொய் இலா மெய்யன், அங்கே;
செருந்து அவிழ் துளப மாலைத் திருநெடுமாலும் அங்கே;
அருந் திறல் அமரில் பொன்ருது அங்கு இருந்தவரை இங்கும்
இருந்தவர் காண்பது அல்லால், யார்கொலோ இறக்கலாதார்? 15

'விடுக, நீ கவல வேண்டா; மேல் உனக்கு உறுதி சொன்னேன்;
முடுக வாள் அமரில் சென்று முன் முனைந்தாரை இன்றே
அடுக, மற்று ஒன்றில்! ஒன்றில், ஆங்கு அவர் தங்கள் கையால்
படுக! வா!' என்று தேர்மேல் சென்றனன், பரிதி போல்வான். 16

கடோற்கசனும் இராவானும் பல வடிவு கொண்டு போர் செய்ய,
பகனது தம்பி அலம்புசன் வீமன்மேல் வெகுண்டு பொருதல்

காய் இருங் களிற்றின் மேலான் கடோற்கசக் காளைதான் ஓர்
ஆயிரம் வடிவாய், முந்தி, அரசர் பேர் அணியை எல்லாம்
தோய் இருட் பிழம்போடு உற்ற சோனை அம் புயலின் தோன்றி,
மா இரு விசும்பில் தாராகணம் என, மாய்த்து வந்தான். 17

ஒரு புடை இவன் போர் செய்ய, ஒரு புடை, உரக கன்னி
அருளுடை மைந்தன் எண் இல் ஆயிரம் உருவம் ஆகி,
இரு புடையினும் போர் வேந்தர் எலிகள்போல் ஏங்கி, அம்பால்
பொரு படை உருண்டு போக, பொரு இல் வெம் பூசல் செய்தான்.

'இப் பகல் முடியும் முன்னே யாரையும் முடிப்பன்!' என்னு,
பைப் பகல் மகுட மைந்தன் பல பெரும் படையும் ஆகி,
அப் பகல் அடு போர் செய்ய, அன்று, அமர் அழிந்து மாய்ந்த
மெய்ப் பகன் இளவல் அந்த வீமன்மேல் வெகுண்டு வந்தான். 19

அலம்புசன் இராவானுக்குத் தோற்று ஓடுதல்

'என் உடன்பிறந்தோன்தன்னை யுதிட்டிரன் இளவல் கொன்றான்;
தன் உடல் பிளப்பேன்!' என்று, தானை வல் அரக்கரோடு
மன்னுடன் சொல்லி நிற்பான் வந்து, எதிர் மலைந்த காலை,
மின்னுடை முகில்போல் சென்றான், வீமனுக்கு இளையோன் மைந்தன்.

வலம்புரித் தாம வேந்துக்காகவே மலைவான் வந்த
அலம்புசனோடும் சென்றோர் அடங்கலும், அரக்கர் மாயக்
குலம் பழுது அற்ற மைந்தன் கொண்ட பல் உருவத்தோடும்
புலம்புறப் பொருதான், அந்த அரக்கனும் புறந்தந்தானே. 21

அலம்புசன் கருடனாகி மீண்டு வந்து, இராவானை வாளினால் கொல்லுதல்

அஞ்சினன் போன பின்னர், அரவினை அடர்க்கும் மாய
வெஞ் சினக் கலுழன் ஆகி, உரும் என, மீள வந்தான்;
நஞ்சினை உமிழும் வெவ் வாய் நாகங்கள் அனைத்தும் ஒன்றாய்
எஞ்சின போல நின்றான், நிருதருக்கு இறுதி செய்தான். 22

நின்றவன்தன்னை அந்த நிருதனும் வடி வாள் ஓச்சி,
கொன்றனன்; கொன்றானாக, குருகுலத்து அரசன் சேனை,
'வென்றனன் அரக்கன்' என்று, விரி கடல் போல ஆர்த்தது;—
அன்று அவன் அடர்த்த மாயம் ஆர்கொலோ அடர்க்க வல்லார்? 23

துரோணனும் அசுவத்தாமனும் பாஞ்சாலர்மேல் அம்பு தொடுத்தல்

பூஞ் சாயகன் கைப் பொரு சாபம் பொசிந்து, கண்ணால்
தீம் சாறு பாயும் செழு நீர் வயல் செந்நெல் வேலிப்
பாஞ்சால நாடர் பலரும் பட, பாணம் விட்டார்—
தாம் சாபம் வாங்கி, மறை மைந்தனும் தந்தைதானும். 24

இராவான் மறைவு கேட்டு, அபிமன், வீமன் முதலியோர்
வெகுளி பொங்க வந்து பொருதல்

பட்டான் துணைவன் எனக் கேட்டு, பரிவு பொங்க,
விட்டான் மணித் தேர், வளைத்தான் தனி வெய்ய சாபம்,
தொட்டான் பகழி, அபிமன்னு; தொடுத்தலோடும்,
கெட்டார், அரசன் பெருஞ் சேனையில் கேடு இல் வேந்தர். 25

'மைந்தன் களத்தில் மடிந்தான்' என, வாயு மைந்தன்
தந்தம் பறியுண்டு எதிர் சீறிய தந்தி என்ன,
வெந்து அங்கம் முற்றும், மனம் தீ எழ, மேல் நடந்தான்—
சிந்தம் திகழ எழுதும் திறல் சிங்கம் அன்னான். 26

தம்பியரோடும் மன்னர்களுடனும் வந்து துரியோதனன் வீமனை வளைக்க,
வீமன் அம்பால் அவன் தம்பியர் எழுவர் மாளுதலும் அவன் பின்னிடுதலும்

'சினத்தோடு நம்மேல் வருகின்றனன் செம்மல்!' என்னா,
இனத்தோடு செல்லும் பிறை வாள் எயிற்று ஏனம் என்ன,
மனத்தோடு இயைந்த திருத்தம்பியரோடும், மன்னர்
சனத்தோடும், வந்தான்—எதிர் சீறித் தரணி வேந்தன். 27

திளைத்தார் அரசர், திகிரிக்கிரி என்ன ஓடி,
வளைத்தார், கனக வரைபோல் வரு மன்னன்தன்னை;
உளைத்தார் அனைவோர்களும், ஓர் ஒரு பாணம் ஏவித்
துளைத்தார், கிளைத்தார், விளைத்தார், அமர் தூண்டு தேரார். 28

எடுத்தான் ஒரு தன் சிலை, வீமனும்; எண் இல் பாணம்
தொடுத்தான் அவர்மேல்; இமைப்போதையில் சூழ்ந்துளோரைக்
கெடுத்தான்; அரசற்கு இளையோர் எதிர் கிட்டி, மீண்டும்
படுத்தான், எழுவர்; இவன் வாளியின் பட்டு வீழ்ந்தார். 29

அறம் மிக்க சொல் குண்டலபோசன், அனுதியக்கன்,
திறம் மிக்க தீர்க்கநயனன், சிலைத் திம்மவாகு,
மறம் மிக்க வேல் குண்டலன், குண்டலதாரன், மன் நூல்
துறை மிக்க கேள்விக் கனகத்துசன் ஆன தோன்றல், 30

இப் பேர் எழுவர் சிரம் ஏழும் எழுந்து துள்ளி,
மைப் பேர் எழிலி அகல் வானிடை வந்த எல்லை,
'ஒப்பு ஏது?' என வாசவன் கேட்டலும், 'ஓங்கல் விந்தை
கைப் பேர் எழில் பைங் கழங்கு' என்றனர், கண்ட வானோர். 31

'அறம் தந்த வாழ்க்கை முடிக்கின்றனே ஆகி, நீயும்
இறந்து அந்தரத்தில் இனி ஏகுக!' என்று சீறி,
மறம் தந்த சீயக் கொடியோன், கொடி மாசுணத்தோன்
புறந்தந்த போரில் புறம் தந்தனன், போகலுற்ருன். 32

சூரியன் மேல்பால் மறைதல்

கந்தே அனைய புய வீமன் கணைகள் பட்டுத்
தம் தேர் அழிந்து படு மன்னவன் தானை என்ன,
மந்தேகர் எல்லாம் மலைவுற்று மடிந்து வீழ,
செந் தேர் அருக்கன் குடபால் திசை சென்று சேர்ந்தான். 33

படுகளக் காட்சிகள்

தளவு ஒத்த மூரல் தல மானே, தருமன் மைந்தன்,
வளம் மிக்க வெம் போர்க் களம் வென்று, வதுவை செய்வான்,
உளம் உற்று அளித்த கலன் போலும், உகு கலன்கள்;
பிளவு உற்ற வேழ நுதல் நித்திலப் பெட்டி போலும். 34

பூட்டு அற்ற வில்லின்மிசை சோரிப் புனலின் வீரர்
வாட்டு அற்ற ஈரல் பல சுற்றி வயங்கு தோற்றம்,
வேட்டற் பொருட்டால் புவிமானுக்கு வேந்து சூட்டும்
சூட்டு அற்று; முற்றும் குடர், வாசத் தொடையல் அற்றே. 35

குல மா நிருபர் உடல் சோரும் குருதி வெள்ளப்
பல மா நதி போய்த் திரை வேலையில் பாய்ந்த தோற்றம்,
நிலமான், விளிம்பு சிவப்பு ஏறிய நீல ஆடை,
நலமாக, மன்றற்கு உடுத்தென்ன நவிலலாமே. 36

இரு திறத்தாரும் தத்தம் பாடி வீடு அடைதல்

தன் பாடி புக்கான் புறம் தந்த தரணி வேந்தன்;
மின் பாடு இலங்கும் கணை வெஞ் சிலை வீமனேடு
மன் பாடி புக்கான்; பெரும் போரிடை மாய்ந்த மன்னர்
தென் பாடி புக்கார்; குடிபுக்கது, சேர்ந்த கங்குல். 37

'இராவான் மறைவுக்கு இரங்கலீர்!' எனக் கண்ணன் ஐவரையும் தேற்றுதல்

'அன்றே களத்தில் பலி ஊட்டிய ஆண்மை வீரன்
இன்றே இறந்தான்; இதற்கு உன்னி, இரங்கலீர்' என்று,
ஒன்றே மொழியும் உரவோன் முதல் ஐவருக்கும்
குன்றே கவித்த குடைக் கோவலன் கூறினனே. 38

பரிதி குண திசையில் தோன்றுதல்

உன்னி, களத்தில் உயிர் வீடும் உரக மைந்தன்
சென்னிக் கதிர் மா மணி சிந்திய சோதி எல்லாம்
தன்னில் கவர்ந்தான் என, பண்டையின் தாம மேனி
மின்னி, பரிதி குணபால் திசை மேவினனே. 39

37. ஒன்பதாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

பேர் ஆறு மூழ்கி, மறை நூல் பிதற்றி,
மிடறும் பிளந்து, பிறவித்
தூர் ஆறுமாறு நினையாமல், உங்கள்
தொழிலே புரிந்த சுமடர்!
ஓர் ஆறு பேத சமயங்களுக்கும்
உருவாகி நின்ற ஒருவன்
ஈர்-ஆறு நாமம் உரைசெய்து, மண்கொடு
இடுவார்கள் காணும் இமையோர். 1

துரியோதனன் முந்திய இரவில் கன்னனை அழைத்துப் போர் செய்யுமாறு வேண்ட, அவன், 'வீடுமன் தோற்றால் நான் பொருவேன்' எனல்

முன் போர் உடைந்து, தனது இல் அடைந்த
முடி மன்னன், முன்னை இரவில்
தன் போலும் மாமன்அவனோடு கேடு
தரு தம்பியோடு கருதி,
'பின் போதில் வண்மை ஒழிவானை ஓடி
அழை!' என்று பேச, அவனும்
மின்போல் இறந்த இளையோர்கள் பாடு
வினவா இருந்த பொழுதே, 2

'மா வில் எடுத்து, என் இளையோர்கள் கந்த-
வகன் மைந்தன் முன்பு, சிவன் முன்
பூ வில் எடுத்த மதன் ஆனவாறு
புகல்கிற்பது அல்ல; அனிகக்
கோ வில் எடுத்து என்? மறை நாலும் வல்ல
குரு வில் எடுத்து என்? இனிமேல்,
நீ வில் எடுக்கில் அனைவேமும் உய்தும்;
நினையாரும் வாகை புனையார்.' 3

என்னும் சொல் அண்ணல் செவி ஏற, நெஞ்சம்
எரி ஏற, வெய்தின் மொழிவான்:
'முன் உந்தை தந்தை உரைசெய்த மேன்மை
அறியாய்கொல்? அம் பொன் முடியாய்!
தன் உந்து தேரும், வரி வில்லும் உண்டு,
சரம் உண்டு; நாளை அவனே
உன்னும் களத்தில் அவர் வானம் ஆள,
உலகு ஆளுவிப்பன் உனையே. 4

'வில் கவ்வு வாளி அடல் ஐவர்மீது
விட அஞ்சி, வீரர் எதிரே
புல்கவ்வுமாகில், விரைவோடு கங்குல்
புலரா முன் வந்து பொருவேன்;
சொல் கவ்வையாக நினையற்க! கொன்று
சுரர் நாடு அளிப்பன், இனி உன்
சில் கவ்வை தீர அவருக்கும் நின்ற
திருமாலினுக்கும்!' எனவே, 5

கன்னன் மொழியை வீடுமனுக்கு உரைக்குமாறு துச்சாதனனைத்
துரியோதனன் அனுப்ப, அவன் சென்று சொல்லுதல்

'துச்சாதனா! இம் மொழி சென்று கங்கை
சுதனுக்கு உரைக்க' எனவே,
நச்சு ஆடு அராவை அனையானும் அங்கு ஓர்
நொடி உற்ற போழ்தில் நடவா,
எச் சாபம் மன்னும் அணி யூகம் ஆன
இரதம்தனக்கு நடு ஓர்
அச்சாணி ஆன அவனுக்கு இவன் சொல்
அடைவே புகன்றனன்அரோ. 6

துச்சாதனனுக்கு வீடுமன் உரைத்த மறுமொழி

பேரன் புகன்ற மொழி கேள்விசெய்து,
பெரியோன் முகிழ்த்து நகையா,
'வீரம் புகன்று என், இனி நான் உமக்கு?
விசயற் செறுத்தல் முடியாது;
''ஈரம் துறந்த ஒரு நூறு பேரை
மகுடம் துணிப்பல்!'' எனவே
நேர் அன்று அவைக்கண் உரைசெய்த வாய்மை
நிறைவேறும், நாளை உடனே. 7

'ஒரு நாளும் நீவிர் பொறுமின்கள்; உம்மை
உலகு ஆளுவிக்க வருவோர்
வரு நாள் தொடங்கி அமர் செய்து, தெவ்வை
மடிவிப்பர், சொன்ன வகையே;
குருநாடும் மற்றை வளநாடும் எய்தி,
நுமரோடு இயைந்து குழுமி,
பெரு நாள் இருந்து, நனி வாழ்திர்!' என்று,
விடை நல்கி விட்ட பிறகே, 8

மறுநாள் வீடுமன் தன் சேனையைச் சருப்பதோபத்திர வியூகமாக வகுத்தல்

கண்ணும் துயின்று, துயிலும் உணர்ந்து,
சிறுகாலை உள்ள கடனும்
எண்ணும் கருத்தின் வழியே இயற்றி,
இகல் மன்னர் சூழ வரவே,
மண்ணும் குலுங்க, வரையும் குலுங்க,
எழு தூளி மாதிரமும் மால்
விண்ணும் புதைக்க, அடல் ஆகவத்தின்
மிசை சென்று புக்கு, விரகால், 9

நாகம் குறித்த கொடி மன்னர் மன்னை
நடுவே நிறுத்தி, அடைவே
பாகங்கள்தோறும் ஒரு கோடி மன்னர்
பகதத்தனோடு நிறுவி,
பூகம்பம் ஆக, இனமோடு அலம்பு-
சனும் முன்பு போக, ஒரு பேர்
யூகம் சருப்பதோபத்ரம் ஆக
அணி செய்து, மான உரவோன், 10

தருமனது சேனை பற்ப வியூகம் வகுத்து நிற்றல்

நின்றான், அமர்க்கண். அவர் அங்கு நிற்க,
இவர் இங்கு, 'நென்னல் நிருதன்
கொன்றான்' என, தன் மதலைக்கு ஓர் எண்மர்
எழுவோரை நீடு கொலை செய்து,
ஒன்றாக மன்னர் பலர் ஆவி கொண்ட
உரவோனும், உம்பர் பகை போய்
வென்றானும், மற்றை இளையோரும், ஒன்றின்
விரகு அற்ற கோவும், முதலோர், 11

மற்று உள்ள மன்னர் புடை போத, முன்னர்
மழைமேனி மாயன் வரவே,
உற்று உள்ள வீரரொடு சேனை நாதன்
அணி நிற்க, ஒண் கொய் உளை மா
முன் துள்ள, எங்கும் எழு பூழி துள்ள,
முரசங்கள் துள்ள, மிகவும்
செற்று உள்ளம் மேவு கனல் துள்ள, வந்து
செரு வெங் களத்தினிடையே, 12

செம் பற்பராக, முடி, மா மதாணி,
 செறி தொங்கல், வாகு வலயம்,
பைம் பற்ப ராக மலர் வல்லியோடு
 திருமேனி சோதி பயில்வான்,
வெம் பற்ப ராக வரை யூகமாக,
 முறையால் அணிந்து, வெயில் கால்
அம் பற்ப ராக பதி என்ன நிற்க,
 அமர் ஆடல் உற்ற பொழுதே, 13

அலம்புசன் வந்து, வீமனோடு வாட்போர் செய்து, ஒரு கரம் துணிபடுதல்

இந்திரனும் ஏனை இமையோர்களும் நடுங்க,
அந்தரமும் எண் திசையும் நின்று அதிர, அதிரா,
வெந் திறல் அலங்கல் புனை வீமனுடன் மலைவான்
வந்தனன், அலம்புசன், வலம் புனை புயத்தான். 14

செருவில் வெருவா நிருத சேகரன், வயப் போர்
மருவு சுடர் வாளினுடன், வந்த நிலை காணு,
இரவி வரு தேர் அனைய தேரின்மிசை இழியா,
'உரும் உரும்' எனு, விரைவின் ஓடி எதிர் வந்தான். 15

யாளி ஓர் இரண்டு இகல் புரிந்தது என இகலா,
மீளிமையினாலும் வலியாலும் விறல் மிக்கோன்,
வாளின்மிசை வாளதனை வைத்து, அடல் அரக்கன்
தோளில் ஒரு தோள் நிலன் உறும்படி துணித்தான். 16

இருவரும் மற்போர் புரிதல்

அற்ற திரள் தோள் துணிய, அச்சம் அறவே நின்று,
உற்றுழியும், வாள் உரகம் என்ன உளன் ஆகி,
மற்றை ஒரு தோளின்மிசை தட்டி, 'இனி மற்போர்
பற்றுக!' என, வீமன் உடல் பற்றுபு புகுந்தான். 17

குத்துவர்; திரிப்பர்; இரு குன்று அனைய தோள் கொண்டு
ஒத்துவர்; வயப் புலிகள் என்ன உடன் ஓடித்
தத்துவர்; உரத்தொடு உரம் மூழ்க, முது தகர்போல்,
மொத்துவர்; சினத்தொடு எதிர் முட்டுவர், சிரத்தால். 18

மற்போர்க்கு இளைத்தபின், அரக்கன் விற்போர் தொடங்குதல்

மல் வலி அழிந்து, பிறை வாள் எயிறு அரக்கன்,
'வில் வலி அறிந்திடுதும்!' என்று வில் எடுத்தான்;
கல் வலிய தோள் விடலை கன்றி வில் எடுத்தான்;
தொல் வலியினோடு இருவரும் கணை தொடுத்தார். 19

கணைகள் அவை ஒன்றினுடன் ஒன்று எதிர் கடித்துப்
பிணைபட விழுந்த செயல் கண்டு, நனி பேதுற்று,
'இணை இலது, இவர்க்கு; இனி, இரண்டு அனிகினிக்கும்
புணையும் இவர்' என்றனர், புரந்தரனொடு இமையோர். 20

மலையினையும் வாசுகியையும் பொருவும் நாணும்
சிலையும் அற, மேல் ஒரு செழுங் கணை தொடுத்தான்—
தொலைவு இல் பகையான பகன் மார்பும், இரு தோளும்,
குலைகுலையுமாறு நனி குத்தி, உயிர் கொண்டான். 21

'விற்போர் பயன் இன்று' என்று அரக்கன் அந்தரம் சென்று, மலையைக் கையால் எடுத்து வீமன்மேல் எறிதல்

மந்தரமும் மந்தரமும் என்ன அமர் மலைவான்,
'அந்தரம் இது அல்ல' என, அந்தர நெறிப் போய்,
கந்தர நெடுங் கிரி கரத்தினில் எடுத்து, அச்
சுந்தரன் வயங்கு திரள் தோள்தனில் எறிந்தான். 22

அருகு நின்ற அபிமன் அம்பினால் மலையைத் துகளாக்குதல்

எறியும் அளவில், குரிசில் இளவல் திருமைந்தன்,
குறியினொடு வெஞ் சிலை குனித்து, அருகு நின்றான்,
பொறியிலவன் வீசிய பொருப்பு ஓர் அணு ஆகி
முறியும்வகை, பல் பகழி, முகில் என, விடுத்தான். 23

வீமன் வேலால் அரக்கனை மார்பில் எறிய, அவன் இறந்துபடுதல்

வில் அபிமன் வெங் கணைகள், விசையொடு அவன் எறியும்
கல் அசலம் நீறு படுவித்த திறல் கண்டே,
'கொல்ல இனி வேண்டும்' என, வெய்யது ஒரு கூர் வேல்
வல் அடல் அரக்கன் அகல் மார்பின்மிசை விட்டான். 24

விட்ட வடி வேல் உருவ, வேல் உருவும் முன்னே
பட்டு அவனும் வீழ, இரு பாலும் வரு சேனை
முட்டவும், இவன் கணை முனைக்கு எதிர் இலக்காய்,
கெட்டனர், நிசாசரர்கள்; கிரிகள் என வீழ்ந்தார். 25

அரக்கரும் பல மன்னர்களும் வீமன் கதையால் மடிதல்

ஆறு படி நூறு படி ஆயிரம் அரக்கர்,
மாறுபடு பாடை வட மன்னர் ஒரு கோடி,
ஊறுபட வெங் கதை கொடு அன்று அவன் உடைக்க,
சேறு படும் மூளைகள் தெறித்தன சிரத்தால். 26

'முன் பகலில் மைந்தனை முருக்கிய அரக்கன்
பின் பகலில் வீழ, வடி வேல்கொடு பிளந்தான்;
சொல் பகல் இலான் இளவல்' என்றனர், துதித்தார்,
அல் பகல் இலா உலகில் வாழ் அமரர் எல்லாம். 27

காசியர்கள், சேதியர்கள் முதலியோர் விசயன் வாளியால் மடிதல்

காசியர்கள், சேதியர்கள், மாளவர், கலிங்கர்,
பூசலிடை ஏழு பதினுயிரவர் பொங்கி,
கேசவன் நடாவு கிளர் தேர் கெழு சுவேத
வாசி உடையான் விசயன் வாளியின் மடிந்தார். 28

வீம விசயர்களால் துரியோதனன் சேனை சிதறுதல் கண்டு, வீடுமன் வந்து பாஞ்சாலருடன் பொருதல்

துரகத் தடந் தேர்த் தனஞ்சயன் கை வரி வெஞ் சாபம் சொரி கணையால்
உரகத் துவசன் பெருஞ் சேனை ஒரு சார் உடைய, ஒரு சாரில்
சருகு ஒத்து அனில குமரன் கைத் தண்டால் உடைய, கண் சிவந்து,
கருகி, திருகி, மேல் நடந்தான், கங்காநதியாள் திருமைந்தன். 29

பட்டக் களிற்றுப் பாய் புரவிப் பைம் பொன் தடந் தேர்ப் பாஞ்சாலர்,
திட்டத்துய்மன் முதலானோர், சிகண்டியுடனே எதிர் தோன்ற,
வட்டக் கவிகை வீடுமனும், மன்னற்கு இளைய காளையரும்,
எட்டுத் திக்கின் காவலரும், அவரோடு எய்தி இகல் செய்தார். 30

வரி வெஞ் சிலைக் கைக் கௌரவர்க்கு முதல் ஆம் முதல்வன் வடிக் கணைகள்
தெரியும் கணத்தில், தெரியாமல் தேரும் தாமும் சிலர் பட்டார்;
கரியும் தாமும் சிலர் பட்டார்; கலி வாய் மதுகைக் கால் வேகப்
பரியும் தாமும் சிலர் பட்டார்; படாதார் உண்டோ பாஞ்சாலர்? 31

சிகண்டியின் கணைக்கு வீடுமன் இலக்காக, துச்சாதனன் அம்பு எய்து, சிகண்டியின் தேர் முதலியவற்றைச் சிதைத்தல்

'நீயும் ககனம் குடியேற, நின் பேர் உடலம் நீள் நிலத்தில்
தோயும்படி,நிற் பொர நின்றேன்!' என்றே சொல் ஆயிரம் சொல்லி,
சேயும் தனக்கு நிகர் இல்லாச் சிகண்டி கடுங் கால் சிலை வாங்கி,
காயும் கணைகட்கு இலக்கு ஆனான், காமன் கணைக்கும் கலங்காதான்.

வில்லோன் சரங்கள் பட நகைசெய்து, அவன்மேல் தனது வில் வளையாத்
தொல்லோன் நின்ற நிலை கண்டு, துச்சாதனன் தன் சுடு சரத்தால்
பல்லோர் வியப்ப, தங்கள் குலப் பகைவன் சேனாபதி இளவல்
செல்லோடு அணவு நெடுங் கொடியும், தேரும், சிலையும், சிதைவித்தான்.

விசயன் நடு வந்து, பகழி வீச, பகைவர் புறமிடுதல்

'"இவனே இலக்கு ஆம், என் பகழிக்கு" என்பான் போல, எம் குலத்தில்
அவனே செங் கைச் சிலை வீழ்த்தான்; அரசன் தம்பிக்கு அழிந்து, இவனும்
தவனோதயத்தில் இருள் என்னச் சாய்ந்தான்' என்று தனஞ்சயன் தன்
பவனோதயத் தேர் நடு விட்டான்; பணியார் தாமும் புறமிட்டார்.

பார்த்தன் கணையால் பட்டவரை, பங்கேருகத்தோன் பல கோடி
நாத் தந்திலனே, எண்ணுதற்கு; நாம் ஆர் புகல? தே மாலை
மாத் தந்திகளும், புரவிகளும், துணியத் துணிய, வழி சோரி
நீத்தம்தன்னுல், வடவை முக நெருப்பு ஒத்தது, கார் நெடு வேலை,

பின், விடுமன் சிலை ஏந்திப் பொர, விராடன் இளவல் சதானிகன் மடிதலும்,
சூரியன் மறைதலும்

மன்னும் சேனை படக் கண்ட வாட் சந்தனுவின் திருமைந்தன்,
பின்னும் தனது சிலை ஏந்தி, பேணர் எவரும் பின் காட்ட,
துன்னும் பகழி மழை பொழிந்து, துரக்கும் பொழுது, விராடபதி
என்னும் குரிசில்தனக்கு இளையோன், இராமற்கு இளையோன் எனத் தக்கோன்,

பண்ணும் பரிமான் தேர் உடையான், படைத் தேர் மன்னர் பலர் சூழ,
எண்ணும் சிலைக் கைச் சதானிகன், வந்து, எதிர் ஊன்றுதலும், என் திசையும்
மண்ணும் திகைக்கும்படி மலைந்தான்—மன் பேர் உயிருக்கு ஆர் உயிரும்
கண்ணும் போல்வான், கருதலர்க்குக் கடுங் கால் எழுப்பும் கனல் போல்வான்.

உற்றுச் சமரில் வில் எடுத்த உரவோன்தன்னை உடலோடும்
அற்றுச் சென்னி வேறு ஆகி வீழத் துணித்தே, அம்பு ஒன்ருல்
செற்று, கங்கை மகன் நிற்ப, சேரார் ஓட, தேரோனும்
இற்றுத் தெறித்த மகுடம் என வீழ்ந்தான், புணரிக்கிடை அந்தோ!

'திலத்தின் சின்னம் பட முன்னம் சிவேதன் உயிர் கொண்டு உடல் சிதைத்தான்;
தலத்தில் கனக முடி சிந்தச் சரத்தால் அழித்தான், சதானிகனை;
வலத்தில் திகிரிதனை உருட்டும் மான் தேர் மச்சத்து அவனிபர்தம்
குலத்திற்கு இவனே கூற்று' என்ருர், கூற்றும் குலையும் கொலை வேலார்,

இரு பக்கத்தாரும் பாசறை சேர்தல்

சேந்த நெடுங் கண் முரி புருவத் திட்டத்துய்மன் சேனையொடும்,
சார்ந்த நிருபர் ஐவரொடும், தானும் தன் பாசறை அடைந்தான்;
பாந்தள் உயர்த்த அரசுடனும், பைம் பொற் கவரி மதிக்கவிகை
வேந்தருடனும், போய்ப் புகுந்தான், தன் பாசறையில் வீடுமனும்.

பரிதி குணக்கில் எழுதல்

சென்ற பரிதி, ஆயிரம் பொற் சிகரப் பொருப்புக்கு அப் புறத்து
நின்ற இருளை இப் புறத்து நீங்காவண்ணம் குடியேற்றி,
ஒன்ற உலகம் உற்ற துயில் உணர்த்துவான்போல், உதயம் எனும்
குன்றமிசைநின்று, அனைவரையும் கரத்தால் எழுப்ப, குணக்கு எழுந்தான்.

38. பத்தாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

வலியில் அன்று தந்தை செற்ற மைந்தனுக்கு வந்த பேர்
நலிவு எலாம் அகற்றும் நாமம்; நால்-இரண்டு எழுத்துடன்
பொலியும் நாமம்; மறைகள் சொன்ன பொருள் விளக்கும் நாமம்—முன்
கலியன் எங்கள் மங்கை ஆதி கண்டுகொண்ட நாமமே. 1

முந்திய நாளிற்போல, தருமன் படை பற்ப வியூகமும், துரியோதனன் படை சருப்பதோபத்திர வியூகமுமாக அணிவகுத்து நிற்றல்

தருமராசன் மதலை பஞ்சசயனம் நின்று எழுந்த பின்,
கருமம் ஆன காலையில் கடன் கழித்து, நேமி அம்
பெருமனோடு சென்று, தக்க பெற்றி பேசி, வெற்றியின்
பொரு மகிபர் சூழ நின்ற இளைஞரோடு போதவே, 2

திரண்டு பல் இயங்கள் தேவர் செவி புதைக்க, வானிடைப்
புரண்டு எழுந்த தூளி கண் புதைக்க, மெய் பதைக்கவே,
முரண் தொடங்கு சேனை வந்து முன்னர் நாளை யூகமே
அரண் தொடங்கு யூகமாக ஆகவத்துள் அணியவே, 3

வீடுமன் எனும் தடக் கை வீர மன்னும், வெஞ் சுடர்க்
காடு மன்னு பரிதியைக் கரம் குவித்து இருந்த பின்,
தோடு மன் வலம்புரித் துலங்கு தாம நிருபனும்,
நீடு மன்னர் பலரும், வாயில் இரு புறத்தும் நிற்கவே, 4

வனைந்து இலங்கு கழலும், முத்து வடமும், வாகு வலயமும்,
புனைந்த செம் பொன் மவுலியோடு பொற்பின்மீது பொற்பு எழ,
'முனைந்து அடங்க இன்று நாம் முடித்தும், வெய்ய போர்!' என
நினைந்து, தன் பனைப் பதாகை நீடு தேரில் ஏறினன். 5

சுற்று அருத வில்லினன்; தொடை மிடைந்த தூணியன்;
கொற்ற வாகை வாளினன்; கூர வீர வேலினன்;
மற்றும் ஆயுதங்களோடும், மன்னரோடும், வார் முரசு
எற்றும் ஆரவத்தினோடும், அடு களத்தின் எய்தினன். 6

'வீடுமனுக்கு இன்று வானுலகு அளித்தி' என்ற கண்ணனுக்கு விசயன், 'எவர் எதிர்ப்பினும் நான் வெல்வேன்' எனல்

தானும் முன் அணிந்தவாறு தானையை நிறுத்தி, அச்
சேனை மன்னன் வந்து நின்ற நிலைமை கண்டு, செங் கண் மால்,
'வானின்நின்று இழிந்த கங்கை மைந்தனுக்கு வான் உலாம்
யானம் இன்று அளித்தி' என்று விசயனோடு இசைக்கவே, 7

போரின் அண்டர் பகையை முன்பு பொருது வென்ற வின்மையான்,
மூரி வெங் கொடிக் குரங்கு முன் நடக்கும் மேன்மையான்,
வாரிதம் கொள் மேனியான், வனம் புகுந்து வருதலான்,
யாரும் இன்று இராமன் என்ன இசைய நின்ற விசயனே, 8

'சிலை, பதாகை, இவுளி, தேர், செழுங் கனல் அளித்தன;
வலவன் யார் எனில் குறிப்பொடு என்னை ஆள வந்த நீ;
தல மகிபர் அல்ல; தேவர் தானவர் எதிர்ப்பினும்,
கொலை படாமல் ஏவர் போவர்? குன்று எடுத்த கோவலா! 9

'எந்தை ஆக; துணைவர் ஆக; தனயர் ஆக; எந்தைதன்
தந்தை ஆக; நீ உரைக்கில், யாரையும் தறிப்பன் யான்—
முந்தை ஆரணங்களுக்கும் முடிவில் நின்ற பொருளை என்
சிந்தை ஆர முற்றுவித்து, வினை அறுத்த செம்மலே!' 10

விசயனும் வீடுமனும் விற்போர் புரிதல்

என்ற போது, உவந்து, தேவவிரதன் நின்ற எல்லையில்
குன்றம் அன்ன தேர் கடாவி, அருகு அணைந்த கொற்றவர்
ஒன்றுபட்ட சேனையோடு யாவரும் உடன்று போய்,
நின்ற சேனைநிருபன்மேல் நிரைத்து வாளி தூவவே, 11

பலரும் எய்த வாளி மெய் படப் படப் பனித்து, நாப்
புலர நொந்து, கங்கை மைந்தன் இதயமும் புழுங்கினான்,—
மலருகின்ற வார் பனிக்கு உடைந்து, சால மாழ்கி, நீடு
அலரும் அந்த நிறம் அழிந்த அம்புசாதம் என்னவே. 12

துன்னிமித்தமும் பல தொடர்ந்து செய்ய, வெய்ய ஆம்
அந் நிமித்தம் நல் நிமித்தம் ஆகும் என்று அகம் தெளிந்து,
உன்னி, மித்திரர்க்கு நாளும் உதவி செய்யும் உறுதியோன்,
வில் நிமித்த வாளியால், அவ் வாளிகள் விலக்கினான். 13

வீடுமன் வாளியால் பகைவர் சேனை பட்ட பாடு

துருபதேயர், மகத நாடர், வெங் குலிங்கர், சோனகர்,
கருநடேசர், சிங்களர், கடார பூபர், கௌசலர்,
தருமராசன் மதலை சேனை முதுகிட, சரங்கள் போய்
ஒருவர் போல அனைவர்மேலும் உருவ, எய்து உறுக்கினான். 14

முடி துணிந்து பின்பு வீழ, முன் நடந்து உடற்றுவார்
அடி துணிந்து விழ, இருந்து அலங்கல் வில் வணக்குவார்,
கொடி துணிந்து, வில் துணிந்து, கோல் தொடுத்த கையுடன்
தொடி துணிந்து, சோரி வெள்ள நதியினூடு சுழலுவார். 15

மருத்து எறிந்த பூழி என்ன வந்தவா மடங்குவார்;
உருத்து எறிந்த உருமின் நொந்த உரகம் என்ன உட்குவார்;
ஒருத்தர் ஓட, 'என் இது!' என்று, அநேகர் அஞ்சி ஓடுவார்;—
விருத்தன் வில் வளைத்த ஆண்மை விசயனுக்கும் இசையுமோ? 16

வீடுமனுக்கு உதவியாக மன்னர் பலரும் வந்து சரங்கள் விட, அவற்றை விசயன் விலக்குதல்

வெம் புய விசால வடமேரு ஓர் இரண்டு உடைய
வீடுமனை, நீடு முனைவாய்,
அம்புதம் எழுந்து பொழிகின்ற வழி ஓடிவரும்
அனிலம் என வந்து, அணுகினார்—
செம்பியனும், மா கிருபனும், செறி துரோணனொடு,
சேயொடு, செயத்திரதனும்,
தம்பியரும், மாமனும், சயிந்தரொடு, வெய்ய பக-
தத்தனொடு, சல்லியனுமே. 17

மனம் செய் வலி கூர் கச துரங்கம பதாதி
இரதத்துடன் வளைந்து பலரும்,
தனஞ்சய மடங்கல் எதிர் சாபமும் வளைத்து, எதிர்
சரங்களும் உகைத்து, அமர் செய்தார்;
கனம் சலதி மொண்டுகொடு எழுந்தனைய வண்ணன், ஒரு
கார்முகம் வணக்கி, ஒரு நூறு
இனம் சரம் ஓர்ஓர் தொடையில் ஏவி, அவர் ஏவு சரம்
யாவும் எதிரே விலகினான். 18

வீமன் தண்டுகொண்டு பொருதல்

தேர் உதய பானு என நின்ற விசயன்தன் எதிர்
தெவ்வர் பனி என்ன அகல,
தார் உதயம் ஆம் நிருபர் வேலை சுவற, தனது
தண்டு தனி கொண்டு குதியா,
ஓர் உதவி இன்றி முடியோடு அவர் சிரங்களும்
உடைந்து, முதுகிட்டு உடையவே,
மாருத சகாயன் என, மாருதன் என, கடவுள்
மாருத சுதன் கடுகினான். 19

ஏறி வரு தேருடன் எடுத்து எறிதரும், சிலரை;
இரு பணைகள் பற்றி, இறுகச்
சீறி வரும் யானையொடு எடுத்து எறிதரும், சிலரை;
ஐந்து கதியும் சிவணவே
மாறி வரு வாசியொடு எடுத்து எறிதரும், சிலரை;—
வஞ்சினமும் வெஞ் சினமுடன்
கூறி வரும் வாள் அரசர் ஏறி அணி நின்ற ரத
குஞ்சர துரங்கம் விழவே. 20

வீமனுக்குத் தன் படை வீரர் முதுகிடுதல் கண்டு, துரியோதனன் வில் வல்லோர் பலரை ஏவுதல்

முந்து படை வீரர் மிக நொந்து கதை வீமன் எதிர்
முதுகிடுதல் கண்டு, முனியா,
ஐந்து உறழும் நூறுபடி ஆயிரவர், வின்மையில்
அருச்சுனனை ஒத்த அடலோர்,
உந்து உரக கேதனன் உரைப்ப, முகில் ஏழும் உடன்
ஊழி இறுதிப் பொழிவபோல்,
வந்து, வடி வாளி மழை சிந்தினர், பராக்கிரம
வாசி, இபம், மா இரதரே. 21

விசயன் அவர் விடும் அம்புகளை விலக்கி, அவர்தம் கை முதலியவற்றைத் துணித்தல்

வெவ் வனம் எரிக்கடவுள் உண்டிட வணக்கும் ஒரு
வில்லியும், அவ் வில்லொடு எதிர் போய்,
அவ் அவர் தொடுத்து விடும் அம்புகள் எனைப் பலவும்
அவ் அவை தொடுத்து விலகி,
கை வரி வில் அற்று, நெடு நாணின் நடு அற்று, வளர்
கைத்தலமும் அற்று விழவே,
வை வரி வடிக் கணைகள் ஏவினன், மணித் திகிரி
வலவன் விடு தேரில் வருவோன். 22

‘தருமன் முதல் ஐவரையும் வென்றிடுதும்!’ என்று,
துச்சாதனனொடு ஐவர் இளையோர்
பொரு முனையின் வீடுமன் முன் நின்றவர்கள் அல்லது,
புகன்ற நரபாலர் எவரும்
பரும மத மா புரவி தேர்கொடு பறந்தனர்,
படாதவர்—கெடாத கதையும்,
செரு முனை சராசனமும், உடைய இருவோரும் நனி
சீறி, அமர் செய்த பொழுதே. 23

வீடுமனும் தன் காலம் நெருங்கியது என்று எண்ணியவனாய், அம்பு எய்து, பகைவரை நடுங்கச் செய்தல்

விண்ணவரில் உற்று எழுவர் கண்டு களி கூர, விறல்
வீடுமன் விருப்பினுடனே,
கண் இணை நெருப்பு எழ உடன்று, 'இனி நமக்கும் இது
காலம்!' என, மாலை புனையும்
வண்ண வரி வில் தலை வணக்கி, விதமான பல
வாளிகள் தெரிந்து, தருமற்கு
எண்ணும் இரதத் தலைவர் அனைவரையும் விட்டிலன்,
இமைப்பொழுதின் எய்தனன்அரோ. 24

எத்தனை முடித் தலைகள், எத்தனை புயக் கிரிகள்,
எத்தனை கரக் கமலம், வேறு
எத்தனை உடற் சுமைகள், எத்தனை உறுப்பின் நிணம்,
எத்தனை கொடிக் குடர்களோடு
எத்தனை நிணத் தடிகள், எத்தனை நரப்பு வகை,
எத்தனை எலுப்பு நிரை, மேல்
எத்தனை மணித் தொடைகள், எத்தனை மலர்க் கழல்கள்,—
இற்றன களத்தினிடையே! 25

விரிந்தன, உரங்களும்; வெகுண்டன, மனங்களும்;
விழுந்தன, பசுங் குருதிநீர்;
நெரிந்தன, எலும்புகள்; அழிந்தன, கொழுந் தசை;
நிமிர்ந்தன, நரம்பின் விசியும்;
சரிந்தன, பெருங் குடர்; துணிந்தன, சிரம்; கடை
தவழ்ந்தன, நெடும் புருவமும்;
எரிந்தன, முகங்களும்; எழுந்தன சிரங்களும்;
இறந்தனர், கடுங் கண் இளையோர். 26

சோமகரில், மச்சரில், தென்னரில், துளுவரில்,
துருபதேயரில், வளவரில்,
தே மருவு அலங்கல் குலிங்கரில், சேரரில்,
சிஞ்சியரில், வெஞ் சமர் விடா
மா மகுடவர்த்தனரில், மண்டலிகரில், பட்ட-
வர்த்தனரில், மற்று இவ் உரவோன்
ஏ மரு கணைக்கு இலக்கு ஆகாத மன்னவர்கள்
எம் மன்னர் என்று மொழிவாம்? 27

தம் படையை வீடுமன் அடுவது கண்டு, விசயன் சிகண்டியை முன் வைத்து, வீடுமன் எதிரே பொர வருதல்

மேல் எழுந்து தம் படையை நீடு கங்கை மைந்தன் அடு
மேன்மை கண்டு, இரங்கி வெகுளா,
ஞாலம் உண்ட செம் பவள வாய் மலர்ந்து, 'கொண்டு இவனை
நாம் முரண் தொடங்க இதுவே
காலம்!' என்று, மன்றல் கமழ் கார் முகுந்தன் வெம் புரவி
கால் கொள் சந்தனம் கடவவே,
கோல வெஞ் சரங்கள் அடைவே தெரிந்து கொண்டு, சிலை
கோலினன், தனஞ்சயனுமே. 28

ஓதம் வந்து எழுந்தது என, மேகம் நின்று அதிர்ந்தது என,
ஊழியும் பெயர்ந்தது எனவே,
மாதிரங்களும் செவிடுபோய், அகண்டமும் பொதுளி,
வாய் பிளந்தது அண்ட முகடும்—
சீதரன், செழுந் துளப மாதவன், தயங்கு அருண
சீத பங்கயம் கொள் திருவின்
நாதன், வெஞ் சமம் கருதி, ஊதுகின்ற சங்கின் முழு
நாதம் வந்து எழுந்த பொழுதே. 29

தூரியம் கறங்க, நரபாலர் சங்குஇனங்கள் அணி-
தோறும் நின்று நின்று குமுற,
தேர்களும் துரங்கமொடு வேழமும், கலந்து வரு
சேனை மண்டலங்களுடனே,
பேர் பெறும் சிகண்டி தலையாக முன்பு கொண்டு, 'உலகு
பேரும் அன்றும் இன்றுகொல்?' என,
போர் தொடங்கி, வென்றி புனை வீடுமன் தடங் கண் எதிர் 30
போயினன், தனஞ்சயனுமே.

சிகண்டியைக் கண்டு வீடுமன் போர் செய்யாதிருக்க, துச்சாதனன் எதிரியின் வில் துணியுமாறு அம்பு எய்தல்

காதி வெங் கொடும் பகழி ஏவு திண் சிகண்டி தலை
காணலும், குனிந்து நகையா,
'ஆதி அம்பை இன்று பகை மீள வந்தது!' என்று, தனது
ஆயுதம் துறந்து, விரை தேர்-
மீது கங்கை மைந்தன் ஒருதான் வெறுங் கை நின்றளவில்,
மேல் நடந்து சென்று பொரு துச்-
சாதனன் சரங்கள் பல தூவினன், பரிந்து, எதிரி
சாபமும் துணிந்து விழவே. 31

சிகண்டி எதிர் நிற்கலாற்ருது மீள, வீடுமன் கண்ணன் மேனியும் சிவக்குமாறு அம்பு விடுதல்

சாக நின்றிலன் துருபதேயன், நெஞ்சம் இன்றி, வரி
சாபம் இன்றி, வண் கொடி கொள் தேர்
வாகம் இன்றி, வந்த வழி மீள, நின்ற சந்தனு
குமாரனும் சரங்கள் விடவே,
யூகமும் பிளந்து, சுரராசன் மைந்தன் முந்து இரதம்
ஊருகின்ற செங் கண் நெடுமால்,
மேகமும் கருங் கடலும் நீலமும் கலந்த, திரு
மேனியும் சிவந்தது அறவே. 32

சிகண்டியை விசயன் மீண்டும் கொண்டு வந்து நிறுத்தி, தானும் அவனுமாக வீடுமனோடு பொருதல்

போன திண் சிகண்டிதனை மீளவும் கொணர்ந்து, 'பல
பூசலும் கடந்து இரதம்மேல்
நீ நில்; அஞ்சல்; நின் கணையும் ஏவுக!' என்று, வெஞ் சமரில்
நேர் நடந்து சென்று, விசயன்,
கூனல் அங்கி தந்த சிலை கோலி, அம்பொடு அம்பு பல
கூட நெஞ்சு அழன்று உதையினன்,
வேனில் அம்பு முன்பு துதையாது இலங்கும் அம் பொன் வரை
மேனி எங்கணும் புதையவே. 33

தன் மேல் உறுவது விசயன் அம்பு என்பது அறிந்து வீடுமன் மகிழ்தல்

தோளும், நெஞ்சமும், சிரமும், மார்பமும், தொடங்கி நிலை-
தோறும் வந்து வந்து உருவவே,
சாளரம் கொள் அங்க வழி ஓடுகின்ற இந்து முக
சாயகம் கை கொண்டு பிடியா,
'நாள் அறிந்து எதிர்ந்து பொருவோனும் மைந்தன் அன்று; முதல்
நாமமும் சிகண்டி; இவன் எய்
வாளி ஒன்றும் இங்கு எமை உறு; தனஞ்சயன் செய் பெரு
வாழ்வு இது!' என்று அறிந்து மகிழா, 34

அருகு நின்ற துரியோதனன் தம்பியரை, 'தமையனிடம் சென்று, போர் அறிந்து பொருக!' என வீடுமன் பணித்து, அம்பாகிய அணையில் சாய்தல்

'நாம வெங் கொடுங் கணையின் நாமும் நொந்தனம், சமரம்;
நாளும் இன்று; முந்த இனி நீர்
போம், அடங்க, நும் தமையன் நீள் பதம் பொருந்தி, உறு
போர் அறிந்துகொண்டு பொருவீர்!
ஆம் அது அன்றி என் செயினும் ஆவது ஒன்றும் இன்று; தனி
ஆண்மை பொன்றல்!' என்று, அருகு சேர்
கோ மடங்கல் தம்பியர்களாகி நின்ற மைந்தரொடு
கூறினன், பனங்கொடியனே. 35

கோடு கொண்ட செம் பவள நாதம் வந்து வந்து செவி
கூட, முன்பு நின்ற நிலையே
நாடி, நெஞ்சு அழிந்து, திருநாமம் அன்புடன் தனது
நா குழன்று கொண்டு நவிலா,
ஓடுகின்ற அம்பு ஒழிய நீடு உடம்பு அடங்க முனை
ஊர நின்ற அம்பு ஓர் அணையா,
வீடுமன் கிடந்த கிடை தேவர் கண்டு உவந்தனர்கள்;
மேல் விழுந்தது, அம் பொன் மலரே. 36

இரு திறத்தாரும் வீடுமனை அடுத்து நின்று, நொந்து நைதல்

'போரில் எஞ்சினன் குருகுலேசன்!' என்று கண்ட
புருகூதன் மைந்தனும், புனை துழாய்
வீரனும், துனைந்து வரு தேரினின்று இழிந்து, இரு கண்
வீழும் அம்பினில் முழுகினர்;
சேர வந்து இரண்டு வகை ஆகி வெங் களம் குறுகு
சேனையும் திரண்டு அலறவே,
யாரும் நெஞ்சு அழிந்தனர்கள்; யாரும் நொந்து நைந்தனர்கள்;
யாரும் நின்று இரங்கினர்களே. 37

அம்பின் அணைமேல் உயிர் ஓடாவண்ணம் நிறுத்தி வீடுமன் ஞானத்தோடே கிடக்க,
தருமன் முதலியோரும் துரியோதனுதியரும் அழுது புலம்புதல்

ஆகம் எங்கும் தங்கும் அம்பின் அணைமேல் வீழ்வான்
யோகம் கொண்டே உயிரை ஓடாவண்ணம் நிறுவி,
'மாகம் சூழும் பரிதி வடபால் எய்தும் அளவும்
நாகம் காணேன்' என்ன, ஞானத்தோடே வைக, 38

இங்கும் தருமன் முதலா உள்ள மன்னர் எவரும்,
அங்கும் துரியோதனனை ஆதியான அரசர்,
பொங்கும் கடலால் உலகம் பொன்றும் அன்று போலே
சிங்கம் அன்னான் பாதம் சென்னிமேல் கொண்டு அழுதார். 39

'மறமும், வாகு வலியும், வல் வில் முதல் எப் படையின்
திறமும், தேசும், வாழ்வும், சீரும், கேள்விச் செலவும்,
நிறமும், உண்மை அறிவும், நெறியும், புகழும், திகழ் பேர்
அறமும், பொன்றும் நின்னோடு, ஐயா! அந்தோ, அந்தோ! 40

'தந்தை இன்பம் எய்த, தவமே இன்பமாகச்
சிந்தை தெளியும் ஞானச் செல்வா! செஞ் சேவகனே!
முந்தை மரபுக்கு எல்லாம் முதல்வா! ஞாலம் முழுதும்,
எந்தை! ஆள வைப்பார் இனி யார்? கோவே!' என்றார். 41

அழுத மைந்தர்க்கு ஆறுதல் கூறி, தன் தலையின் தாழ்வு தீர்க்குமாறு விசயனுக்கு வீடுமன் கூற, அவன் அங்ஙனமே செய்தல்

அழுத மைந்தர் தம்மை 'அஞ்சல்!' என்று என்று ஆற்றி,
'எழுது தொல்லை வினையை யாரே விலக்குகிற்பார்?
உழுது வாளி உருவ உங்கள் முன்னர் வீழ்ந்தேன்;
பழுது ஒன்று இல்லை; இதுவே பயன் என் பவத்தால்' என்ருன். 42

'சரத்தின் சயனம் பஞ்ச சயனங்களினும் இனிது; என்
சிரத்தின் தாழ்வு தீர்ப்பாய்; திண் தோள் விசயா!' என்ன,
வரத்தின் பயனல் உயிரை நிறுத்தும் மன்னன் மகிழ,
உரத்தின் அம்பால் முடியை உயரும்வண்ணம் உயர்த்தான். 43

வீடுமன் துரியோதனனது கண்ணீரை மாற்றி, 'கன்னனைத் தானைத் தலைவனுக்கிப் போர் புரியுங்கள்!' எனக் கூறுதல்

சொரியும் கண்ணீர் துடைத்து, துரியோதனனை நோக்கி,
'வரியும் சாபக் கன்னன், மன்னர்க்கு உரும்ஏறு அன்னுன்,
தெரியும் காலத்தவனைச் சேனைத் தலைவன் ஆக்கி,
புரியும் போரும் நாளைப் புரிமின்' என்று புகன்ருன். 44

தருமன் அமைத்த கோயிலில், வீடுமன் தன் உயிர் விடும் காலம் நோக்கி, அம்புப் படுக்கையில் இருத்தல்

கோயில் தருமன் செய்ய, கூர் வெஞ் சரமே அணையா,
நோய் இல் அயர்வும் மெய்யில் நுழைய, காலம் நோக்கி,
'வீயின், முத்தி இல்லை' என்ன இருந்தான்—விருந்தா,
சேயின் முனிவர் கேள்வித் தெள் ஆர் அமுதம், நுகர்வான். 45

சூரியனது மறைவும் செக்கர் வானத்தின் எழுச்சியும்

'இன்று உன் மைந்தன் பட்டான்' என்று தந்தைக்கு இசைப்பான்
சென்று, பரிதி மேலைத் திக்கின் எல்லை சேர்ந்தான்;
அன்று அவ் வருணன் அன்பால் அழுத செந்நீர் ஆருய்
மன்ற எங்கும் பரந்தது ஒக்கும், செக்கர் வானம். 46

இரு திறத்தாரும் பாடி எய்துதலும், துரியோதனன் தந்தைக்கு வீடுமன் விழுந்த செய்தி சொல்லச் சஞ்சயனை அனுப்புதலும்

பாண்டு மன்னன் புதல்வர் படையும் பாடி புக்கது;
ஆண்டு பாடி புக்கது, அரவத் துவசன் படையும்;
'ஈண்டு முதல்வன் பட்டது எந்தைக்கு உரைமின்' என்று,
தாண்டு மான் தேர் மைந்தன் சஞ்சயனை விடுத்தான். 47

முனிவனால் செய்தி தெரிந்த திருதராட்டிரன் நிலை

முனியும் நகரில் சென்று, முகுரானனனுக்கு உரைப்ப,
கனியும் அன்பின் வெள்ளம் கண்ணீர் ஆகிச் சொரிய,
'இனி என் மைந்தர்க்கு உறுதி இல்லை!' என்று என்று ஏங்கி,
பனி வெண் மதியம் கண்ட பங்கயம்போல் ஆனான். 48

மண்மேல் விழுந்தான்; எழுந்தான்; 'மானம் போனது!' என்றான்;
கண்மேல் எற்றி, 'இன்றே கண்ணும் இழந்தேன்!' என்றான்;
'விண்மேல் உள்ளோர் செல்வம் வீறு பெற்றது!' என்றான்;
புண்மேல் அயில் உற்றென்னப் புலந்தான், முதல்வன் புதல்வன்.

துரியோதனன், 'நாளைச் சேனைத் தலைவர் யார்?' என்று ஆராயும்பொழுது, கன்னன் வீடுமன் சொன்னபடி தானே தலைவன் ஆவதாகக் கூறுதல்

செங் கண் அரவக் கொடியோன், 'சேனாபதியாய் நாளை
இங்கு முனையில் நிற்பார் யார்?' என்று எண்ணும் எல்லை,
அங்கர் பூபன், 'யானே அமரில் தலைவன் ஆகி,
கங்கை மைந்தன் சொன்ன பரிசே காப்பன்' என்றான். 50

தனக்குத் துணை வேறு இல்லை என்று அவனுக்குக் கூறி, துரியோதனன் துரோணனைத் தலைவனாக்குதல்

'தானாதிகனே! நீ வெஞ் சமரில் சேனைத் தலைவன்
ஆனால், அரசாய் நிற்பார் யார்?' என்று அவனை விலக்கி,
'மீன் ஆர் கொடியோன்தன்னை வென்ற வேதக் கொடியோய்!
சேனாபதியாக!' என்றான், தீ வாய் நாகக் கொடியோன். 51

சிலை ஆசிரியன் வேந்தர் வேந்தன் சேனைக்கு எல்லாம்
தலையாய், மன்னர் யாரும் தன்னை வந்து சூழ,
கொலை ஆர் பகழி வெள்ளம் மார்பம்தோறும் கோத்து,
தொலையா வெம் போர் தொலைக்கத் துணிந்தான்; எவரும் துயின்றார்.

அருக்கன் குணபால் அடைதல்

வருணன் மைந்தன் பாடு வருணற்கு உரைத்து, மீளத்
தருண மைந்தன் விசயம் சதமகத்தோன் கேட்ப,
இருள் நிறைந்த கங்குல் ஏங்கி முன்னே ஓட,
அருணன் பொன்-தேர் தூண்ட, அருக்கன் குணபால் அடைந்தான்.

39. பதினோராம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

காயமும் புலனும் அந்தக்கரணமும் ஆகி, எல்லாத்
தேயமும் பரந்து நின்று, மீளவும் சித்தும் சுத்த
மாயமும் ஆகி, நீங்கி, வரு பெரு ஞானனந்தம்
ஆய எம்பெருமான், என்னை ஆண்டருள் ஆழியானே. 1

தோற்றுவாய்

பகிரதி மைந்தன் சேனபதி எனப் பத்து நாளும்
இகல் புரி இயற்கை எல்லாம் இயம்பினம்; இனிமேல், அந்தத்
துகள் அறு கேள்வி வேள்வித் துரோண ஆசிரியன் செய்த
புகல் அரும் ஐந்து நாளைப் பூசலும் புகலலுற்றும்: 2

இவரும் சேனையும், துரியோதனனுடியரும் படைகளும் களத்திற்கு வருதல்

'சென்றனன், கங்கை மைந்தன்; தினகரன் மைந்தன் செல்வான்
நின்றனன்; துரோணன் மைந்தன் நீடு அமர் முனைந்து செய்யான்;
வென்றனம் இனி நாம்!' என்று மெய்ம் முகில் வண்ணன் சொல்ல,
குன்று அன குவவுத் தோளார் வெங் களம் குறுகினரே. 3

மா தனத்து அளகை ஆளும் மன் என, வானில் பாக-
சாதனக் கடவுள் என்ன, தகும் பெருந் தரணி வேந்தன்,
சேதனப் படைஞரோடும், சேனையின் காவல் ஆன
வேத நல் குருவினேடும், வெங் களம் வந்து சேர்ந்தான். 4

வீடுமன் இல்லாத சேனையின் தோற்றம்

மதி இலா விசும்பும், செவ்வி மணம் இலா மலரும், தெண்ணீர்
நதி இலா நாடும், தக்க நரம்பு இலா நாத யாழும்,
நிதி இலா வாழ்வும், மிக்க நினைவு இலா நெஞ்சும், வேத
விதி இலா மகமும் போன்ற,—வீடுமன் இலாத சேனை. 5

துரோணன் சகட வியூகம் வகுக்க, திட்டத்துய்மன் கிரவுஞ்ச வியூகம் வகுத்தல்

பகடு, தேர், புரவி, காலாள், பல வகைப் பட்ட சேனை
சகட மா வியூகமாக வகுத்தனன், தனுநூல் வல்லான்;
திகழ் தரு கவுஞ்ச யூகமாகவே திட்டத்துய்மன்
துகள் தரு சாதுரங்கம் யாவையும் தொகுத்து நின்றான். 6

சேனபதியர் இருவரும் அம்பு மழை பொழிதல்

படையுடை இருவர் சேனபதிகளும், பனி வெண் திங்கள்-
குடையுடை நிருபர் சூழ, வருதினிக் குழாங்கள் சூழ,
நடையுடைத் தடந் தேர் உந்தி, நாகரும் பனிக்கும் வண்ணம்
தொடையுடை வாளி மாரி சோனை அம் புயலின் பெய்தார். 7

சகாதேவன் சகுனியை வில்லாலும் கதையாலும் வெல்லுதல்

மருத்துவர் மைந்தர் தம்மில் இளவலும், வலிய சூது
கருத்துடன் பொருது வென்ற மாமனும், கலந்து, தம்மில்
ஒருத்தரை ஒருத்தர் வேறல் அரிது என உடன்று, வேக
சரத்தொடு சரங்கள் பாய, சராசனம் வாங்கினாரே. 8

ஒரு கணை தொடுத்துப் பாகன் உயிர் கவர்ந்து, உயர்த்த கேது
இரு கணை தொடுத்து வீழ்த்தி, இரத மாத் தொலைய நான்கு
பொரு கணை தொடுத்து, வஞ்சன் பொரு அரு மார்பில் ஆறு
வரு கணை தொடுத்து, வாகை மிலைந்தனன், வஞ்சம் இல்லான். 9

உகு நிணச் சேற்றில் ஊன்றி ஓடுதற்கு உன்னுவான்போல்,
சகுனி அத் தேரினின்றும் இழிந்து, கைத் தண்டம் ஏந்த,
நகுலனுக்கு இளைய கோவும் நகு மணி வலயத் தோள்மேல்
மிகு திறல் தண்டுகொண்டே வென்னிடப் பொருது மீண்டான். 10

துரியோதனன் வீமனோடு பொர வந்து, விரைவில் பின்னிடுதல்

மதாசலம், மகுட மான் தேர், வாம் பரி, வயவர், வெள்ளப்
பதாதி, எம் மருங்கும் போத, பார்த்திவர் நிழலின் போத,
பிதாமகன் இறந்தான் என்று பேதுறு நிருபன் போந்து,
சதாகதி மைந்தனோடும் தாக்கினன், தபனன் போல்வான். 11

அரிக் கொடி அரிஏறு அன்னான், அரவ வெங் கொடியும் அற்று,
வெருக் கொள் பேர் அரவம் அன்னான் வில்லும் முன் அற்று வீழ,
எரிக் கணை ஏவி, சூழ்ந்த தரணிபர், எதிர்ந்த வேந்தர்,
கரிக் குலம், இவுளி, திண் தேர், மடிய, வெங் கணைகள் தொட்டான்.

அப்பொழுது சல்லியன் வீமன்மேல் அம்பு துரந்து வருதல்

பல் இயம் முழங்க, மன்னர் படப் பட, பரித் தேரோடும்
வில் இயல் தானை வேந்தன் வென்னிடும் விரைவு காணா,
சொல்லிய விற் கை வாயு சுதனுடன் உரும்ஏறு என்ன,
சல்லியன் முனைந்து, வீர சாயகம் ஏவினானே. 13

சல்லியன் நகுலனோடு பொருது பின்னிடுதல்

தம்முனோடு உடன்று வந்த சல்லியகுமாரன்தன்னை,
'எம்முடன் எதிர்ப்பையாகில் இமைப் பொழுது இகல் செய்க!' என்னா,
வெம் முனை கடந்த பொன்-தேர் வெஞ் சிலை நகுலன் தோன்றி,
அம் முனை கவந்தம் ஆட, அவனுடன் அடு போர் செய்தான். 14

மோகரித்து, ஒன்று, இரண்டு, மூன்று, நால், ஐந்து, அம்பு ஏவி,
பாகனை, சிலையை, பொன்-தேர்ப் பதாகையை, பரியை, வீழ்த்தி,
ஆகம் உற்று உருவ எய்தான், அருச்சுனன் இளவல்; மாறாப்
போக மத்திரத்தார் கோவும் புறந்தந்து போகலுற்றான். 15

கன்னனும் விராடனும் விற்போர் செய்தல்

சையம் ஓர் இரண்டு தம்மில் பொருதெனத் தடந் தேர் உந்தி,
வெய்யவன் மகனும், வீர விராடனும், எதிர்ந்த வேலை,
வையகம், கம்பமுற்று, மாசுணம் நடுங்க, மேன்மேல்
எய்யும் வெங் கணையால், வானத்து எல்லையும் மறைந்தது அன்றே.

துருபத யாகசேனனும் பகதத்தனும், யானைப் போர் புரிதல்

துருபத யாகசேன நிருபனும், தும்பை சூடி
வரு பகதத்தன் என்னும் மடங்கல் ஏறு அனைய கோவும்,
ஒரு பகல் முழுதும் தங்கள் ஊக்கமும், உரனும், தேசும்,
பொரு படை வலியும் காட்டி, போதகப் பூசல் செய்தார். 17

சிகண்டி வாட்போரில் சோமதத்தன் முதலியோரைப் புறங்காட்டி ஓடச் செய்தல்

அன்று வெங் கழற்கால் சோமதத்தனும், சூழ்ந்து நின்ற
வன் திறல் வேந்தர்தாமும், வாள் அமர் புறம் தந்து ஓட,
அன்று வீடுமனை வென்ற ஆண்தகை சிகண்டி என்பான்
இன்று போர் செய்த வீரம் எம்மனோர்க்கு இயம்பல் ஆமோ? 18

அபிமனும் இலக்கணகுமரனும் பொருதல்

தேர்த் திரள், பரித் திரள், கரித் திரள், சேனையின்
கோத் திரள், புடை வர, குடை வர, கொடி வர,
பார்த்திவன் மதலையும், பார்த்தன் மா மதலையும்,
தூர்த்தனர் விசும்பையும், தொடுத்தன தொடைகளால். 19

மொய் கணை பிற்பட முந்து தேர் உந்தவும்,
பெய் கணை கணையுடன் பின்னி முன் வீழவும்,
எய் கணை அபிமனும், இலக்கணகுமரனும்,
கை கணை தர, நெடுங் கார்முகம் வாங்கினர். 20

இலக்கணகுமரன் அபிமனின் வில்லையும் நாணையும் துணிக்க, அவன் தேரில் சென்று இலக்கணகுமரனைப் பற்றிக் கொண்டு போதல்

இன் சிலை மதன வேள் என வரும் குமரன், அவ்
வன் சிலை வில்லிதான் மகிழ்வுறும் குமரனை
நன் சிலை நடு அற நாணொடும் துணியவே,
தன் சிலை கொண்டு, வெஞ் சாயகம் ஏவினன். 21

அற்ற வில் துணிகளால் அரியையும் பாகையும்
செற்றனன்; சென்றனன், தேரொடும் தேர் உக;
கொற்றவர் நூற்றுவர்க்கு உரிய அக் குமரனைப்
பற்றினன், உயிரொடும்—பாண்டவர் குமரனே. 22

வீயினால் வென்ற போர் வில்லியைக் கண் நுதல்
தீயினால் வென்றவன் திகழ்தரும் சிந்தையோன்,
காயினன் வார் குழல் கைப்படுத்து, எதிர் உறப்
போயினன் அவனொடும், பொன் நெடுந் தேரின்மேல். 23

சயத்திரதன் அபிமனைத் தடுத்தல்

முந்து வாள் அபிமன் அம் மூரி விற் குமரனை
உந்து தேர்மீது கொண்டு ஓடலும், ஒரு புடைச்
சிந்து பூபதி செயத்திரதன் வெஞ் சினம் உற,
வந்து, வெங் குனி சிலை வாளியின் தகையவே, 24

சயத்திரதன் வலி தொலைய, கன்னன் முதலிய வேந்தர் வர, பொர வந்த யாரையும் விற்போரில் அபிமன் புறங்காணுதல்

மடங்கலை வளைவது ஓர் சிலம்பி நூல் வலை எனத்
தொடங்கிய மன்னவன் தோள் உரம் தொலைந்த பின்,
திடம் கொள் தோள் அங்கர்கோன் முதலிய தேர் மனர்
அடங்க வந்து, அபிமனும் ஒருவனேடு அமர் செய்தார். 25

வந்தவர் வந்தவர் வாள் நுதல் நிலைதொறும்
சிந்துரத் தூளியால் திலகம் இட்டனன் என,
கொந்து உறு கணை முனைக் குருதி நீர் மல்கவே,
வெந் திறல் வில்லின் வென் கண்டனன், வீரனே. 26

அப்பொழுது சல்லியன் வந்து அபிமனைத் தடுத்தல்

சென்ற தேர் யாவையும் தன் ஒரு தேரினல்
வென்று, மா மன்னவன் மகனையும் மீது கொண்டு,
அன்று போம் வெஞ் சிலை ஆண்மை கண்டு, அபிமனை
வன் திறல் சல்லியன் வந்து முன் வளையவே, 27

சித்திரபானுவின் சீறி முன் செல்லும் அம்
மத்திரராசனை, 'வருக, நீ வருக!' என்று,
அத்திரம் நால்-இரண்டு அவன் முகத்து அடைசினன்,
மித்திரர் செல்வமாம் விசயன் மா மதலையே. 28

சல்லியன் அவனது தேர்ப்பாகனை வேலால் வீழ்த்த, சல்லியன் கதையுடன் தேர் விட்டு இறங்குதல்

தோள் இரண்டினும் நடுத் துளை பட, பாகன்மேல்
மீளவும் கொடியது ஓர் வீர வேல் ஏவினன்;
நீள வெங் கதையுடன் நீள் வரை இழிதரும்
யாளிபோல் சல்லியன் இரதம் விட்டு இழியவே, 29

வீமன் அங்கு வந்து, சல்லியனைத் தண்டினல் மோத, சல்லியன் தரையில் விழுதல்

வன்புடன் அபிமன்மேல் மற்று அவன் வருதலும்,
அன்புடன் கண்டு, பேர் அனிலன் மா மதலை போய்,
என்புடன் புயம் நெரிந்து இன மணி மகுடமும்
முன்புடன் சாயவே, தண்டினல் மொத்தினன். 30

அபிமன் வீமனோடு, 'என் ஆண்மை என் ஆம்?' என்று பேசி நின்றபோது, இலக்கணகுமரன் தப்பி, தனது தேருக்கு மீளுதல்

தலக்கணே சல்லியன் வீழ்தலும், தந்தையோடு
அலக்கணுற்று, 'அடியனேன் ஆண்மை என் ஆம்?' என,
குலக்கு அணி ஆன வில் குமரன் நின்று அயர்தலும்,
இலக்கணகுமரனும் தனது தேர் ஏறினான். 31

தரையில் வீழ்ந்த சல்லியனையும், தப்பிய இலக்கணகுமரனையும் கிருதவன்மா காப்பாற்றிக் கொண்டு செல்லுதல்

தரையில் வீழ் சல்லியன்தன்னையும் தனது பேர்
இரதமேல் ஏற்றி, அவ் இலக்கணகுமரனும்
குரிசிலை அன்று உயக் கொண்டு போயினன்அரோ—
கிருதவன்மா எனும் கிளர் முடி நிருபனே. 32

துரியோதனனும் போர் செய்யமாட்டாது சேனையுடன் திரும்புதல்

பொரும் பொரும் முனைதொறும் புண்ணியன் சேனையில்
பெரும் பெருந் தரணிபர் பேறுடன் வேறலால்,
அடும் பெருங் கொடியின்மேல் அரவ ஏறு எழுதினான்
திரும்பினன், பல் வகைச் சேனையும் தானுமே. 33

அருக்கன் குடபால் மறைதல்

தண்டே கொண்டு வீமன் எனும் சண்ட பவனம் தாக்குதலால்
திண் தேர் என்னப்பட்ட எலாம் சிதைகின்றன கண்டு, இதயம் வெரீஇ,
பண்டே உள்ள ஓர் ஆழித் தேரோடு ஒளித்துப் பரிகள் உடன்
கொண்டே அருக்கன் அவ்வளவில் குடபால் முந்நீர் குளித்திட்டான்.

பாண்டவர் பக்கத்தார் பாடி வீட்டில் இனிது துயில, துரியோதனன் பக்கத்தார் துயிலின்றி வருந்தியிருத்தல்

சென்ற நிருபர் புறம் நாண, திண் தோள் அபிமன் முதலான
வென்றி நிருபர் குழுஉக்கொண்டு, விறல் ஆர் சேனை வேந்தனுடன்
மன்றல் கமழும் துழாய் மவுலி மாலும், தாமும், பாடி மனை
ஒன்றி, இனிதின் கண் துயின்றார், உரனும் திறலும் உடையோரே.

பால் நாள் அளவும் துயிலாமல், பாந்தள்-துவசன்தனக்கு உயிர் நண்பு
ஆனார் பலரும், வாள் வேந்தர் அமைச்சர் பலரும், இளையோரும்,
சேனாபதியும் சூழ இருந்து, அபிமன் கையில் திருமைந்தன்
தான் ஆடு அமரில் அகப்பட்ட தாழ்வுக்கு இரங்கி, உளம் நொந்தார்.

'தருமனை நாளை அகப்படுத்தினால்தான் இன்று புதல்வனைப் பற்றிச் சென்ற செற்றம் நீங்கும்' என்ற துரியோதனனுக்குத் துரோணனின் மறுமொழி

'தனுவேதத்தின் கேள்விக்கும், சதுர்வேதத்தின் வேள்விக்கும்,
செனுவே! உன்னை அல்லது இனிச் செய்து முடிக்க வல்லவர் யார்?
மனுவே அனைய உதிட்டிரனை நாளைச் சமரில் மற்று இதற்கு ஓர்
அனுவே என்ன அகப்படுத்தின் அல்லால், செற்றம் அறாது' என்றான்.

'பெற்றோன்தனினும் சத மடங்கு வலியோன் வீமன் பின் நிற்க,
பொன்-தோள் விசயன் முன் நிற்க, பொரும் போர் முனையில் போர் உதவி
அற்றோர் போல, வில் வலியால், அறத்தோன்தன்னை அகப்படுத்தல்,
மற்று ஓர் பிறப்பில் தெரியாது, இப் பிறப்பில் முடிக்க மாட்டேமால்!

'செவ் வாய் வைக்கும் வலம்புரிக் கைத் திருமால் செம்பொன் தேர் ஊர,
வெவ் வாய் வாளி வில் விசயன், மெய்ம்மைத் தருமன் அணி நின்ற
அவ் வாய் இமைப்போது, அணுகாமல் காப்பார் சிலர் உண்டு ஆம் ஆகில்,
இவ் வாய் நாளை அகப்படுத்தித் தரலாம்' என்றான் எழில் மறையோன்.

திகத்தராசன் முதலியோர், 'தருமனுக்கு உதவியாக வாராதபடி விசயன் வீமன் முதலியோரை வளைப்போம்!' என வஞ்சினம் மொழிதல்

திகத்த ராசன் முதலாகச் சஞ்சத்தகரில் சில மன்னர்,
உகத்தின் கடையில் கனல் போல்வார், ஒருவர்க்கு ஒருவர் உரை முந்தி,
'சகத்துக்கு ஒருவன் எனும் விசயன் தம்முற்கு உதவி செய்யாமல்
மகத்தில் சனிபோல் வளைக்குவம் யாம்!' என வஞ்சினமும் பல சொன்னார்:

'அருளே வடிவு கொண்டனையோன் அருகு அங்கு அமரில் அணுகாமல்,
உருள் ஏர் இரதத்து அருச்சுனனை, ஒரு நாள் முழுதும் தகைந்திலமேல்,
மருளே கொண்டு, குடி வருந்த, மனு நூல் குன்றி, வழக்கு அழிய,
பொருளே வெஃகும் அரசரைப்போல் புகுவேம் யாமும் நரகு!' என்றார்

'மறனில் சிறந்த புய வலியால் வரை போன்று அனிலன் மைந்தன் எனப்
புறன் நிற்பானைத் தம்முனிடைப் போகாவண்ணம் தகைந்திலமேல்,
அறனின் கொண்ட தன் மனையாள் அமளித் தலத்தின் அழுது இரங்க,
பிறன் இல் தேடும் பெரும் பாவி பெறும் பேறு எமக்கும் பேறு!' என்றார். 42

'கன்றால் விளவின் கனி உதிர்த்தோன் கடவும் திண் தேரவன் ஆக,
வன் தாள் தடக் கை மாருதியே ஆக, அமரில் மறித்திலமேல்,
என்று ஆம் நாளை, முனி போரின், எந் நன்றியினும் செய்ந்நன்றி
கொன்றார் தமக்கு, குருகுலத்தார் கோவே! யாமும் கூட்டு' என்றார்.

வேந்தர்களையும் துரோணனையும் அனுப்பிவிட்டு, துரியோதனன் தன் இருப்பிடம் சேர்தல்

இவ்வாறு உரைத்த வேந்தர்தமக்கு எய்தும் சிறப்புச் செய்து, அகற்றி,
கை வார் சாப முனிவரன்தன் கழற் கால் வணங்கி, 'ஏகுக!' எனச்
செவ் வாய் மலர்ந்து, மானத்தால், திறலால், வாழ்வால், செகத்து ஒருவர்
ஒவ்வா அரசன், தன் கோயில் அடைந்தான், விபுதர்க்கு ஒப்பானே.

சூரியன் குணபால் தோற்றம் செய்தல்

கங்குல், சிலை நூல் முனிவனுடன் கழற் கால் அரசன் பணித்தமை கேட்டு,
அங்குத் தரியாது, 'இவன் கரத்தே அருள் கூர் நெஞ்சன் அகப்படும்' என்று,
இங்குத் துயில்வார் யாவரையும் இரு பாளையத்தின் இடந்தோறும்
சங்கக் குரலால் துயில் எழுப்பி, தபனன் குணபால் தான் சேர்ந்தான்.

40. பன்னிரண்டாம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

பொய்யாத தவ முனி பின் போயருளி, தாடகைதன்
மெய் ஆவம் நிகர் என்ன வெஞ் சரத்தால் அழுத்திய பின்,
மை ஆழி முகில் வண்ணன் வாங்கியன, பூங் கமலக்
கையாலும் ஒரு சாபம்; காலாலும் ஒரு சாபம். 1

இரவில் துரியோதனன் துரோணனுக்கு உரைத்தவற்றை ஒற்றரால் அறிந்த தருமன் கண்ணனுக்கும் விசயனுக்கும் கூறி, போருக்கு எழுதல்

அல், தராபதி கருதி, ஆசானோடு உரைத்த எலாம்
ஒற்றரால் அக் கணத்தே உணர்ந்த முரசக் கொடியோன்,
மற்று அரா-அணை துறந்த மாயனுக்கும், விசயனுக்கும்,
சொற்று, அராபதம் நெருங்கத் தொடைத் தும்பை புனைந்தானே. 2

கண்ணன் தருமனை நடுவில் வைத்து, மண்டல வியூகம் வகுத்தல்

கருங் களவின் கனி வண்ணன், கனை கழற் கால் வேந்தரொடும்
பெருங் களம் சென்று எய்திய பின், பேணார்கள் வெருக் கொள்ள,
இருங் களிறு, தேர், பரி, ஆள், இரு மருங்கும் புடை சூழ,
வருங் களி கொள் வருதினியை மண்டலமா வகுத்தானே. 3

பின் நிறுத்தி மாருதியை, பேர் அணியில் பல வகையாம்
மன் நிறுத்தி, இரு பாலும் மருத்துவர் மைந்தரை நிறுத்தி,
மின் நிறுத்து நெடு வாளி விசயனையும், குமரனையும்,
முன் நிறுத்தி, நடு நின்றான் முரசம் நிறுத்திய கொடியோன். 4

துரோணன் மகர வியூகமாகச் சேனையை வகுத்தல்

இப்பால், மற்று இவர் நிற்ப, இரவு உரைத்த மொழிப்படியே
தப்பாமல் திகத்த குலத் தலைவனும், சஞ்சத்தகரும்,
துப்பு ஆர் வெஞ் சிலைத் தடக் கைத் துரோணன் முதல் அனைவோரும்,
அப்பால் வந்து, அணி மகர வியூகம் வகுத்து அணிந்தாரே. 5

திரிகர்த்தராசனும் நாரண கோபாலரும் விசயனை அறைகூவி, வில் வளைத்துப் பொருதல்

கார் அணிபோல், பொருப்பு அணிபோல், காற்று அணிபோல்; களிற்று அணியும்,
தேர் அணியும், பரி அணியும்; திரிகத்த குலபதியும்,
நாரணகோபாலர் எனும் நராதிபரும், வாள் விசயன்
காரணமா அறைகூவி, கடுங் கொடுங் கார்முகம் வளைத்தார். 6

தருமனைக் காக்குமாறு அருகு நின்ற அரசர்களுக்கு உரைத்து, விசயன் வில் வளைத்து எதிர் பொருதல்

ஆர்த்து வரும் அவர் நிலை கண்டு, 'அரசனை நீர் இமைப்பொழுது
காத்திடுமின்' என நின்ற காவலரோடு உரைசெய்து,
கோத் தருமன் பணித்ததன்பின், கோதண்டம் உற வாங்கி,
பார்த்தனும், அன்று அவர் எதிர் போய், பல வாளி மழை பொழிந்தான். 7

தூளியே அண்டம் உறத் தூர்த்து முதல், அகல் விசும்பை
வாளியே தூர்க்கும்வகை மலை வாங்கு சிலை வாங்கி,
ஆளிஏறு அனையானும் அவனிபரும், கவந்தமுடன்
கூளியே நடம் ஆட, கொடுஞ் சமரம் விளைக்குங்கால், 8

சயத்திரதன் முதலிய முப்பதினாயிரர் சூழத் துரோணன் வருதல்

தடித் தலை வேல் சயத்திரதன், சவுபலன், குண்டலன், முதலா
முடித் தலை வாள் அடல் நிருபர் முப்பதினாயிரர் சூழ,
இடித் தலை மா முரசு இயம்ப, இப துரகப் படை சூழ,
கொடித் தலை மான் தடந் தேரான் குனி சிலையின் குரு வந்தான். 9

திட்டத்துய்மன் பாஞ்சாலர் சூழ வந்து துரோணனை எதிர்த்தல்

வந்த குரு, குருகுல மா மன்னுடன் போர் புரிவதன்முன்,
பந்தம் உறப் பாஞ்சாலர் பல் பதினாயிரர் சூழ,
முந்த வயப் பணை முழங்க, முழங்கு ஒலி நீர் கொதிப்பதுபோல்,
அந்த முனிக்கு எதிர் நடந்தான், ஐவர் சேனாபதியே. 10

இருவர் பெருஞ் சேனையும் உற்று, எதிர் எதிர் ஆயுதம் எடுத்து, அங்கு
ஒருவர் ஒருவரை வேறற்கு ஒண்ணாத அமர் உடற்ற,
செருவில் அரிஏறு அனையான் திட்டத்துய்மனும் வெகுண்டு,
பொரு சிலை வெங் கணை பொழிந்தான்; போர் வேந்தர் பலர் மடிந்தார். 11

துன்முகனைப் புறங்கண்டு, துன்மருடன் முனை சாய்த்து,
கல் முகம் ஆம் காந்தாரர், கலிங்கர், கவுசலர், நிடதர்,
புன் முகராய் இளைத்து ஓட, பொருது அழித்தான்; பொருது அழிந்த
மன் முக வெம் பெருஞ் சேனை மறையவன்பால் அடைந்தனவே. 12

சேனையிலுள்ளோர் அழிந்து மீள்வது கண்டு, துருபதன் முதலியோர் சிலையை அறுத்து, தானையையும் துரோணன் அழித்தல்

மறை வாய் வெஞ் சிலை முனிவன் வரூதினி தன் நிலை அழிந்து
குறைவாய் வந்தமை கண்டு, கோதண்டம் எதிர் வாங்கி,
துறை வாய் வெங் கனல் போலும் துருபதன் கைச் சிலை துணிய,
பிறை வாய் வெங் கணை தொடுத்து, பிறைமுடியோன் எனச் சென்றான். 13

சத்தியகேதுவின் சாபம் சரம் ஒன்றால் இரண்டு ஆக்கி,
சித்திர வெஞ் சிலை ஆண்மைச் சிகண்டியையும் சிலை அறுத்திட்டு,
உத்தமபானுவை முதலா உள்ள கொடுந் திறல் வேந்தர்
தம் தம் உயிருடன் போகத் தானை எலாம் மடிவித்தான். 14

தாண்டிய வெம் பரி நகுல சாதேவர் வென்னிட்டார்;
பாண்டியனும் முதுகிட்டான்; பாஞ்சாலர் புறமிட்டார்;
ஈண்டிய வெங் களத்து அவிந்தார் எத்தனை ஆயிரம் வேந்தர்!—
தூண்டிய வெம் பரி நெடுந் தேர்த் துரோணன் கைத் தொடையாலே. 15

துரோணனும் தருமனும் அடுத்து நின்று பொருதல்

வடுத் தரு வெஞ் சிலீமுகமும் வணக்கு கொடுஞ் சராசனமும்,
எடுத்து மனம் கதாவு சினம் எழுப்ப எழுந்து, ஓர் ஓர் நொடியின்
நடுத் தகைவு இன்றி வானவரும் நடுக்குறுகின்ற போர் முனையில்,
அடுத்தனர், வன் தபோதனனும் அடல் தருமன் குமாரனுமே. 16

அதிர்த்தன, சங்க சாலம் முதல் அனைத்து விதம் கொள் காகளமும்;
உதிர்த்தன, அண்டகோளம் உற ஒலித்து உடுவின் குழாம் முழுதும்;
விதிர்த்தன, செங் கை வாளொடு அயில்; விழித்தன, கண்கள் தீ உமிழ;
எதிர்த்தன, தங்கள் சேனைகளும், எதிர்ப்படு மைந்தர் போர் செயவே.

நாற்படைகளும் செருச் செய்த வகை

மதித்து மதங்கள் ஏழினும் மெய் வனப்பு உறு கொண்டல் மானுவன;
கதித்து நெடுங் கை வீசி, உடு கணத்தை முகந்து வாருவன;
மிதித்து, உரகன் பணா முடிகள் விதிர்த்து, வெகுண்டு, உலாவுவன;—
கொதித்து, இரு கண்களாலும் எரி கொளுத்தின கும்ப வாரணமே.

'வரைக் குலம் என்று கூறிடின், அவ் வரைக்கு வயங்கும் நேமி இல;
நிரைக்கும் நெடும் பதாகை இல; நிறத்த கொடிஞ்சி ஆதி இல;
உரைப் பட உந்து பாகர் இல; உகைத்த துரங்க ராசி இல;
இரைத்து விரைந்து உலாவல் இல' என, செரு மண்டு தேர் பலவே!

உகத்தின் முடிந்த நாள் அலையோடு ஒலித்து எழு சங்க வேலை என,
மிகப் புகை கொண்டு வானுலகும் வெடித்திட மண்டு தேயு என,
நகச் சிகரங்கள் சாய எதிர் நடப்பன சண்ட வாயு என,
இகல் செய்து, செம் பராகம்மிசை எழுப்பின— துங்க வாசிகளே.

விளைத்தனர், தொந்தமாக அமர்; மிகைத்தனர், தம்தம் வீரமுடன்;
உளைத்தனர், சிங்க சாபம் என; உறுக்கினர், சென்று மேல் முடுகி;
வளைத்தனர், கொண்ட வார் சிலைகள்; வடித்த சரங்களால் உழுது,
திளைத்தனர், வென்றி கூரும்வகை;—செருக்களம் எங்கும் ஆடவரே.

உதிட்டிரனும் துரோணனும் பொருத வகை

மிகைத்தனர்; தும்பை மாலை முடி மிலைச்சினர்; 'இன்று சாலும்!' என
நகைத்தனர்; தங்கள் தேரும் எதிர் நடத்தினர்; சண்ட வேகமொடு
பகைத்தனர்; அங்கம் யாவும் மிசை படப் பட, நஞ்சு கால் பகழி
உகைத்தனர்;—அன்றை ஆடு அமரில், உதிட்டிரனும் துரோணனுமே.

துரோணன் தனது தேர் முதலியன இழந்து, தளர்வுற்று மீளுதல்

சினத்து முனைந்த போரில் வரு சிலைக் குருவின் பதாகை அற,
மனத்தினும் முந்து மா துணிய, வயத்துடன் உந்து பாகன் விழ,
அனைத்து உருளும் சதாவியிட, அடுக்கு உற நின்ற தேர் அழிய,
இனத் தொடை ஐந்து பூபதியும் இமைப்பொழுதின்கண் ஏவினனே.

தனித்து மலைந்த போரில் எழு தலத்து அரசன் கை வாளிகளில்
அனத்தம் விளைந்து, நாணொடு வில் அறத் துணியுண்டது; 'ஆகவமுன்,
முனிக்குலம் என்றும், ஆதி மறை முதல் குரு என்றும், மேன்மை உற
இனிக் கணை ஒன்றும் ஏவுகிலம்; இளைப்பு அற, அஞ்சல், ஏகு' எனவே,

அறத்தின் மகன்தன் ஆண்மையினை அழித்து, உயிர் எஞ்சிடாவகை தன்
மறத்தொடு கொண்டுபோவல் எனமதித்து, எதிர் வந்த சாப முனி,
திறத்தின் இவன் கை ஏவு கணை செயித்தது கண்டு, நாணி, மெலிவு
உறத் தளர்சிந்தையோடு, தனதுஉடற் சுமை கொண்டு போயினனே.

துரோணன் மீண்டும் தேரில் வர, தருமன் பக்கத்து வீரர்கள் வளைத்துப் பொருதல்

தருமன் மைந்தனுடன் மலைந்து சமரில் அஞ்சி ஓடியும்,
கருமம் நன்று பட நினைந்த கலசயோனி, பின்னையும்,—
முரண் மிகுந்து உடற்றவேகொல், முந்த ஓடவே கொலாம்—
விரைவுடன் சினம் கடாவ வேறு ஓர் தேரில் ஏறினான்! 26

தங்கள் மன்னன் அம் முனைத் தனித்து வென்ற வின்மையும்,
துங்க வென்றி இன்றியே துரோணனார் அழிந்ததும்,
அங்கு உளம் கனன்று மீள அணிகொள் தேரின் ஆனதும்,
சிங்கம் என்ன அருகு நின்ற சிறுவர் கண்டு சீறியே, 27

முந்தி முந்தி மச்ச ராசனோடு சேனை முதல்வனும்,
குந்திபோசன் ஆதியான குல மகீபர் யாவரும்,
வந்து சூழ, வேழமீது வய மடங்கல் செல்வபோல்,
அந்த வேத முனியை ஓடி அக் கணத்தில் வளையவே, 28

கன்னன் ஆதி, சகுனி ஆதி, கலிங்கதேசன் ஆதியா,
மன்னன் ஆதியாக அங்கு மறையவன் பெரும் படை;
தென்னன் ஆதி, நகுலன் ஆதி, திட்டத்துய்மனோடு அபி-
மன்னன் ஆதியாக இங்கு உதிட்டிரன் வரூதினி; 29

'நின்ற சேனை மன்னர்தாமும், நின்ற அந் நிலத்திடைச்
சென்ற சேனை மன்னர்தாமும், எங்கணும் செருச் செய்தார்'
என்று கூறி எதிர் உரைத்தல் யாவருக்கும் முடிவுறாது;—
ஒன்று நூறு சின்னமா உடைந்தது, ஓர் ஓர் உடலமே! 30

வேல் விதத்தும், வாள் விதத்தும், வில் விதத்து விடு நெடுங்
கோல் விதத்தும், முடி துணிந்த கொற்ற மன்னர் சற்று அலார்—
நூல் விதத்து மிக்க கேள்வி நோன் சிலைக் கைம் முனி படை,
கால் விதத்து, ரத துரங்க கய விதத்து, வயவரே. 31

குத்துவார், படைக்கலங்கள் கொண்டு; மல் குறிப்பினுல்
மொத்துவார்; இரண்டு தேரும் முட்ட விட்டு, மொய்ம்பினுல்,
ஒத்துவார்; களிற்றினின்றும் ஒரு களிற்றின் முதுகு உறத்
தத்துவார்; துரங்கமங்கள் தாரையாக ஏறுவார். 32

கொற்ற வாளின் முடி இழந்த குறை உடம்பு வாளுடன்
சுற்ற சாரி ஓடும் அக் கணக்கு அறிந்து புகழுவார்;
அற்ற கால்கள் அற்ற கைகள் ஆயுதங்களாகவே
எற்றுவார், படைக்கலன் இழந்து நின்ற வீரரே. 33

சொன்னவாறு குறியும் உள்ள துரகதம் துணிந்தன;
கன்ன ஆறு சொரி மதக் களிற்றினங்கள் விழ்ந்தன;
பின்ன ஆறு பட்டன பிறங்கு தேர்; பதாதிகள்
இன்னவாறு பட்டன எனக் குறித்து இயம்ப ஒணு! 34

'உங்கள் சேனை கெட்டது' என்று உதிட்டிரன் தளத்து உளார்
திங்கள் அன்ன கும்ப யோனி சேனைதன்னை இகழுவார்;
'எங்கள் சேனை கெட்டது உங்கள் இறைவன் வின்மையால்!' என,
தங்கள் சேனை அந்தணன் தளர்ந்ததற்கு இரங்குவார். 35

இருபக்கத்தாரும் தொந்த யுத்தம்செய்தபொழுதில், கடோற்கசனும் அபிமனும் வர, பகைவர் சேனை பறந்தோடுதல்

இரு தளத்தும் நின்ற மன்னர் இருவராக இகலியே,
ஒரு தளத்து மன்னர் என்ன ஒத்து நின்று, உடற்றினர்;
பொரு தளத்தின் இங்ஙன் நின்று போர் புரிந்த பொழுதிலே,
வரு தளத்தொடு உதவினுன், மருத்து வீமன் மைந்தனே. 36

நிருத கன்னி மகனும், நேமி நீல வண்ணன் மருகனும்,
கருதி நெஞ்சு அழன்று வந்த காவல் மன்னர் யாவரும்,
சுருதி அன்ன தூ மொழித் துரோணன்மேல் நடக்கவே,
பரிதி கண்ட பனி என, பகைத் தளம் பறந்ததே. 37

பறந்து போய் நெடும் பணிப் பதாகையானெடு எய்தினர்—
பிறந்து போய் வளர்ந்த பின் பிறப்பு உணர்ந்த பெருமனும்,
துறந்து போய விதுரன் முன் துணித்த வில் எனத் துணிந்து
இறந்துபோன மன்னர் அன்றி, நின்ற மன்னர் எவருமே. 38

சேனையின் நிலை உணர்ந்த துரியோதனன் அரசர்களுடனும் சேனைகளுடனும் வந்து அணி வகுத்துப் பொர, அபிமனால் அச் சேனை உடைதல்

வதிட்டனும் துதிக்கும் வாய்மை வரி சிலைக் கைம் முனிவனோடு
உதிட்டிரன் புரிந்த போர் உரைக்கவே உணர்ந்துளான்,
'பதிட்டிதம் பிறந்தது, இன்று, பாண்டவர்க்கு ஞாலம்!' என்று,
அதிட்டம் ஒன்றும் உணர்கலானும், அனில வேகம் ஆயினான். 39

விட்ட விட்ட ரத துரங்க வேழ வாகனத்தொடும்,
தொட்ட தொட்ட சிலையொடும், துணிந்து, வெங் களத்திடைப்
பட்ட பட்ட நிருபர் தங்கள் பாடு காண எண்ணியோ,
'முட்ட முட்ட ஏகுக' என்று, தன் படைக்கு முந்தினான்! 40

முந்த வந்த மன்னனும், முரண் கொள் வாகை அரசரும்,
வந்த வந்த சேனையும், வகுத்து அணிந்து முனையவே,
அந்த அந்த முனைகள்தோறும் அந்த அந்த வீரர் மெய்
சிந்த வந்து உடற்றினன், சிலைத் தடக் கை அபிமனே. 41

சிந்தி வாளி மழைகள், ஓடு சிலை வளைத்து, முடுகு தேர்
உந்தி, வாரி மேகம் என்ன, அமர் செய்தானும் ஒருவனே;
அந்தி வானம் ஒத்தது, உற்ற குருதிநீரில் அக் களம்;
தந்தி வாசி தேர்களோடு உடைந்தது, எண் இல் தானையே. 42

துரோணன் தருமன் முன் நிற்க ஆற்றாது, தப்பிச் செல்லுதல்

ஏறு தேர் அழிந்து, சாபம் இற்று, முற்றும் இன்றியே,
வேறு தேரும் இன்றி நின்று, வில் எடுத்த வேதியன்
கூறு தேர் உதிட்டிரன் குனித்த விற்கு உடைந்து, பல்
நூறு தேர்தனைப் புரக்க, நொய்தினில் கழற்றினான். 43

பகதத்தன் தனியே வந்து, தருமன் சேனையை எதிர்த்தல்

முனியும், ஏனை யானை தேரில் முடுகி வந்த நிருபரும்,
குனி சிலைக் கை அபிமன் வெங் கணைக்கு வென் கொடுக்கவே,
'இனி நமக்கு நல்ல காலம்!' என்று சீறி எய்தினான்,
தனிதம் மிக்க சலதம் அன்ன சதமகன் சகாயனே. 44

'அதி தவள மத்த வாரணமும், முதல்
அமுத மதனத்தில் ஆழிமிசை வரும்
மத களிறு சுத்தமாக; இவனும் அம்
மகபதி; எடுத்த கார்முகமும் அவன்
எதிர்தர எடுத்த சாபம்; இவனுடன்
இகல்செய நினைக்க யாவர் உளர்?' என,
விதம் உற வகுத்த யானை அணியுடன்
விருது பகதத்த ராசன் உதவவே,— 45

இருபது பதிற்று நூறு களிறு உள;
இவனினும் மிகுத்த வீரர் கடவுவர்;
ஒருபது பதிற்று நூறு மழ களிறு
உவமை என மிக்க வாகு வலியினன்;
முருகன் என, வெற்றி நேமி முகில் என,
முரண் அவுணருக்கு வாழ்வு கெட, உயர்
சுரபதிதனக்கு வாழ்வு வரும் வகை
சுரர் உலகு அளித்த தோமன் இவன்அரோ.— 46

எழில் அணி தடக் கை மேரு கிரி நிகர்
இப சிரம் அதைக்க மோதி, உரும் என
மொழி உற அதிர்த்து, நீடு புய கிரி
முறை முறை தடிக்க, வேகமொடு புகை
பொழி சினம் மனத்தின் மூள, அவிர் ஒளி
புனை நுதல் வெயர்க்க, வாயு கதி என,
விழிவழி நெருப்பு வீழ, விரைவுடன்
விறல் மிகு களத்தில் ஆன பொழுதிலே, 47

பகதத்தனுடன் பின்னிட்ட சேனையும் துரியோதனன் முதலியோரும் வந்து கலக்க, தருமனும் அபிமனும் எதிர் ஏற்க, சேனைகள் பொருதல்

பொருது புறகிட்ட சேனை, இவன் வரு
பொலிவொடு புறக்கிடாது திருகின;
அரவினை உயர்த்த கோவும், இளைஞரும்,
அவனிபரும், ஒத்து மீள முடுகினர்;
முரசு எழுது பொன் பதாகை நிருபனும்,
முதல் அமர் செகுத்த வாகை அபிமனும்,
இரு கை மலர் கொட்டி ஆடி எதிர்கொள,
இரு படையும் உற்ற பூசல் விளையவே, 48

வீமனும் பகதத்தனும் கைகலந்து நின்று பொருதல்

'நிசிசரன் எடுத்த ஆதி கயிலையும்
நிகர் அல இதற்கு' எனு, முன் வரு கரி
விசையுடன் நடத்தி, 'வீமன் எவன்? அவன்
விறல் முடி துணித்து மீள்வன் இனி!' என,
வசை பல பிதற்றி, வேகமுடன் வரும்
வலிய பகதத்தன் வாகு கிரிகளை
ஒசிதர வளைத்து, மார்பு சுழிதர
ஒரு கைகொடு குத்தி, வாயு குமரனே, 49

கதைகொடு, பனைக் கை வீசி எதிர்வரு
கட கரியின் நெற்றி ஓடை அணியொடு
புதைபட அடித்து, மீள, விசையொடு
புரவி இரதத்தின்மீது குதி கொள;
இதய மலர் செற்றம் மூள இவன், அவன்
எதிர் சிலை வளைத்து, வாளி நிரைபட
உதைய, உதைபட்ட வாளி தனது கை
உயர் கதை புடைத்து விழ முனையவே, 50

'ஒருவரை ஒருத்தர் வேறல் அரிது அரிது,
ஒருபடி செருச் செய்தாலும் இனி!' என,
இருவரும் எடுத்த சாபம் ஒலிபட,
எதிர் எதிர் தொடுத்த வாளி நெடு மழை
ஒருவர் உடலத்தின் மூழ்கி முனை உற
உருவு தொழில் அற்று, நூலின் முறைமையின்
இருவரும் விலக்க, ஓடி விலகின,
எதிர் எதிர் கடித்து, வானம் மறையவே. 51

மகரிகை மருப்பு நாலும் உள எனில்,
வலிய குண திக்கில் வாரணமும் இனி
நிகர் அல இதற்கு; நாமம் உரைசெயின்,
நிலை உடைய சுப்ரதீகம்; இதன் வலி
பகரில், இபம் எட்டும் நாணும்; எதிர் எறி
படைகள் உலவுற்ற போரில், எரி வரு
புகர் முக கரக் கபோல மத கரி
பொரு தொழில் உரைக்கலாகும் அளவதோ? 52

கரிகளை எடுத்து வானின் இடை இடை
கர நுதி கொடு எற்றும்; நீடு பிறை நிகர்
இரு பணை மருப்பினாலும், அவர் அவர்
எதிர் எதிர் உடைக்கும், நேமி இரதமும்;
உரனுடைய சித்ர வால்கொடு ஒருபடி
ஒலியொடு புடைக்கும், வாசி விழ விழ;
அரவு அபயம் இட்டு வீழ நடை பயில்
அடிகொடு துகைக்கும், வீரர் அணியையே. 53

பகதத்தனாலும் அவனது யானையாலும் நேர்ந்த தளர்ச்சி கண்டு
தருமன் கண்ணனை நினைத்தல்

அமர் செய் பகதத்தனாலும், அவன் விடும்
அருவிமத வெற்பினாலும், அணி கெழு
தம படை இளைத்ததாக, விரகொடு
தருமன் உணர்வுற்று, வேறு ஓர் திசையினில்
இமிர் முரசம் எற்று பூசல் புரிதரும்
இளையவன் நடத்து தேரின் வலவனை,
நிமலனை, அனைத்தும் ஆன ஒருவனை,
நினையினன், மனத்தினோடு பரவியே. 54

'தருமனுக்கும் பகதத்தனுக்கும் கடும்போர் விளைந்துள்ளது; அங்கு விரைந்து
செல்ல வேண்டும்' என விசயனுக்குக் கண்ணன் கூறுதல்

நினைவுற்ற பொழுது, எழுது முரசு உற்ற கொடி நிருபன்
நியமித்தபடி தரியலார்
முனை மட்க அமர் பொருது, செயம் முற்றி, உவகை பெறு
முகில் ஒத்த வடிவின் நெடுமால்,
புனை விற் கை அடு பகழி திசை சுற்றும் மறைய நனி
பொழி கொற்ற விசயனுடனே
வினை முற்றி, 'உயர் தருமனுடன் இற்றை அரிய அமர்
விளைவுற்றது' என உரைசெய்தான்: 55

'ஒரு பத்தொடு உறழ் ஒருபது உறழ் பத்தொடு உறழ் ஒருபது
உடை எட்டு நிருபர் உயிர் நீ
தெரிவித்த பகழிகொடு மடிவித்து, வலிமையொடு
சில வெற்றி உற அமர் செய்தாய்;
முரண் அற்றது இவண்; இனி உன் உயிர் ஒத்த தமையனொடு
முனை புக்கு விரைவின் அணுகா,
வரை ஒத்த களிறு உடைய பகதத்தன் உயிர் கவர 56
வருகிற்றி நொடியில்' எனவே,

கண்ணன் விசயனோடு பகதத்தனை அணுக, அவன் வீமனுடன் செய்த
போரை விட்டு, விசயனை எதிர்த்தல்

அரி ஒத்த பரி கடவி, மனம் ஒத்த இரதமிசை
அமரர்க்கு முதல்வன் மகனோடு,
எரி பற்றி வரும் அனிலம் என வெற்றி வரி வளையும்
இதழ் வைத்து, அவ் ஒரு நொடியிலே
கிரி முற்றும் அரிவது ஒரு கிளர் வச்ரம் என, உதய
கிரி உற்ற பரிதி எனவே,
கரி சுற்றும் வர விகட கரடக் கைம் மலையில் வரு
களை விக்ரமனை அணுகினன். 57

அனிலத்தின் மதலையொடு வயிரத்து மலையும் முனை
அமர் விட்டு, முகிழ் நகை செயா,
'இனி இற்றை அமரில், அரிது, எளிது ஓட்டி எதிர் பொருதல்'
என, மத்த கரியின் மிசையான்,
மனம் முற்றும் அழல் கதுவ, மொழி முற்றும் இடி நிகர,
வலி பட்ட சிலையை வளையா,
மினல் ஒத்த கணை பலவும் வசை அற்ற புகழுடைய
விசயற்குமிசை உதவினன். 58

அவன் விட்ட சுடுகணைகள் கொடி மற்கடமும் நடுவண்
அற வெட்டி, அதி தவள மா
கவனத்தின் முடுகி அடு பரி கொத்தி, உடலில் இடு
கவசத்தை மறைய நுழையூ,
சிவனுக்கும் மலரில் உறை பிரமற்கும் உணர்வு அரிய
திகிரிக் கை வலவனையுமே
சவனத்தில் மிகு துயரம் உறுவிக்க, அவசம் மிகு
தளர்வு உற்ற தனு விசயனே, 59

உரம் மிக்க தனது சிலை குனிவித்து, மதியின் வகிர்
உவமிக்கும் அடு பகழியால்,
வரம் மிக்க தவள நிற மத வெற்பை எதிர் கடவி
வரு வெற்றி அவனிபதி நீள்
கரம் உற்ற சிலை, கவசம், அற வெட்டி, விடு கணைகள்
கணை விட்டு விலக, அவன் மா
சரம் விட்டு, ஓர் அயில் விசயன் இரதத்தின் வலவன்மிசை
தமரத்தினுடன் எறியவே, 60

எறிகுற்ற அயில் அசுரர் உயிர் செற்ற அயில் அதனை
எதிர் முட்ட விடு பகழியால்
தறிவித்து, மகபதிதன் மகன், முக்கண் இறைவனொடு
சரி ஒத்து முறுவல் புரியா,
வெறி மத்த கரட முகபட சித்ர புகர் கொள் முக
விகடக் கைம்மலை அணி எலாம்
முறியத் தன் வரி வில் உமிழ் முனை பட்ட பகழி மழை
முகில் வர்க்கம் என முடுகினன். 61

விசயன் எய்த அம்பு மழையால் பகதத்தனது யானைகளின் அணி குலைதல்

அணி கெட்டு, மத கரிகள் கரம் அற்று விழ, முதிய
சிரம் அற்று விழ, அருகு தாழ்
மணி அற்று விழ, நெடிய குடல் அற்று விழ, முழை கொள்
வயிறு அற்று விழ, உடல் எலாம்
துணிபட்டு விழ, விசிறு செவி அற்று விழ, வலிய
தொடை அற்று விழ, மகரிகைப்
பணி பெற்ற பணைகளொடு பதம் அற்று விழ, உழுது
படுவித்த பல பகழியே. 62

பகதத்தன் விசயன்மேல் எறிந்த வேலைக் கண்ணன் தனது உடம்பில் ஏற்க,
அது மாலையாக அமைந்து விடுதல்

பெயர் பெற்ற கரி வயவர் பிணம் மிக்க அமரினிடை
பிறகிட்டு முறியும் அளவே,
சய சக்ரதரனை இவன் வழிபட்ட பொழுது தரு
தழல் உக்ரம் உடையது ஒரு வேல்
வயம் உற்ற சிலை விசயன் உடலத்தின் எறிவது தன்
வடிவத்தில் உற உதவினான்,
அயர்வு உற்ற உணர்வின் நலம் என—முத்தி முதல்வன் என
அருகு உற்ற ரத வலவனே. 63

பருமித்த களிறு விடு பகதத்தன் எறியும் முது
பகை செற்று வரு கொடிய வேல்
மருமத்தினிடை முழுகு பொழுதத்தில், அது புதிய
மணி வர்க்கம் மிகு தொடையலாய்
நிருமித்தபடி தனது புய வெற்பின்மிசை ஒளிர,
நிகர் அற்ற கருணை வடிவைக்
கருமத்தின் முதலை இமையவர் சித்தமொடு தொழுது
கரை அற்ற புகழ் உரைசெய்தார். 64

பகதத்தன் உயிர் போக்கத் தக்க தருணம் என்று கூறிக் கண்ணன் அம்பு கொடுக்க,
விசயன் தொழுது வாங்கி, அவன்மேல் செலுத்துதல்

இது நிற்க, 'யமனை நிகர் பகதத்தன் உயிர் கவர,
இது பக்வம்' என, விசயனோடு
உதரத்தின் முழுது உலகு குடி வைத்த புயல் உரைசெய்து,
உறுதிக்கண் விடு பகழிதான்
இதயத்தினுடன் அருள, உயர் வச்ரன் மதலை தொழுது,
இரு பொற் கைம் மலர்கொடு கொளா,
அதிரத் தன் எதிர் களிறு பொர விட்ட நொடியில், அவன்
அகலத்தின் உருவ விடவே, 65

பரி தத்த வரும் இரதமிசை தத்த, எதிர் முடுகு
பகதத்தன் உடல் முழுதும் நீடு
எரி தத்தி உகுவது என உகுவித்த குருதி நதி
இடை தத்த, வலி கெழுவு தோள்-
கிரி தத்த, மகுடமொடு தலை தத்த, ஒரு ரசத
கிரி தத்தி விழுவது எனவே
கரி தத்த, மறி அலகை கடை தத்தி உவகையொடு
களம் முற்றும் நடம் நவிலவே, 66

பகதத்தன் பட்டு வீழ, மன்னர்கள் விசயனையும் கண்ணனையும் புகழ்தல்

பகதத்தனும் பட்டு, அவன் ஊர்ந்த பகடும் பட்டு, புடை சூழச்
சிகரக் கிரிபோல் அணி நின்ற சேனைக் களிறும் பட்டமை கண்டு,
இகலின் பொழி கார் வெஞ் சிலைக் கை இமையோர்-தலைவன் குமரனையும்,
புகழ்தற்கு அரிய பாகனையும், புகழார் இல்லைப் பூபாலர். 67

காந்தாரர் விசயனைச் சூழ்ந்து பொருதபோது, சகுனி புதல்வர் இருவர் இறத்தல்

விருதும், சங்கும், பல்லியமும், மேன்மேல் அதிர, 'வில் போரில்
பொருது இன்று இவனைக் கொன்று அன்றிப் போகோம்' என்னப் புடை சூழ்ந்தார்—
மருதும் சகடும் விழ உதைத்த வலவன் கடவ, வாயு எனக்
கருதும் புரவித் தேர் ஊரும் கழற் காவலன்மேல் காந்தாரர். 68

காந்தும் தறுகண் காந்தாரர் கடு வெங் கனல்போல் கண் சிவந்து, அங்கு
ஏந்தும் சிலையால் சர மழை பெய்து, எழிலிக் கணைபோல் எதிர் ஊன்றி,
சாந்தும் புழுகும் கமழ் வாகுச் சகுனி தனயர் தலைப்போரில்
சேர்ந்து அன்று இறந்தார், விடசெயனும் செயனும் எனும் போர்ச் செய வீரர். 69

சஞ்சத்தகர் விண் குடியேறத் தானே அடர்த்தான்; பகதத்தன்
விஞ்சைக் கடவுள் சிகரம் நிகர் வேழத்துடனே விழப் பொருதான்;
வஞ்சச் சகுனி மைந்தரையும் மலைந்தான்; விசயன் வடிக் கணையால்
எஞ்சப் பொருத நரபாலர்க்கு இலக்கு ஏது, அன்று அங்கு எண்ணுதற்கே!

சகுனி அரசர் பலருடன் கூடித் தருமனோடு போர் செய்து, பின்னிடுதல்

இங்கு இப்படி போர் உடன்று எழுந்த சகுனி இவன் கை எரிகணையால்
பங்கப்பட்ட அரசு ஒழிய, படாத அரசர் பலரோடும்,
சிங்கத் தனி ஏறு எனச் செம் பொன் தேர்மேல் நின்ற தருமனுடன்
புங்கப் படையால் அமர் புரியப் புகுந்தான், மதுகைப் புலி போல்வான்.

'சோரத்துடன் நீ பொருது அடர்த்த சூது அன்று; இவை மெய் துளைத்து உருவும்
வீரப் பகழி; உனை இவற்றால் வெல்வேன்!' எனப் போர் வில் வாங்கி,
ஈரக் கருணை முகத்து அண்ணல் எய்தான்; அவற்றுக்கு எட்டாமல்
பேரப் பேரத் தேர் கடவி, பின்னிட்டவர்க்கு முன் இட்டான். 72

உடனே வந்து பொரு நிருபர் ஒருவர்க்கு ஒருவர் உதிட்டிரன் கை
விடம் நேர் கணையால் ஏவுண்டு விளிந்தார்; ஒழிந்தார், 'வெஞ் சமத்தில்
கடன் ஏது எமக்கு!' என்று ஊர் புகுந்தார்; காலைச் செந்தாமரை மலர்ந்த
தடம் நேர் என்ன நிறம் பெற்றது, அப்போது அந்தச் சம பூமி. 73

துரோணன், துரியோதனன், முதலியோர் வீமனுடன் பொருதல்

ஆசாரியனும், திருமகனும், அடல் வேல் அங்கர் பெருமானும்,
தூசு ஆர் உரகக் கொடி நெடுந் தேர்த் துரியோதனனும், தம்பியரும்,
வீசா நின்ற மாருதம்போல் மேல் வந்து அடுத்த வீமனுடன்
கூசாது எதிர்ந்து, வெம் பகழி கோத்தார், விசும்பைத் தூர்த்தாரே.

வீமன் தனது போர் வன்மையால் பகைவரைக் கலக்குதல்

கெடுமோ கருடன் உரகர்க்கு? கிரி வெஞ் சரபம்தனை அரிகள்
அடுமோ? சக்ரபாணியுடன் அமர் உந்துவரோ அசுரேசர்?
நெடு மேருவின் முக் குவடு ஒடித்தான் நேயப் புதல்வன் பேர் உடலில்
படுமோ, தொடுத்த பகழி? பருப்பதம் சேர் மழைபோல் பாறினவே!

பொல்லா அவுணர் வைகிய முப்புரம் நீறு எழ, அன்று அரன் வளைத்த
வில்லாம் என்ன வலிய விறல் வில் ஒன்று எடுத்து, விறல் வீமன்,
எல்லா மன்னவரும் ஊர்ந்த எல்லா இரதங்களும் இமைப்பின்
வல்லான் எறிந்த பம்பரம்போல் சுழலும்படி, கால் வளைத்தானே.

ஒன்று முதலாப் பல பகழி ஓர் ஓர் தொடையில் தொடுத்து ஏவி,
அன்று முதன்மை உற மலைந்த அரசர் உடலம்தொறும் மூட்டி,
'இன்று முதல் ஆயோதனத்தில் ஏறேம்' என்னும்படியாகக்
கொன்று, முதல், பின் வரும் உரகக் கொடியோன் மனமும் கொதிப்பித்தான். 77

'கொதித்தான் அரசன்' என வரி வில் குனித்தார், இளைஞர்; குனித்தது கண்டு,
அதிர்த்தான், வீமன் தன் கணையால் அறுத்தான், வில்லும் அணி நாணும்;
'விதித்தான் வரினும் வீமனுடன் விற் போர் புரிதல் அரிது!' என்று
மதித்தார், தம்முன் நினைத்த எல்லாம் முடிக்கும் சமர வரி வில்லார்.

நின்றார் நின்றபடி, கொடித் தேர் நிருபன்தனையும், இளைஞரையும்,
வன் தாள் வரி வில் குருவினையும், மைந்தன்தனையும், கன்னனையும்,
பொன் தாழ் மார்பின் பல் படைக் கைப் பூபாலரையும், கொல்லாமல்
கொன்றான்—வாயுகுமரன் தன் கோலாகல வெங் கொடுங் கணையால்.

வீமன் முன் நிற்கலாற்றாது, எதிர்ந்தோர் தம்தம் பாசறை புகுதல்

'இளைத்தது அடையப் பெருஞ் சேனை; இனி நாம் ஒன்றுக்கு ஈடு ஆகோம்;
வளைத்த சிலையோடு இவன் நிற்க, மாயன்தன்னோடு அவன் நிற்க,
துளைத்த கணையால் துரோணன் வலி தொலைத்தோன் நிற்க, மலைந்து இவரைத்
திளைத்தல் அரிது!' என்று, அக் களத்தில் பொன்றா அரசர் சென்றாரே.

பெரும் பேர் அறத்தின் திருமகவைப் பிடிப்பான் எண்ணி, முடிப்பான்போல்
பொரும் போர் அரசருடன் வந்த பொன்-தேர் முனியும் புறம் போனான்;
'பரும் பேர் உரகக் கொடி வேந்தன் பட்டான் மிகவும் பரிபவம்!' என்று
அரும் போர் அரசர் களித்து ஆட, அவரும் தம பாசறை அடைந்தார்.

பாண்டவரும் பாசறை புக, தினகரன் மேல்பால் அடைதல்

காரின் குளிர்ந்து குழைந்த செழுங் கானம் பூத்தது எனக் கவினிப்
பாரில் பிறந்து சிறந்த இந்தப் பல் மா நிறத்து பரி அனைத்தும்
போரில் புகுந்து மடிந்ததற்குப் புறந்தந்து அஞ்சிப் போவான்போல்,
தேரில் துரகம் கொண்டு ஓடி, குடபால் அடைந்தான், தினகரனும்.

துரியோதனன் பக்கத்தில் பலரும் கூடியிருக்க, கன்னன்
துரோணனை இகழ்ந்து சிரித்தல்

அறம் தந்த மைந்தற்கும், வீமற்கும், விசயற்கும், அபிமற்குமே,
புறந்தந்த வய வீரர் எல்லாரும் அரசன் புறஞ் சார்பு இருந்து,
இறந்து அந்த யூகத்து வாராத மன்னர்க்கு இரங்கா, அழா,
மறம் தந்த வேழத்துடன் பட்ட பகதத்தன் வலி கூறினார். 83

மன்னர்க்கு மன்னன்தன் முன் வைகும் முனிதன்னை மதியாமல், 'நீ
நென்னல் கலங்காமல் உரைசெய்த உரை இன்று நிலையானதே!'—
கன்னப் பெயர்க் காளை,—'மறை அந்தணர்க்கு என்ன கட்டாண்மை உண்டு?'
என்னச் சிரித்தான், வணங்காதவர்க்கு என்றும் இடிஏறு அனான்.

துரோணன் சினந்து மொழிதல்

தெருமந்த சிந்தைச் சிலைக் கைக் குரு, கண் சிவப்பு ஏறவே,
உருமும் திகைக்கக் கொதித்து, அங்கர்பதியோடு உறக் கூறுவான்:
'கருமம் தவா வில் விறல் கன்னனே அல்ல; கழல் மன்னரில்
தருமன்தன் முன் நிற்க வல்லார்கள் யார், இத் தளம்தன்னிலே? 85

'இன்று அல்ல நாளைக்கும் ஆம்; நின் அவைக்கண் இருந்தோர்களில்
சென்று அல்லல் உற மோதி அறன் மைந்தனைத் தங்கள் சிலை ஆண்மையால்
வென்று அல்லது அணுகாத வீரர்க்கு விடை நல்கு, விறல் மன்ன! நீ;
நன்று அல்ல, வீரத்தில் ஓரம் சொலுவது!' என்று நனி சீறினான். 86

'இவரை ஒப்பார் வேறு இலர்!' என்று கூறித் துரோணன் தன் பாடிவீடு செல்ல, துரியோதனன் மன்னர்க்கு விடைகொடுத்துத் துயிலுதல்

' ''வில் ஆண்மை யாவர்க்கும் இன்று'' என்று எனைப் போல மிகு வஞ்சினம்
சொல்லாமல், அறன் மைந்தனைப் போர் மலைந்து உங்கள் தோள் ஆண்மையால்
வல்லார் இனிக் கொண்டு வம்மின்கள்; வந்தால், இம் மண் ஒன்றுமோ,
அல்லாத உலகிற்கும், இரு-நாலு திக்கிற்கும், அவர் வீரரே. 87

' ''எம் போல வரி வில் எடுத்து எய்ய யார் வல்லர்?'' எனும் வீரரும்,
வெம் போரில் வந்தால் ஓர் அணுவுக்கும் நில்லாது விளிகிற்பரால்;
வம்பு ஓதி என் பேறு? வல் ஆண்மை புனை அந்த வில்லாளி கூர்
அம்போடு இராமன் கை அடல் அம்பும் உவமிக்கில் அதி பாவமே.

'கொத்து ஒத்த, தொடை ஒத்த, அளவு ஒத்த, சிறகு ஒத்த, குதை ஒத்த, வந்து,
ஒத்து ஒத்து முனையோடு முனை தத்தி விழுமாறு உடன்று ஏவினான்;
தத்து ஒத்த புரவித் தடந் தேர் மன் என்னோடு சாதித்ததும்,
வித்து ஒத்தது, என் வாளி; அவன் விட்ட வடி வாளி விளைவு ஒத்ததே.

' ''வன்மைக்கு வய வீமன், வின்மைக்கு முகில் ஊர்தி மகன், அன்றி வேறு
இன்மைக்கு மா விந்தை கிரி கன்னி கரி'' என்பர் எம் மன்னரும்;
வின்மைக்கும் வன்மைக்கும் இளையோரை அனையாரை மிக எண்ணலாம்;
தன்மைக்கு நிலையான தருமற்கு நிகர் யார், தனித்து எண்ணவே?

'அதிர்வார்கள் அதிர்மின்கள்; அதிரப் பொரும் போரில் அறன் மைந்தனோடு
எதிர்வார்கள் உண்டாகில், இக் கங்குல் சென்றால் இனிக் காணலாம்;
முதிர் வாய்மையால் என்ன பயன்?' என்று வெஞ் சாப முனி ஏகினான்;
கதிர் வார் முடிக் கோவும் அரசர்க்கு விடைதந்து கண் துஞ்சினான்.

பாண்டவர்கள் துயிலுதல்

மகதத்தரில் சூர சஞ்சத்தகரில் உள்ள மகிபாலரும்,
பகதத்தனும், துள்ளி எதிர் வந்த காந்தார பதி மைந்தரும்,
தகதத்த என வெங் களத்தாடு விழ வென்ற தனுவேதியும்,
சுக தத்தம் உற ஓட வென்றோர்களும், கண் துயின்றார்களே. 92

கதிரவன் உதயஞ்செய்தல்

நிலையான வய வீரரும் தேவராய் நின்ற நிலை கண்டு, வெண்
கலையால் நிரம்பும் செழுந் திங்கள் ஏக, கடைக் கங்குல்வாய்
அலை ஆழி முழு நீல உறைநின்றும் மாணிக்க மணி ஆடிபோல்
உலையாத ஒளி கொண்ட கதிர் ஆயிரத்தோனும் உதயஞ்செய்தான்.

41. பதின்மூன்றும் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

சங்கை இலாவகை யம படரால் உயிர் தளர் பொழுதத்து, அருகே
மங்கையர் சூழ இருந்து அழுது, உள்ளம் மயக்கினும், யான் மறவேன்—
கங்கையும் நான்மறையும் துளவும் கமழ் கழல் இணையும், திருமால்
அம் கையின்மீது ஒளிர் சங்கமும், நேமியும், அஞ்சன மேனியுமே. 1

மன்னரும் சேனைகளும் சூழ, துரோணன் சக்கர வியூகம் வகுத்து நிற்றல்

நஞ்ச வியாளம் உயர்த்த பதாகை நராதிபன் ஏவலினல்,
விஞ்ச வரூதினி மன்னர் திரண்டனர், விசயனை மேலிடுவான்;
நெஞ்சு அவரால் அழிவுண்ட தபோதனன் நெருநலினும் கடுகி,
பஞ்சவர் கோ முதல்வன்தனை வன்பொடு படை பொர எண்ணினனே.

இலக்கணமைந்தனும், மைந்துடை மன்னவன் இளைஞரும், எம்முனையும்
கலக்குற வென்ற கலிங்கரும் உட்படு காவலர் பற்பலரும்,
சிலைக் கை வயம் பெறு சிந்து நராதி செயத்திரதன் சிரமா,
நிலக்கண் எழும் துகள் வானிடை சென்றிட, நின்றனர் பேர் அணியே.

அக்கரம் யாவும் உணர்ந்த சிலைக் குரு, ஆசுர சேனை நடுச்
சுக்கிரனுர் நிகர் என்ன, வகைப் படு தூசியின் மா முறையே
எக் கரமும் படை கொண்டு எழு சேனையை எயில்கள் வளைப்பனபோல்,
சக்கரயூகம் வகுத்து இரதத்திடை சயம் உற நின்றனனே. 4

திட்டத்துய்மன் மகரவியூகம் வகுத்து, மன்னர் சூழ நிற்றல்

ஒப்பு அறு போரினில் வாகை புனைந்த உதிட்டிரன், அன்று அடையார்
தப்பு அற எண்ணிய எண்ணம் உணர்ந்து, தனஞ்சயனுக்கும் உரைத்து,
அப்பு அறு கோடையில் வெங் கதிரோன் என, ஆகவ நீள் வரி வில்
துப்பு உறு சிந்தை மகீபர் வரூதினி சூழ, நடந்தனனே. 5

ஈர்-இரு தேரினர், மூவகை யானையர், எண் அறு மா மிசையோர்,
ஓர் இரு-நால் உடை ஐ-இரு பூமியில் உள்ள பதாதியுடன்,
பார் இரு-நாலு திசாமுகமும் படையோடு பரந்து வரும்
பேர் இரு மான வரூதினியின் திரள் பேசுறலாம் அளவோ? 6

வரு படைதன்னை நிறுத்தி விதம்பட, மகரவியூகம் வகுத்து,
ஒரு பகல் யூகமும் இப் பகலுக்கு இனி ஒப்பு அல என்றிடவே,
குருபதியும் திருமாலும் மதிக்க அணிந்து, அடு கோள் அரிபோல்,
துருபதன் மைந்தனும் நின்றனன், அந்தர துந்துபிமீது எழவே. 7

சஞ்சத்தகர் அறைகூவ, விசயன் சென்று, விற்போரில் அவர்களைத்
தோற்று ஓடச் செய்தல்

இத் தகவாக அணிந்து இரு சேனையும் எதிர் முனையும் பொழுதில்,
முத்து அக வெண்குடை மன்னவன் ஏவலின், முன் பகலின்படியே,
மத்தக மா முதல் ஆகிய நான்மை வரூதினிதன்னொடு சஞ்-
சத்தகர் வந்து அறைகூவ, வெகுண்டு, தனஞ்சயன் ஏகினனே. 8

மால் விடு தேர்மிசையான் வரி சாபம் வளைத்ததும், மல் இகல் வெங்
கோல் விடு பூசலும், வில்லுடனே பொழி கொண்டல் வியப்பு எனலாம்;
மேல் விடு தேர்களும், யானையும், வாசியும், வீரரும், மெய் உருவ,
கால் விடு தாரை எழும் சருகு என்ன உடைந்தனர், கையறவே. 9

பட்டவர் எத்தனை ஆயிரர்; நின்று படாமல் உயிர்ப்புடன் வென்-
னிட்டவர் எத்தனை ஆயிரர்; அஞ்சலின், 'ஏகுக!' என்று, அமர்வாய்
விட்டவர் எத்தனை ஆயிரர்; தம் குல மேன்மையும் வெந் திறலும்
கெட்டவர் எத்தனை ஆயிரர்;—அன்று கிரீடி தொடும் கணையால்! 10

ஓர் ஓர் உடம்பினில் ஆயிரம் ஆயிரம் உற்பல வாளி பட,
தாரை படும்படி பொழி முகில் ஒத்தனர், சமர் முனையில், தரியார்;
மாரனை அங்கம் எரித்தருள் கண்ணுதல் வடிவம் எனும்படியே
பார் ஒரு பாதி சிவந்தது, மேனி பரந்து எழு சோரியினால். 11

திட்டத்துய்மன் துரோணனுடன் போர் செய்ய முனைந்து,
எதிர் நிற்க இயலாது பிறக்கிடுதல்

இந்திரன் மா மகன் இங்கு இவர் தம்முடன் இம் முறை போர் புரிய,
சந்திர சூரிய மண்டலம் ஒத்து அணி தானை இரண்டும் முனைந்து
உந்திய வேலையின், உந்திகள் நாலுடை உந்து இரதத்திடை போய்,
அந்தணன்மேல் வரி சாபம் வளைத்தனன், ஐவர் படைத்தலைவன்.

நூலொடு சாபம் வளைத்து, அவன் மற்று இவன் நொய்தின் உகைத்த வடிக்
கோலொடு கோல் முனை அற்று விழத் தொடு குனி சிலை நாண் அழிய,
சேலொடு சேல் பொரு சிலம் எனும்படி, தேர்கள் இரண்டும், மணிக்
காலொடு கால் பொர, வன் துவசத்தொடு கவசம் அழித்தனனே.

அரு முனி ஆதி வதிட்டனும், மன் குல ஆதியும், அந்தணனும்
பெரு முனிதானும், உடற்றிய போர் சிலர் பின் பொருதார் உளரோ?
ஒரு முனி ஏழ் கடலும் கரம் ஒன்றில் ஒடுக்கினன்; மன்னனை மேல்
வரு முனி வென்றனன்;—முனிவருடன் பொர வல்லவர் யார், புவிமேல்? 14

வந்து எதிர் முட்டுதலும், தன தேரினை மாறுபடத் திருகி,
சிந்தையும் மானமும் வீரமும் விட்டு, ஒரு செயல் அற, வென்னிடலும்,
'தந்திரநாதன் உடைந்தனன்' என்று, இரு தானையின் மன்னவரும்,
அந்தணன் ஆண்மையும், வன்மையும், வின்மையும், அன்று துதித்தனரே. 15

திட்டத்துய்மனுக்குத் தருமன் ஆறுதல் கூறுதல்

வேதியன் விட்ட சரங்களின் நொந்து, வெரீஇ வரும் மன்னவனைத்
தாது அவிழ் பொன்-தொடை மார்பில் அணைத்து உயர் தருமன் உரைத்தருள்வான்:
'நீ தவறின், பின யார் நிலைநிற்பவர்? நிருபர் சிகாமணியே!
மோதி இளைத்தனை; ஆறுக!' எனப்பல முகமன்மொழிந்தனனே. 16

'பகைவரின் சக்கர வியூகத்தைப் பிளக்க வல்லவன் நீயே' என்று கூறி, அபிமனைத் தருமன் போருக்கு அனுப்புதல்

தன் எதிர் மா மயிலோன் என நின்ற தனஞ்சயன் மா மகவை,
பொன் எதிர் பேர் ஒளி அருள் வடிவு ஆகிய பூபதி, 'வருதி!' என,
'நின் எதிர் போரினில் நிற்பவர் வேறு இலர்; நேமி வியூகமும் நீ
முன் எதிரா, அமர் புரிபொழுது அன்றி, முரண் குலையாது, இனியே.

'என்னை வளைத்திட நென்னல் உடன்று வென்னிட்ட வில் ஆசிரியன்,
மன்னை வளைத்து ஒரு சக்கரயூகம் வகுத்து, எதிர் நின்றனனால்;
நின்னை அளித்த தராபதிதன்னையும் நின்னையுமே ஒழியப்
பின்னை எடுத்த விலோடு எதிர்சென்று, பிளந்திட வல்லவர் யார்? 18

'புல்லுக!' என்றனன்; மார்பு உற அன்பொடு புல்லி, 'இமைப்பொழுதில்
செல்லுக!' என்றனன், 'வன் சமரத்திடை சென்று, மிகப் பகையைக்
கொல்லுக!' என்றனன், 'நின் புயம் மேவரு கொற்றவைதன் அருளால்
வெல்லுக!' என்றனன்,—அன்று துரோணனை வென்ற பெருந்தகையே. 19

திட்டத்துய்மன் முதலிய மன்னர் சூழ, அபிமன் தேரில் விரைந்து போர்க்குச் செல்லுதல்

மூத்த தாதைதன் ஏவலின் கழல் முளரி கைதொழுது, உரன் உறச்
சேர்த்த நாணுடை வில்லன், வெய்ய தெரிந்த வாளியன், முதுகு உறக்
கோத்த தூணியன், வாள் முதல் பல கொற்றம் முற்றிய படையினன்—
பார்த்தன் மா மகன்—இரதமீது உயர் பரிதியாம் என ஏறினன். 20

வீர வார் கழல் கழலின்மீது விளங்க, மார்பினில் வெண் நிலா
ஆர மாலை துலங்க, மாசுண வலயம் வாகுவில் அழகு எழ,
சேர வானம் அது இருள் அகற்றும் இரண்டு செஞ்சுடர் என்னவே
சார மா மணி குண்டலங்கள் வயங்க, மௌலி தயங்கவே, 21

இனம் செய் கேண்மை கொள் துருபதேயனும், எண் இல் கோடி மகீபரும்,
கனம் செய் தூரியம் எழ வெகுண்டு எறி கால் எனும்படி கை வர,
தினம் செய் நாதன் நடாவு தேர் நிகர் தேர் விரைந்து செலுத்தினன்—
தனஞ்சயன் தலைநாள் முயன்ற தவம் பலித்தன தன்மையான். 22

சக்கர வியூகம் கெடும்படி அபிமன் அம்புமழை பொழிய, துரோணன் வென்னிடுதல்

ஓதை கொண்டு அணி நின்ற சக்கரயூக மன்னர் உரம்தொறும்
கோதை தங்கு கரத்தில் வில் உதை கூர வாளி குளிக்கவே,
சீதை கொண்கனும், மேவலார் உயிர் தென்புலத்து இடு தன் பெருந்
தாதையும், தரம் என, இமைப்பிடை தாவு தேரினன், ஏவினன். 23

அச்சுதப் பெயர் மாதுலன் புகல் அரிய மந்திரம் அன்பினோடு
உச்சரித்து, ஒரு நொடியினில் பல கோடி பாணம் உடற்றினன்—
எச் சிரத்தையும், எப் புயத்தையும், இடை துணித்தலின், அடைய முன்
வச்சிரத்தவன் உரைசெய் சக்கர மாறு இலா அணி பாறவே. 24

மல்லல் அம் புய அபிமன் வெஞ் சர மழை அனைத்தையும், மால் என,
பல்ல வெங் கணை கொடு விலக்கி, முனைந்து வந்து, எதிர் பற்றினன்;
வெல்ல வந்த துரோண மா முனி விறல் அழிந்தது; குரு எனும்
சொல் அழிந்தது; வில் அழிந்தது; தேர் அழிந்தது;—தொடைகளால்.

அசுவத்தாமனும் கன்னனும், அபிமனை எதிர்த்து, நிலைகெட்டுத் திரும்புதல்

தந்தை வென்னிடு முன்னர், முப்புர தகனனே நிகர் மகன், மிகச்
சிந்தை கன்றி, வெகுண்டு, தேரொடு சென்று, கால் வளை சிலையினால்
உந்துகின்ற சிலீமுகம் பல பகை முகங்களில் உருவவே,
முந்தினன், அவன் அப்பு மாரியின் முழுகினன், உடல் முற்றுமே. 26

கன்னன் என்று உலகு எண்ணும் வீரனும், மொய்ம்புடன் பல கணைகள் வான்
மின் ஒழுங்கு ஒரு கோடி என்ன நிறுத்தி, மெய் உற வீசினன்;
அன்னவன் பகழிக் குலங்கள் அநேக மோகரம் ஆகையால்,
'என்ன வெஞ் சமம் இனி நமக்கு?' என ஏறு தேருடன் ஏகினன். 27

கிருபனும் கிருதவன்மாவும் அபிமன்முன் வில் இழந்து வெறுங்கையோடு ஓடுதல்

கிருப மா முனிதானும் மேதகு கிருதவன்மனும் ஓர் புறத்து
இருவர் ஆண்மையும் நிலை பெறும்படி சென்று தூவினர், ஏவினால்;
ஒருவனே இவன்; இவன் எடுத்ததும் ஒரு சராசனம்; அம்பிலே
வெருவி ஓடினர், தங்கள் ஓர் இரு வில்லும் அற்று, வெறுங் கையே.

சகுனியும், அவனது மகன் முதலிய சுற்றமும் வர, அபிமன் கணையால்
சகுனியின் மகன் மடிய, ஏனையோர் ஓடுதல்

சகுனியும், திருமகனும், மற்று உள தமரும், மேல் இடு தானையோடு
'இகல் நெடுங் களம் வென்று கொள்குவம்!' என்று வந்து எதிர் அணுகினர்;
மகன் விழுந்தனன், மார்பின் மூழ்கிய வாளி ஒன்றினில்; மற்று உளார்
மிக நடுங்கி ஒடுங்கி ஓடினர், வீழும் மன்னர்கள் வீழவே. 29

விகன்னன் முதலிய துரியோதனன் தம்பியரும், வேறு அரசர்களும் வந்து
அபிமன் முன் நிற்க இயலாது ஏகுதல்

வில் முகந்து எழு வாளி வாளி விலக்க வந்த விகன்னனும்,
துன்முகன் தலையாக மற்று உள துணைவரும் சமர் துன்னினர்;
நல் முகம் பெறு விசயன் மைந்தனும், 'நான் உமக்கு எதிர் அன்று; நீர்
பின் முகம் பட ஓடி இன்று உயிர் பிழையும்' என்று, உரை பேசினன்.

மற்றும் மற்றும் முனைந்து வந்து மலைந்த வெஞ் சின மன்னர் மெய்ம்
முற்றும் முற்றும் இவன் கை வாளிகள் முனை புதைந்திட மூழ்கலால்,
இற்ற இற்ற படைக்கலங்களும், எய்த்த எய்த்த பதாதியும்,
அற்ற அற்ற விதங்கொள் வாகமும் ஆகி ஏகினர், அடையவே. 31

தருமனிடம் விடை பெற்று, வீமன் பல மன்னர் சூழ, அபிமனுக்கு உதவ வருதல்

இளையவன் தனி மதலை தெவ்வர் இளைக்க இப்படி இகல் செய,
தளை அவிழ்ந்த அலங்கல் மீளி சமீரணன் திருமதலை போய்,
வளைய வன் சிலை மன்னவன் கழல் மலர் வணங்கி, வணங்கலார்
உளைய வந்து அமர் முடுகி நின்றமை கண்டு, சோகமொடு உரைசெய்தான்: 32

'தோல் அநேகம், அநேகம் நேமி, துரங்கமங்கள் அநேகம், நீள்
வேல் அநேகம், அநேகம் வாள், வரி வில் அநேக விதம் பட,
கால் அநேகம் எழுந்தது ஒத்து அமர் ஆடுகின்ற களத்திடை,
பாலனே கடிது ஏகி, வெம் முனை பயிலுவான் ஒரு பாவமே! 33

'எனக்கு நீ விடை நல்குக!' என்று அவன் இரு பதம் தொழுது, யாரினும்
தனக்கு நேர் தனை அல்லது இல் என வெல்ல வல்லது ஓர் தண்டினன்,
மனக்கு நேர் வரு தேரினன், பல மண்டலீகரும் மன்னரும்,
சினக் குழாம் உறு சேனையும், புடை சூழ, அன்று எதிர் செல்லவே,

வீமன் சென்ற திசைகளில் எல்லாம் சக்கர வியூகம் சிதைதல்

சாயை ஒத்து எழு சேனையோடு எதிர் தடவி, மன் குல அடவியில்
தீயை ஒத்து விளங்கும் மாருதி சென்று மண்டிய திசையெலாம்,
மாயை ஒத்து ஒரு வடிவம் இன்றி, வகுத்த சக்கர மண்டலம்
ஈயை ஒத்தது; கலுழன் ஒத்தனன், ஈறு இலா அரி ஏறு அனான். 35

கலிங்கர், சோனகர், மகதர், கன்னடர், கங்கர், கொங்கணர், கௌசலர்,
தெலுங்கர், ஆரியர், துளுவர், பப்பரர், சீனர், சாவகர், சிங்களர்,
குலிங்கர், மாளவர், களமர், ஒட்டியர், குகுரர், கொப்பளர், கூபகர்,
புலிங்க சாலம் எனச் சதாகதி புதல்வனோடு உறு போர் செய்தார்.

பொருத பற் பல பாடை மன்னவர் பொன்னிலம் குடி புகுதவே,
விருத வித்தகனுடன் வரும் பல பாடை மன்னவர் வெட்டினர்;
ஒரு திறத்த வலீமுகங்கள் உறுக்கி ஓடி உடன்ற நாள்,
நிருதர் பட்டது பட்டு இறந்தனர், நேமியுள் படும் நிருபரே. 37

படையின் நிலை கண்டு, துரியோதனன், 'சகுனி முதலியோர் சென்று, அபிமனை வீமன்
அணுகாவகை வளைத்தால், பின் இருவரையும் வெல்லுதல் எளிதாம்' எனல்

மண்டு கொண்டலின் மிக அதிர்ந்து மருத்தின் மைந்தன் உருத்து எழும்
தண்டு கொண்டு வியூகமாகிய சக்கரத்தை உடைத்தலால்,
விண்டு கொண்டு முருக்கும் மாருதி மீள வந்தனனும் என,
கண்டு கொண்டனன், வெஞ் சினக் கனல் நின்று காய்தரு கண்ணினன்,

'நப முகில் முழங்கி ஏறி இடிவிட
நடுநடுநடுங்கி மாயும் அரவு என,
உபரி எழுகின்ற சியம் வர வர
உடையும் இப சங்கம் ஓடுவன என,
அபிமன் ஒருவன் கை ஏவின் நம படை
அடைய நெளிகின்றது ஆய பொழுதினில்,
விபினமிசை மண்டு தீயொடு அனிலமும்
விரவும் இயல்பு, அந்த வீமன் அணுகிலே. 39

'சகுனியுடன் விந்துபூரி முதலிய
தரணிபர் அடங்க ஏகி, மகபதி
மகன் மகனொடு இங்கு உறுதபடி எதிர்
வளைமின், வரு கந்தவாகன் மதலையை;
விகனனும், மடங்கல் போலும் இளைஞரும்,
விருதர் பலரும், துரோணன் மதலையும்,
இகல் மலையில் இந்த நாழிகையில் இவர்
இருவரையும் வென்று கோறல் எளிதுஅரோ!' 40

மன்னன் பணித்தபடி வீரர் சென்று, இருவர் முன்னும் நிற்கலாற்றாது மீளுதல்

என உயர் புயங்ககேது உரைசெய,
இவனை விடை கொண்டு வீரர் அனைவரும்,
முனை பட அணிந்து, கால முகில் என
முரசினம் முழங்க, ஓடி, எதிர் எதிர்
கனல் என வெகுண்டு, சேனை பல பல
கச ரத துரங்க ராசியுடன் வர,
அனில குல மைந்தனொடு பதியொடும்,
அபிமனொடும், வந்து போரில் முடுகவே, 41

விழி மலர் சிவந்து, கோல மதி நுதல்
வெயர் வர, இரண்டு தோளும் முறை முறை
அழகு உற விளங்க, மூரல் நிலவு எழ,
அணி மகர குண்டலாதி வெயில் எழ,
முழவினொடு சிங்க நாதம் எழ, எழ,
முடுகி எதிர் சென்று மோதி, அவர் அவர்
எழில் வடிவம் எங்கும் வாளி உதையினன்,
இரதமிசை நின்ற வாயு மதலையே. 42

மணி முடி சிரங்களோடு தறிபட,
வலயமொடு அணிந்த தோள்கள் தறிபட,
அணி கழலொடு உந்து தாள்கள் தறிபட,
அயிலொடு கரங்கள் ஆன தறிபட,
நணிய இரதங்கள் சாய, இவுளிகள்
நடுவு அற, வளைந்த சாபம் முதலிய
துணி பட, அழிந்து, மீள நடவினர்—
துவச புயகன் பதாதி நிருபரே. 43

விசயன் மகனும், தன்மீது வரும் வரும்
விருதர் உடலங்கள் யாவும் நிரை நிரை,
தசை, குருதி, என்பு, மூளை, இவை இவை
தரணிமிசை சிந்தி வேறுபட விழ,
அசைய இரதம் கடாவி, வளைதரும்
அணி சிலையும் அம்பும் ஆகி, முனை முனை
திசைதொறும் நடந்து சீற, ரவி எதிர்
திமிர படலங்கள் ஆன, அடையவே. 44

மீண்ட மன்னரை வசை மொழிந்து, அருகு வந்த சயத்திரதனோடு
துரியோதனன் இன் சொல் பகர்தல்

இருவர் எதிரும் பொருமல் முடுகிய
இரு படையும் நொந்து மீள, அவனிபன்
வெருவொடு தளர்ந்து போன நிருபரை
மிக வசை மொழிந்து, போத நகைசெய்து,
கருகி முகம், நெஞ்சு கோப அனல்கொடு
கதுவி, நயனங்கள் சேய நிறம் உற,
அருகு வரு சிந்துராச திலகனொடு
அபரிமிதம் இன் சொலாக உரைசெய்தான்: 45

'மறன் உடையை; செம் பொன் மேரு கிரி நிகர்
வலி உடையை; வென்றி கூரும் அரசியல்
அறன் உடையை; பஞ்ச பாணன் என வடிவு
அழகு உடையை; நின்ற சேனை அரசரில்
திறன் உடையை; திங்கள் சூடி வியன் நதி
நிறை புனல் பரந்து உலாவு மவுலியர்
திறனுடைய மன்றல் நாறும் மலர் அடி
தெளிவொடு பணிந்த ஞான முடிவினை; 46

விசயனையும் அபிமனையும் கொன்றைமாலையை இடையே இட்டுப் பிரித்து, அபிமனை எளிதில் வெல்லத் துரியோதனன் உபாயம் உரைத்தல்

'வய விசயன் நின்ற தேர் கடவி வரும்
வலவன் மருகன்தனோடு வரை புரை
புயம் உடைய தண்ட வீமன் உறில், இரு
பொருநரையும் இன்று பூசல் பொர அரிது;
அயல் இவர் அகன்று போகில், அமர் பொர
அறவும் எளிது; உண்டு உபாயம்; நுதல் எரி
நயனன் அருள் கொன்றை மாலைதனை இவர்
நடு இடில் இரண்டு பாலும் அகல்வரே. 47

'அரன் முடி அணிந்த தாமம் இது என
அடிகொடு கடந்து போக வெருவுவர்;
பரவை நிகர் நம் பதாதி அவனிபர்
பலருடன் வளைந்து கோலி, அமரிடை
வரம் உற வணங்கு நாளில் அருள் செய்து
மனம் மகிழ மங்கை பாகன் உதவிய
உரனுடைய தண்டினுல் இவ் அபிமனை
உயிர் கவர்தல் இன்று சால உறுதியே.' 48

மன்னன் குறித்த வண்ணம் சயத்திரதன் கொன்றை மாலையை எறிய, வென்று மீண்ட அபிமன், அதனைக் கடவாது திரும்பவும் பொர வருதல்

என இவன் மொழிந்த போதில், அவன் இவன்
இணை அடி வணங்கி, 'யாது நினைவு? இனி,
உனது நினைவு எஞ்சிடாமல், அபிமனை
உயிர் கவர்வன்' என்று தேற உரைசெய்து,
கனக தரு மன்றல் மாலை என ஒளிர்
கடி இதழி அம் தண் மாலை, பரமனை
மனன் உற உணர்ந்து, நாவில் நிகழ்தரு
மறையொடு, வளைந்து வீழ எறியவே, 49

எறி தொடையல், சங்கபாணி மருமகன்
இகலும் அமர் வென்று மீளும் அளவையில்,
நெறியிடை விளங்கி வாள கிரி என
நிமிர்வு உற வளைந்து சூடி வருதலும்,
அறிவுடன் இறைஞ்சி, 'ஆதி பகவனது
அணி முடி அலங்கலாகும்; அடையலர்
முறிய இனி மண்டு போரில் அமர் செய்து,
முடிதும்!' என வந்து, மீள முடுகவே, 50

துரியோதனன் சேனைகள் ஓட, வீமன் அபிமன் நின்ற இடம் குறுக வருதலும், கொன்றைமாலையைக் கண்டு பின் தங்கி நிற்றலும்

பரிசன குமாரன் விடும்
எரி கணைகளால் முடுகு
தரியலர் பதாதி படை
நெரிய வரு காலையிலே, 51

'விறல் அபிமன் நின்ற களம்
உறுதும், இனி' என்று நனி
குறுகலும், விலங்கியது,
நறை இதழி அம் தொடையே. 52

'இன்று அமரின் யாரும் உயிர்
பொன்றிடினும், ஈசன் அணி
கொன்றை கடவேன்' என, முன்
நின்றனன், நராதிபனே. 53

'மாலையால் பிரித்து அபிமனை வென்று விட இயலாது' என வீமன் நொந்து கூறி, மீண்டு செல்லுதல்

'முந்து வடி வாள் அமரின்
வந்து அணுகுவான், மதலை;
நிந்தனைகொல் ஆம் இது!' என,
நொந்து சில கூறினனே: 54

'இந்த மது மாலை இடை
தந்து, அபிமன் ஆர் உயிரை
உந்திவிடவோ? எளிது,
சிந்து பதி சேவகமே! 55

'விரகு பட, எப்பொழுதும்
முரண் அமர் தொடக்கும் வலி
உரக துவசற்கு ஒழிய,
அரசரில் எவர்க்கு உளதோ? 56

'தன் மகனையும் சமரில்
வன்மையொடு கொன்று ஒழிய,
மன் முனை திரண்டிடினும்,
என் மகன் மடிந்திடுமோ?' 57

என்று, இதழி மாலைதனை
நின்று தொழுது, அன்பினொடு
சென்றனன்—இடிம்பனை முன்
வென்ற திறல் வீமனுமே. 58

மாலை கடவாமல் வந்த அபிமனோடு பொருதல்

மாலை கடவாமல் வரு
பாலன், அரசர்க்கு நடு,
வேலை வடவைக் கனலி
போல் ஒளிர, நின்றனனே. 59

யாளி என நின்ற வய
மீளியை வளைந்து, பல
வாளிகள் பொழிந்தனர்கள்,
கூளிகள் நடம்செயவே. 60

பற்பலரும் அர்த்த ரதர்
வில் பல வணக்கி, எதிர்
சொல் பொலி வயப் பகழி
சிற்சில தொடுத்தனரே. 61

பெய் கணை அடங்க, இவன்
எய் கணை விலக்கியிட,
மொய் கணை அனந்தம் அவர்
மெய்கள் நைய உந்தினனே. 62

கன்னனும் அபிமனும் பொருதல்

கன்னனும், மடங்கல் அபி-
மன்னுவும், உடன்று, முனை
முன் இரதமும் கடவி,
மன் அமர் தொடங்கினரே. 63

அங்கர் பதி தேரில் இவன்
வெங் கணைகள் நாலு விட,
மங்குல் என, நாலு துர-
கங்களும் விழுந்தனவே. 64

தொடுத்த சிலை கோலி, அவன்
எடுத்த சிலையும் கொடியும்
நடுத் தறிய வெட்டி, முனை
கெடுத்தனன், அனந்தரமே. 65

கன்னன் ஏக, துரியோதனன் துணைவர் வந்து பொருது முதுகிடுதல்

இரவி மகன் ஏகுதலும்,
அரவ துவசன் துணைவர்
விரவினர், வளைந்து தம
புரவி அணி தேர் படவே. 66

விட்ட இரதத்திெனடு
வட்ட வரி வில் குரிசில்
தொட்ட கணை தைக்க, அவர்
கெட்டு, முதுகிட்டனரே. 67

துரோணனும் அசுவத்தாமனும் எதிர் வர, அபிமன் தான் ஒருவனாய் இருவரையும் வெல்லுதல்

சுகன் நிகர் துரோணனொடு,
மகன், விசயன் மைந்தன் எதிர்
முகன் அமரில் வந்து, புர-
தகனன் என நின்றனரே. 68

நிற்கும் நிலை நின்று, வரி
விற்களும் வளைத்தனர்கள்,
உற்கைகளின் நூறு பல
பொற் கணை தொடுத்தனரே. 69

வரு கணை விலக்கி, எதிர்
பொரு கணைகளாலே,
ஒருவன் ஓர் இமைப் பொழுதில்
இருவரையும் வென்றான். 70

தேர்முகம் இழந்தும், இரு
கார்முகம் இழந்தும்,
போர்முகம் இழந்தும், அவர்
நேர் முகம் இழந்தார். 71

துன்முகன் அமர் செய்து, கிரீடம் இழத்தல்

துன்முகனும், அன்று அமரின்
முன் முன் அமர் செய்தே,
வன்மிகம் மறிந்தது என
நல் முடி தறிந்தான். 72

சல்லியனும் அவன் மகன் உருமித்திரனும் வர, அபிமனால் உருமித்திரன் உயிர் இழக்க, அவன் புறகிடுதல்

சித்திர வில் வீரன் எனும்
மத்திரர் பிரானும்,
புத்திரரில் ஆதி உரு-
மித்திரனும், வந்தார். 73

வந்து, அபிமனோடு அமரின்
முந்தி, இருவோரும்
சிந்து கணை மாரிகளின்
அந்தரம் மறைத்தார். 74

அவர் அவர் எடுத்த இரு
தவரும் நடு வெட்டா,
இவர் கணை விலக்குவன
கவர் கணை தொடுத்தான். 75

மைந்தன் ஒரு வாளியினில்
அந்தரம் அடைந்தான்;
நொந்து பல வாளியொடு
தந்தை புறகிட்டான். 76

அபிமனால் இறந்தோரும் உடைந்து ஓடினோரும் பலர்

வென்று அமரில் வாள் அபிமன்
நின்ற நிலை கண்டே,
ஒன்றுபட மா இரதர்
சென்றனர் உடைந்தே. 77

கெட்டவர்கள் இன்னார் என
முட்ட உரைக்கொண்ணா;
பட்டவர் அநேகர், இவன்
விட்ட கணையாலே. 78

பிளப்புண்ட பகைவரின் சக்கர வியூகத்தில் அபிமன் புகுதல்

முன் சக்ரயூகம் பிளப்புண்ட பின், முன்பினோடும்
பொன் சக்ரம் என்ன வெறித் தாமம் பொலிந்து சூழ,
வில் சக்ரம் ஆக, மணித் தேரினின்மீது நிற்பான்,
கல் சக்ரம் ஆக நடு ஊர் செங்கதிரொடு ஒத்தான். 79

வடாதும் தெனாதும், பர ராசர் வகுத்த நேமி,
குடாதும் குணாதும், அவற்று உட்படு கோணம் நான்கும்,
விடாது உந்து தேரின்மிசை எங்கும் விராய போது,
சடா துங்க மௌலிப் புரசூதனன்தன்னை ஒத்தான். 80

அரசகுமாரர்கள் பதினாயிரர் சூழ, துரியோதனன் மகன் வந்து அபிமனை வளைந்து, அவன் முன் நிற்க ஆற்றாது ஓடுதல்

‘வில் மைந்து கொண்டு தகுவோர்தமை வென்ற வீரன்
நல் மைந்தனுக்கு முதுகு இட்டனர்’ என்று நாணி,
மன் மைந்தர் எண் இல் பதினாயிரர் வந்து சூழ,
தன் மைந்தனையும் உடன் ஏவினன், சர்ப்பகேது. 81

மேல் வந்த வேந்தன் மகனும், பல வேந்தும், ஊழிக்
கால் வந்து வேலைக் கடல்தன்னைக் கலக்குமாபோல்,
நூல் வந்த கொற்றச் சிலை ஆசுகம் நொய்தின் ஏவி,
மால் வந்த கைக் குன்று அனையானை முன் வந்து சூழ்ந்தார். 82

முன் முன்பு முந்திப் பலர் ஏவிய மூரி வாளி
தன் முன்பு தூவும் மலர்போல் இரு தாளில் விழ,
வில் முன்பு உடையோன் ஒரு வில்லின் விசித்த அம்பால்,
பின் முன்பு பட்ட, பல கோடி பிறங்கு சேனை. 83

அரவு உயர்த்தவன் மதலையொடு, அடலுடை
அரசர் புத்திரர் அனைவரும், எழு பரி
இரவி பொன் கதிர் தெறுதலின் இரிதரும்
இருள் என, திசை திசை தொறும் முதுகிட,
உரனுடைப் பணை முழவு உறழ் திணி புயன்
ஒரு சமர்த்தனும், ஒரு தனி இரதமும்,
விரவி, முன் பொரு களம் அழகுறும்வகை
விறல் வயப் புலி என எதிர் முடுகவே, 84

அபிமன் எதிர் வந்த இலக்கணகுமரனோடு பொருது,
அவனது உயிரைப் போக்குதல்

வளைய முத்து உதிர் விழியுடை வரி சிலை
மதனன் மைத்துனன், அவனிபர் பலரையும்
இளை எனப் புறமிட அமர் பொருத பின்,
இளைய வித்தகன் எதிருற வருதலும்,
முளை எயிற்று இள நிலவு எழ, அகல் வெளி
முகடு உடைப்பது ஓர் நகை செய்து கடவினன்,
உளை வயப் பரி இரதமும் இரதமும்
உரனெடு ஒத்தின, உருள்களும் உடையவே. 85

ரகு குலத்தவன் இளவலும், நிசிசரர்
இறை அளித்தருள் இளவலும், இருவரும்
நிகர் என, துணை விழி கடை நிமிர்தர,
நெறி கடைப் புருவமும் மிக முரிதர,
முகில் இடித்தென, எழு கடல்களும் மிக
மொகுமொகுத்தென, அனிலமும் அனலமும்
உகம் முடித்தென, முறை முறை பல பல
உரையெடுத்தனர், ஒருவரொடு ஒருவரே. 86

'ஞெலி மரத்தினும் மனன் எரி எழ எழ,
நிருபர் விட்டன கச ரத துரகமும்
மெலிவு எழப் பிறகிடவும், நின் ஒரு தனி
விறல் குறித்து இரதமும் எதிர் கடவினை;
ஒலிபடுத்து எதிர் வரின், விரி சுடர் எதிர்
உலவு விட்டிலின் உயிர் அழிகுவை!' என,
வலியுறுத்தினன், அவனிபன் மதலையை,
வலிய வச்சிரன் மதலைதன் மதலையே. 87

இவனும், அப்பொழுது எதிர் ஒலி என, நனி
இகல் அருச்சுனன் மதலையை, 'உனது உயிர்
அவனிபர்க்கு எதிர் கவருவன், ஒரு நொடி
அளவையில் பொருது!' என, முனை அணுகினன்.
சிவன் வளைத்த பொன்மலையினும் வலியின
சிலை வளைத்தனர் இருவரும்; எறிதரு
பவனன் மைக் கடல் வடவையின் முனிதரு
பருவம் ஒத்தது, படுகளம் முழுதுமே. 88

துரகதத்து உடல் கெழுமின சில கணை;
துவசம் அற்றிட விரவின சில கணை;
இருவர் நெற்றியும் எழுதின சில கணை;
இரு புயத்திடை சொருகின சில கணை;
அரணி ஒத்து எரி கதுவின சில கணை;
அகல் முகட்டையும் உருவின சில கணை;
முரண் இலக்கணகுமரனும் அபிமனும்,
முடுகி, இப்படி முரண் அமர் புரியவே, 89

மழை முகிற்குலம் நிகர் திரு வடிவினன்
மருகன் முட்டியும், நிலையும், மெய் வலிமையும்,
அழகு உறத் தொடு கணை குருபதி மகன்
அவயவத்தினில் அடைவுற முழுகின;
கழல்கள் அற்றன; இரு தொடை நழுவின;
கவசம் அற்றது; கர மலர் புயமுடன்
முழுதும் அற்றன; ஒளி விடு நவ மணி
முகுடம் அற்றது, முகிழ் நகை முகனொடே. 90

தன் மகன் இறந்தது கேட்டு, கண்ணீர் சொரிய நின்ற துரியோதனன், 'இப்பொழுதே அபிமனைச் செருக்க வேண்டும்' என மன்னர்களுக்கு ஆணையிடுதல்

'இலக்கணகுமரன், வெங் கான் எரித்தவன் குமரன் ஏவால்,
அலக்கண் உற்று, ஆவி மாய்ந்தான், அமரிடை' என்று கேட்டு,
கலக் கணீர் சொரிய நின்று, கண்ணிலி குமரன் வெம்பி,
வலக்கண் நேர் முனிவரோடும் மன்னவரோடும் சொல்வான்: 91

'மன்னவர் மைந்தரோடு என் மைந்தனைக் கொன்ற மைந்தன்-
தன்னையும் இமைப்பில் சென்று சயம் உறச் செகுத்திலீரேல்,
பின்னை இவ் அரசும் வேண்டேன்; பெருமித வாழ்வும் வேண்டேன்;
என் உயிர் தானும் வேண்டேன்' என்றனன், இராசராசன். 92

தனித் தனி அரசர் எல்லாம், தாள் இணை பணிந்து போற்றி,
'பனித்து உயிர் பொன்றி வீழ, பார்த்தன் மா மகனை, இன்னே
குனித்த வில் நிமிராவண்ணம் கொடுஞ் சமர்க் கொன்றிலேமேல்,
இனித் தனு என்று போரில் எடுக்கிலேம், இறைவ!' என்றார். 93

அசுவத்தாமன், துரோணன், மற்றும் மன்னர்கள், யாவரும் ஒன்றுகூடி, அபிமனை வளைத்தல்

குன்ற வில்லவனை ஒக்கும் குமரனும், பகைகள் ஆறும்
வென்ற வில் முனியும், மற்றும் வேந்தராய் அருகு தொக்கு
நின்ற வில் விருதர் யாரும், நிருபன் மா மதலை ஆவி
பொன்ற வில் வளைத்தோன் தன்னைப் புலி வளைந்தென்னச் சூழ்ந்தார்.

போர் ஒரு முகத்தால் அன்றி, பொருப்பு ஒன்றில் புணரி ஏழும்
கார் ஒரு முகமாய் மொண்டு கணக்கு அறப் பொழியுமாபோல்,
தேர் ஒரு வளையமாகச் சென்று, திண் சிலைகள் கோலி,
ஓர் ஒரு வீரர் கோடி ஆசுகம் உடற்றினரே. 95

அபிமன் எய்த அம்பினால், பலர் உயிர் இழத்தலும் சின்னபின்னப் படுதலும்

தரணிபர் எய்த எய்த சரங்களைச் சரங்களாலே
முரண் அற விலக்கி, பாதம் முடி அளவாக, அந்தக்
கரணமும் புலனும் மெய்யும் கலங்கி, அக் கணத்தில் யாரும்
மரணம் என்று உன்ன, வல் வில் வளைத்தனன், வளைவு இலாதான்.

ஆகவம்தன்னில் முந்த மனு குலத்து அரசன் பட்டான்;
கேகயன் குமரன் மாய்ந்தான்; கிருபன் வில் ஒடிந்து மீண்டான்;
மாகதக் குரிசிலோடு மகுடவர்த்தனர் அநேகர்
நாகம் உற்றனர்கள்; கோடி நரபதி குமரர் வீந்தார். 97

சிலை அழிந்தவர் அநேகர்; தேர் அழிந்தவர் அநேகர்;
தலை அழிந்தவர் அநேகர்; தாள் அழிந்தவர் அநேகர்;
நிலை அழிந்தவர் அநேகர்; நெஞ்சு அழிந்தவர் அநேகர்;
துலை அழிந்தவர் அநேகர்; தோள் அழிந்தவர் அநேகர். 98

இனைவு அருஞ் சகுனி மைந்தர் எழுவரும், துணைவர் உள்ளார்
அனைவரும், ஆவி மாள அமர் அழிந்து, அவனும் போனான்;
துனை வரும் புரவித் தேர்த் துச்சாதனன் துணைவரோடு
முனை வரும் அளவில், பாலன் முனை வெரீஇ, முதுகு தந்தான். 99

காவலர் உடைதல் கண்டு, கன்னனைத் துரியோதனன் அனுப்புதல்

காவலர் உடைதல் கண்டு, கன்னனை அரசன் பார்த்து,
'கேவலம் அல்ல இப் போர், கிரீடி வந்து இவனைக் கூடின்;
நீ வலையாகின் சென்று, நேர் மலைந்து அடர்த்தி' என்ன,
கோவலன் மருகன்தன்னைக் குறுகினன், கொடையால் மிக்கோன்.

கன்னன் முதலில் அபிமனால் தன் தேர் முதலியன இழந்து, பின் மீண்டும் வந்து பொருது, அபிமனுடைய தேர் முதலியவற்றைச் சிதைத்தல்

மன் முரி குவவுத் திண் தோள் வாசவன் பேரன்தன்னோடு
அல் முரி இரவி மைந்தன் அருஞ் சமர் விளைத்த காலை,
செல் முரிந்தென்ன ஏறு தேர் முரிந்து, எடுத்த வாகை
வில் முரிந்து, உள்ளம்தானும் மிக முரிந்து, உடைந்து மீண்டான்.

தேறினான்; தேறி, துச்சாதனன் தரும் செம் பொன் தேரின்
ஏறினான்; மீள வில்லும் எரி கணை பலவும் கொண்டு
தூறினான்; அபிமன் செங் கைத் தொடைகளால் எதிர்த்தல் அஞ்சி
மாறினான், முகமும் தேரும் வரி வில்லும் அழிந்து மன்னோ. 102

தூண்டினன், மேலாள் ஆகி, துனை பரித் தடந் தேர் தூண்டி,
மீண்டனன் காலாள் ஆகி விழுந்தனன்; தெளிந்து, மீளத்
தாண்டின பரித் தேர் தேடி, சாபமும் தேடி, நெஞ்சால்
பூண்டனன், பொருவான்—தன் கைப் பொரு கணைப் புயங்கம் போல்வான். 103

வில் குனித்து, இரவி மைந்தன் விடும் விடும் கணைகள் பட்டு,
பற்குனன் மைந்தன் திண் தேர்ப் பரிகளும் பாகும் பட்டு,
முன் குனித்து எய்த வில்லும் முரிந்தது; மூரித் தேரும்
நிற்கும் நல் நிலைமை குன்றி, நேமியும் நெறிந்தது அன்றே. 104

தேர் இழந்த அபிமன் வாள் ஏந்தி, தரையில் பாய்ந்து பொருதல்

தன்னை அத் தனயன் செய்த தாழ்வு எலாம் தனயன்தன்னை
பின்னை அத் தந்தை செய்து, பின்னிடாது அசைந்து நிற்ப,
முன்னைய புரவித் தேரும் மூரி வெஞ் சிலையும் இன்றி,
மின்னை ஒத்து இலங்கும் வாளோடு அவனிமேல் விரைந்து பாய்ந்தான்.

வாளொடு பரிசை ஏந்தி, மண்டலம் பயிற்றி, இற்றை
நாளொடு துறக்கம் எய்த நயந்தனன் நின்ற வீரன்,
தோளொடு புரையும் செம் பொன் மேருவைச் சுடரோன் நாகக்
கோளொடு சூழ்வது என்ன, சுழற்றினான், குமரர் ஏறே. 106

'தேர் போனது; பரி போனது; சிலை போனது; சிறுவன்
போர் போனது; இனிச் சென்று அமர் புரிவோம்' என நினையா,
கார்போல் நனி அதிரா, இதழ் மடியா, எறி கடல்வாய்
நீர்போல் உடன் மொய்த்தார்,—வெருவுற்று ஓடிய நிருபர். 107

துச்சாதனன் மகன் துச்சனி, 'அபிமனை மாய்ப்பேன்!' என வந்து,
அவன் வாளினால் மடிதல்

துச்சாதனன் மகன், மன்னர் தொழும் துச்சனி என்னும்
நச்சு ஆடு அரவு அனையான், 'இனி நானே பழி கொள்வேன்,
இச் சாயகம் ஒன்றால்!' என எய்தான்; அவன் முடியோடு
அச் சாயகம் வடி வாள்கொடு அறுத்தான், அடல் அபிமன். 108

அது கண்டு துரோணன் அம்பு பல எய்ய, அபிமன் தன் வாளால் அவற்றைத் துணித்து,
அவனது தேர் முதலியவற்றையும் சிதைத்தல்

துரியோதனன் மகனும், பொரு துச்சாதனன் மகனும்,
புரி யோதன முனை வென்றமை புரி வில் முனி கருதா,
அரி ஓம் எனும் மறையால் அடல் அம்பு ஆயிரம் எய்தான்;
வரி ஒலிடு கழலான், அவை வாள் கொண்டு துணித்தான். 109

சொரியும் கணை மழை ஏவு துரோணாசிரியன் வில்லும்,
பரியும், கடவு இரதத்தொடு பாகும் பல பலவாய்
முரியும்படி, வடி வாள்கொடு மோதா, அமர் காதா,
விரியும் சுடர் என நின்றனன், விசயன் திருமகனே. 110

பின்னும் துரோணன் மும்முறை தேர் இழந்து, மீண்டும் தேரில் வந்து
வாளியினால் அபிமனது வலக்கையைத் துணித்தல்

ஒருக் கால் அழி தேர் அன்றியும், உருள் ஆழி கொள் தேர்மேல்
இருக் கால் வர, முக் கால் வர, எக் காலும் அழித்தே,
பெருக்கு ஆறு அணை செய்தொத்து, அவிர் பிள்ளைப் பிறை அனையான்,
செருக்கால் நகை செய்தான், வரி சிலை ஆசிரியனையே. 111

முன்னும் சுருதியினால் உயர் முனி, வீரனை முனியா,
பின்னும், பனி வரைபோல் ஒரு பெருந் தேர்மிசை கொள்ளா,
மன்னும் சிலை குனியா, முனை வடி வாளொடு கையும்
மின்னும் பிறை முக வாளியின் வீழும்படி விட்டான். 112

பேணார் உயிர் பருகும் பசி பெட்ப, பகு வாய் வெங்
கோள் நாகம் உலாவந்து, எதிர், கொடுநா எறிவதுபோல்,
பூண் ஆர் கடகக் கையொடு புகர் வாளமும் மண்மேல்,
நீள் நாகர் வியக்கும்படி, விழ, மீளியும் நின்றான். 113

இரு தோள்களின் ஒரு தோள் முனி இகல் வாளியின் விழவும்,
ஒரு தோள் கொடு பொர நிற்பது ஓர் மத வாரணம் ஒத்தான்—
கருது ஓகையொடு அளகாபதிதனயோர் கதி பெற, முன்
மருது ஓர் அடி இணை சாடிய மாயன் திருமருகன். 114

ஒற்றைக் கையோடு நின்ற அபிமன், கண்ணனிடம் பெற்ற மந்திரத்தால், ஓர் உருளையைச் சக்கரமாக்கிப் பொருதல்

தன் மாதுலன் முதல் நாள் உரைதரு மந்திரம் ஒன்றால்,
எல் மா மணி உருள் ஒன்றினை எறி சக்கரம் ஆக்கி,
கல் மாரி விலக்கும் கிரி என, மேல் வரு கருதார்
வில் மாரி விலக்கா, அதுகொடு யாரையும் வீழ்த்தான். 115

ஒரு கையுடன் சக்கரத்தால் அபிமன் செய்யும் போர் கண்டு புழுங்கி, துரியோதனன் சயத்திரதனை அழைத்து, அபிமன் உயிர் கவர ஏவுதல்

ஒரு கையினில் உருள் நேமிகொடு ஒடித் திசைதோறும்
வரு கை அற எறிவான் உயர் வனமாலியை ஒத்தான்;
இரு கை ஒருவரை மண்ணில் இறைஞ்சா முடி இறைவன்
பொருகை அற, அபிமன் பொரு போர் கண்டு புழுங்கா, 116

'ஒருவன் நம் படைத் தலைவர்கள் எவரையும்
ஒரு கை கொண்டு அடல் திகிரியின் விழ எதிர்
பொருவது என் கொல்? இச் சிறுவனொடு ஒரு படி
பொழுது சென்றது; எப்பொழுது அமர் முடிவது?
வெருவரும் திறல் தரணிபர்களில் இவன்
விளிய வென்றிடத் தகுமவர் இலர்; இனி
அருளுடன் சயத்திரதனை அழை' என,
அவனும் வந்து புக்கனன் ஒரு நொடியிலே. 117

'அருகு நின்ற கொற்றவர்களும், அவர் அவர்
அரிய திண் திறல் குமரரும், அமரில் உன்
மருகனும் படப் பொருதனன்; மகபதி
மகன் மகன்தனைப் பசுபதி அருளிய
உரு கெழும் கதைப் படைகொடு கவருதி
உயிரை' என்று எடுத்து உரைசெய, அரசனை
இரு கையும் குவித்து, அருளுடன் விடைகொளும்
எழில் கொள் சிந்துவுக்கு ஒரு தனி முதல்வனே. 118

சயத்திரதன் கதையுடன் பொர வர, பகைவர் களத்தே இட்டு ஓடிய ஒரு கதையை அபிமன் கையில் தாங்கிச் செருப் புரிதல்

உரக வெங் கொடித் தரணிபன் அலமரும்
உளம் மகிழ்ந்திட, 'கதி பல பட வரு
துரகதம் பிணித்து, அணி கொள் இரதமிசை
துவசமும் தொடுத்து, அடல் உடை வலவனை,
'விரைவுடன் செலுத்துக' என, உரைசெய்து,
விழி சிவந்து, சிற்றிள மதி புனைதரு
கரக வண் புனல் சடை முடியவன் அடி
கருதி நின்று, எடுத்தனன், ஒரு கதையுமே. 119

மறலி தண்டு எனக் கொலை புரி தொழில் மிக
வலிய தண்டு கைக் கொளும் அளவினில், இவன்
விறல் புனைந்த கைத் திகிரியை ஒழிய, முன்
வினை அழிந்து பற்றலர் முதுகிட விழு
திறல் விளங்கு பொன் கதைகொடு, விரைவொடு
திருகி, 'நின் கதைக்கு இது கதை' என உரை
உற விளம்பி, அப் பொரு களம் முழுவதும்
உரும் எறிந்தது ஒத்து உவகையொடு அதிரவே, 120

சினவு சிங்கம் ஒத்து, இருவரும் முறை முறை
திருகி, வெஞ் செருப் புரிதலின், எழும் ஒலி,
கனல் வளைந்து சுட்டு அனிலமும் எறிதரு
கடல் அதிர்ந்தென, கனம் அதிர்வன என,
மினல் பரந்து எழத் திசைகளின் முடிவு உற,
வெடிகொடு அண்டபித்தியும் உடைதர எழ,
மனம் அழன்று பொற் கிரி நிகர் தம புய
வலிமை கொண்டு உடற்றினர், வயம் மலியவே. 121

உரிய சிந்துவுக்கு அரசனது இரு புயம்
ஒடிய, என்பு நெக்கு உடல் முரிதர, உரம்
நெரிய, வெங் குடர்க் கொடி நெடு வளையமும்
நிமிர, வன் தொடைப்புடை மிடை நடை உற,
அரிய கண் கனல் பொறி எழ, மணிமுடி
அழகு அழிந்து பொற் பிதிர்பட, உதிர்பட,
எரி எழும் சினத்தொடு தனது ஒரு கையின்
இலகு தண்டம் இட்டு, இகலுடன் எறியவே, 122

வசை அறும் புகழ்க் குருகுல திலகனை,
மருது இரண்டு ஒடித்தவர் திருமருகனை,
விசயன் மைந்தனை, பணை முகில்மிசை வரு
விபுதர்தம் குலத்து அதிபதி பெயரனை,
அசைவு இல் வன் திறல் பகை முனை நிருபரை
அடைய வென்ற கட்டழகுடை அபிமனை,
இசை கொள் சிந்துவுக்கு அரசனும் ஒரு கதை
இரு கை கொண்டு எடுத்து இகலுடன் எறியவே, 123

சயத்திரதனது தேர் முதலியவற்றை அபிமன் அழிக்க, அவனும் தரையில் குதித்துக் கதை கொண்டு பொருதல்

கரம் இழந்து மற்று ஒரு கரமிசை ஒரு
கதை கொள் வெஞ் சினக் களிறு அனையவன், இவன்
இரதமும் தகர்த்து, உறு கதியுடன் வரும்
இவுளியும் துணித்து, அடலுடை வலவனை
முரணுடன் புடைத்து, அணி துவசமும் விழ
முதுகு கண்ட பின், சரபம்அது எனும் வகை
அரன் வழங்கு பொன் கதையுடன் அவனியில்
அவனும் முன் குதித்து, அடலுடன் முனையவே, 124

பதயுகங்கள் ஒத்திய வலி பல கண
பண புயங்கர் பற்பல முடி சிதறின;
எதிர்கொள் தண்டம் மொத்திய ஒலி திசைகளில்
இபம் அடங்க மெய்ப் பிடியொடு சிதறின;
கதியில் வந்த சித்திரம் என முறை முறை
கதுவி மண்டலித்து, ஒரு பகல் முழுவதும்
அதிசயம் படப் பொருதனர், எதிர் எதிர்,
அபிமனும் சயத்திரதனும் அமரிலே. 125

அபிமனது போர்த்திறம் கண்டு, யாவரும் வியத்தல்

உலைவு இல் தண்டினில் பரிசனன் மதலையும்
உவமை இன்று என, பகழியின் மழை பொழி
சிலையின் வன் தொழில் திறலுடை மகபதி
சிறுவனும் தனக்கு எதிர் இலன் இனி என,
மலையும் வெஞ் சமத்து, ஒரு தனி முது புய
வலிமை கண்டு, பொற்புறு கழல் அபிமனை,
அலை நெடுங் கடல் தரணிபர் அனைவரும்,
அமரரும் துதித்தனர், முகடு அதிரவே. 126

கழுகு பந்தர் இட்டன, மிசை; விசையொடு
கழுது இனங்கள் இட்டன, பல கரணமும்;
எழு கவந்தம் இட்டன, பல பவுரிகள்;
இரு புறங்கள் இட்டன எதிர் அழிபடை;
ஒழுகு செம் புனல் குருதியின் வரு நதி
உததியும் சிவப்பு உறும்வகை பெருகலின்,
முழுகி எஞ்சி இட்டன, சுழி இடை இடை
முகிலின் வெங் குரல் கச ரத துரகமே. 127

முறைமை இன்றி, எத் தரணிபர்களும் எதிர்
முடுக வந்து, முன் தெறுதலின், அவர் அவர்
பொறை அழிந்து கெட்டு, அனைவரும் வெருவொடு
புறமிடும்படிக்கு ஒரு தனி பொருத பின்,
நிறை வலம்புரித் தொடை கமழ் புயகிரி
நிருப துங்கன் மைத்துனன் உளம் வெருவர,
அறை பெருங் கதைப் படைகொடு வலியுற
அமர் புரிந்து இளைத்தனன், அடல் அபிமனே. 128

அபிமன் தளர்வுற்ற நிலையில் சயத்திரதன் கதையினால் அவனை மாய்த்தல்

இவன் மயங்கி மெய்த் தளர்வுடன் மெலிவுறும்
இறுதி கண்டு, 'இனித் தெறுவது கடன்' என,
அவனி கொண்ட பற்குனன் மதலையை அவன்
அருகு வந்து அடுத்து, அணி புய வலிகொடு
சிவனை அஞ்செழுத்து உரைசெய்து, தொழுது, ஒரு
சிகர தண்டம் விட்டு எறிதலின், எறிதரு
பவனன் அன்று குத்தின கிரி என விசை
பட விழுந்தது, அப் பரு மணி மகுடமே. 129

தலை துணிந்து தத்திட விழ, இவன் ஒரு
தனது திண் கையில் கதைகொடு தரியலன்
நிலை அறிந்து புக்கு உரன் உற எறிதலின்,
நெரிநெரிந்தது, அத் தரணிபன் உடலமும்;
மலை மறிந்தது ஒத்து அபிமனது உடலமும்
மகிதலந்தனில் தரி அற விழுதலின்,
அலை எறிந்து மைக் கடல் புரளுவது என,
அரவம் விஞ்சியிட்டது களம் அடையவே. 130

அபிமனது மறைவுக்குக் கவி இரங்குதல்

மாயனும் திருமாமன்; தனஞ்சயனும் திருத்தாதை; வானோர்க்கு எல்லாம்
நாயனும் பிதாமகன்; மற்று ஒரு கோடி நராதிபராம் நண்பாய் வந்தோர்;
சேயனும் அபிமனுவாம், செயத்திரதன் கைப்படுவான்! செயற்கை வெவ்வேறு
ஆய நாள், அவனிதலத்து, அவ் விதியை வெல்லும் விரகு ஆர் வல்லாரே? 131

சேடன் முடி நெளிய வரு செம் பொன் தேர் அழிவதோ, அந்தோ, அந்தோ!
கேடக வாள் அணி வலயக் கிளர் புயத் தோள் அறுவதோ, அந்தோ, அந்தோ!
கூடக வெங் கதை ஒன்றால் சிந்து பதி கொல்வதோ, அந்தோ, அந்தோ!
ஆடு அமரில் ஒருவரும் வந்து உதவாமல் இருப்பதோ, அந்தோ, அந்தோ! 132

கன்னனையும் தேர் அழித்தான், கந்தனிலும் வலியனே, அந்தோ, அந்தோ!
மன்னவர் ஐவரும் இருக்க, மைந்தன் உயிர் அழிவதே, அந்தோ, அந்தோ!
பொன்னுலகோர் வியந்து உருகிப் புந்தியினல் மலர் பொழிந்தார், அந்தோ, அந்தோ!
அன்ன நெடுந் துவசன் இவற்கு ஆயு மிகக் கொடுத்திலனே, அந்தோ, அந்தோ! 133

சரம் அறுத்தான், வில் அறுத்தான், கொடி அறுத்தான், தேர் அறுத்தான், சமர பூமி
உரம் அறுத்தான், முதல் பொருத உதய தினகரன் மைந்தன்; உடன்று சிறிக்
கரம் அறுத்தான், நடுப் பொருத கார்முகத்தின் குரு; விசயன் காளைதன்னைச்
சிரம் அறுத்தான், பின் பொருத சயத்திரதன்; இவன் வீரம் செப்பலாமோ! 134

பகைப்புலத்தாரின் மகிழ்ச்சி

எட்டு ஆனைத் தம்பமுடன் சயத் தம்பம் நாட்டிய பேர் இறைவன் மைந்தன்
பட்டான் என்பது கேட்டுத் திருகினுர், முதுகிட்டுப் பறந்த வீரர்;
ஒட்டாமல் செயிர் அமரில் உயிர் இழந்த தன் புதல்வற்கு உருகும் சோகம்
விட்டான், 'வெஞ் சமரம் இனி வென்ளும்!' என்று உட்கொண்டான், வேந்தர்
[வேந்தன். 135

'ஓர் இரண்டு வயவர் முனைந்து உடன் பொருதல் உலகியற்கை; ஒருவன்தன்மேல்
போர் இரண்டு புறமும் வளைந்து, ஒரு கோடி முடி வேந்தர் பொருது கொன்ருர்;
தேர் இரண்டு கிடையாத குறை அன்ருே, களத்து அவிந்தான், சிறுவன்!' என்று என்று,
ஈர்-இரண்டு பெயர் ஒழிய மற்று உள்ளார் அழுது இரங்கி என் பட்டாரே!' 136

தருமன் அபிமனது மரணச் செய்தி கேட்டுப் புலம்புதல்

'தாள் விசயம் பெற முனைந்து, சக்கரயூகம் பிளந்து, தானே நின்று,
வாள் விசயன் திருமதலை, வானேரும் வியந்து உரைக்க, மாய்ந்தான்!' என்று,
வேள்வியினல், உண்மையினல், திண்மையினல், தன் அளியால் விறலால், பல் நூற்
கேள்வியினல் மிகுந்து, எவர்க்கும் கேளான உதிட்டிரனும் கேட்டான் அன்றே. 137

'"பிறந்த தினம் முதலாகப் பெற்றெடுத்த விடலையினும் பீடும் தேசும்
சிறந்தனை" என்று உனைக் கொண்டே தெவ்வரை வென்று உலகு ஆளச் சிந்தித்தேன்
[யான்;
மறந்தனையோ, எங்களையும்? மாலையினல் வளைப்புண்டு, மருவார் போரில்
இறந்தனையோ? என் கண்ணே! என் உயிரே! அபிமா! இன்று என் செய்தாயே!

'தேன் இருக்கும் நறு மலர்த் தார்ச் சிலை விசயன் இருக்க, வரைத் திண்தோள் வீமன்-
தான் இருக்க, மா நகுல சாதேவர்தாம் இருக்க, தமராய் வந்து
வான் இருக்கின் முடிவான மரகத மா மலை இருக்க, வாழ்வான் எண்ணி
யான் இருக்க,வினை அறியா இளஞ் சிங்கம் இறப்பதே? என்னே! என்னே!

'நின்றனையே எனைக் காத்து; "நீ ஏகு" என்று யான் உரைப்ப, நெடுந்தேர் ஊர்ந்து
சென்றனையே இமைப் பொழுதில்; திகிரியையும் உடைத்தனையே; தெவ்வர் ஓட,
வென்றனையே; சுயோதனன்தன் மகவுடனே மகவு அனைத்தும் விடம் கால் அம்பின்
கொன்றனையே; நின் ஆண்மை மீண்டு உரைக்கக் கூசினையோ?—குமரர் ஏறே! 140

'உனக்கு உதவி ஒருவர் அற, ஒரு தனி நின்று அமர் உடற்றி, ஒழிந்த மாற்றம்,
தனக்கு நிகர் தான் ஆன தனஞ்சயனும் கேட்கின், உயிர் தரிக்குமோ தான்?
எனக்கு அவனி தர இருந்தது இத்தனையோ? மகனே!' என்று என்று மாழ்கி,
மனக் கவலையுடன் அழிந்து, மணித் தேரின் மிசை விழ்ந்தான், மன்னர் கோவே. 141

வீமன் புலம்புதல்

'சங்கலார், இடை வளைத்த சக்கரத்தை உடைப்பதற்குத் தமியேன் எய்தி,
அங்கு உலாவரும் இரதத்து அரசரையும் தொலைத்து, உன்னை அடுப்பான் வந்தேன்;
பங்கு எலாம் மரகதமாம் பவள நிறப் பொருப்பு உதவு பைம் பொன் கொன்றைத்
தொங்கலால் உனை வளைத்த சூழ்ச்சியை இன்று அறிந்திலனே, தோன்றலே! நான்.

'மின்னுமல் இடித்தது என விழ்த்த பொலந் தொடையாலும், விடையோன் ஈந்த
பொன் ஆர் வெங் கதையாலும், அல்லது, அபிமனை அமரில் பொர வல்லார் யார்?
தன் ஆண்மை நிலை நிறுத்தி, சங்கம் முழக்கிய வீர சிங்க சாப
என் ஆனை இறந்து பட, இன்னமும் நான் இவ் உயிர் கொண்டு இருக்கின்றேனே!

'எடுத்த படை அனைத்தினுக்கும் எதிர் இல்லை எனக் கலைகள் எல்லாம் உன்னை
அடுத்தது கண்டு, ஐயா! நின் ஆர் உயிர்க்குக் கரைந்து கரைந்து ஐயுற்றேன் யான்;
விடுத்த பெருந்தாதை இரு விழி களிப்பப் பகை வென்று மீளாது, என்னைக்
கெடுத்தனையே! பிழைத்தனை என்று இனி ஒருவர் வந்து உரைக்கக் கேளேன் கொல்லோ?'

தருமனும் அருச்சுனனை ஒழிந்த தம்பியரும் அழுது புலம்பியிருக்க, அருக்கன் மறைதல்

என்று என்று, வீமனும் தன் இளையோரும் அழுது அரற்ற, 'இறந்தோன் வீரம்
நன்று!' என்று, தளம் இரண்டின் நரபாலர் பலர் திரண்டு நவிலா நிற்ப,
அன்று, என்று மனம் மருளுற்று, அபிமன் அடு தலைக் குன்றை அடுத்து, மேலைக்
குன்று என்று தடுமாறி, பின்னையும் போய்த் தனது தடங் குன்று சேர்ந்தான்.

விசயன் தெற்குத் திக்கில் வெற்றிகொண்டு மீள, யாவும் உணரும் கண்ணன்
இந்திரனை நினைத்து, அவனது புதல்வனைக் காக்குமாறு கூறுதல்

இந் நிலத்து அவனி பாலர் இவ் வகை இரங்கி ஏங்க,
தென் நிலத்து எதிர்ந்துளாரைத் தென் நிலம்தன்னில் ஏற்றி,
எந் நிலத்தினும் தன் ஆண்மைக்கு எதிர் இலா விசயன்தானும்,
அந் நிலத்து அகன்று, மீண்டான் உற்றவாறு அறிகிலாதான். 146

போனது வருவது எல்லாம் புரை அற உணருகிற்கும்
மான் அதிர் கனகத் திண் தேர் வலவனும் மதுரை மன்னன்,
தேன் அதிர் கடுக்கை மாலை இடு சயத்திரதன்தன்னால்
ஆனதும் குறித்து, வானோர் அரசையும் குறிக்கலுற்றான். 147

வழியில், இந்திரன் முனி வடிவில் வந்து, இறந்த தன் புதல்வனுடன் தீப் பாய
இருத்தல் கண்டு, கண்ணன் அந்தணனை விலக்குமாறு விசயனுக்குக் கூறுதல்

மதித்தலும், மனத்தில் தோன்றும் வலாரியை, குறிப்பினால், 'உன்
சுதித் தடந் திண் தேர் மைந்தன் உயிரை நீ காத்தி' என்ன,
துதித்து அவன் தொழுது, மாயச் சூழ்ச்சியால் முனியும் ஆகி,
'விதித்தலைப் பட்ட காதல் சுதனுடன் விளிவேன்!' என்னா, 148

நெறியிடை, இவர்கள் காண நெருப்பினை வளர்த்து, தானும்
பொறி உற விழும்காலை, புவனங்கள் அனைத்தும் ஈன்றோன்,
அறிவுடை விசயற்கு, 'இந்த அந்தணன் தழலில் வீழாது,
எறி கணை வரி வில் வீர! விலக்கு நீ ஈண்டை' என்றான். 149

விசயன் அந்தணனைத் தடுத்துக் கூற, அவன், 'நின் மகன் இறந்தாலும்
என் வார்த்தையை மறுது ஒழி' என்றல்

என்றலும் விசயன் எய்தி, 'எந்தை! நீ எரியில் வாளா
பொன்றல்; உய்ந்திருந்தால், இன்னம் புதல்வரைப் பெறலும் ஆகும்;
நன்று அல, தவத்தின் மிக்கோய், நல் உயிர் செகுத்தல்!' என்னா,
குன்றினும் வலிய தோளான் முனிவனைத் தழுவிக்கொண்டான். 150

'வீதலும் பிழைத்தல்தானும் விதி வழி அன்றி, நம்மால்
ஆதலும் அழிவும் உண்டோ? நின்னில் வேறு அறிஞர் உண்டோ?
பூதலம்தன்னில் யாவர் புதல்வரோடு இறந்தார்? ஐயா!
சாதல் இங்கு இயற்கை அன்று' என்று, அருளுடன் தடுத்த காலை,

தன் மகனுடன் தீ மூழ்கத் தவிர்ந்த நல் தவனும், மீள,
வில் மகன் ஆகி நின்ற விசயனை வெகுண்டு நோக்கி,
'என் மகன் இறக்க, என்னை இருத்தினை ஆயின், அம்ம
நின் மகன் இறந்தால், என் சொல் மறுது ஒழி, நீயும்!' என்றான்.

அருச்சுனனும் ஒருப்பட்டு மேலே போகும் போது பேரொலி செவிப்படுதல்

ஐ எனத் தொழுது வீரன் அந்தணன் உயிரை மீட்டு,
மை எனக் கரிய மேனி வலவனும் தானும் திண் தேர்
ஒய்யெனச் செலுத்து காலை, வேலையின் ஓதைதானும்
பொய் எனப் பரந்து, ஓர் ஓதை செவிகளைப் புதைத்தது அன்றே.

பாசறை அணுகும் முன்னம், விசயன் பக்கத்திலுள்ள ஆயுதங்களைக் கண்ணன்
அப்புறப்படுத்துதல்

பாசறை அணுகும் முன்னம், பாசடைப் பதுமம் போல
மாசு அற விளங்கும் மேனி வண் துழாய் அலங்கல் மூர்த்தி,
ஆசு அறு வரி வில் காளை அம் கையும் அருகும் நீங்காத்
தேசு உறு படைகள் யாவும் ஒழித்தனன், தீமை தீர்ப்பான். 154

'அரற்று ஒலியின் காரணம் என்?' என விசயன் கேட்ப, கண்ணன்
யாதும் உரையாது கண்ணீர் சிந்துதல்

அம் கை ஆர்த்து, அனைத்துளோரும் அரற்று பேர் அரவம் கேட்டு,
கங்கை அம் பழன நாடன் கண்ணனை வணங்கி நோக்கி,
'இங்கு அயல் எழுந்த கோடம் யாது?' என, யாதும் சொல்லான்,
பங்கய நெடுங் கண் சேப்ப, நித்திலம் பரப்பினனே. 155

விசயன் வற்புறுத்திக் கேட்ப, கண்ணன் அபிமனுக்கு உற்றவாறு கூறுதல்

வன்கணன் இளகி, செங் கண் மால் அடி வீழ்ந்து, 'மேன்மேல்
என் கணும் தோளும் மார்பும் இடன் உறத் துடிக்கை மாறு;
நின் கணும் அருவி சோர நின்றனை; இன்று போரில்,
புன்கண் உற்றவர்கள் மற்று என் புதல்வரோ? துணைவர்தாமோ?

'திரு உளத்து உணராது இல்லை, செப்புக!' என்று அயர்வான்தன்னை
மருவுறத் தழுவி, 'திங்கள் மரபினுக்கு உரிய செல்வா!
வெருவுறப் பகையை வென்ற வீரன், என் மருகன்!' என்று என்று,
அரு வரைத் தோளினனுக்கு உற்றவாறு அனைத்தும் சொன்னான்.

புத்திரசோகத்தால் அருச்சுனன் தேரினின்று பூமியில் விழ,
கண்ணன் தழுவி எடுத்துச் சோகம் மாற்றுதல்

மைத்துனன் உரைத்த மாற்றம் மைத்துனன் செவிக்குத் தீக் கோல்
ஒத்து, இரு புறனும் வேவ, உள் உறச் சுட்ட போது,
புத்திர சோகம் என்னும் நஞ்சினால் பொன்றினான்போல்,
அத் தடந் தேரினின்றும் அவனிமேல் அயர்ந்து, வீழ்ந்தான். 158

அயர்ந்தனன் விழுந்த கோவை அச்சுதன் பரிவோடு ஏந்தி,
புயம் தழீஇ எடுத்து, வாசப் பூசு நீர் தெளித்து மாற்ற,
பயம் தரு கொடிய கூடபாகலம் தணிந்து, மெல்லக்
கயம் தெளிவு உற்றது என்னக் கண் மலர்ந்து, அழுதலுற்றான்: 159

விசயனது புலம்பல்

' ''போரினில் துணைவரோடும் புயங்க கேதனனை வென்று,
பார் எனக்கு அளித்தி நீயே'' என்று உளம் பரிவு கூர்ந்தேன்;
நேர் உனக்கு ஒருவர் இல்லாய்! நீ களம் பட்டாய்ஆகில்,
ஆர் இனிச் செருக்க வல்லார்?—ஐவருக்கு உரிய கோவே! 160

'சக்கரம் பிளந்தவாறும், தரியலர் உடைந்தவாறும்,
துக்கரம் ஆன கொன்றைத் தொடையலால் வளைத்தவாறும்,
மெய்க் கரம் துணிந்தவாறும், மீண்டு உருத்து அடர்த்தவாறும்,
உக்கிரமுடன் என் முன்னே ஓடி வந்து, உரை செய்யாயோ? 161

'பன்னக அரசன் பெற்ற பாவை மா மதலைதன்னை
முன் உற முனையில் தோற்றேன்; மூர்க்கனேன் முடியாது உண்டோ?
உன்னையும் இன்று தோற்றேன்; உன்னுடன் தொடர்ந்து வாராது,
இன்னமும் இருக்கின்றேன் யான்; என் உயிர்க்கு இறுதி உண்டோ?

'கதிரவன் உதிக்கும் முன்னே கண் துயில் உணர்த்தி, என்னை
அதிர் அமர்க் கோலம் கொள்வான் அறிவுறுத்து உரைக்க வல்லாய்;
முதிர் அமர் முருக்கி மீண்டேன்; இத்தனைப் போதும் முன்போல்
எதிர் வரக் காண்கிலேன்; இங்கு இல்லையோ? என் செய்தாயோ? 163

'தந்திரம் யாவும் இன்றி, தனித்து நீ தானே போர் செய்து,
''அந்தரம் அமையும்'' என்று, இவ் அகல் இடம் துறந்த ஐயா!
''மைந்துடன் நம்மைக் காண மகன் மகன் வருகின்ருன்'' என்று,
இந்திரன் ஏவ, உன்னை இமையவர் எதிர்கொண்டாரோ? 164

'தேர் அழிந்து, எடுத்த வில்லும் செங் கதிர் வாளும் இன்றி,
ஓர் உதவியும் பெருமல் ஒழிந்து, உயிர் அழிந்த மைந்தா!
போர் அமர் உடற்றி, நீ அப் பொன்நகர் அடைந்த போது, உன்
பேர் அமர் ஆண்மை கேட்டு, பிதாமகன் என் சொன்னனே? 165

'மல் புயக் குன்றில் ஒன்று வாளுடன் வீழ்ந்த பின்னும்,
பொற்பு உறப் பொருத நீ அப் பொன்னுலகு அடைந்த காலை,
அற்புதப் படைகள் வல்லாய்! அபிமனே! அமரர் ஊரும்,
கற்பகக் காவும், வானில் கங்கையும், காட்டினரோ? 166

'வளைத்த வில் நிமிரா வண்ணம் வாளியால், மாவும் தேரும்
துளைத்து, முன் காலாள் ஆகத் துரோணனைத் துரந்த வீரா!
''திளைத்த வெஞ் சமரில் நொந்து, தனஞ்சயன் சிறுவன் மேனி
இளைத்தது!'' என்று இந்திராணி இன் அமுது ஊட்டினளோ?' 167

ஐவரும் புலம்பி நெஞ்சழிந்த காலத்து, முனிவர் பலருடன்
வியாத முனி வந்து தேற்றி மீளுதல்

என்ன மகவான் மகன் இரங்கினன் அரற்ற,
முன்னவர்கள் பின்னவர்கள் முறை முறை புலம்ப,
சென்னி கரம் வைத்து அனைவரும் கலுழி செய்ய,
அன்ன பொழுது, ஆரணம் அளித்த முனி வந்தான். 168

வந்த முனி, மற்றும் உடன் வரு முனிவரோடும்
அந்த நரபாலர் கண் அரும் புனல் துடைத்து,
கந்தன் நிகர் மைந்தனொடு கையற நினைக்கும்
பந்தனை அறுக்கும் மொழி பற்பல பகர்ந்தான்: 169

'தாயரொடு தந்தையர்கள், தாரமொடு தனயோர்,
தூய துணைவோர்களொடு சுற்றம் என நின்ருேர்,
மாயை எனும் வல்லபம் மயக்குறும் மயக்கால்
ஆய உறவு அல்லது, அவர் ஆர்? முடிவில் யாம் ஆர்? 170

'வந்து பிறவாத மனை இல்லை; முலை மாறித்
தந்து பரியாமல் ஒழி தாயர்களும் இல்லை;
புந்தி உணர்வு அற்றவர் புலம்புறுவது அல்லால்,
இந்த உலகத்து அறிஞர் யாதினும் மயங்கார். 171

'உம்மையினும், யார் உறவு உணர்ந்திலம்; இனிப் போம்
அம்மையினும், யாவர் உறவு ஆவர் என அறியேம்;
இம்மையில் நிகழ்ந்த உறவு இத்தனை; இரங்கல்,
மும்மையும் உணர்ந்து வரும் மூதறிவினீரே! 172

'ஆற்றி உமது ஆண்மை அழியாமல் இரும்' என்று என்று,
ஏற்றி அடைவே, சுருதி யாவையும் எடுத்துத்
தேற்றி உரைசெய்து, தன சேவடி இறைஞ்சிப்
போற்றிய மகிபரை இருத்து, முனி போனான். 173

விசயன் பின்னும் சோகம் தாங்காது, நகுலனைக் கனல் வளர்க்கச் செய்து, தீப் பாயும் நிலையில், முன் அருச்சுனன் தடுத்த அந்தணன் வந்து விலக்குதல்

தேற்றினும் மகப் பரிவு தேறல் அரிது அன்றே!
ஆற்ற அரிதுஆதலின், அருச்சுனன் அரற்றா,
மாற்று அரிய பேர் அழல் வளர்த்தி!' என வல்லே
ஏற்றது உணராது, தனது இளவலொடு உரைத்தான். 174

மத்திரை மகன் கனல் வளர்க்க, அதனூடே,
மித்திரரும் யாவரும் விலக்கவும் விலங்கான்,
'பத்திரவல்லொடு உயிர் செகுப்பல்' என நின்றான்—
புத்திரர் இலா இடர் பொறுத்திடலும் ஆமோ? 175

அன்பொடு துழாய் முதல்வன் அப்பொழுது அழைக்க,
முன்பு தழல் மூழ்கல் ஒழி முனி விரைவின் வாரா,
'நின் புதல்வனோடு எரியின் நீ புகுதல் நெறியோ,
என் புதல்வனோடு எனை இறப்பது தவிர்த்தோய்? 176

அந்தணன் விலக்க எரிபுகுதல் தவிர்ந்த விசயன், பின்
தருமன் முதலியோரை வெகுளுதல்

'வயப்பட வழக்கின் வழி வருக' என, முனிவன்
மொழிப்படி பொறுத்து, அழலின் மூழ்கு தொழில் மாறி,
விழிப் புனலின் மூழ்கி, மனம் வெந்து தளர்வு உறுவோன்
[illegible]ப்படு சுரத்தில் முளி பாதவம்அது ஆனான். 177

'காமர் பிறை அன்ன சிறு காளைதனை வாளா
ஏமம் உறு வெஞ் சமரில் ஏவினர்கள்!' என்னா,
மா முரசு அணிந்த கொடி மன்னனையும், வண் தார்
வீமனையும், நின்ற இளையோரையும் வெகுண்டான். 178

'நாளை அந்திப்பொழுதிற்குள் சயத்திரதனை முடிப்பேன்!' என
விசயன் வஞ்சினம் மொழிதல்

'சிந்து பதி ஆகிய செயத்திரதனைத் தேர்
உந்து அமரின் நாளை உரும் ஏறு என உடற்றா,
அந்தி படும் அவ் அளவின் ஆவி கவரேனேல்,
வெந் தழலின் வீழ்வன்; இது வேத மொழி!' என்றான். 179

'இன்று அமரில், வாள் அபிமன் இன் உயிர் இழக்கக்
கொன்றவனை, நாளை உயிர் கோறல் புரியேனேல்,
மன்றில் ஒரு சார்புற வழக்கினை உரைக்கும்
புன் தொழிலர் வீழ் நரகு புக்கு உழலுவேனே! 180

'மோது அமரின் என் மகன் முடித் தலை துணித்த
பாதகனை நான் எதிர் படப் பொருதிலேனேல்,
தாதையுடனே மொழி தகாதன பிதற்றும்
பேதை மகன் எய்து நெறி பெற்றுடையன் ஆவேன்! 181

'சேய் அனைய என் மதலை பொன்ற அமர் செய்தோன்
மாய, முன் அடர்த்து, வய வாகை புனையேனேல்,
தாயர் பசி கண்டு, தனி தன் பசி தணிக்கும்
நாய் அனைய புல்லர் உறு நரகில் உறுவேனே! 182

'வஞ்சனையில் என் மகனை எஞ்ச முன் மலைந்தோன்
நெஞ்சம் எரி உண்ண அமர் நேர் பொருதிலேனேல்,
தஞ்சு என அடைந்தவர்தமக்கு இடர் நினைக்கும்
நஞ்சு அனைய பாதகர் நடக்கு நெறி சேர்வேன்! 183

'வினையில் என் மகன்தன் உயிர் வேறு செய்வித்தோனைக்
குனி சிலையின் நாளை உயிர் கோறல் புரியேனேல்,
மனைவி அயலான் மருவல் கண்டும், அவள் கையால்
தினை அளவும் ஓர் பொழுது தின்றவனும் ஆவேன்!' 184

விசயன் வஞ்சினம் கேட்டு, தருமன் கண்ணனோடு பேசுதல்

இன்னணம், இருந்தவர்கள் யாவரும் நடுங்க,
மன் அவையில் அன்று பல வஞ்சினம் உரைக்க,
சொன்ன உரை ஆன கனல் சுட்ட செவியோடும்,
பின்னை, அறன் மைந்தன் நெடு மாலினொடு பேசும்: 185

'வடி சுடர் வாளியான் மொழிந்த வஞ்சினப்-
படி சயத்திரதனைப் படுத்தல் கூடுமோ?
பொடி அனல் இவன் புகின், புகுந்து நால்வரும்
இடி பொரும் அரவு என, இறத்தல் திண்ணமே. 186

' "முப்பது கடிகையின் முரண் கொள் மொய்ம்பனைத்
தப்பு அறக் கொல்லுவேன்!" என்று சாற்றுமால்;
அப் பெருஞ் சேனையில் அவனை உள் உறத்
துப்பு உற அணிந்திடின், துன்னல் ஆகுமோ? 187

'எஞ்சின் மற்று என் செய்வேன்?' என்னும் எல்லையின்,
'அஞ்சல்!' என்று அறன் மகன் அவலம் ஆற்றினன்—
கஞ்ச வான் பொய்கையில் கராவின் வாய்ப் படு
குஞ்சரம்தனக்கு அருள் கொண்டல் மேனியான். 188

தருமனைக் கண்ணன் தேற்றி, விசயனொடு கயிலைக்குச் சென்று, புலரும் முன் வருவதாகக் கூறி இருவரும் போதல்

'இந்திரன் காக்கினும், ஈசன் காக்கினும்,
சிந்துவின் தலைவனைத் தேவர் காக்கினும்,
சுந்தனின் சிறந்த நின் கனிட்டன், நாளையே,
மைந்து உறப் பொருது, அவன் மகுடம் கொள்ளுமே. 189

'வெயில் எழுவதன் முன் இவ் விசயன்தன்னொடும்
கயிலை அம் பொருப்பனைக் கண்டு, மீளவும்,
துயில் உணர்த்திடும்படி தோன்றுவோம்' என,
அயில் அணி ஆழியான் அவனொடு ஏகினன். 190

வழியில் விசயன் பசியினால் களைத்து விழ, கண்ணன் மயக்கம் போக்கி, மாங்கனி முதலிய அருந்தச் செய்தல்

ஏகிய நெறியிடை இளைத்து, வாசவற்கு
ஆகிய குமரன் மெய் அயர்ந்து வீழ்தலும்,
போகியின் அறிதுயில் புரியும் நான்மறை
யோகி அம் கையின் அணைத்து, உயக்கம் மாற்றியே, 191

'உண்டிலை அடிசிலும்; உண்ணும் தீம் புனல்
கொண்டிலை; பசிக் கனல் கொளுந்தி, வீழ்ந்தனை;
மண்டு இலை வேலினாய்! மகவின் அன்பினால்,
கண்டிலை, உலகுஇயல் காட்டக் காட்டவே. 192

'மாங்கனி, வாழையின் கனி, வருக்கையின்
தீம் கனி, கன்னலின் செய்ய நீர், உள;
வேம் கனல் பசியும், நின் விடாயும் ஆறவே
ஈங்கு இனிது அருந்துதி; ஏந்தல்!' என்னவே, 193

விசயன், 'சிவபூசை புரியவில்லையே!' என, தன்னையே பூசிக்குமாறு கண்ணன் உரைத்தல்

சரிந்தவர் சரிவு அறத் தாங்கும் நாயகன்
பரிந்து, இவை உரைத்தலும், 'பாவை பங்கன்மேல்
புரிந்திலன் இன்னமும் பூசை!' என்றனன்,
வரிந்த வெஞ் சிலைக்கு மண் மதிக்கும் வீரனே. 194

விசயன் கண்ணனைச் சிவாகம விதிப்படி பூசித்து, கனியும் தீர்த்தமும் உண்டு களைப்பு நீங்குதல்

'மரு வரு கானக மலரினால் எமைப்
பொரு அரு பூசனை புரிதி, ஐய! நீ
இருவரும் ஒருவரே என்பது, இன்று போய்,
அரு வரை அவன் அடி அடைந்து காண்டியே.' 195

என்று அரி இயம்பலும், இரு மருங்கினும்
நின்ற நல் மலர் கொடு, நிகர் இல் கேள்வியான்,
மன்றல் அம் துழாய் முடி மாயன்மேல் மனம்
ஒன்றியே, சிவாகம உரையின் சாத்தினான். 196

சாத்தினன் தொழுது, பின் தலைவன் தாள் மலர்த்
தீர்த்தமும், கனிகளும், தெவிட்ட உண்டு, தன்
காத்திரம் தேறினன், கருத்தும் தேறினன்;
பார்த்தன் முன் தவப் பயன் பலித்தவாறுஅரோ! 197

கண்ணன் கருடனை நினைக்க, அவன் வந்து, இருவரையும் கயிலையில் கொண்டு சேர்த்தல்

போய், அரு நெறியிடைப் புள்ளின் வேந்தனைத்
தூயவன் நினைத்தலும், அவனும் தோன்றினான்;
மாயனைத் தோளினும், வலாரி மைந்தனைச்
சேய் எனக் கரத்தினும், சேர ஏந்தியே, 198

நீலம் முற்றிய மலை இரண்டொடு ஒன்று பொற்
சீலம் முற்றிய மலை செல்வது என்னவே,
ஆலம் முற்றிய களத்து ஐயன் வெள்ளி அம்
கோலம் முற்றிய மலை குறுகினான்அரோ. 199

மாற்றினால் விளங்கு பொன் வடிவன், வெஞ் சிறைக்
காற்றினால் விசை உறக் கழன்று போயின,
ஆற்றினால் அறம் புரி அம்மையோடு ஒரு
கூற்றினான் வரை படி கொண்டல் ஏழுமே. 200

பறிந்தன கொடு முடி பலவும்; வேரொடு
மறிந்தன, சாரலின் மரங்கள் யாவையும்;
அறிந்தன, மயில் முதல் ஆன புள்இனம்;
செறிந்தன, பணிந்தன, செய்ய தாள்களே. 201

பாண்டவ சகாயன் ஊர் பறவையின் குலத்து
ஆண்தகை இரு சிறகு அசையும் ஓதையால்,
காண்தகு சடைமுடிக் காலகாலன் மெய்ப்
பூண்டன பணிகளும், புரண்டு வீழ்ந்தவே. 202

வரிந்த பைங் கனை கழல் வயினதேயனை,
விரிந்த வெண் கிரி அரமாதர், மீது கண்டு,
'எரிந்திடு வச்சிரன் இந்த மால் வரைக்கு
அரிந்திலன் சிறகு!' என, ஐயம் எய்தினுர். 203

கயிலைக் காட்சிகள்

நிறை மதி நிகர் என நிறத்த வெள்ளி அம்
பொறை மலை திசைதொறும் பொழியும் வாள் நிலா,
நறை மலர் இதழி சேர் நாதன் வார் சடைப்
பிறை மதி நிலவினும் பிறங்க வீசுமால். 204

நீர் அறு தருக்களும் தழைக்க நின்று, முன்
நாரதன் முதலியோர் நவிற்று நாத யாழ்,
பாரத அமர் புரி பச்சை மா முகில்
ஆர் அதர் விடாயை வந்து ஆற்றுகின்றதால். 205

சங்கரன் மணி வரைச் சாரல் மாருதம்,
திங்களின் நிலவு உமிழ் செக்கர் வேணிமேல்
கொங்கு அவிழ் செழு மலர்க் கொன்றை வாசமும்,
கங்கை நுண் துவலையும், கலந்து, வீசுமால். 206

அங்கு உள விடர் அகத்து அநேகம் ஆயிரம்
பொங்கு அழல் உமிழ் விழிப் புயங்க மா மணி
எங்கணும் இருள் அற இலங்கு சோதியால்,
கங்குலும் பகலவன் கரங்கள் காட்டுமால். 207

சிவபெருமான் கண்ணனை எதிர்கொண்டு ஆசனத்து இருத்தி, வந்த காரியம் வினவுதல்

செந்திரு மட மயில் கேள்வன் சென்றமை
அந்தி வான் நிறத்தவன் அறிந்து, முன்னமே
நந்தியும் உரைசெயக் கேட்டு, 'நன்று!' எனப்
புந்தியால் மகிழ்ந்து, எதிர் போந்து, புல்லினுன். 208

ஆங்கு ஓர் ஆசனத்திடை இருத்தி ஐயனை,
பாங்கினுல் வினவினுன், பவள மேனியான்—
ஈங்கு இவன் பிறந்ததும், இளைத்த பார்மகள்
தீங்கு அறப் புரிதரு செயலும், யாவுமே. 209

கண்ணன் சிவபெருமானுக்கு யாவும் சொன்னபின், 'விசயனை வருக!' என்று
சிவபெருமான் அழைத்தல்

கேசவன் புரிவு எலாம் கிரீசன் என்னும் அத்
தேசவன் தெளிவுறச் செப்பிவிட்ட பின்,
வாசவன் புதல்வனை, 'வருக!' என்றலும்,
பாச அன்புடன் அவன் பணிந்து, போற்றினுன். 210

விசயன் சிவபெருமான் எதிரே வந்து, பணிந்து போற்றுதல்

கண்ணன்மேல் அணி மலர் அனைத்தும் காய் கனல்
வண்ணன்மேல் காண்டலும், மனம் களிப்புறு,
'எண்ணின், மேல் இரண்டு என இலது' என்று, அவ் விறல்
அண்ணல் மேனியும் புளகு அரும்பினன்அரோ. 211

'பொங்கு அரா வெயில் மணிப் பூணும், பேணும் நீற்று
அங்கராகமும், உவந்து அணியும் மேனியாய்!
சங்கரா! மேரு வெஞ் சாபம் வாங்கிய
செங் கரா! சிவ சிவ! தேவ தேவனே! 212

'விண்ணிடைத் திரிபுரம் வெந்து நீறு எழப்
பண்ணுடைச் செந் தழல் பரப்பும் மூரலாய்!
எண்ணுடைக் காமனை எரித்த பேர் அழல்
கண்ணுடைக் கடவுளே! கால காலனே! 213

'கை உறு சிலையுடன் கான வேடன் என்று
ஐயுற அருகு வந்து அணுகி, மெய்யுடன்
மெய் உற அமர் புரி விநோதம், நாள் தொறும்,
மை உறு கண்டனே! மறப்பது இல்லையே. 214

'உமையவள் கணவனே! உகாந்த காலனே!
இமைய வில் வீரனே!' என்று கொண்டு, இவன்
அமைவு உறத் துதித்தலின், அவனும் மற்று இவன்
சமைவு கண்டு, ஐயனோடு உவகை சாற்றினன். 215

சிவபெருமான் உவந்து, கண்ணனோடு பேசி, 'வேண்டுவது என்?' என,
கண்ணன் அம்பு முதலியன வேண்டுதல்

'ஆற்றினை, துயர்; மயல் அனைத்தும் மெய் உறத்
தேற்றினை; சிந்தையை, தெளிந்த வாய்மையால்
மாற்றினை; மும் முறைப் பிறப்பும் வந்து நின்
கூற்றினை அடைதலால், பிறவி கொள்ளுமே?' 216

'வேண்டுவது என்கொல் மற்று?' என்ன, வீரனும்,
'பூண்டது ஓர் பறை அறைந்து அன்றிப் போகலேன்;
ஆண்டு, அருள் படைகளால் அவுணர்க் காய்ந்தனன்;
ஈண்டு அருளுதி, விறல் எய்தும் வண்ணமே. 217

'தானவர்ப் பொரு படை கொண்டு, தாரணி
மானவர்ப் பொருவது வழக்கும் அல்லவால்;
கூனல் வில் கணைகளும் குறைவு உறுதது ஓர்
தூ நிழல் பொய்கையும் கொடுத்தி, தோன்றலே!' 218

சிவபெருமான் கண்ணனைப் புகழ்ந்து கூறுதல்

என்றலும் ஈசன் நகைத்து உரைசெய்தனன்: 'யான் என நீ என வேறு
அன்று; இவை யாவும் அளித்திடுதற்கு உனை அல்லது வல்லவர் யார்?
நின்றது ஓர் தூணிடை வந்தனை; யானைமுன் நின்றனை; கஞ்சனையும்
கொன்றனை; மன் அவையூடு உரிய, பல கூறை கொடுத்தனையே.

'முன் உரு ஆயினை; நின் திரு நாபியின் முளரியின் வாழ் முனிவன்
தன் உரு ஆகி, இருந்து படைத்தனை, பல சகத் அண்டமும் நீ;
நின் உரு ஆகி அளித்திடுகின்றனை, நித்தவிபூதியினால்;
என் உரு ஆகி அழிக்கவும் நின்றனை, ஏதம் இல் மாதவனே!' 220

சிவபெருமான் விசயனை ஒரு பொய்கையில் மூழ்கச் செய்து, ஒரு முனிவனால்
அம்பு முதலியன அவனுக்குக் கொடுக்கச் செய்தல்

ஆயிடை நின்ற கிரீடியை, முக்கணன், அங்கு ஒரு பொய்கையிலே,
'போய் இடை மூழ்கு' என, அப் புனலூடு ஓர் புயங்கம் எழுந்தது; அதன்
வாயிடை வந்தனன், மாண் உருவாய் ஒரு மா முனி; அம் முனி அச்
சேய் இடை நீரில் எடுத்தனன், மற்று ஒரு சிலையுடன் வாளியுமே.

முப்புரம் நீறு எழு நாளின் இயற்றிய முட்டியும், நல் நிலையும்,
அப் புரசூதனன் ஏவலின், அந்தணன் அமரர்பிரான் மதலைக்கு
ஒப்புறவோடு பயிற்றி, இதம் கொடு உருத்திர மா மறையும்
செப்பினனால்; அவை பெற்றனன், வென்று செயத்திரதன்-தெறுவான்.

மேலும், பல வரங்களைச் சிவபெருமான் கொடுத்து, அவர்களை விடுக்க,
அவர்கள் வெள்ளி எழும் காலத்து வந்து பாசறை சேர்தல்

'யாது ஒரு போது நினைத்தனை, அவ் வழி எய்தும், உனக்கு, இவை' என்று
ஓதி, அநேக வரங்கள் கொடுத்த பின், உமை ஒரு கூறு உடையோன்,
'பூதல மாது இடர் தீர அருஞ் சமர் புரி தொழில் முற்றிய பின்,
சீதர! நின் பதம் மேவுக!' என்று, அருள்செய்து விடுத்தனனே. 223

எண்ணிய காரியம் எய்தி, இறைஞ்சிய இந்திரன் மா மகனும்,
திண்ணிய நேமி வலம்புரி வாள் கதை சிலையுடை நாயகனும்,
புண்ணியன் மால் வரை நின்று உரகாரி புயங்களும் வன் கரமும்
நண்ணிய காலையில், வெள்ளி எழுந்தது, ஞாயிறு எழும் திசையே.

தருமன் கடோற்கசனைத் துரியோதனனிடம், விசயன் வஞ்சினம் முதலியன உரைத்து
வருமாறு, தூது அனுப்புதல்

இங்கு இவர் மூவரும் ஏகினர் மீளும் முன், எறி முரசக் கொடியோன்,
அங்கு உரையாடியது உரைசெயின், மண்மிசை யார் வியவாது ஒழிவார்?
பங்குனன் ஓதிய வஞ்சினமும், பசுபதியிடை ஏகியதும்,
கங்குலின் ஏவினன், 'உரைசெய்க!' என்று, கடோற்கச மீளியையே.

மற்று அவன் முந்துறு தந்தையை வந்து வணங்கி, 'முன் வஞ்சனையின்
செற்றவர் தம்முடன் உற்றது சொல்வது சேவகமோ? அறிவோ?
கொற்றவர் மா முடி கமழ் கழலாய்! வலி கூர் திறலும் செயலும்
அற்றவர் போல உரைப்பது என்?' என்று உள் அழன்று புகன்றனனே.

'திறன் அறியாமல் உரைத்தனை, மாருதி சிறுவன் எனும்படி, நீ;
மற நெறி என்று, வயிர்த்தவர் கொல்வது வஞ்சனையோ? விரகோ?
அற நெறியே பொருது அல்லது வெல்லுதல் ஆண்மைகொலோ? அழகோ?
விறல் நெறியாவது பொய் இலது' என்றனன், மெய்ம்மை உணர்ந்திடுவான்.

கடோற்கசன் துரியோதனனிடம் சென்று, செய்தி சொல்லுதல்

நிருதன் நகைத்து, வணங்கி, நிணம் கமழ் நீள் இலை வேலினெடும்
கருதலர் துற்றிய பாசறை அன்று ஓர் கணப் பொழுதில் புகுதா,
ஒரு தன் இலக்கணமைந்தன் இறந்தனன் என்று அழுது உள்அழியும்
விருதுடை வித்தகன் வாயிலில் நின்று, விளித்தனன் ஓர் உரையே.

எதிர் எதிர் கொற்றவன் வாயிலில் நின்றவர், 'யார்!' என எய்துதலும்,
'அதிர் முரசக் கொடியோன் அரவக் கொடி அரசனிடைப் பகர்வான்
முதிர உரைத்தது ஓர் மொழி உளது; அம் மொழி மொழிதர வந்தனன்; யான்
எதிர் அறு வெற்றி அரிக் கொடியோன் மகன்' என்றனன் விக்ரமனே.

அம் மொழி தீ உரும்ஏறு என நீடு அவை அரசர் செவிப்பட, ஓர்
செம்மொழி அற்றவன் மொழிவழி சென்று, ஒரு சிறிதும் மதித்தருளான்
'நும் மொழி விட்டு ஒரு மெய்ம்மொழி கேண்ம்' என, நோதகு நெஞ்சினனும்,
'வெம் மொழி வித்தக! எம் மொழி நுந்தைதன் மெய்ம்மொழி?' என்றனனே.

'தன் திரு மைந்தனை மௌலி துணித்த சயத்திரன்தனை, ''வாள்
வென்றிகொள் காவலர் காவல் மிகுப்பினும், வெயிலவன் வீழ்வதன்முன்,
கொன்றிடுவேன்! அது தப்பின் அருங் கனலூடு குதித்திடுவேன்!''
என்று மொழிந்து, அரன் வாழ் கயிலாயமும் எய்தினன், வில் விசயன்.

' ''வஞ்சனையால் அமரில் பகைதன்னை மலைப்பது பாதகம்'' என்று
அஞ்சினன் ஆதலின், நீ அறியும்படி ஐயன் விடுத்தனனால்;
''எஞ்சினன் நாளை உன் மைத்துனன்'' என்று கொள்' என்றனன்—வன் திறல் கூர்,
நெஞ்சினில் வேறு ஒரு சஞ்சலம் அற்ற, நிசாசரன் மா மருகன். 232

‘மன் மைந்தர் பலரொடும் போய், மறித்து ஒருவர்
மீளாமல் மலைந்து வீழ,
என் மைந்தன் இறந்திடவும், யாது ஒன்றும்
புகலாமல் இருக்கின்றேன் யான்;
தன் மைந்தன் இறந்தனனும்! தான் தழலில்
மூழ்குவனும்! சபதம் கூறி,
வில் மைந்தின் மிகுந்தவருக்கு அழுது இரங்கி,
அரற்றுவது வீரம்தானே? 233

‘பயத்து இரவின் நடுங்கி, அரன் பருப்பதம் புக்கு,
அவன் கொடுத்த படையும் வாங்கி,
வயத்து இரதம் மால் கடவ வந்து எதிர்
தோன்றுவன்ஆகில், மகரம் மோதும்
கயத்து, இரவி விழுவதன் முன், கை அறு தன்
புதல்வனைப்போல் களத்தில் மாளச்
சயத்திரதன் தொடும் கணையால், தான் படுதல்
உறுதி’ எனச் சாற்றுவாயே. 234

‘என்னினும் பார்தனக்கு உரியன்; சிலைத் தொழிலில்
சிலைக் குருவாய் எவரும் போற்றும்
மன்னினும் தான் மிகப் பெரியன்; தண்டு எடுத்தால்
உந்தையினும் வலியன் சால;
உன்னினும் தோள் உரன் உடையன்; மதியாமல்
இப்படி நீ உரைக்கலாமோ?
தன்னினும் போர்க்கு எளியனோ, சயத்திரதன்-
தான்?’ என்று சாற்றுவாயே. 235

‘ஆளை ஆள் நிலை அறிவது அல்லது, மற்று
அறிபவர் யார்? அணிந்த போரில்,
நாளை யார் வெல்வர் எனத் தெரியுமோ?’
என நவின்று நகைத்தான் மன்னோ—
பாளை வாய் நெடுங் கமுகின் மிடறு ஒடிய,
குலைத் தெங்கின் பழங்கள் வீழ,
வாளை பாய் குரு நாடும், எந் நாடும்,
முழுது ஆளும் மன்னர் கோமான். 236

கன்னன் இகழ்ச்சி பொருந்தப் பேசுதல்

'தார் அரசன் மகன், துச்சாதனன் மகன், சல்லியன்
மகன், வேல் சகுனி என்னும்
பேர் அரசன் மகன், முதலா எத்தனை பேர்
பட்டாலும் பெரியது அன்றே;
பார் அரசாளுதற்கு இருந்த பார்த்தன் மா
மகன் ஒருவன் பட்டான் ஆகில்,
ஆர் அரசுக்கு இனி உரியார்? அந்தோ!' என்று
உரைத்தான் மற்று அங்கர் கோமான். 237

'அங்கு இருந்து, ''சயத்திரதன் ஆவி கவர்ந்-
திடுவல்!'' என ஆண்மை கூறி,
பங்கு இருந்த உமாபதிபால் பணிந்து, வரம்
பெறச் சென்றான் பார்த்தன் ஆகில்,
கொங்கு இருந்த தாராய்! நின் குடை நிழற்கீழ்
இது காலம் கூட்டம் கூடி,
இங்கு இருந்த ஏழையரேம், என் செய மற்று
இருக்கின்றேம்?' என்றும் சொன்னான். 238

அதற்குக் கடோற்கசன் வெகுண்டு, அவர்களை இகழ்ச்சியாகப் பேசுதல்

இவன் மொழிந்த இகழ்உரை கேட்டு, இடிம்பன்
மருமகன் வெகுளுற்று, 'என் சொன்னாலும்,
அவனி தலம் முழுதும் இனி அரசாள
நினைந்திருந்தீர்; அறிவிலீர்காள்!
சிவன் எரி செய் புரம் போலும் பாடிவீடு
அழல் ஊட்டி, சேனை யாவும்
பவனன் மகன் மகன் என்னும் பரிசு அறியத்
தொலைத்து, ஈடுபடுத்துவேனே. 239

'தசை குருதி நிணம் ஒழுக, தனித் தனியே
எதிர்த்தவரைத் தலைகள் சிந்த,
விசையன் வரவேண்டுமோ? மற்று உள்ளார்
திரண்டு வரவேண்டுமோதான்?
திசை புலரும் முனம் முனைந்து, நீறு ஆக்கி
விடுகுவன்; ''எம் நிருபன் சொன்ன
அசைவு இல் மொழி மறுத்து, உடற்றல் ஆகாது'' என்று
இருக்கின்றேன்; அறிகிலீரே? 240

'இருவர் எதிர் எதிர் தம்மில் இகல் பொருதல்
உலகு இயற்கை; யாரும் கூடி,
பருவம் உறுத் தனிக் குதலைப் பாலகனுக்கு
ஆற்றுமல் பறந்து போனீர்;
ஒருவன் நெடுந் தேர் அழிக்க, ஒருவன் மலர்க்
கை துணிக்க, ஒருவன் பின்னை,
''பொருவன்'' என அறைகூவிப் பொன்றுவித்தான்;
இது கொண்டோ புகல்கின்றீரே?' 241

'அவைக்கு ஏற்பப் பேசாத அரக்கி மகனுடன் ஒன்றும் பேசாதீர்' என்று துரியோதனன் உரைக்க, கடோற்கசன் அவனை இகழ்ந்து பேசி, மீளுதல்

வரைக்கு உவமை பெறும் தடந் தோள் வீமன் மகன்
இப்படியே மதியான் ஆகி,
உரைக்கும் மொழி கேட்டு இருந்த உரகம் அணி
கொடி வேந்தன், உருத்து நோக்கி,
'இருக்கும் எழில் அவைக்கு ஏற்ப இயம்பாமல்,
தன் மதத்தால் இயம்புகின்ற
அரக்கி மகனுடன் ஒன்றும் கழறுதீர்!'
என்று உரைத்தான், அரசர் யார்க்கும். 242

அந்த உரை மீண்டு இவன் கேட்டு, ஆங்கு அவனை
நகைத்து, உரைப்பான்: 'அரக்கரேனும்,
சிந்தனையில் விரகு எண்ணுர்; செருமுகத்தில்
வஞ்சகமும் செய்யார்; ஐயா!
வெந் திறல் கூர் துணைவருக்கு விடம் அருத்தார்;
நிரைக் கழுவில் வீழச் செய்யார்;
உந்து புனலிடைப் புதையார்; ஓர் ஊரில்
இருப்பு அகற்றுர்; உரையும் தப்பார். 243

'செழுந் தழல் வாழ் மனைக் கொளுவார்; செய்ந்நன்றி
கொன்று அறியார்; தீங்கு பூணுர்;
அழுந்து மனத்து அழுக்குறுர்; அச்சமும் அற்று,
அருள் இன்றி, பொய்ச் சூது ஆடார்;
கொழுந்தியரைத் துகில் உரியார்; கொடுங் கானம்
அடைவித்துக் கொல்ல எண்ணுர்;
எழுந்து அமரில் முதுகிடார்; இவை எல்லாம்
அடிகளுக்கே ஏற்ப!' என்றுன். 244

'தேன் இடறிப் பாண் முரலும் செழுந் தாம
விசயனுடன் செருவில் வந்தால்,
மானிடரில் பொர வல்லார் சிலர் உண்டோ?
தெரியாது, வான் உளோரில்;
கோன் இடை உற்று அருகு இருந்த திறல் வேந்தர்
காத்திடினும், குறித்த வீரன்-
தான் இடர் உற்று உயிர் அழிகை தப்பாது!' என்பதும்
உரைத்துத் தனயன் மீண்டான். 245

'நாளை அமரில் சயத்திரதனைக் காக்கவேண்டும்' எனத் துரோணன் முதலியோரைத் துரியோதனன் இரந்து வேண்டுதல்

அரக்கன் அப் பேர் அவை அகன்ற பின், பகை
துரக்கும் வெங் குனி சிலைத் துரோணன்தன்னொடும்,
பரக்கும் வெண் திரைக் கடல் பார் எலாம் உடன்
புரக்க நின்றவன், சில புகழ்ந்து கூறுவான்: 246

'கொடி நெடுஞ் சேனையைக் கூறு செய்து, நீ,
கடிகை முப்பதும் உடன் காக்க வல்லையேல்,
வடிவுடைச் சிந்து மா மகனும் உய்குவன்;
வெடி அனல் குளிக்குவன், விசயன்தானுமே. 247

'நாளை ஓர் பகலுமே, நமக்கு வெய்ய போர்;
காளையர் அனைவரும் காமின், காமின்' என்று,
ஆளையும் அடு களிற்று ஆழி மன்னவன்,
வேளை புக்கவரினும் வீழ்ந்து, வேண்டினன். 248

'என்னால் இயன்ற அளவு காப்பேன்!' எனத் துரோணன் உரைத்தல்

'மணி மதில் அரண் என மன்னு சேனையை
அணி பட நிறுத்தி, ஆம் அளவும் காப்பன் யான்!
பணிவுறு புண்ணிய பாவம் முற்றுவ
துணிவுறத் தெரியுமோ? தும்பை மாலையாய்! 249

'முப்பது கடிகையின் மொழிந்த வஞ்சினம்
தப்பது படாதுஎனின், தனஞ்சயன் சிலைக்கு
ஒப்பது ஒன்று இல்லை; மற்று உரைத்தவா செயல்
அப் பதுமாசனன்தனக்கும் ஆகுமோ? 250

'மல்லினால் மல்லரை மலைந்த மால் அவன்
புல்லினன் என்னினும், சிந்து பூபனை
வில்லினால் வெல்ல அரிது' என்று, மீளவும்
சொல்லினன், மறை மொழித் துரோணன்தானுமே. 251

சயத்திரதனைக் காப்பதாகக் கன்னன் முதலியோர் உரைத்தல்

'கோப் பலருடன் பல கூறல்; மற்று அவர்
நாப் பல நவிலினும், நாளை வான் பகல்
தாப் புலி நிகர் சயத்திரதன்தன் உயிர்
காப்பல் யான்!' என்றனன், கதிரின் மைந்தனே. 252

'அல் மருள் திமிரம் எய்து அளவும் நாளை, இத்
தென் மருள் தெரியல் வேல் சிந்து வேந்தனைக்
கல் மருள் திகிரியின் காப்பன் யான்!' என்றான்,
துன்மருடணன் எனும் துணைவன்தானுமே. 253

'விரல் புனை கோதை வல் வில்லின் வல்லவர்
குரல் படச் சேவகம் கூறுகிற்பரோ?
உரல் புரை நீடு அடி ஓடை யானையாய்!
சரற் புயல்ஆனது தனிதம் செய்யுமோ? 254

'பொரு தொழில் விதம் படப் புரிந்த காலையில்,
விருதர்கள் இருவரும் வேறல் கூடுமோ?
ஒரு தலை நின்று இவன் உடற்றும் வின்மையும்,
கருதலன் வின்மையும் காண்டி, காவலா!' 255

ஏனைய மன்னர்களும், 'புலர்ந்த பின் தெவ்வரைச் செகுப்போம்' என்று கூறி விடை கொள்ளுதல்

என்று சேனாபதி மகன் இயம்பினான்.
நின்ற காவலர்களும், 'நிசை புலர்ந்துழிச்
சென்று போர் புரிந்து, நின் தெவ்வர் யாரையும்
வென்று மீளுதும்' என விடைகொண்டார்அரோ. 256

தருமனைக் கண்ணன் முதலியோர் வந்து துயிலுணர்த்துதல்

பூதனை முலை நுகர் பூந் துழாய் முடி
நாதனும், விசயனும், நலத்தொடு ஏவிய
தூதனும், அருக்கனும், துயில் உணர்த்தினார்,
சேதனர் புகழ் மொழித் திகிரி வேந்தையே. 257

கண்ணனும் கடோற்கசனும் தாம் சென்று வந்த இடத்து நிகழ்ந்தவற்றைத் தருமனுக்கு உரைத்தல்

கயிலை புக்கதும்; அரன் கணையும், சாபமும்,
வியன் மலர்ப் பொய்கையும், விசயற்கு ஈந்ததும்;
புயல் எனக் கரிய மெய்ப் பூந் துழாயவன்
துயில் உணர் குரிசிலுக்கு அடைவில் சொன்ன பின், 258

பை திகழ் மணிப் பணிப் பதாகையானிடை
எய்தி அங்கு உரைத்ததும், இருந்த மன்னவர்
வெய்து உறப் புகன்றதும், மீண்டு வந்ததும்,
கொய் தொடைக் கடோற்கசன்தானும் கூறினான். 259

42. பதினன்காம் போர்ச் சருக்கம்

கடவுள் வாழ்த்து

அரிய தண் கலை வாள் மதியமும் கொதிகொள்
ஆலமும் தனது இடத்து அடக்கி,
உரிய ஒண் கங்கா நதிக்கு ஒரு பதியாய்
உரைபெறும் உயர் மகோததியின்
பரிய திண் சிலையோடு அம்பு எலாம் முகந்து,
பற்குனப் பொருப்பிடைப் பொழியும்
கரிய பைம் புயலைக் கைதொழுமவரே
கருவிலே திருவுடையவரே. 1

தருமன் முதலியோர் படையுடன் களம் புக,
திட்டத்துய்மன் அணிவகுத்து நிற்றல்

காலை ஆதபனைத் தருமன் மா மதலை
கைதொழு கடன் முடித்தருளி,
சாலை ஆர் தழல் செய் வேள்வி அந்தணர்க்குத்
தானமும் தகுவன வழங்கி,
மாலை ஆம் அளவில் தனஞ்சயன் மொழிந்த
வஞ்சினம் வழு அற முடிப்பான்,
வேலை ஆர் அரவப் பல பணை முழங்க,
வெம் முரண் சேனையோடு எழுந்தான். 2

அடைந்தவர் இடுக்கண் அகற்றுதற்கு எண்ணி,
ஆடகப் பொருப்பினல் கடலைக்
கடைந்து, அமுது அளித்த கருணை அம் கடலே
கடும் பரிச் சந்தனம் கடவ,
மிடைந்து ஒளி உமிழும் வேற்படைத் தடக் கை
வீமனும், இளைஞரும், பலரும்,
குடைந்து இரு புறனும், கைவர, மகவான்
குமரனும் அமர்க்களம் குறுக, 3

சோனை அம் புயலின் கணை தொடும் பதாதி,
துரகதம், துரகதத் தடந் தேர்,
யானை, என்று உரைக்கும் நால்வகை உறுப்பும்
இராச மண்டல முகமாக,
தானை அம் கடலை மிடல் உற வகுத்து,
தான் முதல் பேர் அணியாகச்
சேனையின் பதியாம் மைத்துனன் நின்றான்,
தேவரும் யாவரும் வியப்ப. 4

சயத்திரதனை இடை வைத்து, ஏனைய வீரர்களைச் சுற்றிலும் நிறுத்தி, துரோணனன் ஐவகை வியூகமாக வகுத்து நிற்றல்

பாப்பு வெம் பதாகைப் பார்த்திவன் பணியால்
பத்து-இரண்டு யோசனைப் பரப்பில்
தீப் புறம் சூழ நடுவண் நிற்பதுபோல்,
செயத்திரதனை இடை நிறுத்தி,
கோப்புறப் பரி, தேர், குஞ்சரம், பதாதி,
கூறு நூல் முறை அணி நிறுத்தி,
காப்புறத் திசைகள் எட்டினும் நெருங்கக்
காவலர் யாரையும் நிறுத்தி, 5

தூசியில் முதல் நாள் வஞ்சினம் மொழிந்த
துன்மருடணன்தனை நிறுத்தி,
ஊசியும் நுழையா வண்ணம் வில் பதாதி
வயவரை உரன் உற நிறுத்தி,
வாசியில், இபத்தில், தேரில், ஏண் பட்ட
மன்னரை இரு கையும் நிறுத்தி,
பேசிய கன்னன் சகுனி சல்லியரைப்
பேர் அணியாகவே நிறுத்தி, 6

அணிகள் ஐந்து ஐந்தால் ஐ வகை வியூகம்
ஆகிய சேனையின் சிரத்து,
மணி முடி புனைந்து வைத்தென, அலங்கல்
வலம்புரி மார்பனை நிறுத்தி,
பணிவுறும் அவுணர் பதாகினி வகுத்த
பார்க்கவன் இவன் என, பயில் போர்த்
துணிவுடன் பல் தேர் சூழ்வர, சகட
துண்டத்து நின்றனன், துரோணன். 7

மந்தணம் இருந்து கங்குலில் முதல் நாள்
மன்னனோடு இயம்பிய வகையே
அந்தணன் அணிந்த விரகினை, விமானத்து
அமரரும் அதிசயித்து உரைத்தார்—
'சந்து அணி கடக வாகு நீள் சிகரச்
சயத்திரதனை ஒரு பகலில்
கொந்து அழல் உரோடத் தனஞ்சயன் பொருது,
கோறலோ அரிது!' எனக் குறித்தே. 8

உத்தமோசாவும் உதாமனும் இருபுறத்தும் வர, விசயன்
துரியோதனன் படைமேல் செல்லுதல்

செய்த்தலைக் கயலும் வாளையும் பிணங்கும்
செழும் புனல் சிந்து நாட்டு அரசை,
கைத்தலத்து அடங்கும் பொருள் என, காத்து,
காவலர் நின்ற பேர் அணி கண்டு,
உத்தமோசாவும் உதாமனும் முதலோர்
ஓர் இரு புறத்தினும் சூழ,
வித்தக வலவன் முன்செல, தடந் தேர்
விசயன் அவ் வினைஞர்மேல் நடந்தான். 9

துச்சாதனனும் அவனைச் சூழ்ந்துள்ள சேனைகளும் விசயனுக்கு உடைந்து
துரோணன் நின்ற இடத்தை அடைதல்

போர்முகத்து அடங்கா மடங்கல் ஏறு அனையான்
விதம் படப் பொழி சிலீமுகங்கள்
கார்முகத்து எழுந்த தாரைபோல் வழங்க,
கார்முகத்து ஒலியினால் கலங்கி,
தார்முகத்து அரசன் தம்பியோடு அணிந்த
சாதுரங்கமும் உடன் உடைந்து,
நீர்முகத்து உடைந்த குரம்பு என, துரோணன்
நின்றுழிச் சென்று அடைந்தனவே. 10

புரவி முப்பதினாயிரம் கொடு முனைந்து
பொரு திறல் கிருதவன்மாவும்,
கர விறல் கரி நூறாயிரம் கொண்டு
காது துச்சாதனன்தானும்,
இரவியைக் கண்ட மின்மினிக் குலம்போல்
ஈடு அழிந்திட, உடன்று, எங்கும்
சர விதப் படையால் விண்தலம் தூர்த்து,
தானை காவலன் முனை சார்ந்தான். 11

துரோணனுக்கும் விசயனுக்கும் அமர் விளைதல்

சென்ற வில் தனஞ்சயற்கும், முனை குலைந்த சேனைவாய்
நின்ற அத் துரோணனுக்கும், நீடு போர் விளைந்ததால்—
ஒன்றொடு ஒன்று துரகதங்கள் உருமின் மிஞ்சி அதிர்வுற,
குன்று குன்றொடு உற்றெனக் கொடி கொள் தேர் குலுங்கவே. 12

முட்டியாலும், நிலையினாலும், மொய்ம்பினாலும், முரணுறத்
தொட்ட வில்லு நிமிர்வு அறத் தொடுத்த வின்மையாலும், முன்
கிட்டி ஆசிரியனும் கிரீடியும் பொரப் பொர,
பட்ட இல்லை, இருவர் மேலும் விட்ட விட்ட பகழியே. 13

தேர் இரண்டும் இடம் வலம் திரிந்து சூழ வர, முனைந்து,
ஓர் இரண்டு தனுவும் வாளி ஓர்ஓர் கோடி உதையவே,
கார் இரண்டு எதிர்ந்து தம்மின் மலைவுறும் கணக்கு என,
போர் இரண்டு வீரருக்கும் ஒத்து நின்ற பொழுதிலே, 14

இருவரும் ஒத்துப் பொர, 'பொழுது சென்றது' எனக் கூறி, சயத்திரதனை
அணுகும்பொருட்டு, மாயன் தேரை வியூகத்தினுள்ளே செலுத்துதல்

'இகல் செய் வெஞ் சிலைக்கை வீர! இந் நிலம்தனக்கு, நின்
பகைவன் நின்ற அந் நிலம் பதிற்றிரண்டு யோசனை;
புகலுகின்ற பொழுது சென்றது' என்று, அவண் பொருமல், மால்
உகளுகின்ற பரி கொள் தேரை உள்ளுறச் செலுத்தினான். 15

தொடர்ந்து வந்த துரோணனை முனிவு மாறி ஏகுமாறு அருச்சுனன் மொழிதல்

எதிர்த்த தேர், விழித்து இமைக்கும் அளவில், 'மாயம் இது' என,
கதித் துரங்க விசையினோடு கண் கரந்து கழிதலும்,
அதிர்த்து அடர்ந்து பின் தொடர்ந்து அடுத்த போது, அருச்சுனன்
கொதித்து வந்த குருவொடு அம்ம, திருகி நின்று கூறுவான்: 16

'ஐய! நின்னொடு அமர் இழைத்தல் அமரருக்கும் அரிது; நின்
செய்ய பங்கயப் பதங்கள் சென்னி வைத்த சிறுவன் யான்;
வெய்ய என் சொல் வழுவுறாமை வேண்டும்' என்ன, முறுவலித்து,
'எய்ய வந்த முனிவு மாறி, ஏகுக!' என்று இயம்பினான். 17

காம்போசன் முதலியோரை, விசயன் வென்று, சூசி வியூகத்தை அடைதல்

ஈசனால் வரங்கள் பெற்ற இந்திரன்தன் மதலை, காம்-
போசன் ஆதி எண் இல் மன்னர் பொருது அழிந்து வெருவி உள்
கூச, நாலு பாலும் நின்ற நின்ற சேனை கொன்று போய்,
பாச நாம அணியில் நின்ற வீரரோடு பற்றினான். 18

'கன்னனைப் பொருது மேற்செல்லவேண்டும்' என விசயன் கண்ணனிடம் கூற, அவனும் தேரை அங்குச் செலுத்துதல்

முன்னர் முன்னர் வந்து வந்து, முனைகள்தோறும் முந்துறும்
மன்னர்தம்தம் வில்லும், வேலும், வாளும், வென்றி வாளியின்
சின்னபின்னமாக எய்து செல்லும் அத் தனஞ்சயன்,
கன்னன் நின்ற உறுதி கண்டு, கண்ணனோடும் உரை செய்தான்: 19

'விலங்கி நம்மை அமர் விளைக்க, விடதன், வில் சுதக்கணன்,
அலங்கல் வேல் அவந்தி மன்னன், அவன் புதல்வன், ஆதியா
வலம் கொள் வாகை வீரர் சேனை வளைய நின்ற கன்னனைக்
கலங்குமாறு பொருது போகவேண்டும்' என்று கருதியே. 20

'ஒக்கும்!' என்று, செங்கண்மாலும், உளவு கோல் கொடு இவுளியைப்
பக்கம் நின்ற பானு மைந்தன் முனை உறப் பயிற்றலும்,
மிக்க வெம் பதாதியோடு சூழ நின்ற விருதரும்
தொக்கு வந்து, விசயன் மீது சுடு சரம் தொடுக்கவே, 21

கன்னனைச் சூழ நின்ற மன்னர்களை அழித்து, அவன் எதிர் நின்று விசயன் பொருதல்

சரம் தொடுத்த வயவரை, சரத்தினின், தனித்தனி,
உரம் குளிக்க, வாகு வீழ, உதரம் மூழ்க, ஒளி முடிச்
சிரங்கள் அற்று மறிய, என்பு சிந்த, வாய்கள் துளைபட,
கரம் துடிக்க, இரு பதங்கள் தறியவே, கலக்கினான். 22

கலக்கம் உற்று, வில் இழந்து, கவன மா இழந்து, மேல்
இலக்கம் அற்ற களிறு இழந்து, கொடி கொள் தேர் இழந்து, போய்
உலக்க விட்டு, அளக்கர்வாய் உலம்ப ஓடு கலம் எனத்
துலக்கம் மிக்கு வருதல் கண்டு, சுரரும் நின்று துதி செய்தார். 23

துதியினால் உயர்ந்த வண்மையுடைய பானு சூனுவும்,
கதியினால் உயர்ந்த மாவொடு ஒத்த தேர் கடாவினான்,
மதியினால் உயர்ந்த கொற்ற வலவன் உந்து தேருடன்,
விதியினால் உயர்ந்த சாப வெஞ் சமம் தொடங்கினார். 24

தொடங்கு போரில், வலியினாலும் மதனினும் துலங்கு மெய்
விடங்கினாலும், வின்மையாலும், உவமை தம்மில் வேறு இலார்,
விடம் கொள் வாளி மின் பரப்பி, வெய்ய நாண் இடிக்கவே,
மடங்கல்போல் இரண்டு வில்லும் மண்டலம் படுத்தினார். 25

மண்டலம் படுத்த வில்லின் வலி கொள் கூர வாளியால்,
விண்தலம் புதைந்து, தங்கள் மெய் படாமல் விலகினார்—
குண்டலங்கள் வெயிலும் மூரல் குளிர் நிலாவும் வீசவே,
வண்டு அலம்பு கமலம் நேர் வயங்கு வாள் முகத்தினார். 26

'முகத்தில் நின்ற கன்னனேடும் முடி மகீபரோடும் நின்று
இகல் செய்கின்ற கடிகை ஓர் இரண்டு சென்றது' என்று, உளம்
மிகக் கனன்று, தேரும் வில்லும் மெய் அணிந்த கவசமும்
தகர்த்து, மார்பின் மூழ்க, வாளி ஏவினன், தனஞ்சயன். 27

கன்னன் மயங்க, சுதாயு அவனுக்கு உதவியாக வந்து பொருதல்

தனஞ்சயன் கை அம்பின் நொந்து, தபனன் மைந்தன் மோகியா,
மனம் தளர்ந்து இளைத்த பின்னர், வருண ராசன் மா மகன்
கனன்று எழுந்து சேனையோடு வந்து, கார்முகம் குனித்து,
இனம் கொள் வாளி ஏவினன், எதிர்ந்த போரில், ஈறு இலான். 28

ஈறு இலாத வீரன் வந்து எதிர்த்த காலை, வீரரில்
மாறு இலாத விசயன் விட்ட மறைகொள் வாளி யாவையும்,
சேறு இலாத செறுவில் வித்து செந்நெல் என்ன, அவன் உடற்
பேறு இலாமல் முனை உறப் பிளந்து, கீழ் விழுந்தவே. 29

விழுந்த வாளி கண்டு, பின்னும், விசயன் மூரி வில் குனித்து,
அழுந்த வாளி ஒன்று பத்து நூறு வன்பொடு அடைசினன்;
எழுந்த வாளி வாளியால் விலக்க, ஏவி ஆசுகம்,
கழுந்தது ஆக, அவன் எடுத்த கார்முகம் கலக்கினன். 30

சுதாயு தண்டு கொண்டு எறிய, அது விசயனைத் தாக்காவண்ணம் கன்னன்
மார்பில் ஏற்றலும், சுதாயு முன் பெற்ற சாபத்தின்படி மடிதலும்

முகம் கலங்க, மெய் கலங்க, முடி கலங்க, மூரி மார்பு-
அகம் கலங்க, மற்று ஓர் தண்டு அருச்சுனன்தன்மேல் விட,
நகம் கலங்க, உருமின் வந்தது; அதனை உம்பர் நாயகன்
சகம் கலங்க ஏற்றனன், தனுது மெய்யின் ஆகவே. 31

ஆகவத்தில் விசயன் உய்ய, ஐயன் மெய்யில் அறையும் முன்,
மோகரித்து எறிந்த தெவ்வன் முடி துளங்கி, மண்மிசைச்
சோகம் மிக்கு விழுதல் கண்டு, தூரகாரி ஆதலால்,
மாகம் உற்ற அமரர் செம்பொன் மழை பொழிந்து வாழ்த்தினர்.

'வாழி, வாழி, குந்தி மைந்தன் வலவன் வாழி, வாழியே!
வாழி, வாழி, அவனி உய்ய வந்த நாதன் வாழியே!
வாழி, வாழி, காளமேகவண்ணன் வாழி, வாழியே!
வாழி, வாழி, வாசுதேவன் வாழி, வாழி, வாழியே!' 33

'எறிந்த கதை நின் மேனியில் பட, சுதாயு மடிந்த காரணம் உரை' என்ற
விசயனுக்கு அதனை விளக்குதல்

என்று யாவரும் துதிசெய, விரகினல் எறிந்த காவலன்தன்னைக்
கொன்றபோது, தன் உயிர் பெறு தனஞ்சயன் கொண்டல்வண்ணனைப் போற்றி,
'நின்தன் மேனியில் எறி கொடுங் கதை பட, எறிந்தவன் நெடு வானில்
சென்ற மாயம் ஒன்று இருந்தவாறு அடியனேன் தெளியுமாறு உரை' என்றன்.

'பன்னவாதை என்று ஒருத்தி தாய்; தந்தையும், பரவை மன்னவன்; அந்த
மன்னவன் தரப்பெற்றனன், பல படை மறையொடும் வலி கூர;
துன்னு நாமமும் சுதாயு; மற்று ஒருவரால் தோற்று உயிர் அழிவு இல்லான்;
முன் நிராயுதன்மிசை இவன் படை உறின், முடிவுறும் வரம் பெற்றான். 35

'எறிந்த வெங் கதை கொன்றிடும், படைக்கலன் எடுத்தவர் உடல் பட்டால்;
அறிந்து, நான் இடை ஏற்றலின், அவன் உயிர் அழிந்தது' என்று அருள்செய்தான்—
பிறிந்த யோனிகள் அனைத்தும் ஆய், முதலும் ஆய், பெருமிதம் மறந்து, ஈண்டுச்
செறிந்தவர்க்கு ஒரு சகாயன் ஆய், அருந் துயர் தீர்த்திடும் தேர்ப்பாகன்.

அடுத்து, சுதாயுவின் இளவல் சதாயு வந்து பொருது மாளுதல்

சுதாயுதந்தனக்கு உரிய நாயகன்மிசை கதை பட, சிதைவுற்றுச்
சுதாயு என்பவன் பல பெரும் படையுடன் துறக்கம் எய்திய பின்னர்,
சதாயு என்ற அவன் இளவல் மற்று அவனினும் சமர் புரிந்து, அவன்தானும்
கெதாயு ஆயினன்; கிரீடியோடு எதிர்த்தவர் யாவரே, கெடாது உய்வார்!

ஆயிரவாகு அருச்சுனனுடன் பொருது அழிதல்

ஆயிரம் பதின்மடங்கு தேர், இபம் அதன் மும் மடங்கு, அடல் வாசி
ஆயிரம் சதம், அதனின் மும் மடங்கு காலாளுடன், அணி ஆக்கி,
ஆயிரம் புயத்து அருச்சுனன் நிகர் என, ஆழியால் துணிப்புண்ட
ஆயிரம் புயத்தவன் என எதிர்த்தனன்—ஆடல் ஆயிரவாகு. 38

உரம் கொள் ஆயிரம் பொலங்கிரி அனையன ஓர் ஒரு குனி வில், செங்
கரங்கள் ஆயிரம் கொடு வளைத்து, ஆயிரங்கண்ணன் மைந்தனை நோக்கி,
வரங்கள் ஆயிரம் மறையொடும் பெற்றவன், மதி வகிர் முகம் ஆன
சரங்கள் ஆயிரம் ஆயிரம் ஒரு தொடைதனில் எழும்படி, எய்தான்.

எடுத்த போதில் ஒன்று, அருங் குதை நாணிடை இசைத்த போது ஒரு பத்து,
தொடுத்த போதில் நூறு, உகைத்த போது ஆயிரம் என வரும் சுடர் வாளி
அடுத்த போர் முடி மன்னவன் விடும்விடும் அநேக ஆயிரம் அம்பும்
தடுத்த போது, ஒரு தனுவும் ஐஞ்ஞூறு அடல் தனுவுடன் எதிர் நின்ற.

அலி முகம் தொழும் இளவல், வாணனைப் புயம் அழித்த மா மறை ஒன்று
வலிமுகம் கொடி உயர்த்தவன் செவியினில் உரைக்க, மற்று அது பெற்று, அங்-
குலி முகம் செறி வரி சிலை கால் பொரக் குனித்து, வன்பொடு தொட்ட
சிலிமுகங்களின் துணித்தனன், ஆயிரம் சிகர வாகுவும் சேர. 41

மீதலம்தனக்கு இறைவன் வச்சிரத்தினால் வெற்புஇனம் சிறகு அற்றுப்
பூதலம்தனில் விழுந்தபோல் விழுந்தன, புயங்கள் ஆயிரமும் போய்—
காதல் அங்கனை தடம் படிந்து ஏகுதல் கண்டு, காமுகன் ஆகி,
பாதலம் புகுந்து, இன்பம் எய்திய விறல் பார்த்தன் வெங் கணையாலே.

'அன்று அருச்சுனன் ஆயிரம் புயங்களும் அரிந்தனன், மழுவீரன்;
இன்று அருச்சுனன் இவன் புயம் அரிந்தனன்' என்று இமையவர் ஏத்த,
துன்று அருச்சுன நான்மறை உரனுடன் தொடர, முன் தவழ்ந்து ஓடிச்
சென்று, அருச்சுனம் இரண்டு உதைத்தருளினோன் செலுத்து தேரவன் சென்றான்.

பட்டவர்த்தனரும் முடிமன்னரும் திரண்டு வந்து விசயனுடன் பொருது,
பலர் உயிர் இழத்தலும், பலர் தப்பியோடுதலும்

கடிகை முப்பதும் சிந்துவுக்கு அரசனைக் காக்குமாறு அறைகூவி,
இடி இடித்தெனப் பல்லியம் அதிர்தர, எழு கடற் படையோடும்
படி நடுக்குற, பணிக் குலம் நெளித்திட, பட்டவர்த்தனர் உள்ளார்,
முடி தரித்தவர், அனைவரும் திரண்டு, ஒருமுனைபட எதிர் சென்றார்.

பரிதியால் வளைப்புண்ட செம் பரிதியின் பற்குனன் தனு வாங்கி,
தெரி சரங்கள் ஓர் ஒருவருக்கு ஆயிரம் சிரம் முதல் அடி ஈறு
நெரிதரும்படி தொடுத்து, வெங் கொடி பரி நேமி அம் தேர் கோடி
கரிகளும் துணிபடப் பட மலைந்தனன், கடிகை ஒன்றினில் மாதோ.

போரில் வெவ் விடாய் தணிவுற, களத்தினில் புறங்கொடுத்தவர், சோரி
நீரில் மூழ்கியும், கழுகு இடு காவண நீழல் ஆறியும், சென்றார்;
தேரில் வாசியில் களிற்றில் வந்தவர்களில், சேவடி சிவப்பேற
யார்யார் குதித்து ஓடுதல் ஒழிந்தவர், எறி படை வீழ்த்திட்டே! 46

நின்று பட்டனர், தனித்தனி அமர் புரி நிருபர்; முந்துற ஓடிச்
சென்று பட்டனர், சேனை மண்டலிகர்; வெஞ் சினம் பொழி சிறு செங் கண்
குன்று பட்டன; பட்டன, நவ கதிக் குரகதக் குலம் யாவும்;
அன்று பட்டவர்க்கு உறையிடப் போதுமோ, அநேக நாளினும் பட்டார்?

அநேகம் ஆயிரம் பேர் பட, கவந்தம் ஒன்று ஆடும்; அக் கவந்தங்கள்
அநேகம் ஆயிரம் ஆட, வெஞ் சிலை மணி அசைந்து ஒரு குரல் ஆர்க்கும்;
அநேக நாழிகை அருச்சுனன் சிலை மணி ஆர்த்தது; அக் களம் பட்ட
அநேகம் ஆயிரம் விருதரை அளவு அறிந்து ஆர்கொலோ உரைக்கிற்பார்?

சூரியன் உச்சிப் பொழுது அடைதல்

வெவ் வாசி நெடுந் தேர்மிசை நிமிரா வரி வில் கொண்டு
இவ்வாறு அமர் புரி காலையில், எழு செங் குருதியினால்,
அவ் ஆடு அரவு உடையான் அழி ஆயோதனம், அந்திச்
செவ் வானகம் என வந்து சிவப்பு ஏறியது, எங்கும். 49

'நீர் உண்ணவிடில் குதிரைகள் செல்லமாட்டா' எனக் கண்ணன் கூற,
விசயன் வருணன் அம்பினால் ஒரு தடாகம் உண்டுபண்ணுதல்

முருகு ஆர் இரு சிறை வண்டுஇனம், முளரிப் புது மலர் விட்டு,
அருகு ஆர் பொழில் நிழலூடு அணி அலர் நாள்மலர் உறவே,
இரு காலமும் முக் கால் விடு கைம் மாரி, இருக்கால்,
ஒரு கால் அரு மறையோர் விடு பதம் நண்ணினன், உதயன். 50

'விரவார் முனே அடு தேர் நுக வெவ் வாசிகள் புனல் உண்டு,
உரவாவிடில், ஓடா இனி' என்று ஐயன் உரைப்ப,
அரவாபரணன் தந்தருள் அரு மா மறை வருணச்
சரவாய் வர எய்தான்; அவண் எழலுற்றது, ஓர் தடமே. 51

ஆழம் புணரியினும் பெரிது; அதினும் பெரிது அகலம்;
சூழ் எங்கணும் வண் தாமரை; துறை எங்கணும் நீலம்;
கீழ் எங்கணும் நெடு வாளே, வரால், பைங் கயல், கெண்டை;
வீழும் கரை அருகு எங்கணும் வளர் கின்னர மிதுனம். 52

ஒருபால், வளர் போதா நிரை; கரு நாரைகள் ஒருபால்;
ஒருபால், உளம் மகிழ் நேமிகள்; அன்றில் குலம் ஒருபால்;
ஒருபால், மட அன்னம்; புனல் அரமங்கையர் ஒரு பால்;
ஒருபால், இருபாலும் தவழ் ஒளி நந்து உறை புளினம். 53

தடம் கண்டு கண்ணன் உரைப்ப, விசயன் புரவிகளுக்கு நீர்ஊட்டி இளைப்பாறுதல்

தல மா மகள் உந்தித் தடம் நிகரான தடம் கண்டு,
உலம் மாறு கொள் இரு தோள் வலியுடை வள்ளல் உரைப்ப,
குல மா மணி அனேயான் விரை தேர்நின்று எதிர் குதியா,
வலம் ஆன துரங்கங்களே வள் வார் விசி நெகிழா, 54

குவளைப் பரிமளம் மேவரு குளிர் வாரி பருக்கி,
பவளத் துவர் வாயான் இரு பாதம் கை விளக்கி,
தவளக் கிரி ஒரு நால் என மேன்மேல் ஒளிர்தரு போர்
இவுளிக்கும் இளைப்பு ஆற, இளைப்பு ஆறினன். இப்பால், 55

'விசயனேடு பொரச் சென்றவர் தப்பார்' என்று ஓடிவந்தவர் சொல்ல,
துரியோதனன் துரோணனிடம் சென்று குறையிரத்தல்

அப்பால் இவனுடனே பொருது அனிலத்து எதிர் சருகோடு
ஒப்பாய், உளம் வெருவு எய்தி, உடைந்து ஓடிய வீரர்,
'தப்பார் ஒருவரும், இன்று அடு சமரம்தனில், விசயன்
கைப் பாய் கணே பொர நொந்தவர், கழல் மன்னவ!' என்றார். 56

துரியோதனன் அவர் சொல்லிய சொல் தன் செவி சுடவே,
அரியோடு எதிர் பொர அஞ்சிய அடல் வாரணம் அனேயான்,
எரி ஓடிய புரி என்ன இளைத்து, ஆரண வேள்விப்
பெரியோன் அடி எய்தி, சிறுமையினல், இவை பேசும்: 57

'அதிரேக விறல் பற்குனன் அம்போடு எதிர் அம்பு இட்டு,
எதிர் ஏறிய வய மன்னரில் எம் மன்னர் பிழைத்தார்?
கதிர் ஏகிடும் முன் துச்சளே கணவன் தலே கடிதின்
பிதிர் ஏறுவது அல்லாது, அது பிழைப்பிப்பவர் இலரால். 58

'காணாத இடத்து ஆண்மை உறக் கூறுவர்; கண்டால்,
ஏண் ஆடு அமர் முனைதன்னில் இமைப்போது எதிர் நில்லார்;
நாணாது முன் வென்னிட்டிடும் நம் சேனை அடங்கச்
சேண் நாடு உறும், இன்றே; ஒரு செயல் கண்டிலம், ஐயா! 59

'குனி நாணுடை வரி விற்படை விசயற்கு எதிர் குறுகி,
தனி நான் அவன் உயிர் கொள்ளுதல் தவிர்கிற்குதல் அல்லால்,
முனிநாயக! வேறு ஓர் விரகு இல்லை; திருமுன்னே,
இனி நாடி, அடும் போர் விரைவொடு காணுதி' என்றான். 60

துரோண முனிவனின் மறுமொழி

முனியும் தரணிபனோடு சில் மொழி நன்கின் உரைக்கும்:
'துனி கொண்டு உளம் அழியாது ஒழி; துணிவுற்றனை முதலே;
இனி அஞ்சி இளைத்து எண்ணிடும் எண்ணம் தகவு அன்றால்;
அனிகங்கள் அழிந்தாலும், நின் ஆண்மைக்கு அழிவு உண்டோ? 61

'உரனால் வரு தேர் ஒன்றினில் உற்றோர் இருவரையும்,
''நர நாரணர் இவர்'' என்பர்கள், ஞானத்தின் உயர்ந்தோர்;
அரனார் திருவருளால் முனை அடல் வாளிகள் பலவும்,
வரனால் உயர் மறையும், பிறர் மற்று ஆர் நனி பெற்றார்? 62

'தவரோடு அவன் நின்றால், விதிதானும் தரம் அல்லன்;
எவரோ, மலையோடும் பொருது, இரு தோள் வலி பெற்றார்?
உவர் ஓதநிறத்தோன் அவன் உயர் தேர் நனி ஊர்வான்;
அவரோடு இனி அமர் வெல்லுதல் ஆர்ஆயினும் அரிதால்! 63

' ''அதிகம் பகை தமரோடு உறல் ஆகாது'' என, அரசர்க்கு
எதிர், அன்று, அவையிடையே வசை ஏதுஏது புகன்றாய்;
விதுரன் தனது உளம் நொந்து அடல் வில்லும் துணிசெய்தான்;
மதியின் திறன் அறிவோர் மொழிவழி வந்திலை, மன்னா! 64

'மன் ஆகவம் மதியா விறல் வயவன்தனை விசயன்-
தன்னால் ஒரு பகலே உயிர் தபுவித்திடல் ஆமோ?
மின் ஆர் வடி வேலாய்! இவை விதியின் செயல் அன்றோ?'
என்னா, ஒரு கவசம்தனை இவன் மெய்யினில் இட்டான். 65

துரோணன் அழிவற்ற கவசம் ஒன்றைத் துரியோதனனுக்கு அணிய,
அவன் போருக்குப் புறப்படுதல்

'பங்கயாசனன் வாசவற்கு அளித்தது; வாசவன் பயில் போரில்
அங்கராவினுக்கு உதவியது; அங்கரா எனக்கு அருளியது, இந்தத்
தொங்கல் மா மணிக் கவசம்; எவ் வீரரும் தொழத்தகு கழற் காலாய்!
புங்க வாளியில், படைகளில், ஒன்றினும் பொன்றிடாது, இது' என்றான்.

இட்ட பொற் பெருங் கவசமோடு எழுந்தனன், இராசராசனும்; உள்ள
பட்டவர்த்தனர் மகுடவர்த்தனர்களும் பல படைஞரும் கூடி,
எட்டு இபத்தின் வெஞ் செவிகளும் செவிடுறப் பல்லியம் எழுந்து ஆர்ப்ப,
முட்ட விட்டனர், தனஞ்சயன் நின்ற மா முனையில், வேல் முனை ஒப்பார்.

துரியோதனன் சேனைகள் விசயன் ஆக்கிய தெய்விகப் பொய்கையில் நீர் பருகி விடாய் தீர்ந்து, விசயனை வளைத்தல்

சென்ற சென்ற வெஞ் சேனைகள் இளைப்பு அற, தெய்விகத்தினில் வந்த
மன்றல் அம் பெரும் பொய்கை நீர் பருகி, அப் பொய்கையின் வளம் நோக்கி,
'என்றும் என்றும் நாம் நுகர் புனல் அன்று; நல் இன் அமுது இது' என்பார்,
தென்றல் அம் தடஞ் சோலையில் கரைதொறும் சேர்ந்து, தம் விடாய் தீர்வார்.

மத்த வாரணம் கொண்டு, செந்தாமரை வனம் கலக்குறுவிப்பார்;
தத்து பாய் பரி நறும் புனல் அருத்துவார்; தாமும் நீர் படிகிற்பார்;
கைத்தலங்களில் அளி இனம் எழுப்பி, மென் காவி நாள் மலர் கொய்வார்;
'இத் தலத்தினில், இம் மலர்ப் பரிமளம் இல்லை' என்று அணிகிற்பார்.

விசயன் புரவிகளுக்கு நீரூட்டும்போது, துரியோதனன் பெரும் படையுடன் வருதல் கண்டு, புரவியைத் தேரில் பூட்டி, கண்ணன் அனுமதியுடன் தரையில் நின்ற வண்ணம் பொருதல்

இன்னவாறு தம் அசைவு ஒழிந்து, யாவரும் இப ரத துரகத்தோடு,
அன்ன வாவியை வளைத்தனர், கடல் வளை ஆழி மால் வரை என்ன;
துன்னு மா மணித் தேரின்நின்று இழிந்து, தன் சுவேத மா நீர் ஊட்டும்
மன்னு வார் கழல் மகபதி மதலை அவ் வரூதினிக் கடல் கண்டான்.

கண்ட போது பின் கண்டிலன், கண்ட அக் கடவுள் வாவியை; நல் நீர்
உண்ட வாசியைத் தேருடன் பிணித்து, வில் ஓர் இமைப்பினில் வாங்கி,
'வன் துழாய் மது மாலையாய்! வளைந்து மேல் வரு வரூதினி தன்னை
அண்டர் ஊர் புக விடுத்த பின், தேரின்மேல் ஆகுமாறு அருள்' என்றான். 71

கன்று சிந்தையன், கோப வெங் கனல் பொழி கண்ணினன், காலாளாய்
நின்று, தேரினும் களிற்றினும் பரியினும், நிரை நிரை தரங்கம்போல்,
சென்று சென்று அடு வீரரைத் தனித்தனி சரத்தினால் சிரம் சிந்தி,
கொன்று கொன்று சூழ்வரக் குவித்தனன், மதக் குன்றுதான் என நின்றான். 72

தலைவனும் முனி கிருபனும், கிருதனும், துரகதத்தாமாவும்,
அலைவு உறு மனத்து அரசரும், சேனையும், முனைந்து, அணி அணியாக,
சிலைவலான் எதிர், மிசைபடத் தேர்மிசை விசை உறச் சிலை வாங்கி,
வலைய வாகுவின் வலியெலாம் காட்டினார், வரம் கொள் வாளிகள் வல்லார்.

கைதவன் குலக் கன்னி கேள்வனும், ஒரு கணைக்கு ஒரு கணையாக
எய்து, வெங் கணை யாவையும் விலக்கி, மேல் இரண்டு நால் எட்டு அம்பால்,
வெய்தின் நேமி அம் தேரொடு கொடிகளும் வில்லும் வாசியும் வீழக்
கொய்துகொய்து, பல் பவுரி வந்தனன், விறல் குன்றவில்லியொடு ஒப்பான். 74

தேரில் நின்றவர் பாரில் நின்றவன்மிசை விடு கணைத் திரள் மின்னுக்
காரின்நின்று பாதலம் உற, உரகமேல் கனன்று வீழ்வன போன்ற;
பாரில் நின்றவன் தேரில் நின்றவர்மிசை விடு கணை பாதாலத்து
ஊரில்நின்று, உருமையும் விழுங்குவம்' என, உரகம் ஏறுவ போன்ற.

வந்த சேனையை நிலைகுலையச் செய்தபின், விசயன் கண்ணனோடு
இன்புறத் தேரில் ஏறுதல்

சேண் நிலத்தின்மிசை நின்று அமர் தொடங்கினவர்
தேர்கள் இற்றன; தறிந்தன, நெடுந் துவசம்;
நாணி அற்றன; ஒடிந்தன, தடஞ் சிலையும்;
நாகம் உற்றவர் ஒழிந்தனர், இரிந்தனர்கள்;
நீள் நிலத்தினிடை நின்று சமர் வென்றவனும்,
நேமி வச்ர மகுடம் புனை கொடிஞ்சியுடை,
ஏண் நிலத்து இவுளி முந்த, முனை உந்து, இரதம்
ஏறியிட்டனன், முகுந்தனுடன் இன்புறவே. 76

துரியோதனன் சகுனி முதலியோருடன் வந்து வளைத்தல்

ஏறியிட்டவன் விரைந்து, இரதமும் கடவி,
ஏகலுற்ற பின், இயம் பல தழங்கி எழ,
வேறுபட்டு அமர் உடைந்தவர்களும் திருகி
மேலிட, சகுனியும் தினகரன் சுதனும்,
ஆறியிட்ட ரத குஞ்சர துரங்கமமும்
ஆக, இப்படி பொரும் படையொடு, அன்று, நனி
சூறியிட்டனன்—வலம்புரி அலங்கல் புனை
தோளில் எப் புவனமும் தனி சுமந்தவனே. 77

'இவர்கள் நெருங்கி வந்து பொருதற்கு யாது காரணம்?' என விசயன்
கண்ணனை வினவ, அவன் துரோணன் அளித்த கவசத்தின் தன்மை கூறி,
அதனை அழிக்குமாறு தூண்டுதல்

'யோதனத்தில், இவன் என் கண் எதிர், இன்று அளவும்,
யோசனைக்கும் இடை நின்றிலன்; முனைந்து சமர்
மோதுகைக்கு நினைவு உண்டுகொல்? எதிர்ந்து மிக
மோகரித்து வருகின்றது தெரிந்ததிலை;
யாது பெற்றனன், நெடுஞ் சிலைகொல், வெங் கணைகொல்,
ஏதம் அற்ற கவசம்கொல், இரதம் கொல்?' என
மாதவற்கு இடை வணங்கி, 'இது என்கொல்?' என,
வாசவக் கடவுள் மைந்தன் உரைதந்தனனே. 78

ஈசன் அப்பொழுது உணர்ந்தருளி, வென்றி வரி
ஏறு விற்கு உரிய பற்குனனுடன், ‘பழைய
வாசவற்கு அயன் வழங்கு கவசம் துவச
மாசுணற்கு அருளினன், கலச சம்பவனும்;
ஆசுகத்தினில் ஒழிந்த பல துங்க முனை
ஆயுதத்தினில் அழிந்திடுவது அன்று; அதனை
நீ செகுத்திடுதி!’ என்று, துரகங்களையும்
நேர்படக் கடவினன், கதி விதம் படவே. 79

தனஞ்சயன் அம்பின் எதிரே பலரும் பின்னிடுதல்

கானகத்தினிடை மண்டி எரி அங்கி தரு
கார்முகத்தின் வலி கொண்டு முனை வெஞ் சமரில்,
மேல் நடக்குமவர் தங்கள் மகுடங்களினும்,
மேரு ஒத்து உயர் புயங்களினும், உந்தியினும்,
ஆனனத்தினும், நுழைந்து உருவ, வெம் பரிதி
ஆயிரக் கிரணமும் புடை பரந்ததுஎன,
வானகத்து வெளி இன்றி அணி பந்தர் இட,
வாளி விட்டனன், மனம் செய்து தனஞ்சயனே. 80

நா தெறித்தன, துரங்கமம்; நெடுஞ் சிலைகள்
நாணி அற்றன; உடைந்தன, தடந் திகிரி;
பாதம் அற்றன, மதம் கய விதங்கள்; பொரு
பாகர் பட்டனர்; மறிந்தன, நெடுந் துவசம்;
மோதுதற்கு எதிர் முனைந்தவர் சிரங்கள் பொழி
மூளையின் களம் அடங்கலும் நெகிழ்ந்து, அரசர்
ஆதபத்திரம் அழிந்தன;—இவன்தனுடன்
ஆர் சரத்தொடு சரம் தொட இயைந்தவரே? 81

ஆர் அமர்க்கண் மிக நொந்து, இரவி மைந்தன், நெடிது
ஆகுலத்தொடும் இரிந்தனன்; விரிந்த மணி
வார் கழற் சகுனியும், துணைவரும், தம் முகம்
மாறியிட்டனர்; மறிந்தனர், கலிங்கர் பலர்;
சீருடைக் கிருபனும் கிருதனும், பழைய
சேதி வித்தகனும், அஞ்சினர் ஒடுங்கினர்கள்;
பூரி பட்டிலன்; நெருங்கி அணி நின்று பொரு
பூபர் பட்டனர், ஒழிந்தவர் புறந்தரவே. 82

துரோணன் அளித்த கவசத்தை அணிந்து, துரியோதனன் விசயன் எதிர் பொருதல்

தேவருக்கு அரசன் உந்து கன பந்தி நிகர்
தேரிடைப் பணி நெடுங் கொடி நுடங்கி எழ,
மா உகைத்து வலவன் திறலுடன் கடவ,
மா முடிக்கண் மகுடம் திகழ, அன்று பெறு
காவல் மெய்க் கவசமும் தனி புனைந்து, சிலை
கால் வளைத்து, அவிர் பெரும் பிறைமுகம் செய் கணை
தூவி உற்று, எதிர் முனைந்தனன்—அனந்த ஒளி
தோய் கழல் தரணி மண்டல துரந்தரனே. 83

கோமகக் குரிசில் முந்த விடும் அம்பு பல
கோல் தொடுத்து எதிர் விலங்கி, விசயன் தனது
தீ முகக் கணை அனந்தம் நிலை ஒன்றில் முனை
சேர விட்டனன்; விடும் பொழுதின், அந்த விறல்
மா மணிக் கவசம் எங்கும் உடன் ஒன்றி, ஒரு
மால் வரைப் புயலின் நுண் துளி விழுந்த பரிசு
ஆம் என, தலை மழுங்கி, அவை ஒன்றும் அவன்
ஆகம் உற்றில; அசைந்திலன், அசஞ்சலனே. 84

வாளிகள் துரியோதனன் கவசத்தை அழியாமை கண்டு, விசயன் வேல் கொண்டு எறிய, அசுவத்தாமன் தன் அம்புகளால் அதனைத் துணித்தல்

வீரன் விட்டன சரங்கள் அவன் ஒண் கவசம்
மேல் உறப் படுதல் இன்றி விழுகின்ற நிலை
ஓர் இமைப்பினில் அறிந்து, குமரன் கை அயி-
லோடு உரைக்க உவமம் பெறு விடம் கொள் அயில்,
தேரினில் பொலிய நின்று, இரு கை கொண்டு, நனி
சீறி, மெய்ப் பட எறிந்தனன்; எறிந்தளவில்,
வார் சிலைக் குருவின் மைந்தன் அது கண்டு, அதனை
வாளியின் துணிபடும்படி மலைந்தனனே. 85

அருச்சுனன் தளர்நிலை கண்டு, கண்ணன் வலம்புரி முழக்க, மண்டலிகர் மயக்கமுறுதல்

வாகை நெட்டயில் துணிந்திடலும், வன்பினுடன்
மா நிரைத்து இரதமும் கடவி வந்து, முதல்
ஆகவத்தில் உடைந்தவர் அடங்க முனை
ஆய் எதிர்த்து, ஒரு முகம்பட நெருங்கி, மிக
மோகரித்து வருகின்ற செயல் கண்டு, அமரர்
மூவருக்கு அரியவன் கழல் பணிந்து, பரி-
தாகம் உற்று, அமர் தொடங்கவும் மறந்து, கமழ்
தார் அருச்சுனன் உயங்கினன். அனந்தரமே, 86

கோ மணிக் குரல் உகந்து புறவின்கண் உயர்
கோவலர்க்கு நடு நின்று முன் வளர்ந்த முகில்,
காமனுக்கு இனிய தந்தை, சமரம் பொருது
காதல் மைத்துனன் அயர்ந்த நிலை கண்டு, பல
தாமரைக்குள் ஒரு திங்கள் என, அங்குலி கொள்
தாழ் தடக் கைகள் இரண்டு ஒரு முகம் பயில,
மா மணிக் குழல் மணம் கமழ் செழும் பவள
வாயில் வைத்தனன், நலம் திகழ் வலம்புரியே. 87

நாகர் பொன் தருவை அம் புவியில் அன்று தரு
நாதன், வச்சிர வலம்புரி முழங்கு குரல்,
மேகம் ஒக்கும் என, வெண் திரை எறிந்து பொரு
வேலை ஒக்கும் என, எங்கணும் எழுந்த பொழுது,
ஆகம் முற்றுற நெகிழ்ந்து புளகம் புரிய,
ஆகவத்து எழு கடுஞ் சினம் மடிந்து அவிய,
மோகம் உற்றனர், எதிர்ந்து பொரு மண்டலிகர்;
மோழை பட்டதுகொல், அண்ட முகடும் சிறிதே! 88

அப்பொழுது, கண்ணன் விசயனுக்கு வேல் அளிக்க, அவன் அதனை எறிந்து, துரியோதனன் கவசத்தைத் துகளாக்குதலும், யாவரும் பின்னிடுதலும்

பால் நிறப் புரவி உந்தி இரதம் கடவு
பாகன் மற்று அவர் மயங்கியது உணர்ந்தருளி,
மேல் நிலத்து நரகன்தன் உயிர் கொண்டது ஒரு
வேல் கொடுத்து, 'இதனில் வென்றிடுதி' என்றளவில்,
வான வச்சிரன் மகன் கடிது உவந்து, 'பெரு
வாழ்வு பெற்றனம்!' எனும் பரிவினன், தனது
ஞான பத்தியொடு எழுந்து வலம் வந்து, திரு
நாள்மலர்ப் பதம் வணங்கி, அது கொண்டனனே. 89

'மாறுபட்டு இவனை இன்று உயிர் கவர்ந்துவிடின்,
மா மருத்தின் மகன் வஞ்சினம் அழிந்துவிடும்;
ஊறுபட்டு வெருவும்படி எறிந்து, அமரின்
ஓடுவிப்பது பெருந்தகைமை' என்று கொடு
நூறு பட்ட மகவின் தலைவன், நெஞ்சம் மிக
நோதகக் கடிது எறிந்தனன்; எறிந்தளவில்,
நீறுபட்டது, பெருங் கவசம்; வந்த வழி
நேர்படத் திருகினன், சமரில் நின்றிலனே. 90

ஆறுபத்து இருபது ஐம்பது பெரும் பகழி
ஆக விட்டு, வரி வன் சிலையும், வெம் பரியும்,
ஏறு பைத் தலை நெடுந் துவசமும், புதிய
ஏழு தட்டு இரதமும், துணிசெய்து, அங்கு அருகு
சீறுதற்கு வரு திண் குருவின் மைந்தனொடு,
தேர் அருக்கன் மகனும், சகுனியும், பலரும்,
வீறு கெட்டு இரு பதம் கொடு விரைந்து செல,
மீள விட்டனன், முன் எண் திசையும் வென்றவனே. 91

வேர்த்து எதிர் விசயன் வென்ற களத்தில்
ஆர்த்து எதிர் வந்தார் ஆர்கொல் பிழைத்தார்?
ஏத்திய பதினெண் பூமியின் எண்ணும்
பார்த்திவர் பற்பல் ஆயிரர் பட்டார். 92

தம்பியரும், துச்சாதனன் முதலோர்,
அம்பில் அழிந்து, தம் ஆர் உயிர் உய்ந்தார்;
எம்பெருமான் அன்று எரி கணை ஏவ,
அம்பரம் உற்றது அனைவரும் உற்றார். 93

மாரதர் வீந்தார்; அதிரதர் மாய்ந்தார்;
சாரதிகளும் வன் தலைகள் இழந்தார்.
நாரதன் முதலோர் நாகர் அநேகர்
'பாரதம் இன்றே பற்று அறும்' என்றார். 94

இந்த வயப் போர் இம் முறை வென்று,
பைந் துளவோனும் பார்த்தனும் ஆக,
சிந்து மகீபன்-தேடி மணித் தேர்
உந்துறும் எல்லை, உற்றது உரைப்பாம்: 95

கண்ணனது சங்கநாதம் கேட்ட தருமன், சாத்தகியை அழைத்து,
விசயனது போர்ச் செய்தி அறிந்து வர அனுப்புதல்

வள்ளல் குறித்த வலம்புரி நாதத்
தெள் அமுதம் தன் செவி உறு போழ்தின்,
உள் அணி நின்ற முரசம் உயர்த்தோன்
தள்ளுறு நெஞ்சில் சங்கையன் ஆனான். 96

தன் துணை நின்ற சாத்தகியைக் கூய்,
'வென்றிடு போரில் விசயன் இளைத்தால்
அன்றி, முழக்கான் அதிர் வளை, ஐயன்;
சென்று அறிகுதி நீ' என்று உரைசெய்தான். 97

'வன்கண் திண் தோள் மன் பலர் நிற்க,
என்கண் தந்தான் இன் உரை' என்று,
மன் கள் தாரோன் மலர் அடி வீழ்ந்தான்,
தன் கட்டு ஆண்மைத் தன் முனொடு ஒப்பான். 98

'கண்ணுற நில்லார், கடவுளர் முதலாம்
விண்ணவரேனும், விசயன் வெகுண்டால்;
மண்ணில் எதிர்க்கும் மன்னவர் யாரோ?
தண் அளி நெஞ்சும் தருமமும் மிக்கோய்!' 99

அதிரதரோடு சென்ற சாத்தகி, தூசி பிளந்து சென்று, கிருதவர்மனை வெல்லுதல்

என்று, அறன் மைந்தன் ஏவல் தலைக் கொண்டு,
அன்று ஒரு தேர்மேல் அதிரதரோடும்
சென்றனன் வெய்தின், தேவகி மைந்தன்,
துன்றிய செருவில் தூசி பிளந்தே. 100

விருதொடு முந்த விளங்கிய கொற்றக்
கிருதனை, ஆதிக் கேழலொடு ஒப்பான்
ஒரு தனுவும் கொண்டு, ஊர் பரிமாவும்
இரதமும் வில்லும் இமைப்பில் அழித்தான். 101

சாத்தகி சலசந்தனோடும், துரியோதனன் தம்பியர் நால்வரோடும் பொருது வெல்லுதல்

பல் மக நூறாயிரவர், பரித் தே-
ரன் மிக, நூறாயிரவர் அழிந்தார்;
மன் மத வெங் கை மலைமிசை, வீரன்
தன் முன் மலைந்தான், தார்ச் சலசந்தன். 102

தார்ச் சலசந்தன், சாத்தகி என்னும்
கார்ச் செலவு ஆய கணை மழையாலே,
போர்ச் சலம் இல்லாப் புகர்மலையோடு
மேல் சலம் எய்தி வெங் கனல் ஆனான். 103

நாட்டம் இல்லா நரபதி மைந்தர்
ஈட்டம் ஆக ஈர்-இருவோர்கள்
கூட்டு அம்பு எய்ய, கொடு முனை வென்றான்,
வேட்டம் போன வெங் களிறு ஒப்பான். 104

யாரும் போரில் எளிவர வீரம்
சாரும் சாபம்தன்னொடு நேமித்
தேரும் தானும் சென்றிடுவோனை,
கூரும் சாபக் குரு எதிர் கண்டான். 105

சாத்தகியைத் துரோணன் தடுக்க, இருவரும் ஒத்துப் பொருது இளைத்தல்

'ஏகல், ஏகல்! என்னுடன் இனி அமர் புரிந்து ஏகு!' என்று,
ஆகுலம் படத் தகைந்தனன், அடற் சிலை ஆசான்;
மேகவண்ணனுக்கு இளவலும், 'வேதியருடன் போர்
மோகரிப்பது தகுதி அன்று எனக்கு' என மொழிந்தான். 106

இருவரும் தமது இரு சிலை எதிர் எதிர் குனித்தார்;
இருவரும் கொடும் பகழிகள் முறை முறை எய்தார்;
இருவரும் தம தேர் சிலை யாவையும் இழந்தார்;
இருவரும் பெரும்பொழுது அமர் திளைத்தனர், இளைத்தார். 107

பின், சாத்தகி இளைப்பு ஆறி, மேற் செல்ல, துச்சாதனன்
தடுத்து நிற்கலாற்றாது பின்னிடுதல்

இளைத்து வேதியன் நிற்ப, மன்னவன் இளைப்பு ஆறி,
உளைத் தடம் பரித் தேரும் மற்று ஒன்று மேல்கொண்டு,
வளைத்த வில்லொடும் மன் அணி கலக்கி மேல் வருவோன்,
கிளைத்த பல் பெருங் கிரணனில் வயங்கு ஒளி கிளர்ந்தான். 108

யானை தேர் பரி வீரர் ஈர்-ஒன்பது நிலத்துத்
தானையோடு துச்சாதனன் அடுத்து, எதிர் தடுத்தான்;
சோனை மேகம் ஒத்து இவன் பொழி தொடைகளால், கலங்கி,
பூனைபோல் அழிந்து, இரு பதம் சிவந்திடப் போனான். 109

பின்னும் தடுத்தவர்களை எல்லாம் வென்று, சாத்தகி விசயன் நின்ற இடம் சார்தல்

இடையில் வந்துவந்து, எதிர்த்தவர் யாரையும் கடந்து,
புடை வரும் தனது அனீகினி நிழல் எனப் போத,
தடை அறும்படி தருக்குடன் சார் பெரும் பருவ
விடை நடந்தென நடந்தனன் விசயன் நின்றுழியே. 110

சாத்தகி வாராமையால், தருமன் கவலைகொண்டு, வீமனையும்
விசயன் நின்ற இடத்திற்கு அனுப்புதல்

பின்னரும் கொடி முரசுடைப் பெருந்தகை வருந்தி,
முன்னம் நின்ற வாயுவின் மகன் முகனுற நோக்கி,
'மன்னர் எண் படு வரூதினி வாரியின் நாப்பண்,
என்னர் ஆயினர், உம்பியும் எம்பெருமானும்? 111

'தகல் அருந் திறல் சாத்தகிதன்னையும் விடுத்தேம்;
பகலும் மேல்திசைப் பட்டது; பாஞ்சசன்னியமும்
புகலுகின்றது, போர்முகத்து, அதிர் குரல் பொம்ம;
இகல் வலம் பட நீயும் அங்கு ஏகுதி' என்றான். 112

வீமன் நாற்படையொடு விரைந்து, எதிர்ந்தாரை வென்று மேற்செல்லுதல்

சொன்ன வார்த்தையும் பிற்பட முற்படத் தொழுது,
தன்னொடு ஒத்த தோள் வலியுடைத் தரணிபர் அநேகர்
மன்னு நால் வகைப் படையொடும் திரண்டு, இரு மருங்கும்
பின்னும் முன்னும் மொய்த்து உடன் வர, போயினன், பெரியோன்.

கலிங்கர், மாகதர், மாளவர், கௌசலர், கடாரர்,
தெலுங்கர், கன்னடர், யவனர், சோனகரொடு சீனர்,
குலிங்கர், ஆரியர், பப்பரர், குச்சரர், முதலோர்
விலங்கினோர்களை, விண் உற விலக்கி, மேல் விரைந்தான். 114

உரங்க வெங் கொடி உயர்த்த காவலன்தனக்கு இளையோர்,
துரங்கம் ஆதி கொள் பலர் பெருஞ் சேனையின் சூழ்ந்தோர்,
இரங்கும் ஆழ் கடல் பேர் உக இறுதியில் எறியும்
தரங்கம் நேர் என, இடைஇடை தனித்தனி தகைந்தார். 115

முல்லை, மல்லிகை, உற்பலம், குமுதம், மா முளரி,
பல்லம், வாள், அயில், சூலம், என்பன முதல் பகழி
எல்லை இல்லன, இடையறு வகை தொடுத்து எதிர்ந்தார்,
வில் விதங்களில் யாவையும் பயின்ற கை விறலோர். 116

விந்தன், விந்தரன் முதலிய துரியோதனன் தம்பியர் முப்பத்தைவர்
வீமனால் மாள, எதிர்ந்த சேனை சிதைதல்

விந்தன் விந்தரன் இருவரும், மேலிடு முனையில்,
தம்தம் வாசியும், தேர் விடு பாகரும், தாமும்,
அந்தரம்தனில் தலைகள் போய் முகில்களை அலைப்ப,
சிந்து சோரி போய்ப் பெருங் கடல் அலைத்திட, சிதைந்தார். 117

போர்க்கு முந்துறு தேரினன் குண்டலபோசி,
தீர்க்கலோசனன், திண் திறல் சித்திரசேனன்,
மார்க்கம் நேர்பட, விலங்கி, மா மறலி நேர் வரினும்
தோற்கலாதவர் மூவரும், தம் உயிர் தோற்றார். 118

சேர முப்பது குமாரர்கள், சென்று அமர் மலைந்தோர்,
ஓர் ஒருத்தருக்கு ஓர்ஒரு சாயகம் உடற்றி,
சூரன் மெய்த் துணை நோதகும்படி உடன் தொலைத்தான்;—
மாருதச் சுதன் வல்ல வில் ஆண்மை யார் வல்லார்? 119

ஆயு அற்றவர் சுயோதனன் இளைஞர் ஏழ்-ஐவர்
வாயு புத்திரன் வாளியால் ஆர் உயிர் மடிய,
சாய்தலுற்றது, சடக்கெனத் தரணிபன் வியூகம்—
தேயு ஒத்து இவன் சேறலும், திமிரம் நேர் எனவே. 120

'வீமன் விசயனை அடுத்தால் நம் படை கலங்கும்' என்று துரோணன் தடுத்து நிற்றல்

ஏகுகின்றது கண்டு பெருங் கடல்
  ஏழும் மொண்டு விழுங்கி அதிர்ந்து எழு
மேகம் அம்பு பொழிந்தென எங்கணும்
  வீசும் அம்பு விரைந்து விரைந்திட,
'யூகம் இன்று பிளந்து, தனஞ்சய-
  னோடு இவன் புகுதந்திடின், நம் படை
ஆகுலம் படும்' என்று தடஞ் சிலை
  ஆரியன் சமரந்தனில் முந்தவே, 121

ஆதி அந்தணன் வந்தது கண்டு இகல்
ஆனிலன் சினம் இன்றி, 'நலம் பெறு
நீதி அன்று, உனுடன் சமர் உந்திடல்;
நீ பெருங் குரு; நின் கழல் என் தலை
மீது கொண்டனன்' என்று வணங்கவும்,
வேதியன் கைமிகுந்து புகுந்து, எதிர்
மோதி அம்பு தெரிந்தனன்; வன் திறல்
மூரி வெஞ் சிலையும், குனிகொண்டதே. 122

வீமன் துரோணரைத் தேருடன் எடுத்து எறிய, வீழ்ந்து தேர் முதலியன சிதைதல்

வீரன் ஒன்றும் மொழிந்திலன்; வந்து முன்
வீழ் சரங்கள் விலங்கி, வயம் புனை
தேரினின்றும் இழிந்து, நடந்து, எதிர்
சேர வந்து, செழுஞ் சிலையின் குரு
ஊருகின்ற வயங்கு இரதம்தனை
ஓர்இரண்டு கரங்கொடு, வன்புடன்
வாரி உந்த எறிந்தனன், வண் புயல்
வானில் நின்றவர் அஞ்சி ஒதுங்கவே. 123

நாக விந்தம் வளர்ந்து வளர்ந்து, அகல்
நாகம் ஒன்றியது என்று நடுங்கிட,
மேக பந்தி கலங்க எழுந்து, அது
மீளவும் புவியின்கண் விழுந்தது;
பாகன் அங்கம் நெரிந்தது; நொந்தது,
பார்முகம்; துளை விண்டன, மண்டு உருள்;
வேக வெம் பரியும் தலை சிந்தின;
வேதியன்தனது என்பும் ஒடிந்ததே. 124

பல மன்னருடன் கன்னன் வந்து வளைக்க, வீமன் அவனது தேர் முதலியன சிதைத்தல்

வீழ, இங்கும் அவன்தனை வென்று, இவன்
மேல் நடந்துழி, எண் திசையும் படை
சூழ வந்து வளைந்தனர்,—அந்தக
தூதர்தங்களினும் பெரு வஞ்சகர்,
ஏழு மண்டலமும் புதையும் பரிசு
ஏறுகின்ற தரங்க நெடுங் கடல்
ஊழியும் பெயர்கின்றது எனும்படி
ஓதை விஞ்ச உடன்று, சினம் கொடே. 125

காரில் ஐந்து மடங்கு புலம்பின,
காகளம்; சுரி சங்கு முழங்கின;
பேரி பம்பின; கொம்பு தழங்கின;
பேர் இயங்கள் பெயர்ந்து கறங்கின;
பூரியும், பொருது அஞ்சி அவந்தியர்
பூபனும், புறம் அன்று இட, வெங் கணை
மாரி சிந்தி மலைந்தனன், வெஞ் சினம்
மாற, முன் பவனன் திருமைந்தனே. 126

மாகுணம் தலை நொந்து சுழன்றன;
மாதிரங்கள் மருண்டு கலங்கின;
வீசு தெண்திரை அம்பு வெதும்பின;
மேலை அண்டமும் விண்டு பகிர்ந்தன;
பூசலின்கண் உடன்று கழன்றவர்
போர் தொடங்க நினைந்து புகுந்தனர்,
ஆசுகன் திருமைந்தனுடன் சுடர்
ஆதபன் குமரன் சமர் முந்தவே. 127

கோபம் விஞ்சினர், விஞ்சை வரம் பெறு
கூர் சரங்கள் தெரிந்தனர் கொண்டனர்;
சாபமும் குனிதந்து, எதிர் உந்தினர்,
தாரை வெம் பரி தங்கு இரதங்களும்;
நீபம் எங்கும் மலர்ந்தென, மண்டு செந்-
நீர் பரந்திட, நின்று முனைந்து எழு
பூபர் தங்கள் உடம்பு சிவந்தனர்;
பூரம் எங்கும் அலைந்து புரண்டவே. 128

மாருதன் புதல்வன் தொடும் அம்பினில்
மா இரண்டும் இரண்டும் விழுந்தன;
சோரும் வன் துவசம் தறியுண்டது;
சூதனும் தலை சிந்தினன்; முந்திய
தேரும் உந்து உருளும் துகள் கொண்டன;
சேம வெங் கவசம் துளை விஞ்சியது;
ஆர வெண்குடை அம்புலியும் பிறை
ஆனது; அஞ்சல் இல் நெஞ்சும் அழிந்ததே. 129

ஓடிய கன்னன் விடசேனன் தேரில் மீண்டும் வந்து பொருது பின்னிட,
துரியோதனன் அனுப்ப வந்த அவன் தம்பியர் இருவரும் பொருது மடிதல்

அழிந்து கன்னனும், கால் விசையினில், இவன் அம்பினுக்கு எட்டாமல்.
வழிந்து போதல் கண்டு, அடல் விடசேனன் அவ் வள்ளலுக்கு எதிர் ஓடி,
இழிந்து, தன் பெருந் தட மணித் தேரின்மேல் ஏற்றலும், இவன் ஏறி,
கழிந்த நீர்க்கு அணை கோலுவான்போல், அவன் கண் எதிர் உறச் சென்றான். 130

சென்று மீளவும் வீமனோடு எதிர்ந்து, வெஞ் சிலை அமர் புரிந்து, அந்தக்
குன்றுபோல் நெடுந் தேரும் நுண் துகள் பட, குலைந்து வென் கொடுத்து ஓட,
கன்றி நாக வெங் கொடியவன், கண்டு தன் கண் நிகர் இளையோரை,
'ஒன்றி நீர் விரைந்து உதவும்' என்று, இருவரை ஒரு கணத்தினில் ஏவ,

கன்னனைக் கடிது உற்று, இருவரும் மதுகயிடவர் எனத் தக்கோர்,
மன்னருக்கு அரி அனைய வீமனுக்கு எதிர், வரி சிலை உற வாங்கி,
அந் நிலத்தினில் அவனுடன் நெடும் பொழுது அமர் புரிந்து, அவன் கையின்
செந் நிறக் கொடும் பகழியால் தம் உடல் சிதைந்து, வானிடைச் சென்றார். 132

தன் கண்ணெதிரே அரசன் தம்பியர் பட்டது கண்டு, கன்னன் வஞ்சினம் கூறி
வீமனோடு பொருது தேர் இழத்தல்

தனது கண் எதிர் இருவரும் அழிந்தபின், தபனன் மைந்தனும் நொந்து,
கன துரங்கமும் முடுகு தேர் வயப் படைக் காவலன் முகம் நோக்கி,
'உனது தம்பியர் இருவரைச் செற்றவன் முடித் தலை ஒடியேனேல்,
எனது புன் தலை அவன் கையில் கொடுப்பன்' என்று ஏறினான், ஒரு தேர்மேல்.

குனித்த சாபமும், தொடுத்த சாயகங்களும், குலவு மால் வரைத் தோளும்,
துனித்த நெஞ்சமும், முரிந்தன புருவமும், எரிந்த கண்களும், தோன்ற,
பனித்த தேரொடும் போர் உடன்று எழுதரும் பரிதியின் விரைந்து எய்தி,
'இனித் தராதலம் உரககேதனற்கு' என, இளவலோடு இகல் செய்தான்.

ஆற்றை ஒத்தன கால் வழி அளை புகும் ஆமை கொள் அடல் மள்ளர்
சேற்றை ஒத்தன நித்திலம் எடுத்து எறி செல்வ நீள் குருநாடன்
காற்றை ஒத்தனன், வலியினால்; சினத்தினால், கதிரவன் திரு மைந்தன்
கூற்றை ஒத்தனன்; பிறப்பிலே துவக்குளோர் குணங்களும் கொள்ளாரோ? 135

தேறல் வண்டு இமிர் தெரியலான் தினபதி சிறுவனை முகம் நோக்கி,
'ஆறு அல் வெஞ் சமத்து என்னுடன் முனைந்தனை; முனைந்தனை ஆனாலும்,
வேறல் என் கடன்; நின்னை மன் அவையின் முன் விளம்பிய வசனத்தால்,
கோறல் எம்பிதன் கடன்' என வரி சிலை குனித்தனன், கொடித் தேரோன். 136

இலக்கம் அற்ற வெங் கணைகளால் இருவரும் எதிர் எதிர் அமர் ஆடி,
கலக்கம் உற்ற பின், தினகரன் மதலை அக் காற்றின் மைந்தனைச் சீறி,
அலக்கண் உற்றிடப் பல பெருங் கணை தொடுத்து, அவன் விடும் கணை யாவும்
விலக்கி, வச்சிரத் தேரும் வெம் புரவியும் விறல் துவசமும் வீழ்த்தான். 137

காலினுல் வரும் காலின் மைந்தனைக் கடுங் கதிரவன் திருமைந்தன்
வேலினுல் அடர்த்து எறிதலும், எறிந்த செவ் வேல் இரு துணியாகக்
கோலினுல் அவன் துணித்து, மீளவும், அழல் கொளுந்தியது ஒரு தண்டு,
நாலின்-நால் முழம் உடையது, கன்னன்மேல் எறிந்தனன், நகைசெய்தான். 138

தேரவன் திருமைந்தன் ஏறிய தடந் தேரும் வாசியும் சிந்தி,
ஊர வந்த வெம் பாகனும் தலை பிளந்து, ஓடலுற்றனன், பின்னும்;
வீரனும் 'பெரு வலியுடன் வருக!' என வேறு ஓர் தேர் மேற்கொள்ள,
தூர நின்றவர் இருவரும் உடன்றமை சுயோதனன் கண்ணுற்ருன்.

அப்பொழுது, துரியோதனன் தன் தம்பியரில் எண்மரை அடுத்தடுத்து அனுப்ப,
அவர்களுள் விகருணன் ஒழிந்தோர் மாளுதல்

கண்டு, துன்முகன் எனும் திறல் இளவலைக் கடிதின் ஏவலும், கங்குல்
வண்டு செஞ் சுடர் வளைய வந்து இறந்தென, வலிய வார் சிலை வாங்கிக்
கொண்டு, திண் திறல் வாளியால், மலைமிசைக் கொண்டல் பெய்வது போல,
மண்டு போர் புரிந்து, அண்ணல் கைப் பகழியால், வான் இமைப்பினில் உற்ருன்.

தாளின் ஓடிய கன்னன், மன்னவன் விடு தம்பி வீழ்தலும், வீமன்
தோளின் ஓடி மண்மிசை புதைதர, ஒரு தோமரம்தனை ஏவ,
வேளினேடு இசை வீமன்மேல் அது செலும் வேலையின், விட வெவ் வாய்க்
கோளின் ஓடிய குரிசில் கைக் கணையினுல் கோள் அழிந்தது மன்னே;

மன்னர் மன்னவன் தம்பியர் இருவரை மாருதிமிசை ஏவ,
முன்னர் வந்தவர் இருவரும் படப்பட, முனைந்த போர் மதியாமல்,
மின் இருங் கணை விகருணன் முதலியோர் வீமன்மேல் ஓர் ஐவர்
பின்னரும் செல, நால்வரைப் பிறை முகக் கணையினுல் பிளந்திட்டான்.

விகருணன் வர, 'நின்னெடு பொருதல் முறை அன்று' என்று வீமன் உரைக்கவும்,
'எம்முனேர் இறக்க யான் உய்யேன்' என்று போர் தொடங்குதல்

பகரும் நால்வரும் பட்டபின், பைங் கழல்
விகருணன் பொர வெஞ் சிலை வாங்கலும்,
'புகலும் வஞ்சினம் பொய்க்கினும், நின்னுடன்
இகல் செய்யேன்; எம்பி ஏகுக!' என்ருன்அரோ. 143

'சுடு உரைக் கனல் அன்ன துச்சாதனன்
வடு உரைக்கவும், மன் உறை மன்றிடை,
நடு உரைக்கும் நல் நா உடையாய்! உனைக்
கொடு உரைக் கணை ஏவினும், கொல்லுமோ? 144

'பார் அறிந்த பழிக்கு உட்படாத நின்
நேர் அறிந்தும், பொர நெஞ்சு இயையுமோ?
போர் அறிந்து பொருக!' என்ருன்—நெடுஞ்
சீர் அறிந்தவர் செய்ந்நன்றி கொல்வரோ? 145

வீமன் இப்படிச் சொல்லவும், வேரி அம்
தாமம் உற்ற தட வரைத் தோளினன்,
மா மணிச் சிலை வாங்கி, அவ் வீமன்மேல்
தீ முகக் கணையும் சில சிந்தியே, 146

'எம் முனேர்கள் எனைவரும் உம் கையில்
வெம் முனைக் கணையால் விளிந்து ஏகவும்,
உம் முன் யான் ஒருவேனும் உய்வேன் கொலோ?
வம்மின்! வார் சிலை வாங்குக!' என்று ஓதினன். 147

இருவரும் ஒத்துப் பொருதும், இறுதியில் விகருணன் உயிர் இழத்தல்

மிக நகைத்தும், வெறுத்தும், திரிபுர
தகனன் ஒத்த சமீரணன் மா மகன்
முகன் உறச் சென்று, மூரி வில் வாங்கி, மேல்
இகல் நிறக் கணை ஏவினன் என்பவே. 148

ஏவினல் இவ் இருவரும் வெஞ் சமம்
மேவினர்; மெய்ப் படாமல் விலக்கினர்;
கூவினர், அறைகூவிப் பொருது இளைத்து
ஓவினர், தமையே நிகர் ஒத்துளார். 149

விகனன் விட்ட கணைகளின் வீமன் மெய்
இகல் மணிக் கவசம் பிளந்து, ஏறு தேர்
அகல் அரிக் கொடி அற்று, கொடிஞ்சியும்
சகலம் உற்று, தனுவும் முரிந்ததே. 150

மின்னை ஒத்த விறற் படை மாருதி
பின்னை விட்ட பிறைமுக வார் கணை
அன்னை சித்தம் அலமர, பின்னவன்-
தன்னை வெற்றி மகுடம் தடிந்ததே. 151

பின், கன்னன் முதலியோரையும் வீமன் வென்று, சாத்தகியோடு சேர்ந்து விசயனைக் கூடுதல்

கோ விகன்னன் கொலைபட, பற்பலர்
ஆவி கன்னம் அறை கணையால் அற,
பாவி கன்னன் பதைக்க வென்று ஏகினன்,
மேவு இகல் நகம்போல், புய வீமனே. 152

அன்று சாதத்து அலகைகள் ஆடவே,
சென்று, சாத்தகிதன்னுடன் சேர்ந்தனன்,—
துன்று சாத்திரத்தின்படி, சூழ் முனை
வென்று, சாத்திய வாகை கொள் வில்லினன். 153

அங்கிதன்ளுெடு அனிலமும் சேர்ந்தென,
சங்கபாணிதன் தம்பியும் வீமனும்,
செங் கலங்கல் அம் சேற்றிடை மூழ்கிய
வெங் களத்து விசயனைக் கூடினர். 154

சாத்தகியும் பூரிசவாவும் விளைத்த மற்போரில், சாத்தகி இளைக்க, கண்ணன் பூரிசவாவைக் கொல்லுமாறு விசயனை ஏவுதல்

தேவரும் பரவு பாகன் செலுத்து தேர் விடலையோடு
மூவரும் சுடர்கள் மூன்றும் மூண்டெனத் திரண்ட காலை,
மேவ அருஞ் சமரில் முன்னம் வென்கொடுத்து உடைந்த வேந்தர்
யாவரும் திருகி வந்து, ஆங்கு எதிர் எதிர் அடர்ந்து சூழ்ந்தார். 155

சாத்தகிதானும் பூரிசவாவும் வெஞ் சாபம் வாங்கி,
கோத்தனர், பகழி; சென்று குறுகின, தேரும் தேரும்;
சேர்த்தனர் மலைந்த காலை, சிலை துணிவுண்டு, தேர் விட்டு,
ஏத் தரும் தடக் கை கொட்டி, இருவரும் மல்லின் நேர்ந்தார். 156

மல்லினின் வென்று வீழ்த்தி, மாயவன் தம்பிதன்னைக்
கொல்லுவான் முனைந்து, மற்றைக் கோமகன் அடர்த்தல் நோக்கி,
கல்லினின் மாரி காத்தோன் கண்டு, வில் விசயனேடும்
சொல்லினன், 'பகைவன்தன்னைச் சுடர் முடி துணித்தி' என்றே.

விசயன் பூரிசவாவின் புயத்தைத் துணிக்க, சாத்தகி அவனை வாளால் மாய்த்தல்

'இருவரும் முனைந்த போரில் இளைத்தவர்க்கு உதவியாகப்
பொருவது கடன் அன்று' என்று போற்றிய விசயன்தன்னை,
வெருவர முனைந்து சீறி, மீளவும் விளம்ப, மாயன்
திருவுளம் அறிந்து, தெவ்வன் திண் புயம் துணிய எய்தான். 158

புயம் துணிவுண்ட பூரிசவாவினைப் புரிந்து தள்ளி,
சயம் புனை வாளின் தும்பைத் தார் புனை தலையும் கொய்து,
வயம் புனைந்து இளவல் நிற்ப, 'மன் அறம் அன்று, இப் போர்' என்று
இயம்பிய இராசராசற்கு எதிர்மொழி இயம்பலுற்ருன்: 159

'அறம் அன்று, இப் போர்' என்ற துரியோதனனுக்குக் கண்ணன் உரைத்த மறுமொழி

'நென்னல் நீர் அபிமன்தன்னை நேர் அற வென்ற போரும்,
முன்னமே சிவேதன்தன்னை வீடுமன் முடித்த போரும்,
மன் அறம் முறை தவாமல் மலைந்தனிர்!' என்று நக்கான்—
தன்னை வந்து அடைந்தோர்க்கு உற்ற தளர்வு எலாம் ஒழிக்கும் தாளான்.

விசயன் தன் வஞ்சினம் முடித்தற்குப் பகைவர் படையைச் சார, பகைவர் சயத்திரதனை நிலவறையுள் வைத்துக் காத்தல்

பின்னரும் விசயன் நிற்ப, பேணலார் பின்னிட்டு ஓட,
மன்னரில் மலைந்தோர்தம்மை வாளியால் வானில் ஏற்றி,
முன்னவனேடும், அந்த முகில்வண்ணன் இளவலோடும்,
தன் உரை வழுவாவண்ணம் தரியலர் படையைச் சார்ந்தான். 161

'அருக்கன் ஓர் கணத்தில் அத்தம் அடையும் அவ் அளவும் காக்கின்,
செருக் கிளர் விசயன் இன்றே தீயிடை வீழ்தல் திண்ணம்;
நெருக்குபு நின்மின்' என்று, நிலவறையதனில் அந்த
மருக் கமழ் தொடையலானை வைத்தனர், மருவலாரே. 162

சயத்திரதனைக் காணாது, கண்ணன் ஆழியால் சூரியனை மறைத்தல்

நச்சு அளை அரவம் என்ன நடுங்கினன் நின்ற காலை,
துச்சளை கணவன்தன்னைத் தோற்றம் ஒன்றானும் காணான்—
பச்சளை முடை கொள் மேனிப் பாடி மா மகளிர் பைம் பொன்-
கச்சு அளை புளக பாரக் கன தனம் கலந்த தோளான். 163

பார் ஆழி அவலம் அற, பாண்டவர்தம் இடர் தீர, பார்த்தன் வாழ,
பேர் ஆழி அறிதுயிலும் பெருமிதமும் உடன் மறந்து, பிறந்த மாயோன்,
ஓர் ஆழி எழு பரித் தேர் உடையானை மாயையினால் ஒழிக்க, தன் கைக்
கூர் ஆழி பணித்தலும், அக் களம் போலச் சிவந்தன, அக் குடபால் எங்கும்.

சூரியன் மறைந்தது என்று கருதி, விசயன் எதிரே சயத்திரதனையும் கொண்டு
மன்னர் பலரும் வருதல்

அயத்து, இரதம் இடப் பசும் பொன் ஆவதுபோல், அருச்சுனன் ஆர் அறிஞன் ஆக
நயத்து இரத மொழிக் கீதை நவின்ற பிரான் மயக்கு அறியார், 'நாள் செய்வான்தன்
வயத்து இரதம் மறைந்தது' என, வலம்புரித் தாரவன் சேனை மன்னர் யாரும்,
செயத்திரதன்தனைக் கொண்டு, செருமுனையில் விசயன் எதிர் சென்று சேர்ந்தார். 165

'சயத்திரதன் தலையைக் கொய்து, சமந்தபஞ்சக மடுவில் தருப்பிக்கும் அவன் தந்தை
கையில் விழுமாறு செய்' என, கண்ணன் மொழிதல்

'எண் சிறந்த மகன் தலையை நிலத்து இட்டான் தலை துகளாக' என்று நாடி,
தண் சமந்தபஞ்சகம் என்று ஒரு மடுவில் இவன் தாதை தருப்பிக்கின்றான்;
ஒண் சரம் கொண்டு இவன் தலை மற்று அவன் கரத்தில் போய் விழ, நீ உடற்றுக' என்று
திண் சயம் கொள் விசயனுக்குச் சிந்துபதிதனைக் காட்டி, திருமால் சொன்னான். 166

விசயன் கணை தொடுத்துச் சயத்திரதனை மாய்த்தல்

வரத்தினில் முன் பெறு சாபம் வாங்கி, அருச்சுனன், சிந்து மகீபன் மௌலிச்
சிரத்தினில் எய்தலும், துணிந்தது ஒரு சரத்தால்; துணிதலும், அச் சிரம் வீழாமல்
சரத்தினை மேன்மேல் ஏவி, தடத்து இருந்து தருப்பித்த தாதைதன் பொற்
கரத்திடையே வீழ்வித்தான்; அவன் அதனை நிலத்து இட்டு, அக் கணத்தில் மாய்ந்தான்.

முன் பட்டான் அருக்கன் என வெளிப்பட்டான்; வெளிப்பட்டு, முடிவில், சிந்து
மன் பட்டான்; மா மாயன் மாயம் இது என்று அறியாமல், 'மகன் போய்ப் பட்ட
பின் பட்டான், அவன் தந்தை; இனிப் பட்டார் எவரும்!' எனப் பிழைப்பட்டான்போல்
என் பட்டான், அரவு உயர்த்தோன்! 'எரிப்பட்டான் விசயன்' என எண்ணி நின்றான்.

'விசயன் மொழி பிழைத்தான்' என்று துரியோதனன் முதலியோர் துள்ளி ஆர்க்கும் போது, கண்ணன் ஆழியை அகற்ற, சூரியன் பனைஅளவு தூரத்தில் நிற்றல்

கன்ன சவுபலர் முதலாம் காவலரும் சுயோதனனும், 'கரந்தான் வெய்யோன்;
சொன்ன மொழி பிழைத்தான், வெஞ் சுவேத துரங்கமன்' என்று துள்ளி ஆர்த்தார்;
அன்ன பொழுது, எம்பெருமான் பணி கொண்ட சுடர் ஆழி அகற்ற, நோக்கி,
'இன்னம் ஒரு பனைத்தனைப் போழ்து உண்டு' என நின்றனன், எழு பேர் இவுளித்
[தேரோன். 169

சேனையிலுள்ளார் கூற்று

'விரி ஓத நெடுங் கடலில் வீழ்வதன்முன், விரைந்து உரகன் விழுங்கினனோ?
''எரி ஓடி மகன் இறக்கும்'' என மகவான் மறைக்க, முகில் ஏவினனோ?
கரியோன் கைத் திகிரியினல் மறைத்தனனே? இருள் பரந்த கணக்கு ஈது என்னே?
பெரியோர்கள் திருவுள்ளம் பேதித்தால், எப் பொருளும் பேதியாதோ?

'உந்து இரதத் தனி வலவன் உபாயத்தால், வருணன் மகன் உயிரை மாய்த்தான்;
மந்திரம் ஒன்று அறிவித்து, வயப் புயம் ஆயிரத்தோனை மடிவித்திட்டான்;
தந்திரம் மெய்ம் மயங்கி விழத் தன் சங்கம் முழக்கினன்; தபனன் மாய,
இந்திரசாலமும் செய்தான்; இந்திரன் சேய் வெல்லாமல், யார் வெல்வாரே?'

துரியோதனன் கண்ணனைப் பழித்து, மன்னர் பலருடன் கூடிப் பொருதல்

'முடை எடுத்த நவநீதம் தொட்டு உண்டும், கட்டுண்டும், முன் நாள் நாகக்
குடை எடுத்து மழை தடுத்தும், வஞ்சனைக்கு ஓர் கொள்கலமாம் கொடிய பாவி,
'படை எடுத்து வினை செய்யேன்' எனப் புகன்ற மொழி தப்பி, பகைத்த போரின்-
இடை எடுத்த நேமியினல், வெயில் மறைத்தான்; இன்னம் இவன் என் செய்யானே?

'ஒற்றை நெடுந் திகிரி இனன் மறைவதன் முன், ஐவரையும் உடன்று மோதி,
செற்றிடுதல், யான் படுதல், திண்ணம்' எனச் சேனையொடும் சென்று சூழ்ந்தான்;
கொற்றவனது உரை கேட்டு, கொடி நெடுந் தேர் நரபாலர் சபதம் கூறி,
மற்று அவனெடு, 'ஒரு கணத்தில் வம்மின்' எனத் தனித்தனிபோய் மலைதலுற்றார்.

துருபதனும், சாத்தகியும், திரௌபதி மைந்தரும், முடுகி, தொட்ட சாபக்
குருவுடனே போர் செய்தார்; தம்பியரும், சுயோதனனும், கொற்ற வேந்தர்
ஒருபதினுயிரவரும், போய், வீமனுடன் உடற்றி, அவன் ஊர்ந்த தேரும்
வரி சிலையும் அழித்தனர்; பின் அவனும் வெறுங் கரதலத்தால் வன் போர் செய்தான்.

தேர் முதலியன இழந்து, வீமன் வெறுங்கையோடு பொருது, பிருகன், சூசி என்ற அரசன் தம்பியரை மாய்த்தல்

பரி எடுத்துப் பரி எற்றி, பரித் தேரால் தேர் எற்றி, பனைக்கை வேகக்
கரி எடுத்துக் கரி எற்றி, காலன் நிகர் காலாளால் காலாள் எற்றி,
கிரி எடுத்து விரி ஆழி கடைந்த தடந் தோள் இருடிகேசன் என்ன,
அரி எடுத்த கொடி விடலை தோள் வலியால் உழக்கி, அரிநாதம் செய்தான்.

நிருபர் தொழும் கழை கழற் கால் நில வேந்தன் தம்பியரில் நெடும் போதாக
இருவர் புறம்கொடாமல் அதிர்ந்து எதிர்ந்து இரு தோள் வலி காட்ட, இருவரோடும்
ஒருவர் ஒருவரை அறியாவண்ணம், இவன் ஒருவனுமே உடன்று சீறி,
பொருது பிருகனையும் விறல் சூசிதனையும் வானில் போக்கினுனே.

கடோற்கசனும், அவன் மகன் அஞ்சனபன்மனும் அசுவத்தாமனுடன்
பொருத போரில், அஞ்சனபன்மன் உயிர் இழத்தல்

இகல் இடிம்பன் மருமகனும் திருமகனும் குரு மகனோடு எதிர்ந்து, பல் கால்
அகலிடம் செஞ் சேறு ஆக, அமரருடன் அசுரரைப்போல் அமர் செய் காலை,—
பகலுடன் கார் இருள் பகைத்தால் பலிக்குமோ?—அஞ்சனபன்மனை அப் போதில்
புகல் இடம் பொன்னுலகு ஆக்கி, போக்கினுன் ஒரு கணையால், புரவித்தாமா. 177

கடோற்கசனை அசுவத்தாமன் தண்டால் வீழ்த்த, மோகித்த அரக்கனைக்
கொல்லுமாறு கன்னனைத் துரியோதனன் தூண்டுதல்

மகன்பட்ட சினம் கதுவ, வரை உறழ் தோள் கடோற்கசன், மா மலைகள் வீசி,
அகன் பட்ட நுதல் வேழம் அன்னுன்மேல், எறிந்து எறிந்திட்டு ஆர்த்த காலை,
குகன் பட்டம் தனக்கு உரிய கோ முனிவன் மா மைந்தன், வீமன் கையில்
பகன் பட்ட பாடு எல்லாம் படுத்தி, ஒரு கதாயுதத்தால் படியில் வீழ்த்தான்.

மோகித்து விழும் அரக்கன், மீண்டு எழுந்து, மோகரிக்க, முடி மகீபன்
வேகித்துக் கன்னனைப் பார்த்து, 'இவன் உயிரை வீட்டுக!' என, 'வேகத் தண்டால்
சோகித்துத்தளர்ந்தான்மேல் தொடேன்; விசயன் உயிர் உண என் தொடையோ சாலத்
தாகித்தது; இப்பொழுதே கொன்று, உனக்குக் கடல் ஞாலம் தருவேன்' என்றுன்.

'தளர்ந்தவன்மேல் அம்பு தொடேன்; விசயனைக் கொல்வேன்' என்று
வீரம் பேசிச் சென்று, விசயனிடம் பல முறை வென்னிடுதல்

நிருபனுடன் இரவி மகன் புகன்ற உரை கேட்டு, அருகே நின்ற விற் கைக்
கிருபன் மிக நகைத்து, 'எதிரே கிட்டினுல் முதுகிடுவை; கிரீடிதன்னைப்
பொரு பகழிக்கு இரையாகப் போக்குகின்றேன் என மொழிவை; போர் வல்லோர்கள்
உரு அழியத் தம் வலிமை உரைப்பரோ?' என உரைத்தான், உரையால் மிக்கோன்.

அம் மொழி தன் செவி சுடப் போய், அக் கணத்தே, விசயனுடன் அங்கராசன்
வெம் முனை செய் போர் அழிந்து, தேர் அழிந்து, வென்னிட்டான், மீண்டும் மீண்டும்;
அம் முறையில் பற்குனனுல் ஆவி ஒழிந்தவர் அரசர் அநேக கோடி;
எம் மொழி கொண்டு உரைப்பரிதால்; உரைக்க, எமக்கு ஆயிரம் நா இல்லை மாதோ!

அசுவத்தாமன் குந்திபோசன் மைந்தர் இருவரை மாய்க்க, சூரியனும் மறைதல்

அந்த முனைதனில் மீண்டும், அந்தணன்தன் திருமதலை, குந்திபோசன்
மைந்தர் இருவரை இரண்டு வடிக் கணையால் மடிவித்தான்; மாயோன் வன் கைச்
செந் திகிரிதனில் அடங்கி முடங்கிய தன்கிரணத்தின் சிறுமை நாணி,
உந்து திரைச் சிந்துவினில், ஓர் ஆழித் தேரோனும் ஒளித்திட்டானே.

துரியோதனன் இரவினும் பொரத் துணிந்து விளக்கு எடுக்கச் செய்தல்

'இசையினும் பெருக நன்று!' எனத் தனது இயற்கையால் மிக வளர்த்திடும்
வசையினும் கரிய இருள் பரந்துழி, 'வயங்கு தீப நெடு வாளினுல்
திசையினும் பொருதும்' என்று தெவ்வர் முனே நேர் நடந்தனன்—நெருங்கு குன்று
அசையினும், புடவி அசையினும், சமரில் அசைவு இலாத தனி ஆண்மையான்.

'பகல் இரா வர அழைத்தனன், பகைவர் பாகன் என்று, படு பகலை அவ்
அகல் இராவினில் அழைத்தனன்கொல்' என, 'அண்டகூடம் உற இருள் அறுத்து,
இகல் இராக ஒளி உமிழ் விளக்குஇனம் எடுக்க!' என்று கடிது ஏவினுன்—
தகல் இராதது ஓர் மனத்தினுன், வலிய தனதன் நேர்தரு தனத்தினுன்.

இருதிறத்துப் பெரு வீரரும் தம்மில் பொருதல்

'பொங்கி ஆடு அரவு எழுந்து அநேகவிதம் ஆனது' என்று, அமரர் புகலுமாறு,
அங்கு வாள் அரவு உயர்த்த கோன் நினைவு அறிந்து, அளப்ப அரிய ஆகவம்
எங்கும் ஆனை பரி தேர்கள்தோறும் ஒளிர் தீப காகளம் எடுக்கவே,
சங்கு தாரை எழ நின்றனன், தருமன் மதலை தம்பியர்கள்தம்மொடும்.

கருதி வாகை புனை விசயன்மேல் விசய கன்னன் முந்தி அமர் கடுகினுன்;
கிருதவன்மன் எனும் விருதன் மா முரசகேதனன்தன் எதிர் கிட்டினுன்;
சுருதி மா முனி துரோணனும், பழைய திட்டத்துய்மனெடு துன்னினுன்;
'பொருது மாய்வன்' என, வீமனேடு உயர் புயங்க கேது மிகு போர் செய்தான்.

சல்லியன் பெருகு சல்லியத்தொடு சதானிகன்தனெடு போர் செய்தான்;
வல்லியம் புனை கடோற்கசன்தனெடு போர் செய்தான், முனிவன் மைந்தனும்;
எல் இயங்கு சுடரினும் மணிச் சுடர்கள் எழு மடங்கு ஒளி எறிக்கவும்,
பல்லியம் பல முழங்கவும், தரணிபாலர் இப்படி பகைக்கவே, 187

'எல் தரும் தபனன் ஏகினுன்; இனி எனக்கு வாசி கொடி நீடு தேர்
முன் தரும் கனலின் ஒளி எழுந்தது' என, முரண் அழிந்திட மொழிந்து, போர்
வில் தரும் கணைகளால் விழப் பொருது, வெயிலவன் சுதனை, மீளவும்
பின் தரும்படி, பிளந்தனன்—தனுசர் பின்னிடப் பொருத பெற்றியான். 188

ஒரு தன் வாகு வலியாலும் வார் சிலை உதைத்த வாளி வலியாலும் ஒன்
குருதி பொங்க அடு தருமராசன் ரகுகுல இராமன் நிகர் ஆயினுன்;
கிருதவன்மன் என வரும் நராதிபதி கெட்டு, மா இரதம் விட்டு, வாள்
நிருதர்சேகரனெடு உவமை ஆயினன், நெடுங் களத்தில் எதிர் நின்றிலன். 189

வாளம் ஆக வில் வணக்கி, உம்பர் பதி மைந்தன், வாள் இரவி மைந்தனைக்
கோளம் ஆன குடை இரதம் வாசி சிலை கொடி முருக்கி, அமர் கொள்ளவே,
மீளமீளவும் அழிந்து அழிந்து, அவன் ஓர் வேலினுல் எறிய, வேலையும்
தூளம் ஆக வடி வாளியால் எதிர் துணித்து, வன்பொடு துரக்கவே, 190

முன் சதாகதி முருக்க, மேரு கிரி முடி முரிந்தென முரண்கொள் போர்
வன் சதானிகன் வளைத்த வில் கணையின் மத்திரத் தலைவன் மனம் முரிந்து,
என் செய்தான்? முடிவில் ஓடினன்; விறல் இடிம்பி மைந்தன் முனி மைந்தன்மேல்
மின் செய் தாரை அயில் ஏவினன், அவன் விரைந்து தேரின்மிசை வீழவே. 191

தானை காவலனும் முந்துறப் பொருது, தரணி மன்னன் விடு சமர்முகச்
சேனை காவலனை ஓட ஓட, ஒரு தெய்வ வாளி கொடு சீறினன்;
ஆனை தேர் புரவி ஆளொடு உற்று எதிர் அணிந்த மன்னவர்கள் அனைவரும்,
ஏனை மன்னவர்தமக்கு உடைந்து, முதுகிட்டு மன்னன் அருகு எய்தினர். 192

கன்னன் முதலியோர் பின்னடைந்து மன்னனை அடுத்த அளவில், அலாயுதன் என்னும் அரக்கன் மன்னனிடம் சபதம் கூறி, வீமனொடு வந்து பொருதல்

அன்ன போதினில், அநேக நூறு பதினாயிரம் திறல் அரக்கரோடு,
இன்னவாறு என உரைக்கவே நிகர் இலாத திண் திறல் அலாயுதன்,
கன்ன சௌபலர்தமக்கு நண்பன், இருள் கங்குல் ஓர் வடிவு கொண்டனன்,
மன்னர் யாவரும் வெருக்கொள, சமரில் மன்னர் மன்னன் அடி மன்னினன். 193

'இன்று இரா விடியும் முன்னர் வெஞ் சமம் எதிர்ந்த பஞ்சவர்கள் எஞ்சிட,
கொன்று பார் முழுதும் நின்னதாக, உயர் வான் உளோர் பதி கொடுப்பன் யான்'
என்று கோடி சபதம் புகன்று எதிர், எடுத்த தீபமும் இருண்டிட,
சென்று வீமனொடு கிட்டினன், விசை கொள் தேர் இரண்டும் உடன் முட்டவே. 194

பணைத்து இரு புயக் கிரி வளர, மாற்றலர்
பயப்பட, வயப்படு பயம் இல் நூற்றுவர்
துணைப் பெற, மனச் சினம் முடுக, நாக் கொடு
சுழற்று கண் நெருப்பு எழ, நிருதர் பார்த்திவன்
இணைப் பிறை எயிற்று இள நிலவினால் செறி
இருள் கிழிதர, பகை முனையில் ஏற்கும் முன்—
அணைத்து இரு புறத்தினும் வரும் இராக்கதர்
அதிர்த்தனர், எதிர்த்தனர், அமரை நோக்கியே. 195

இருட் கிரி எனத் தகு கரிய தோற்றமும்,
எயிற்றினில் நிணப் பிண முடை கொள் நாற்றமும்,
முருக்கு அலர் வெளுத்திடும் அருண நாட்டமும்,
முகிற் குரல் இளைத்திட முதிரும் வார்த்தையும்,
மருள் படு கருத்திடை கதுவு சீற்றமும்,
மதக் கட களிற்று அதி மதமுமாய், புடை
நெருக்கினர் தருக்கினர்,—விறல் நிசாச்சரர்—
நிமிர்த்தனர் வடிக் கணை, சிலைகள் கோட்டியே. 196

அருக்கனை மறைத்தவர் கடவு தேர்த்தலை
அருச்சுனன் முதல் பல துணைவர், சாத்தகி,
செருக்குடைய மைத்துனர் குமரர், காத்திடு
செருக்களம் வெருக் கொள, வளையும் மாத்திரை,
மருச்சுதன் வளைத்தது ஓர் தனுவினுல் சில
வடிக் கணை தொடுத்தலும், இரவு உலாய்த் திரி
துருத்தனும் வளைத்தனன், நெடிய காற் சிலை;
தொடுத்தனன், இலக்கு அறு தொடைகள் வாய்க்கவே. 197

மருச்சுதன் வடிக் கணை, அமரர் மாற்றலன்
வடிக் கணை தடுத்தும், வல் இரதம் மாற்றியும்,
விருப்புடன் விரித்து அணி துவசம் வீழ்த்தியும்,
விறற் பரிகளைத் துணிதுணிகள் ஆக்கியும்,
உரத்தொடு செலுத்திய வலவன் மாத் தலை
உருட்டியும், மணிச் சிலை ஒடிய நூக்கியும்,
இருட்டு ஒளி உடல் பல துளைகள் ஆக்கியும்,
இமைப் பொழுதினில் திறல் மடிய மாய்க்கவே, 198

நிலத்திடை குதித்தனன், வடவைபோல் பெரு
நெருப்பு எழ விழித்தனன், நெடிய மூச்சுடன்,
வலத்து உயர் அலப்படை நிசிசரோத்தமன்,
வரைத் திரள் எடுத்து, எதிர் முடுகி ஒச்சலும்,—
உலப் புயம் நிமிர்த்து ஒரு கதையினுல் தனது
உரத்துடன் அடித்து, அவை பொடிகள் ஆக்கினன்—
இலக்கம் இல் சுரர்க்கு இடம் உதவு கோத்திர
எழில் குவடு ஒடித்தவன் உதவு கூற்றமே. 199

வீமனை விலக்கி, கடோற்கசன் வந்து அலாயுதனேடு பொருதல்

'பரத்துவசனுக்கு உற உரிய கோத்திரி,
பரிச் சுடருடைப் பெயர் முனிகுலோத்தமன்,
மரித்தனன்' எனத் தனி அயில் கொடு ஒச்சிய,
மணிச் சிறு பொருப்பினை நிகர், கடோற்கசன்,
'எரித் தலை அரக்கனெடு எதிரியாய்ச் சமர்
எனைத் தரு மருச்சுதன் முனைதல் கிழ்த்தொழில்;
உரத்துடன் மலைத்து, இவன் உயிரை மாட்டுவன்
உருத்து' என உடற்றினன், உறுதி தோற்றவே. 200

'இடிக் குரல்!' என, தலை உரகர் சாய்த்தனர்;
எதிர்க் குரல் எழுப்பின, குல சிலோச்சயம்;
வெடித்தது, முகட்டு உயர் கடக மேல்தலை;
'விபத்து' என இபத் திரள் வெருவு தாக்கின;
துடித்தனர், இயக்கரொடு அமரர் தைத்தியர்;
துணுக்கென இமைத்தனர், திசைகள் காப்பவர்;
அடிக்கடி படித் துகள் பரவை தூர்த்தன;—
அரக்கனும் அரக்கனும் அமரில் ஆர்க்கவே. 201

சிரித்தனர்; உருத்தனர்; அணுவின் மோட்டு உடல்
சிறுத்தனர், பெருத்தனர்; மதனின் நோக்கினர்;
எரித்தனர்; இரித்தனர்; ககனமேற்பட
எடுத்தனர்; படுத்தனர், புடவி கீழ்ப்பட;
முரித்தன கிரிக் கொடுமுடிகளால், சினை
முரித்தன மரத்தன துணிகளால், கடிது
உரித்தனர், துவக்கு; உரம் நெரிய, மேல் பழு
ஒடித்தனர், இளைத்தனர், உருவம் வேர்க்கவே. 202

கடோற்கசன் அலாயுதனை வீழ்த்துதல்

சிலைப் படை, அயிற் படை, தெளியும் வாட் படை,
திறற் பல படைக்கல வலிமை காட்டியும்,
வலப்பட வளைத்து மல் வலிமை காட்டியும்,
வயத்தொடு செயப் புய வலிமை காட்டியும்,
உலைப் படு கனற் சினம் முதிர் கடோற்கசன்
உடற்றிய அரக்கரை ஒருவர்போல் பொருது,
அலப்படை அரக்கனது உயிரை மாய்த்தனன்,
அடல் தொடைகளின் தொடை அடைசி வீழ்த்தியே. 203

'புரத்தினை எரித்தவர் கயிலை மாக் கிரி
புயத்தினில் எடுத்து இசை புனை பராக்ரமன்
வரத்தினில் வனத்திடை திரியும் நாள், சில
மனித்தரொடு எதிர்க்கவும் வயிரி ஆய்த்திலன்;
உரத்துடன் மருச்சுதன் உதவு இராக்கதன்
ஒருத்தனும், எனைப் பலருடனும் ஏற்று, எதிர்
துரத்தலின், மறத்தினன் இவன்' எனு, பலர்
துதித்து, அதிசயித்தனர், சுரரும் வாழ்த்தியே. 204

கடோற்கசன் தான் வல்ல மாயையினால், துரியோதனன் படையைக் கலக்குதல்

அன்று கங்குலில் பல பதினாயிரம்
அரக்கரோடு அலாயுதன்தன்னைக்
கொன்று, வெம் பணிக் கொடியவன் சேனையைக்
குரங்கு கொள் கோதைபோல் கலக்கி,
ஒன்று பத்து நூறு ஆயிரம் கோடியாம்
உருவு கொண்டு, இவுளி, தேர், களிறு, ஆள்,
சென்று, இமைப் பொழுது அளவையில் யாவரும்
தென்புலம் படருமா செற்றான். 205

சண்டமாருதமாய் எழுந்திடும், ஒருகால்,
சலதியாய் எழுந்திடும், ஒருகால்;
கொண்டலாய் உதகம் பொழிந்திடும், ஒருகால்;
குன்றமாய் உயர்ந்திடும், ஒருகால்;
மண்டு பாவகனாய் எரிந்திடும், ஒருகால்;
வல் இருளாய் வரும், ஒருகால்;
பண்டு தான் வல்ல மாயைகள் பலவும்
பயிற்றினன்;—மாருதி பயந்தோன். 206

இம்பர் வாள் அரக்கன் நிணத்தொடு பிணம் தின்று
இடம்கொள் வாய்கொடு மடுத்திலனேல்,
தும்பிமா, பரிமா, வீரர், என்று இவர் மெய்
துணித்தலின், சொரிந்த செஞ் சோரி
அம்புராசிகளில், அண்டகோளகையில்,
அடங்குமோ? அண்டமும் பிளந்திட்டு,
உம்பர் வாரியையும் கலக்குமே, மிகவும்!—
உண்மை நாம் உரைசெயும் பொழுதே! 207

துரியோதனன் கன்னனை வற்புறுத்த, அவன் இந்திரன் கொடுத்த வேலால்
கடோற்கசனது உயிரைப் போக்குதல்

கட் செவி எழுதும் கொடி உடைக் கொடியோன்
கன்னனைக் கடைக்கணித்தருளி,
'விண் சுரபதி வந்து அன்று உனக்கு அளித்த
வேலினால், வீமன் மா மகனை
உள் செறி சினமும் வலிமையும் உயிரும்
உடன் அழிந்து, உம்பர் ஊர் புகுத,
புள் செறி தொடையாய்! கொல்க!' என, விரைவின்
புகைந்து, நாப் பொறி எழப் புகன்றான். 208

புகன்றபோது, அருக்கன் புதல்வனும், 'மாயப்
போர் இது; கங்குல் இப் பொழுதே
அகன்றிடும்; அகன்ருல் இவன் உயிர் பிறிது ஓர்
அம்பினுல் அகற்றுவித்திடலாம்;
இகன்ற போர் முனையில், நானே இவ் வடி வேல்
எறிந்து, நான் இமையவர்க்கு இறைவன்
மகன்தன் ஆர் உயிர் கொன்று, உனது வெண் குடைக் கீழ்
வைப்பன், இவ் வையகம்!' என்ருன். 209

என்றலும், அரசன், 'யாமும் எம் படையும்
இரவிடைப் பிழைக்க, நீ இவனைக்
கொன்று போர் பொருது, சிலை விசயனையும்
கொல்லுதி!' என மனம் கொதித்துக்
கன்றலும், அவ் வேல், அக் கணத்து, அவன்மேல்
கால வெஞ் சூலம் ஒத்து எறிந்தான்—
தென்றலும் நிலவும் நிகர் என, தன்னைச்
சேர்ந்தவர் இளைப்பு எலாம் தீர்ப்பான். 210

எறிந்த வேல் பகைவன் மார்பகம் துளைத்திட்டு
இந்திரனிடத்து மீண்டு எய்த,
மறிந்த மால் வரைபோல், அரக்கனும் முகம் பார்
மருங்கு உற விழுந்து, உயிர் மடிந்தான்;
செறிந்து அருகு அணைந்த சேனையும், பயந்தோர்
சிந்தையும், செயல் அறக் கலங்க,
அறிந்தவர்க்கு அன்றி அறியொணு ஐயன்
அவர் துயர் அகற்றுமாறு உரைப்பான்: 211

கண்ணன் ஐவரது துயர் அகலுமாறு உரைத்தல்

'இந்த வேல் கவச குண்டலம் கவர் நாள்,
இந்திரன் இரவி மைந்தனுக்குத்
தந்த வேல்; இதனை யாவர்மேல் விடினும்,
தரிப்பு அறத் தெறும், அவன் வரத்தால்;
உந்த வேல் அமரில் விசயன்மேல் தொடுக்கும்
உரக அம்பினுக்கு உயிர் உய்ந்தால்,
அந்த வேலையில், மற்று எறிவதற்கு இருந்தான்,
ஆற்றலால் கூற்றினும் கொடியோன். 212

'அலப்படையவனும் அநேகம் ஆயிரம் போர்
அரக்கரும் விளியுமாறு அடர்த்தோன்
உலப்பு அடையவும், தான் உய்யவும், அரசன்
உரைத்தலால் ஒச்சினன், இவன்மேல்;
வலம் பட முனையில், இன்று உமக்கு அவனி
வழங்கினன், கன்னனே' என்றான்—
குலப் பட அரவின் முடியின்மேல் நடித்த
கூத்துடைக் கோவியர் கூத்தன். 213

தருமனும், மருத்தும், அடல் மருத்துவரும்,
தந்தவர் மருத்துவான் மகனை,
'பெருமையும் வலியும் நல்வினைப் பயத்தால்
பெற்றனம்' என உறத் தழுவி,
அருமையின் அளித்த மகவுடைச் சோகம்
ஆற்றி, அங்கு உவகையர் ஆனார்;—
கருமமும் உலகத்து இயற்கையும் உணர்ந்தோர்
கலங்குதல் உறுவரோ? கலங்கார். 214

துரியோதனன் ஏவலால் துரோணன் படையுடன் சென்று விராடனையும்
துருபதனையும் சரங்களால் மாய்த்தல்

இராவணன் படு போர்க் களம் எனக் கிடந்த
இந்த வெங் களத்திடை, மீண்டும்
அரா உயர் துவசன் ஆணையால், வரி வில்
ஆரியன் அனீகினியுடன் போய்,
விராடனும் யாகசேனனும் முதலாம்
வேந்தரோடு எதிர்ந்து, அமர் மலைந்து,
தராதிபர் பலரோடு அவ் இருவரையும்
சரங்களால் சிரங்களைத் தடிந்தான். 215

தந்தை மடிய, திட்டத்துய்மன் துரோணன் எதிரே சென்று, 'நாளை
உனைக் கொல்வேன்!' என வஞ்சினம் மொழிதல்

துருபதன் மடிந்த எல்லையில், திட்டத்
துய்மனும் வெகுண்டு, உளம் சுடப் போய்,
இரு பதம் அரசர் முடி கமழ் முனியை
ஏன்று, வஞ்சினம் எடுத்து உரைத்தான்—
'பொரு பகை முனையில் எந்தையை என் முன்
பொன்றுவித்தனை; உனை நாளை
நிருபர்தம் எதிரே, நின் மகன் காண,
நீடு உயிர் அகற்றுவன்!' என்றே. 216

விசயன் வெகுண்டு முனிவனை வென்னிடச் செய்தல்

'மாமனை மகுடம் துணித்தனன், எவரும்
வணங்கு தாள் முனி!' என வயிர்த்து,
காமனை அழகும் கந்தனை விறலும்
கவர்ந்த வெங் கார்முக வீரன்,
சோமனை வகிர்செய்தனைய வெம் முனைய
தொடைகளால், சுரும்பு சூழ் கமலத்
தாமனை முதுகு கண்டனன், முன்னம்
தயித்தியர் முதுகிடத் தக்கோன். 217

துரியோதனன் சாத்தகி முன் நிற்கலாற்றாது தளர்தல்

பூத்து, அகிக் குலமும், மால் வரைக் குலமும்,
புகர் இபக் குலங்களும், புகழக்
காத்து, அகிலமும் தன் குடை நிழல் படுத்தும்
காவலர் நீதியைக் கடந்தோன்,
சேத்து அகில் புழுகு சந்தனம் கமழும்
திருப்புயத்து அணிதரும் திருத் தார்ச்
சாத்தகி முனைச் சென்று, அம் முனைக்கு ஆற்றாது,
அரி எதிர் கரி எனத் தளர்ந்தான். 218

துரியோதனனும் பிறரும் தேர் முதலியன இழந்து பாசறை புகுதல்

அனைவரும் ஒருவர்போல் உடைந்து, அவனி
ஆளுடை அரசனோடு, அமரில்
துனை வரு தடந் தேர், துரகதம், களிறு,
முதலிய யாவையும் தோற்று,
நினைவு அரு விறலோர் தனித்தனி நெருக்கி
நின்றுழி நின்றுழித் துரக்க,
அனைவரும் கழற் கால் கொப்புளம் அரும்ப,
ஆசறைப் பாசறை அடைந்தார். 219

சூரியன் தோற்றம் செய்தல்

முற் பொழுது ஒரு பொன்-திகிரியால் மறைந்த
தாழ்வு அற, மூள் எரி முகத்தில்
அற் பொழுது அடைந்த ஆயிரம் சுடரும்
அநேக நூறுயிரம் சுடர் ஆய்,
'நற் பொழுது இது' என்று யாவரும் வியப்ப,
நாகர் ஆலயம் வலம் புரிந்து,
பிற் பொழுது அவற்றைக் கவர்ந்து சென்று, உதயப்
பிறங்கலில் பிறங்கினன் பெரியோன். 220